# ஆராய்ச்சி

**சங்க நூல்கள்**

*சங்க நூல்கள் என வழங்குவன எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பன. சங்கத்தின் இறுதிக் காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்கால எல்லைக்கு முன் செய்யப்பட்ட திருக் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியனவும் சங்ககாலத் தனவாகும். எட்டுத்தொகை, பத்துப் பாட்டு முதலிய தொகை நூல்களிற்காணப்படும் தனிநிலைச் செய்யுட்கள் தமிழ் நாட்டின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலத்தும் ஒரே காலத்தும் வாழ்ந்த பற்பல புலவர்களாற் பாடப் பட்டவை. சங்கத்தின் இறுதிக் காலத்தும் அதனை அடுத்தும் அரசர் புலவர்கள் நூல் நிலையங்களில் அகப்பட்ட தனி நிலைச் செய்யுட்கள் பொருள், அளவு, செய்யுள் என்னும் வகைகளால் வெவ்வேறு நூல்களாகத் தொகுக்கப்பட்டன. தொல்காப்பியத்துக்கு இலக்கியங்களாக இருந்த பழைய நூல்கள் இறந்துபோனமையின் பிற்பட்ட இத்தொகை நூல்களே அதற்கு இலக்கியங் களாக இருந்து வருகின்றன. சங்க இலக்கியங்கள் இறந்து போகாது பிழைத்தமைக்குரிய காரணங்களுள் ஒன்று இதுவாகும்.*

**பத்துப்பாட்டின் தொகுப்பு**

*இறையனார் களவியலுரை நக்கீரனாராற் செய்யப்பட்டுப் பத்துத் தலைமுறைகளாகக் கேள்வி வழக்கில் வந்து பின்பு எவரோ ஒருவரால் எழுதிவைக்கப்பட்ட தென்பது அவ்வுரையாலறிய வருகின்றது. கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசகேசரி பாராங்குசன் மீது பாடப்பட்ட பாண்டிக் கோவையிலிருந்து 329 பாடல்கள் இவ்வுரையில் மேற்கோளாக ஆளப் பட்டுள்ளமையின் இவ்வுரை கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பின் எழுதப்பட்டதெனத் துணியப்படுகின்றது. இவ்வுரை எட்டுத்*

தொகை நூல்களைக் குறிப்பிடுகின்றது. பத்துப் பாட்டைக் குறிப்பிடவில்லை. ஆகவே பத்துப் பாட்டு என்னும் தொகுப்பு ஏழாம் நூற்றாண்டுக்குப்பின் செய்யப்பட்ட தெனக் கருதப்படும்.

பன்னிருபாட்டியல் என்னும் நூல் ஏறக்குறைய கி. பி. 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டதெனக் கருதப்படுகின்றது. இதில்,

“நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொகுப்பது பத்துப் பாட் டெனப்படும்” (384)

என்னும் சூத்திரம் காணப்படுகின்றது. இதனால் பத்துப்பாட்டு என்னும் தொகுப்பு கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னும் 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னும் செய்யப்பட்ட தென்னும் முடிவு உண்டாகிறது.

சங்க இலக்கியங்களில் ஐந்துக்குப் பாரதம் பாடிய பெருந் தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். பதிற்றுப்பத்து பரிபாடல் முதலிய நூல்கள் முற்றும் கிடையாமையால் அவற்றுக்கும்இவர் கடவுள் வாழ்த்துப் பாடினாரோ இல்லையோ என அறியமுடியவில்லை. பத்துப்பாட்டுக்குக் கடவுள் வாழ்த்துக் காணப்படவில்லை. பெருந்தேவனார் காலத்துப் பத்துப்பாட்டு என்னும் தொகுப்பு இருந்ததாயின் அவர் இதற்கும் கடவுள் வாழ்த்துப் பாடி யிருக்கமாட்டாரா? என்னும் கேள்வி எழலாம். இதற்கு பாடியிருப்பார் என்னும் விடையே ஏற்றதாகத் தோன்று கின்றது. பெருந்தேவனார் கி. பி. 9-ம் நூற்றாண்டுக்கும் 12ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் தொகுக்கப்பட்ட நூலெனக் கூறலாம். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்து இருப்பதைக்கண்ட புலவ ரொருவர் திருமுருகாற்றுப்படையே கடவுள் வாழ்த்தாக அமையுமெனக் கொண்டு அதனை முதலாக வைத்துப் பத்துப்பாட்டைத் தொகுத்தாராகலாம்.

**பத்துப்பாட்டிலடங்கிய செய்யுட்களைப் பாடியவர்களின் காலம்**

சங்ககாலப் புலவர் அரசர்களின் காலங்களைக் கணித்துக் கூறுவ தற்குக் கல்லெழுத்துக்களோ பிற சான்றுகளோ கிடைக்க வில்லை. சிலப்பதி காரம் சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய

இளங்கோவடிகளாற் செய்யப் பட்டது. கண்ணகிக்குக் கல் நட்டு விழா வெடுத்தபோது இலங்கைக் கயவாகு வேந்தன் சேரநாடு சென்றிருந்தான். இது சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. கயவாகு தென்னிந்தியாவினின்றும் பத்தினி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டுவந்தானென்பதை சிங்கள நூல்களும் கூறுகின்றன. ஆகவே சேரன் செங்குட்டுவனும் இலங்கைக் கயவாகுவும் ஒரு காலத்தவர்களாகக் கொண்டு செங்குட்டுவன் காலத்தும் அவனுக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த அரசர் புலவர் களுடைய காலங்கள் கணிக்கப்படுகின்றன. இவ்வாறு கொண்டு காலங்களைக் கணிப்பதிலும் தடுமாற்றங்கள் உள்ளன. ஒரே பெயருடன் வாழ்ந்த புலவர்களும் அரசர்களும் பலராவர். முதலில் சங்ககாலப் புலவர் அரசர்களின் காலக்கணிப்புச் செய்தவர் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுக்கு முந்திய தமிழர் என்னும் நூலின் ஆசிரியராகிய வி. கனகசபைப் பிள்ளை அவர்களாவர். இவரைத் தொடர்ந்து பலர் பலவாறு காலக்கணிப்புச் செய்திருக்கின்றனர். இக் காலக்கணிப்புகளை யெல்லாம் ஒருங்கே வைத்து நோக்கின் கனகசபைப் பிள்ளை அவர்களின் கணிப்பே ஏறக்குறையச் சரியாயிருப்பதாகத் தோன்றும்.

**செங்குட்டுவன் காலம்**

இலக்கிய வரலாற்று ஆசிரியர் **பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை** அவர்கள் சேரன் செங்குட்டுவன் காலமும் இலங்கைக் கயவாகுவின் காலமும் ஒன்றெனக் கொண்டு காலங்கணித்ததிலும் பல சிக்கல்கள் எழுகின்றன. ஆகவே அவர் பரணரில் இருவர், பெருங்குன்றூர் கிழாரில் இருவர், கணக்காயரில் இருவர், இளநாகனாரில் இருவர் இருந்தனர் எனக் கொள்ள வேண்டிய இடர்ப்பாடு உண்டாயிற்று.

கனகசபைப்பிள்ளை அவர்கள் காலங் கணித்த போது இலங்கைக் கயவாகுவின் ஆட்சிக்காலம் கி. பி. **113** முதல் **135** எனக் கொள்ளப்பட்டது. இதில் சில தவறு இருப்பதாகக் கொள்ளப் பட்டு மேற்படி ஆட்சிக் காலம் **171** முதல் **195** எனத் திருத்தப் பட்டுள்ளது. ஆகவே கனகசபைப் பிள்ளை அவர்கள் கணித்துள்ள காலங்கள் அறுபது ஆண்டுகள் கீழே வருகின்றன. கனகசபைப்

பிள்ளை அவர்கள் கணித்துள்ள காலக்குறிப்பையே நாம் ஒவ்வொரு பாட்டின் அடிக்குறிப்பிலும் காட்டியுள்ளோம். கீழ் வருவது (திருத்தப் பட்ட கயவாகுவின் காலப்படி) கனகசபைப் பிள்ளை அவர் களதும் இலக்கிய வரலாறு காரரதும் காலக் கணிப்புகளாகும்.

| பாடல்களும்-பாட்டுடைத் தலைவரும் | கனகசபைப் பிள்ளை | சுப்பிரமணிய பிள்ளை |
|---|---|---|
| முருகாற்றுப்படை-முருகக் கடவுள். | கி. பி. 160-190 | கி. பி. 50- |
| பொருநராற்றுப்படை-கரிகாற் பெருவளத்தான். | கி. பி. 120-150 | கி. மு. 220- |
| சிறுபாணாற்றுப்படை-நல்லியக்கோடன். | கி. பி. 130-150 | கி. மு. 30- |
| பெரும்பாணாற்றுப்படை தொண்டமான் இளந்திரையன். | கி. பி. 110-155 | கி. மு. 220- |
| முல்லைப் பாட்டு-தலையா லங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் | கி. பி. 150-190 | |
| மதுரைக் காஞ்சி-தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன். | கி. பி. 150-190 | கி. மு. 65- |
| குறிஞ்சிப்பாட்டு-ஆரிய வரசன் பிரகத்தன். | கி. பி. 150-190 | கி. மு. 87- |
| பட்டினப்பாலை-கரிகாற் பெருவளத்தான். | கி. பி. 150-190 | கி. மு. 220- |
| மலைபடுகடாம்-நன்னன் சேய் நன்னன். | கி. பி. 160-190 | கி. மு. 130- |

நக்கீரரின் காலம் கி. பி. 225-ஐ அடுத்ததெனக் கூறுவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

சிலப்பதிகாரம் கரிகாற் சோழனைக் குறிப்பிடுவதாலும், சேரன் செங்குட்டுவனின் தாய் கரிகாற் பெருவளத்தானின் மகள்

சோணை என மேற்படி நூலிற் காணப்படுவதாலும், இலங்கைக் கயவாகு வேந்தனின் தந்தை காலத்துக் காவேரி ஆற்றின் அணை கட்டுவதற்குச் சிறைபிடித்துச் சோழ நாட்டுக்குக் கொண்டு போகப்பட்ட ஈழநாட்டவரைக் கயவாகு மீட்டுக்கொண்டு வந்தானென்றும், அவன் தென்னிந்தியாவினின்றும் பத்தினிச் சிலம்பையும் கண்ணகி வழிபாட்டையும் இலங்கைக்குக் கொண்டு வந்தானென்றும் சிங்கள நூல்கள் கூறுவதாலும் கரிகாற் சோழனின் காலம் சிலப்பதிகார காலத்தை அடுத்ததெனக் கனகசபைப் பிள்ளை அவர்களால் கொள்ளப்படுவதாயிற்று. பத்துப் பாட்டிலுள்ள செய்யுட்களின் பாட்டுடைத் தலைவருள் கரிகாற் பெரு வளத்தானே காலத்தால் முற்பட்டவனாவான். ஆகவே பத்துப்பாட்டிலுள்ள செய்யுட்கள் முன்பின் ஒரு நூறாண்ட களுக்கிடையில் தோன்றியனவாகக் கருதக் கிடக்கின்றன.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகாலனையும் தொண்டை மான் இளந்திரையனையும் பாடியுள்ளமையின் இவ்விரு அரசரும் ஒரே காலத்தவ ராவர். ஆகவே பெரும்பாணாற்றுப் படை, பட்டினப்பாலை, பொருநராற்றுப் படை முதலிய மூன்றும் ஒரேகாலத்தனவாகும். நக்கீரர் பாடிய நெடுநல்வாடை யும் மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியும் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டன. மதுரைக் காஞ்சி மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவனாகிய நன்னன் சேய் நன்னனைக் குறிப்பிடுகின்றது. (618-9). ஆகவே நெடுநல்வாடை, திருமுரு காற்றுப்படை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம் முதலிய நான்கும் ஒரு காலத்தன. நக்கீரர் கபிலரைக் குறிப்பிட்டிருத்தலாலும் (அகம் 78) பிற காரணங் களாலும் கபிலர் நக்கீரர் காலத்துக்கு முற்பட்டவராகக் காணப் படுதலின் குறிஞ்சிப்பாட்டு இம் மூன்றிற்கும் முற்பட்டதாகும். முல்லைப்பாட்டின் பாட்டுடைத் தலைவன் யாரெனப் புலப்படா விட்டாலும் அதன் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனச் சிலர் கருதுவர். நெடுநல் வாடையையும் முல்லைப் பாட்டையும் ஒப்பிட்டு நோக்கும் போது இக் கருத்து வலிபெறுகின்றது. அவ்வாறாயின் முல்லைப்பாட்டும் நெடுநல் வாடையும் ஒருகாலத்தனவாகும். சிறுபாணாற்றுப்படை ஏழு

வள்ளல்களைக் குறிப்பிடுகின்றது. கடை ஏழு வள்ளல்களின் காலம் கி. பி. 100-க்கும் கி. பி. 300-க்கு மிடையில் என்று எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் 'கடை வள்ளலார் காலம்' என்னும் நூலில் கூறியிருக் கின்றார். ஆகவே சிறு பாணாற்றுப்படை இறுதியிற் செய்யப் பட்டதெனக் கொள்ளப்படும்.

**திருமுருகாற்றுப்படை பிற்கால நூல் என்னும் கருத்து**

திருமுருகாற்றுப்படை சங்ககாலத்து வாழ்ந்த நக்கீரராற் செய்யப்பட்ட தெனவே வழங்குகின்றது. இதன் நடை சங்கச் செய்யுள் நடையாகவே காணப்படுகின்றது. சங்கச் செய்யுட்களில் வட சொற்கள் அருகிக் காணப்படும். சங்க காலத்திலிருந்து கீழ்நோக்கிச் செல்லப் பிற்கால நூல்களில் காணப்படும் வடசொல்லின் விழுக்காடு அதிகமாகும். இதனைக் கொண்டும் பாடல்களின் பழமை ஒருவாறு அறியப்படுகின்றது. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் திருமுருகாற்றுப்படையில் காணப்படும் வடசொற்களைக் குறித்துக் கூறியிருப்பது வருமாறு: "சமக்கிருதம் தமிழ் என்னும் இரு மொழிகளுக்கும் பொதுவாகிய தாமரை, மனம், மீன், முத்து, உலகம் முதலிய சொற்களையும் சமக்கிருதச் சொற்கள் எனக் கொண்டு கணக்குச் செய்ததில், 317 அடிக ளுடைய திருமுருகாற்றுப்படையில் அடிக்கு ஐந்து சொல் உண்டு என வைத்துக் கொண்டு பார்த்தால் நூறு தமிழ்ச் சொல்லுக்கு இரண்டு சமக்கிருதச் சொல் விழுக்காடும் காணப்படவில்லை."[1]

1. Turning to the vocabulary of the poem we find but thirty Sanskrit words even counting such common words jhkiu, kd«, Û‹, K¤J k‰W« cyf«. Taking each line to have an average of five words the 317 lines of the poem do not show two per cent of Sanskrit words.

"The work of having compiled the eleven Thirumurais or Saivite works like Thevaram is attributed to him on the basis of Thirumuraikanda Puranam wrongly considered to be from the pen of Umapathi Sivam...The Puranam is itself in two different meters; the verses in the second kind of meter were Probably a later day addition. The first Part stops with the narration of the Thevaram compilation wheareas the second part mentions the eleven Thirumurais......It is very doubtful vhether these were compiled at any time....From the Poems of Nambiandar Nambi, one could easily conclude that whether he compiled the Thirumurai or not.....Tamil Pultruch P. 68- notes by Prof. T. P. Meenakshisundaram.

பதினோராம் திருமுறையில் நக்கீரர் செய்தனவாக பல சிறு நூல்கள் காணப்படுகின்றன. இந் நூல்களைச் செய்தவர் நக்கீரதேவ நாயனார் எனவும் அறியப்படுவர். சங்க கால நக்கீரரும் பதினொராந் திருமுறையிற் காணப்படும் நூல்களைச் செய்த நக்கீரரும் ஒருவரே என்னும் கருத்து மிக அண்மை வரையில் இருந்து வந்தது. ஆகவே சங்ககால நக்கீரரையும் பிற்கால நக்கீரரை யும் தொடர்புபடுத்தும் புராணக் கதைகள் எழுந்தன. ஆராய்ச்சியாளர் சங்ககால நக்கீரரும் பதினோராந் திருமுறையிலுள்ள நூல்களைச் செய்த நக்கீரரும் இருவேறு காலத்தில் விளங்கியவர்கள் என அவர்களின் செய்யுள் நடைகளைக் கொண்டும் அவற்றில் வந்துள்ள வட சொல் விழுக்காடு களைக் கொண்டும் கணித்துள்ளனர். ஆராய்ச்சி யாளரும் ஒருவர் திருமுருகாற்றுப் படை பிற்கால நக்கீரராற் செய்யப்பட்டதென எழுதியிருக்கின்றார். இக் கொள்கைக்குத் தக்க ஆதாரம் எதுவும் காணப்படவில்லை. திருமுறையிற் காணப்படும் பாடல்களைச் செய்தவரே திருமுருகாற்றுப் படையையும் செய்தவராவர் என்னும் மயக்கம் உண்டாயிருந்த காலத்தில் எவரோ ஒருவரால் திருமுருகாற்றுப்படை திருமுறையில் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். திருமுருகாற்றுப்படை திருமறையுள் சேர்க்கப்படுதற்கு அதிலுள்ள கருத்துக்கள் இடங்கொடா. இந்திரன், விட்டுணு, சிவன் என்னும் கடவுளர் பிரமனைச் சிறை விடுவிக்க முருகக் கடவுளிடம் சென்றனர் என்னும் கூற்றைச் சிவ வழிபாட்டினர் ஏற்றுக்கொள்ள மறுப்பர். திருமுருகாற்றுப் படைக்கு உரை கண்ட நச்சினார்க்கினியர் முதலியோர் அது திருமுறையி லுள்ளதெனக் குறிப்பிடவுமில்லை. திருமுறைகள் நம்பியாண்டார் நம்பியாரால் வகுக்கப்படவில்லை என்னும் கருத்தும் நிலவுகின்றது.

திருமுருகாற்றுப்படையில் புராண சம்பந்தமான பழங்கதைகள் காணப்படுகின்றமையின் அது பிற்காலத்து நூல் எனக் கருதத் தக்கதாகின்ற தெனக் கூறுவர் ஒரு சாரார். பரிபாடல், கலித்தொகை என்னும் சங்க நூல்களில் புராணக் கதைகள் பலவற்றைக் காணலாம். மேற்படி நூல்களையே நோக்குவாருக்குச் சங்க காலத்திலேயே புராண சம்பந்தமான பழங்கதைகள் தமிழ் நாட்டில் அறியப் பட்டிருந்தன வென்பது நன்கு விளங்கும். புராணக் கதைகள்

காணப்படுதலின் திருமுருகாற்றுப்படை பிற்காலத்தது எனக் கொள்ளுதல் மேலும் ஆராய்ச்சிக்குரியது[1].

1. It is now generally admitted that a great deal of the ancient and mediaeval myth and legend enshrined in the Sanskrit epics and Puranas is of Non-Aryan origin and that even in Vedic mythology certain Pre-Aryan elements are present. Puranic myths of the gods and legends of kings, heroes, and sages, in the form in which we find them in the Sanskrit works represent undoubted by a considerable amount of modification from other original forms, whether Aryan or Non-Aryan......The Aryan speaking masses of Northern India became Aryanized in language and their tales and legends were retold as a matter of course in the Aryan language of their adoption. - Purana Legends and the Prakrit tradition in the new Indo-Aryan-S. K. Chatterji-Bulletin of the school of Oriental studies: VOL. VIII (1935-1937).

   As a rule however, the Aryas in adopting a Dravidian word changed it considerably in order to suit to their tongue, and whenever such a word was imperfectly understood of negligently reproduced, the change naturally became still greater. It is more than probablo that Samskrita borrowed a number of words also from Dravida tribes the dialects of which are unknown to its, so that in such a case it becomes very difficult and even impossible to trace their origin-Dravida Elements in Samskrita Dictionaries-Rev. F. Kettel, Kannada-English Dictionary.-P XV.

   But most Sanskrit assume that every Tamil word which looks like a Sanskrit one must have been borrowed from Sanskrit by the Tamils. When the speakers of two different languages come in to touch with each other, the probablities are that each language will borrow words from the other. Thus the names of articles produced only in South India, such as pearls, pepper, cardamoms must certainly have been borrowed by Sanskrit from Tamil. Hence Sanskrit maricha, muktala are derived from Tamil miriyal or milagu, muttu, elam; there are other Sanskrit words borrowed from Tamil wantonly which Sanskrit scholars wrongly claim to belong to Sanskrit. i.e. nitram evidently derived from nir, min, for we cannot imagine that the Tamils were drinking water and eating fish for ages without names for these objects and deferred naming them till Sanskrit speakers presented them with names for them......Many such words can be rescued for Tamil from the hands of the Sanskrit scholars. Pre-Aryan Tamil Culture-P. 16. P.T.S. Aiyengar.

   The greater number of the Sanskrit and Pracrita words in the Dravidian language were introduced by the Jaina writers. Some tatsamas however were introduced by the three comparatively modern philosophic schools: the Shaiva Siddhanta, the School of Sankaracharya and the School of Ramanucharya. Sanskrit words are said to have been introduced even before the time of Jains, but it is doubtful whether these are not ancient words common to both Aryan and Dravidian languages-Manual of Administration of the Madras Presidency: Vol. 1. p. 41-2.

களவியலுரை நக்கீரரால் செய்யப்பட்டதென அவ்வுரையினால் விளங்குகின்றது. இது 7ஆம் நூற்றாண்டில் விளங்கிய ஒரு நக்கீரரால் செய்யப்பட்டதென்றும் அவர் சமண மதத்தினர் என்றும் ஒரு ஆராய்ச்சி யாளர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. நக்கீரர் செய்த களவியலுரையை உருத்திர சன்மர் கேட்டார் எனப்படுதலாலும், அக்காலத்து மருதனிள நாகனார் முதலிய புலவர்கள் இருந்தனர் எனச் சொல்லப் படுதலாலும், அவ்வுரை பல தலைமுறைகளாகக் கேள்வி வழக்கில் இருந்து வந்ததெனப்படுதலாலும் அதனைப் பிற்காலத்திருந்த ஒருவர் செய்தார் என்பது நம்பத்தக்கதன்று எனத் தோன்றுகிறது.

❍ ❍ ❍

# முன்னுரை

சங்க நூல்களின் பொருள் புலவர்களுக்கும் எளிதில் விளங்குவதன்று. அதற்குக் காரணம் அந்நூல்கள் செய்யப்படுகின்ற காலத்து வழங்கிய சொற்களிற் பெரும்பாலான இன்று வழக்கு வீழ்ந்து விட்டமையேயாகும். பொருள் விளங்குதற் கருமையுடைய இந்நூல்கள் வித்துவான், பண்டிதர், புலவர்களால் மாத்திரம் பயிலப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் சங்க நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் பொருள்கள் எவை என்பதை அறிய மாட்டார்கள். அவர்கள் சங்க நூற்பொருள்களை எளிதில் அறிந்து கொள்ளும் முறையில் அவற்றை உரைநடைப்படுத்த வேண்டு மென்னும் உணர்ச்சி இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் நமது உள்ளத் தெழுந்தது. ஆகவே சங்க நூற்களிற் பலவற்றை உரைநடைப் படுத்தலாயினேம். அவ் வுரைநடைகள் பெரிதும் பயனுடையன வென்று தமிழ் அறிஞர் தமது கருத்தைத் தெரிவித்தார்கள்; மாணவர் பலரும் அவ்வாறே அறிவித்தனர். இப்பதிப்பில் கூடியளவு வசனங்களைக் குறுக்கியும் கடிய சொற்களை நீக்கியும் உள்ளோம். நமது நூல்களைத் தமிழ் உலகு அறியுமாறு இந்நூலின் முதற்பதிப்பையும் பிற நூல்களையும் வெளியிட்ட ஒற்றுமை நிலையத் தலைவர் திரு எம். ஈ. வீரவாகு பிள்ளை அவர்களுக்கு எனது நன்றியும் கடப்பாடும் என்றும் உரியன.

சென்னை
10-3-1949 *ந. சி. கந்தையா.*

# 1. திருமுருகாற்றுப்படை

**தோற்றுவாய்**

*முருகக்கடவுள் வீற்றிருக்கும் இடங்களிற் சென்று அவர் அருளைப் பெற்று மீள்கின்ற முருகனடியான் ஒருவன் முருகன் அருளைப் பெறுதற்குப் பக்குவம் வாய்ந்த ஒருவனை வழியிடத்தே எதிர்ப்பட்டுத், தான் சென்று அருள்பெற்ற வரலாற்றை அவனுக்கு எடுத்துக்கூறி அவனையும் முருகன் பாற் சென்று அவன் அருளைப் பெறுமாறு செலுத்துவதாக அமைந்துள்ளது இப்பாடல்.*

"அகவற் பாவால் விறலிபாணர்
கூத்தர் பொருநர் நால்வரு ளொருவர்
பரிசிற்குப் போவாரைப் பரிசு
பெற்று வருவா ராற்றிடைக் கண்டு
தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமும்
அறைவ தாற்றுப் படையா கும்மே"

*திருமுருகாற்றுப்படை என்னும் பாடலைச் செய்தவர் கடைச் சங்கத்திறுதிக்காலத்தில் சங்கத்துக்குத் தலைமை தாங்கியிருந்த ஆசிரியர் நக்கீரனாராவார். அவர் காலம் கி. பி. 100-130. இக்காலக் கணக்கும் பின்னால் வருவனவும் ஆயிரத்து எண்ணூறு ஆண்டு களுக்கு முந்திய தமிழர் என்னும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளபடி உள்ளன.*

### 1. திருப்பரங்குன்றம்

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடைய நோன்றாட்

செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பி
னாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதன்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவே
லுலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
யொண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
விருபே ருருவி னொருபே ரியாக்கை
யறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
யவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
வின்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயி

னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமரு சுனைமல
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதா அன்று

## 1. திருப்பரங்குன்றம்

*(முருகன் அருள்பெற்றுமீளும் அடியவன் அக்கடவுளின் அருளைப் பெற விழைவுற்றிருக்கும் மற்றொரு அடியவனைப் பார்த்துக் கூறுகின்றான்:)*

### முருகக் கடவுளின் தோற்றம்

முருகக்கடவுள் குற்றமில்லாத கற்பினையுடைய தெய்வ யானையாரின் கணவர். உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் மகிழும்படி ஞாயிறு மேருவை வலஞ்செய்யும். முருகக்கடவுள் அஞ்ஞாயிறு கடலிடத்தே தோன்றினாற் போன்று இடைவிடாது ஒளி செய்கின்ற திருமேனியையுடையர்; தம்மை அடைந்தாரது தீவினையைப் போக்கும் வலிய தாள்களுடையவர்; இடியை ஒத்த வலியும் பகைவரைஅழித்த ஆற்றலுமுடைய கைகளையுடையர்; கார் காலத்தில் கடல் நீரை வயிறு நிரம்பும்படி குடித்த முகில் ஞாயிறும் திங்களும் கிரணங்களை வீசும் ஆகாயத்தில் துளிகளைச் சிதறிக் காட்டில் முதல் மழையைப் பெய்யும். அதனால் காடு குளிர்ச்சி யடையும். அக்குளிர்ந்த காட்டில் செங்கடம்பு இருண்டு தழைத்து வளரும். அதன் தேருருள் போன்ற மலர்களால் தொடுத்த மாலைகள் முருகக் கடவுளின் திருமார்பிற் கிடந்து அசையும்.

### தெய்வமகளிர்

மூங்கில் தேவருலகைத் தொடும்படி மலையிடத்தே வளரும். அங்குத் தெய்வமகளிர் உறைவர். அவர்கள் விளங்குகின்ற தமது சிறிய பாதங்களில் சிறிய சதங்கைகளை அணிந்திருப்பர். அவர்களின் கால்கள் திரட்சியுடையன; இடை வளைந்து அசையும் தன்மையது; தோள்கள் பெருமையுடையன. அவர்கள் உடுத்திருக்கும் பட்டாடை தம்பலப் பூச்சி போன்று சிவந்த இயற்கை நிறமுடையது. அவர்கள்

மணிகள் கோத்த வடங்களை அரை யிடத்தே அணிந்திருப்பர். அவர்களின் அழகு கையினால் அழகு செய்யப் படாது இயற்கை வனப்பு அமைந்துள்ளது. அவர்கள் அணிந்திருக்கும் அணி கலன்கள் சாம்பூநதமென்னும் உயர் செம்பொன்னினால் செய்யப் பட்டவை. அவர்களின் தூய நிறம் தூரத்தே விளங்கித் தோன்றும் ஒளியுடையது. இவ்வியல்பினராகிய தெய்வமகளிர் சோலையிடத்தே கூடுவார்கள்; நெய்பூசப் பெற்ற தமது மயிரில் சிவந்த காம்பை யுடைய வெட்சிப்பூவை விடு பூவாகத் தூவுவார்கள்; அவற்றின் நடுவே குவளை மலரின் இதழ்களைக் கிள்ளி விடு பூவாகத் தூவுவார்கள்; பொட்டிட்ட தமது நெற்றியில் சுறாவின் திறந்த வாய்போற் செய்த தலைக்கோலத்தை அணிவார்கள்; [1]சீதேவியார் என்னும் தலைக் கோலத்துடனே வலம்புரிச் சங்கின் வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைப்பார்கள்; முடிய வேண்டிய வகையில் முடியப்பட்டுள்ள கொண்டையில் சண்பகப் பூவைச் செருகுவார்கள்; அதன்மேல் விளங்குகின்ற பூங்கொத்துக் களை வைப் பார்கள்; நீரின் கீழ் நின்று மேலே எழும் கிளைகள் நீட்டிய அரும்பினால் தொடுத்த மாலையைக் கொண்டையில் வளையமாகச் சுற்றுவார்கள்; இரு காதுகளிலும் அசோகந் தளிரைச் செருகுவார்கள்; அவை, அணிகலன்க ளணிந்த அவர்கள் மார்பிடத்தே கிடந்து அசையும். இவ்வாறு தம்மை அழகு செய்து கொண்ட தெய்வமகளிர் கோங்கின் மொட்டை ஒத்த தமது தனங் களிடத்தே சந்தனக் குழம்பை அப்புவார்கள். அச்சந்தனப்பூச்சு, மணமுள்ள மருதம் பூவை அப்பியது போலத் தோன்றும். சந்தனக் குழம்பின் ஈரம் உலர் வதன் முன் வேங்கைப் பூவின் தாதையும் அவர்கள் அதன்மேல் அப்பு வார்கள்; விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளித் தப்பாமல் ஒருவர்மேல் ஒருவர் எறிந்து “கோழி உயர்ந்த வெற்றிக்கொடி நெடிது வாழ்வதாக” என்று வாழ்த்தி மலை இடங்கள் எல்லாம் எதிரொலி செய்யும்படி பாடி ஆடுவார்கள்

**முருகக் கடவுள் திருமுடியில் சூடிய செங்காந்தள் மாலை**

அத்தெய்வமகளிர் இவ்வாறு ஆடல் பாடல் புரியும் சோலையை யுடைய மலையில் மரங்கள் நெருங்கி வளர்ந்திருக்கும்; ஆகவே

1. சீதேவியார் – நடுவே திருமகள் இருக்க இருபக்கங்களிலும் பெண் யானைகள் தாமரைப் பூவேந்தி நிற்கும் வடிவாகச் செய்யப்பட்ட தலை அணி.

மந்திகளும் அம்மரங்களில் ஏறி அறியா. இம்மர நெருக்கம் உடைய மலையிடத்துள்ள செங்காந்தள் மலரால் தொடுத்த மாலையை முருகக் கடவுள் திருமுடியில் சூடியிருப்பார்.

**பேய்மகள்**

முருகக் கடவுள் குதிரை முகத்தையும் மக்கள் யாக்கையையு முடைய சூரபன்மாவோடு போர் செய்தார். அப்பொழுது சூரபன்மா கீழ் நோக்கிப் பூத்த கொத்துகளையுடைய மாமரவடிவாக மாயையினால் வடிவுகொண்டு நின்றான். அப்பொழுது முருகக் கடவுளின் செவ்வேல் விரைந்து சென்று அவனை அவனுடைய [1]அறுவகைப் படைகளும் அஞ்சும்படி அழித்தது. அப்பொழுது பேய்மகள் வெற்றிக்களத்தைப் பாடித் தோளை அசைத்துத் [2]துணங்கைக்கூத்து ஆடினாள். பேய்மகள் போர்க்களத்தில் அச்சந்தோன்றும் படி உலாவவும் விரும்பினாள். அவளது குறுகிய மயிர்கள் உலர்ந்தவை; பற்கள் தெற்றியவை; பசியகண்கள் கோபத்தாற் சுழல்வன; பார்வை அச்சம் விளைப்பது; காதுகள் மார்பு அளவும் நீண்டு அசைவன; அவை அச்சந்தரும் பாம்பும் பிதுங்கிய கண்களையுடைய ஆந்தையுமாகிய குண்டலங்களைப் பூண்டவை; உடல் சொரசொரப்புடையது; நடை கண்டோரால் அஞ்சத்தக்கது; கூரிய நகங்களுடைய வளைந்த விரல்கள் இரத்தம் அளைதலால் சிவப்பு ஏறப் பெற்றவை; கைகள், முடைநாற்ற முடையவும் கண்களைத் தோண்டி உண்ணப்பட்டனவுமாகிய கரிய தலைகளை ஏந்துவன; பெரிய வாய்கள் நிணந்தின்பன.

(இவ்வாறு பேய்மகள் வெற்றிக்களத்தே ஆடினாள்.) அவுணர் களுடைய வெற்றி அடங்கிற்று, கடல் நிலை குலைந்தது.

**திருப்பரங்குன்றம்**

பாடவல்ல புலவனே! இவ்வாறு பெருமை பெற்ற முருகக் கடவுளின் திருவருளைப்பெற நீ மிக விரும்புகின்றாயாயின், நீ அதனை இப்பொழுதே தப்பாமல் பெறுகுவை. அவர் எங்கு

1. அ. மூலப்படை, ஆ. கூலிப்படை, இ. காட்டுப்படை, ஈ. துணைப்படை, உ. பகைப்படை, ஊ. நாட்டுப்படை.
2. முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித்
துடக்கிய நடையது துணங்கை யாகும்.

உறைவார் என நீ கேட்பாயாயின். அதனை யான் கூறுவேன் கேட்பாயாக. மதுரைமா நகரின் கோபுரவாயிலில் வெற்றிக் கொடி அசையும்; வரிந்து கட்டப்பட்ட பந்தும்பாவையும் அறுப்பாரின்றித் தொங்கும். நகரில் பல மாடங்களுடைய தெருக்களுண்டு. இவ்வகை அழகு வாய்ந்த மதுரைக்கு [1]மேற்கே பெரிய நெல்வயல்கள் உண்டு. கரிய சேற்றினையுடைய அவ் வயல்களில் முறுக்கவிழ்ந்த தாமரை மலர்கள்மீது வண்டுக் கூட்டங்கள் இராப்பொழுதில் துயில்கொள்ளும்; விடியற் காலத்தில் தேன் மணக்கின்ற நெய்தற்பூவை ஊதும்; ஞாயிறு தோன்றியபின் சுனை மலரில் இருந்து ஆரவாரஞ் செய்யும் இவ்வகை அழகிய விடத்தேயுள்ள திருப்பரங்குன்றம் என்னும் கோயிலில் முருகக்கடவுள் எழுந்தருளியிருப்பார். (இது அவர் இருக்கும் வீடுகளுள் ஒன்றாகும்)

### 2. திருச்சீரலைவாய்[2]

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக

1. இப்பொழுதுள்ள மதுரைக்குத் தென்மேற்கில் திருப்பரங்குன்றம் இருக்கின்றது. அக்காலத்தில் மதுரைக்கு மேற்கில் திருப்பரங்குன்றம் இருந்ததெனப்படுதலால் இக்கால மதுரை முற்கால மதுரை அன்று எனக் கருதப்படுகின்றது.

2. திருச்செந்தூர்.

மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக
மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே
யாங்கம், மூவிரு முகனு முறைநவின் றொழுகலி
னாரந்தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க் கேந்திய
தொருகை யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை
யையிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைச் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
வாங்கப், பன்னிரு கையும் பாற்பட வியற்றி
யந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
வுரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
யுலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்று

### முருகக் கடவுள் யானைமீது இருக்கும் தோற்றம்

முருகக்கடவுள் பிணிமுகம் என்னும் யானைமீது எழுந் தருளுவார். பிணிமுகம் என்னும் யானையின் நெற்றி அங்குசம் வெட்டுதலால் தழும்பு ஏறப்பெற்றது. நெற்றியில் பொன்னரி மாலையும் நெற்றிப்பட்டமும் கிடந்து அசையும்; இருபக்கங் களிலும் மணிகள் கிடந்து ஒலிக்கும். அதன் நடைபிறரால்தடுத்தற் கரிய கடுமையுடைய தாதலின் கூற்றுவனை ஒக்கும். முருகக் கடவுள் அணிந்திருக்கும் [1]ஐந்து வேறு வடிவுடைய முடிகளில் ஒளிவிடும் இரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவர் காதிலணிந்திருக்கும் பொற் குழைகள் மதியைச் சூழ்ந்து நீங்காத [2]விண்மீன்களைப்போல் விளங்கும். அவரது திருமுகம் தவத்தை முடிப்பவர்களது உள்ளத்தில் விளங்கும் ஒளிபோல் விளங்கும்.

### ஆறு முகங்களின் தொழில்கள்

முருகக் கடவுளின் ஒரு முகம் இருண்ட பெரிய உலகம் குற்றமின்றி விளங்கும் பொருட்டுப் பல கதிர்களைத் தோற்று விக்கும்; ஒரு முகம், அன்பர்கள் துதிக்க அதற்கு மகிழ்ந்து அவர்கள் வேண்டும் கருமங்களை முடித்துக்கொடுக்கும்; ஒரு முகம் அந்தணரது யாகங்களில் தீமை வராமற் காக்கும்; ஒரு முகம் மந்திரமுடைய வேதமுறையில் ஒழுகும் அந்தணரது யாகங்களில் தீமைவராமற் காக்கும்; ஒருமுகம் வேதத்தின் மறை பொருள்களை ஆராய்ந்த இருடிகள் மகிழும்படி அவற்றை உணர்த்தித் திங்கள் போலத் திசைகளை எல்லாம் விளக்குவிக்கும். ஒரு முகம் மாறுபட்டுப் போர்க் கெழுந்த பகைவரைக் கொன்று கோபித்த உள்ளத்தோடு போர்க் களத்தை விரும்பும்; ஒரு முகம் குறவரின் இளமையுடைய மகளாகிய வள்ளி யுடன் மகிழ்ச்சியைப் பொருந்தும்.

### பன்னிருகரங்கள் புரியும் தொழில்கள்

முருகக் கடவுளின் திருமார்பினின்று தோளளவும் உத்தம இலக்கணமாகிய மூன்று வரைகள் நீண்டு கிடக்கும். அவரது வலிய தோள்கள் பகைவர் மேல் படைக்கலங்களை எறிந்து

1. கோடகம், கிம்புரி, மகுடம், பதுமம், தாமம்.
2. வியாழமும் வெள்ளியும் திங்களினிரு மருங்கும் கதிர் கோள்கள்.

மார்பைப்பிளந்து வாங்கும் பெருமை யுடையவை. அவர் திருக்கரங்களிலொன்று ஆகாயத்தே இயங்குகின்ற இருடிகளுக்கு அபயங்கொடுக்கும்; உயர்த்திய அக் கையின் இணைக்கை பக்கத்தே கிடக்கும்; ஒரு கை தொடைமீது ஆடைமேற் கிடக்கும்; ஒருகை யானையை அங்குசத்தால் செலுத்தும்;இரு கைகள் கரிய கேடகத்தையும் வேலையும் வலமாகச் சுழற்றும்; ஒருகை முனிவர் களுக்குத் தத்துவங்களைக் கூறி உரையிறந்த பொருளை உணர்த்தும் காலத்து மார்பிடத்து விளங்கும்; ஒருகை திருமாலையைத் திருத்தும்; ஒரு கை பாரவளையோடு சுழலும்; ஒருகை இனிய ஓசையுடன் ஆடுகின்ற மணியை ஒலிக்கும். ஒரு கை நீல ஆகாயத்தில் மிக்க மழையைப் பொழியும். ஒருகை இந்திரன் மகளாகிய தெய்வ யானைக்கு மணமாலை சூட்டும். இவ்வகை பன்னிருகைகளும் ஆறு முகங்களுக்குப் பொருந்தும் வகை தொழில்புரியா நிற்கும்.

**சீரலைவாயில் முருகக் கடவுள் எழுந்தருளும் தோற்றம்**

ஆகாயத்தில் துந்துமி ஒலிக்கும். வயிரமுடைய கரியகொம்பு வாத்தியங்களும் வெண்சங்கும் முழங்கும். இடியேற்றின் இடிப்புப் போன்ற ஓசையுடைய முரசு அதிரும். பல புள்ளிகள் உள்ள இறகுகளுடைய மயில் வெற்றிக் கொடியிலிருந்து ஒலிக்கும். முருகக் கடவுள் இவ்வகைப் பல ஆர்ப்புடன் ஆகாயமே வழியாக விரைந்துசென்று மிக்க அழகுடைய சீரலை வாய் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருப்பார். இதுவே அவரது நிலை பெற்ற குணமாகும்.

## ૩. திருவாவினன்குடி[1]

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்

1. இது பழநி மலையின் அடிவாரத்திலுள்ளது.

கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி

நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரிய னதா அன்

**முனிவர் தோற்றமும் இயல்பும்**

திருஆவினன்குடியிலே முனிவோர் முருகக் கடவுளை வழிபடுவர். அவர்கள் தைத்துப் பொருந்திய மரவுரி உடையினர்; அவர்களின் நரைத்த முடிகள், வடிவு நிறம் அழகு முதலியவற்றால் வலம்புரிச் சங்கை ஒத்தவை. அவர்களின் உடம்பு நீராடுதலால் அழுக்கின்றி விளங்குவது. பட்டினியிருந்து விரதங் காத்தலால் அவர்கள் மார்பிடத்து என்புக் கோவைகள் தோன்றும்; அவர்களின் போர்வை பொருத்தித்தைத்த மான்தோலாகும்; அவர்கள் பல நாட்கள் பட்டினியிருப்பர்; வெறுப்பும் சினமும் அவரிடம் தோன்றுவதில்லை. அவர்களின் அறிவு எவ்வகைப் பொருளைக் கற்ற வல்லுநரும் அறியமுடியாதது. பலவற்றைக் கற்றார்க்கும் அவர் தலைமையாயிருக்குந் தன்மையர்; காமம், வெகுளி முதலியவை அவிந்த தோற்றத்தினர்; மெய்வருத்தம் உளவேனும் மனவருத்தம் சிறிதும் அறியாத இயல்பினர்.

**நாற்பெருங்கடவுளர்**

வெள்ளிய நச்சுப் பற்களையும் அழல்போன்ற மூச்சையுமுடைய பாம்பைச் சாக அடிக்கும் கருடனை ஊர்தியாகவும் கொடியாகவும் உடைய திருமால் காத்தற்றொழில் புரிவர். முப்புரத்தை அழித்த வெற்றியையும், மூன்று கண்களையும், இடபக்கொடியையும், பாகத்தே உமாதேவியாரையு முடைய உருத்திரன் அழித்தற் றொழில் புரிவர். நிலத்தில் தோய்கின்ற வளைந்த துதிக்கை யினையும் நான்கு மருப்பினையுமுடைய ஐராவதமாகிய

வாகனமும், ஆயிரம் கண்களுமுடைய இந்திரன் நூறு வேள்விகள் வேட்டு அதன் பயனால் பகைவரை அடக்கிய வெற்றியுமுடையன். முப்பத்துமூவர் என்னும்தேவர்குழுவினர் நான்குபிரிவினராவர். கந்தருவர் மெல்லிய வார்த்தையையும், முறுக்கவிழ்ந்த மலர் மாலைசூடிய மார்பையும், புகையைக் கையினாலள்ளினாற் போன்ற மாசேறாத உடையையும் யாழ்வாசிக்கும் திறமையையு முடையர். காந்தருவமகளிர் மக்களுக்குரிய நோயில்லாத உடம்பும், பொன்னுரை விளங்கினாற் போன்ற அழகிய தேமலும் மாந்தளிர் போன்று விளங்கும் நிறமும் உடையர்.

**முருகக் கடவுள் ஆவினன் குடியில் வீற்றிருக்கும் தோற்றம்.**

ஒரு காலத்தில் செருக்குற்றிருந்த பிரமனை முருகக் கடவுள் சிறையிலிட்டார். அக்காலத்துப் படைப்புத் தொழில் இல்லை ஆயிற்று. அதனால் திருமால் உருத்திரன் முதலானோர்க்குரிய காத்தல் அழித்தற் றொழில்களும் இல்லையாயின. தமக்குரிய காத்தல் அழித்தற் றொழில்களைப் பழமைபோல் பெறவிரும்பிய திருமாலும் உருத்திரனும் முருகக் கடவுளின் கோபத்தைத் தணித்துப் பிரமாவைச் சிறையினின்றும் மீட்க எண்ணினார்கள்; எண்ணி இந்திரன் பதினெண்கணங்கள் முப்பத்துமூவர் முதலிய தேவர்களுடன், விண்மீன்கள் போன்ற தோற்றமும், காற்றில் நெருப்புத்தோன்றினாலொத்த வலியும், இடி ஒத்த குரலும் உடையராய் அந்தரத்தே சுழன்று திரிந்தனர். கந்தருவர் தமது மகளிரோடு யாழ்வாசித்துப் பின்னே செல்ல முனிவர்கள் முன்னே சென்றனர். இவ்வகைத் தோற்றத்துடன் முருகக்கடவுள் தெய்வ யானையாருடன் ஆவினன் குடியில் எழுந்தருளுவர்.

## 4. திருவேரகம்[1]

றிருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
யறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்

1. இது கும்பகோணத்துக்கு அருகேயுள்ள சுவாமிமலை எனக்கருதப்படுகின்றது.

திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
வொன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதா அன்று

## அந்தணர் இயல்பு

*அந்தணர் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களும் உடையர்; தூய மரபில் உதித்தோர்; நாற்பத் தெட்டு ஆண்டு பிரமசாரியங் காக்கும் இயல்பினர்; தருமத்தையே எந்நாளும் கூறும் கொள்கையர், நாற்சதுரம், முச்சதுரம், வில்வடிவமாகிய ஆகவனீயம், தக்கணாக்கினி, காருகபத்தியம் என்னும் முத்தீ ஓம்பும் செல்வமுடையர்; நூலணி தற்குமுன் ஒன்றும் அணிந்தபின் ஒன்றுமாகிய இருபிறப்புடையர்; நீராடுங்கால் தோய்த்த ஆடையைப் புலரும்படி உடுக்கும் இயல்பினர். இவ்வகைப் புனிதமுடைய அந்தணர் நறிய பூவைக் கையிலேந்தி, "நமோகும ராயா" என்னும் மந்திரத்தை நாப்புடைய பெயர உச்சரித்து முருகக் கடவுளை வழிபடுவர். அதற்கு மகிழ்ந்து அவர் திரு ஏரகத்தில் எழுந்தருளுவர்.*

## 5. குன்றுதொறாடல்

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேல
னம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணிய
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி

யிணைத்த கோதை யணைத்த கூந்தன்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்கு றிளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழனினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
றகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணி தோள
னரம்பார்த் தன்ன வின்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழுவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே யதாஅன்று

### முருகக் கடவுள் குறமாதரோடு ஆடும் காட்சி

*குன்றிடங்களில் வாழும் வேடர் வில்லாற் கொலைத் தொழில் புரியும் இயல்பினர்; தேனைப் புளிக்கவிட்டுச் செய்த கள்ளை மூங்கிற்குழாயிலிட்டு முற்றும்படி வைப்பர்; அக்கட்டெளிவை மலை உச்சியிலுள்ள சிறுகுடிச் சுற்றத்துடன் உண்டு களிப்பர்; தொண்டகப்பறை கொட்டிக் குரவை ஆடுவர். அதனைக்கண்ட பெண்மான் போன்ற சாயலையுடைய பெண்கள் தாமும் குரவை யாடுவர். அதனைக் கண்ணுறும், கச்சினையும், தண்டையையும், சிறுவாத்தியங்களையும், கிடாயையும், மயிலையும், கோழிக் கொடியையும், நெடுமையையும், தோள்வளையையும், துகிலினையு முடைய முருகக்கடவுள் தாமும் ஆடலை விரும்புவர்; விரும்பி மார்பிலே சந்தனம் பூசிய வேலன் என்னும் வெறியாட்டாளன் பச்சிலைக் கொடியையும், சாதிக்காயையும் இடை யிட்டுத் தக்கோலக்காய், காட்டு மல்லிகை, வெண்டாளி முதலியவற்றைக் கலந்து கட்டிய மாலையை அணிவர்; சிவந்த ஆடையை உடுத்து,*

*அசோகந் தளிரைக் காதிற்செருகி யாழோசைபோலுங் குரலுடைய பாடுமகளிரோடு குன்றுகள்தோறும் சென்று [1]குரவை ஆடும் குறத்தியர் கைகளைத் தழுவி, ஏந்தி, முன் கைகொடுத்து விளையாடுவர். இது முருகக் கடவுளுக்கு நிலை பெற்ற குணமாகும்.*

## 6. பழமுதிர் சோலை[2]

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
யூரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பி யைதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி

1. "குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலை கொட்பநின் றாடலாகும்"

"குரவை யென்பது கூறுங்காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலு
மெய்த வுரைக்கு மியல்பிற் றென்ப"

2. இது அழகர் கோயிலென்று சிலரும், பழநி என்று சிலருங் கூறுவர்.

யிமிழிசை யருவியொ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண்
முருகிய நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக
ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலு மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்

பரிசிலர்த் தாங்க முருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
யளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
வினியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃறுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா

வாழை முழுமுத றுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலொ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

### முருகக் கடவுள் எழுந்தருளும் இடங்கள்

*முருகக் கடவுள் தங்கியிருக்கும் இடங்களாவன: சிறுதினை அரிசியைப் பூவுடனே கலந்து வைத்து ஆட்டு மறியை அறுத்துக், கோழிக் கொடியை நிறுத்தி ஊர்கள் தோறும் கொண்டாடுகின்ற விழாக்கள், அன்பர்கள் துதித்து மனம் பொருந்தி இருக்கின்ற இடங்கள், வேலன் வெறியாடுகளம், காடு, சோலை, ஆற்றிடைக் குறை, பல ஊர்கள், நாற்சந்தி, முச்சந்தி, புதுப்பூவினையுடைய கடம்பு, ஊருக்கு நடுவே இருக்கும் மரத்தடி, ஆதீண்டு குற்றி முதலியன.*

### குறமாது முருக பூசை செய்யும் வகை

*குறமாது அகன்ற நகரிடத்தே கோழிக் கொடியை நிறுத்துவாள்; நெய்யும் வெண்கடுகும் அப்புவாள்; வழிபடும் மந்திரங்களை உச்சரித்து அழகிய மலர்களைத் தூவுவாள்; மாறுபட்ட நிறமுடைய இரண்டுபட்டாடைகளைஉள்ளொன்றும்புறம்ஒன்றுமாக உடுப்பாள்; சிவந்த நூலை கையிற் காப்பாகக் கட்டுவாள்; வெண்பொரியைத் தூவுவாள். இரத்தத்தோடு பிசைந்த வெள்ளரிசியைச் சிறுபலியாகத் தூவுவாள்; பச்சை மஞ்சளோடு வாசனை மிகுந்த சந்தனம் முதலியவற்றைத் தெளிப்பாள்; செவ்வலரி மாலைகளையும் பிறமாலைகளையும் ஒரேமட்டமாக அறுத்து அசையும்படி தூக்கி, "மலைப் பக்கத்துள்ள ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் வருத்தா தொழிக" என்று வாழ்த்துவாள்; நறிய புகை*

காட்டிக் குறிஞ்சிப் பண்பாடி மலை அருவியோடு பல வாத்தியங்கள் ஒலிக்கச் சிவந்த மலர்களைத் தூவி, இரத்தமளைந்த தினை அரிசியைப் பரப்பி முருகக்கடவுள் மகிழும்படி வாத்தியங்களை ஒலிக்கச் செய்து வழிபடுவாள். இவ்வாறு அச்சந்தரும் முருகபூசை செய்யப்படும் அகன்ற நகரிடத்தும் முருகக் கடவுள் உறைவார்.

வெறியாடுவோன் வெறியாடுகளம் ஒலிக்கும்படி பாடிப், பல கொம்பு களை ஊதி மணியை ஒலித்துப் பிணிமுகம் என்னும் யானையை வாழ்த்தி வேண்டினார் வேண்டிய வரங்களைப் பெறவேண்டுமென்று வழிபட முருகக் கடவுள் அவ்விடத்தில் எழுந்தருளுவார்.

**பழமுதிர் சோலையின் இயற்கை வளம்**

மலையிடத்தினின்றும் கொடிச் சீலைகளைப்போன்று ஆரவாரத்துடன் அருவிகள் குதித்தோடும். அவை அகில் மரத்தை அடித்துக் கொண்டு வரும்; சந்தன மரத்தைத் தள்ளும்; கிளைகள் அந்தரிக்கும்படி மூங்கிலின் வேர்களைக் கிளறும்; தேன்கூடு களைக் கெடுத்துப் பலாச்சுளைகளை வாரிச் சுரபுன்னை மலரை உதிர்த்துப் பெண் குரங்கையும் ஆண் குரங்கையும் நடுங்கச் செய்யும்; பெண்யானைகள் குளிரால் வருந்தும்படி நீரைவீசி, பொன்னும் இரத்தினமும் ஒளிவிட்டு இலங்கும்படி குதித்து, பொன் பொடியைக் கரையில் வீசி, வாழை முறியவும் தெங்கின் இளநீர்க் குலைகள் உதிரவும் மோதும்; மிளகுக் கொடியின் கரிய பூங்கொத்துகளைச் சாய்த்து, மயில்களும், பேட்டுக் கோழிகளும் பயந்தோடச் செய்து, ஆண் பன்றிகளும் கரடிகளும் கல்அளை களில் நுழையவும், கொம்புடைய காட்டுமாடு முழங்கவுஞ்செய்து ஆரவாரிக்கும். இவ்வகை அருவிகள் உடைய பழமுதிர் சோலையில் முருகக் கடவுள் அமர்ந்திருப்பார்.

**முருகக்கடவுள் காட்சி அளித்து அருள் வழங்கும் தோற்றம்**

யான் கூறிய அவ்வவ்விடங்களிலாயினும் பிறவிடங்களி லாயினும் முருகக்கடவுள் வீற்றிருப்பார். நீ அவரைக் காணும் போது கைகூப்பி வணங்கு. பின்பு பின்வருமாறு துதி: இமய மலையினுச்சியில் தருப்பை வளர்ந்த சுனை யில் அங்கியங்கடவுள் தன் உள்ளங்கையில் வாங்கி விட அருந்ததி அல்லாத அறுவராற்

பெறப்பட்ட ஆறு வடிவு பொருந்திய செல்வனே! கல்லாலின் கீழிருக்கும் கடவுளின் புதல்வனே! பெரிய மலை அரையன் மகனே! பகைவர் கூற்றே! வெற்றி அளிப்பவளும் அணிகலன்களணிந் தவளுமாகிய காடு கிழாள் குழவியே! வளைந்த வில்லையுடைய தேவர் படைத்தலைவனே! எல்லா நூல்களையும் அறிந்த அறிவுடை யோனே! போர்த் தொழிலில் நிகரில்லாதவனே! வெற்றியுடைய இளமைப் பருவத் தோனே! அருமறை யுணர்ந்த அந்தணர் செல்வனே! சான்றோர் புகழ்ந்து சொல்லும் சொற்களின் பொருளா யிருப்பவனே! தெய்வயானையாருக்கும் வள்ளியம்மையாருக்கும் கணவனே! வீரர்க்கு இடபமே! வேல் தாங்கிய கையையுடைய செல்வனே! கிரௌஞ்ச மலையைப் பிளந்த வெற்றி யுடையவனே! அமரருலகைத் தீண்டும் உயர்ந்த மலைகளை யுடைய குறிஞ்சி நிலத்துக் குரிமை உடைய வனே! கல்வியில் மதயானை போன்ற வர்க்குச் சிங்க ஏறு போன்றவனே! பிறர்க்குப் பெறற்கரிய வீட்டினையுடைய முருகனே! வீடுபேற்றினைப்பெற விரும்பி வந்தவர்க்கு அதனை நுகர்வித்தலால் பெரிய புகழை ஆளுத லுடையவனே! பிறரால் வருத்தமுற்று வந்தோர்க்கு அருள் செய்யும் சேயே! பெரிய போர்களை முடித்து வென்று பகைவரைக் கொல்கின்ற நின்மார் பிடத்துப் பொன்னாபரணங்களை அணிந்த சேயே! இரந்து வந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் நெடிய வேளே! தேவரும் முனிவரும் ஏத்தும் திருப்பெயருயுடைய தலைவனே! போர் வலியால் சூரபன்மாவின் குலத்தை அழித்த மதவலி என்னும் பெயருடையவனே! இவ்வாறு நீ அறிந்த துதிகளைக் கூறிப் புகழ்ந்து பாடி, ஒப்பில்லாத மெய்ஞ்ஞானத்தை யுடையவனே! உமது தன்மைகளை எல்லாம் முற்ற அளவிடுதல் பல்லுயிர்களுக்கெல்லாம் அரிது ஆதலின் நின் பாததாமரை களைப் பெற எண்ணி வந்தேன், என்று நீ கருதிய வீடுபேற்றை விண்ணப்பஞ் செய்வாயாக. உடனே முருகக் கடவுளைச் சேவித்து நிற்கின்ற வேறு வேறு வடிவினையுடைய குறுகிய பல பூதங்கள் தோன்றிப், "பெருமானே! நீ அருளத்தக்கவனாகிய அறிவு முதிர்ந்த புலவனொருவன் நின் புகழினை விரும்பிக் கேட்போர்க்கு உறுதி பயக்கும் இனிய பல வாழ்த்துரைகளைக் கூறி வந்தான்" என்று கூறும். அப்போது பழமுதிர் சோலையில் எழுந்தருளியிருக்கும்

*முருகக்கடவுள் அச்சந்தரும் தெய்வத் தன்மையை உள் அடக்கிக் கொண்டு தனது இளைய வடிவைக் காட்டி, "நீ வீடுபெற நினைந்து வந்த வரவை நான் முன்னமே அறிவேன்; அதனை நினைந்து எய்துதல் அரிது என்று அஞ்ச வேண்டாம்" என்று உன் மேல் அன்புடைய நல்வார்த்தைகளைப் பலகாலும் அருளிச் செய்வார். பின் இவ் வுலகில் நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியவனாகத் தோன்றும்படி திருவருளாகிய பரிசிலைத் தந்தருளுவார்.*

**தனிப் பாடல்கள்**

குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர் தடிந்தாய்!
புன் தலைய பூதப் பொரு படையாய்! என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறு ஊர்ந்தான் ஏறே!
உளையாய்! என் உள்ளத்து உறை. 1

குன்றம் எறிந்ததுவும், குன்றப் போர் செய்ததும்,
அன்று அங்கு அமரர் இடர் தீர்த்ததுவும், இன்று என்னைக்
கைவிடா நின்றதுவும், கற்பொதும்பில் காத்ததுவும்,
மெய் விடா வீரன் கை வேல்! 2

வீர வேல், தாரை வேல், விண்ணோர் சிறை மீட்ட
தீர வேல், செவ்வேள் திருக் கை வேல், வாரி
குளித்த வேல், கொற்ற வேல், சூர் மார்பும் குன்றும்
துளைத்த வேல் - உண்டே துணை. 3

இன்னம் ஒரு கால், எனது இடும்பைக் குன்றுக்கும்,
கொல் நவில் வேல் சூர் தடிந்த கொற்றவா! முன்னம்
பனி வேய் நெடுங் குன்றம் பட்டு உருவத் தொட்ட
தனி வேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்-பன்னிரு கைக்
கோலப்பா! வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே! 5

அஞ்சும் முகம் தோன்றின், ஆறுமுகம் தோன்றும்;
வெஞ் சமரில், 'அஞ்சல்' என வேல் தோன்றும்; நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின், இரு காலும் தோன்றும்-
'முருகா!' என்று ஓதுவார் முன். 6

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒரு கை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக் கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன், நான். 7

காக்கக் கடவிய நீ காவாது இருந்தக்கால்,
ஆர்க்குப் பரம் ஆம் அறுமுகவா! பூக்கும்
கடம்பா! முருகா! கதிர் வேலா! நல்ல
இடம்காண்; இரங்காய், இனி! 8

பரங்குன்றில் பன்னிரு கைக் கோமான்தன் பாதம்
கரம் கூப்பி, கண் குளிரக் கண்டு, சுருங்காமல்,
ஆசையால், நெஞ்சே! அணி முருகு ஆற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர்தாம் உரைத்த நல் முருகு ஆற்றுப்படையை,
தற்கோல, நாள்தோறும் சாற்றினால், முன் கோல
மா முருகன் வந்து, மனக் கவலை தீர்த்தருளி,
தான் நினைத்த எல்லாம் தரும். 10

• • •

## சிறப்புப் பெயர் முதலியவை


**அ**

அங்குசம் ........ 110
அந்தணர் ........ 263
அந்தணர் வேள்வி ........ 96
அந்தரக் கொட்பினர் ........ 174
அந்தரப் பல்லியம் ........ 119
அமரர் ........ வெ. 2
அமை ........ 195
அலைவாய் ........ 125
அறுமுகம் ........ வெ. 8
அறுவர் ........ 255

**ஆ**

ஆசினி ........ 301
ஆடுகளம் ........ 245
ஆமா ........ 315
ஆர்வலர் ........ 93
ஆல் ........ 256
ஆவினன்குடி ........ 176

**இ**

இயம் ........ 240
இயவுள் ........ 274
இரவலன் ........ 284
இருபிறப்பாளர் ........ 182
இழை ........ 18
இளநீர் ........ 308

**ஈ**

ஈசன் ........ வெ. 7
ஈசன் மகன் ........ வெ. 7

**உ**

உடை ........ 138
உமை ........ 153
உலகம் ........ 1, 124
உளியம் ........ 313

**எ**

எஃகு(வேல்) ........ 111

**ஏ**

ஏரகம் ........ 189
ஏறு ஊர்ந்தான் ........ வெ. 1

**ஐ**

ஐ இரு வட்டம் (பரிசை) ........ 111
ஐயர் ........ 107
ஐயவி ........ 228

**ஒ**

ஒரு கை முகன் ........ வெ.7

**ஓ**

ஓடை (பட்டம்) ........ 79

**க**

கச்சினன் ........ 208
கடம்பன் ........ வெ. 8
கடம்பு ........ 225
கடல் ........ 2
கணவீரம் ........ 236
கதிர் வேலன் ........ வெ. 8
கந்துடை நிலை ........ 226
கலிங்கம் ........ 109
கழலினன் ........ 208
கள் ........ 195
களிறு ........ 304

**கா**

கா ........ 223
காசு (மணி) ........ 16
காடு ........ 223

காழகம் ................................................ 184
கானம் ....................................................... 9
கானவர் ............................................... 194

கி

கிண்கிணி ............................................. 13

கு

குரவை ................................................. 197
குரிசில் ................................................. 276
குல்லை ................................................ 201
குவளை ................................................. 22
குழலன் ................................................. 209
குழை ..................................................... 86
குளவி ................................................... 191
குளன் ................................................... 224
குறமகள் ............................................... 242
குறிஞ்சி ................................................ 239
குறிஞ்சிக் கிழவன் ............................. 267
குன்று ........................................... 77, 217
குன்று தொறு ஆடல் ......................... 217

கூ

கூகை ..................................................... 49
கூடல் ..................................................... 71
கூளியர் ................................................ 282
கூற்றம் .................................................. 81
கூற்று ................................................... 257

கே

கேழல் .................................................. 311

கை

கை புனைந்து இயற்றாக் கவின் .......... 17

கொ

கொடு மணி ......................................... 246
கொற்றவை ......................................... 258

கோ

கோட்டன் ............................................ 209
கோடு ................................................... 246
கோபம் ................................................... 15
கோழி ........................................... 38, 311

ச

சண்பகம் ................................................ 27
சதுக்கம் ............................................... 225
சந்தி .................................................... 225
சமர் ................................................... வெ. 6

சா

சாந்து .................................................. 193

சி

சிவந்த ஆடை ....................................... 206
சிறுகுடி ................................................ 196

சீ

சீரை ..................................................... 126

சு

சுரும்பு ........................................... 43, 203
சுனை ........................................... 199, 253
சுனை மலர் ........................................... 75

சூ

சூர் ..................................... 275 வெ. 1, 3
சூர் (சூரபன்மன்) .................................. 46
சூர் தடிந்த கொற்றவன் ................. வெ. 4
சூரரமகளிர் ........................................... 41

செ

செச்சைக் கண்ணியன் ....................... 208
செந்தி ............................................... வெ. 5
செந்தி முதல்வன் ........................... வெ. 7
செந்தி வாழ்வு .................................. வெ. 5
செயலை ............................................... 207

சே

சேஎய் ........................................... 61, 271
சேவல்அம் கொடியன் ................ 210–211

ஞா

ஞாயிறு ..................................................... 2

த

தகரன் .................................................. 210
தண்டை ........................................... வெ. 7

தலைப்பெயல் ........ 9

**தா**

தாமரை ........ 73

தார் (மார்பின் மாலை) ........ 113

தாழை ........ 307

**தி**

திலகம் ........ 24

தினை ........ 218, 242

**து**

துணங்கை ........ 56

துருத்தி ........ 223

**தெ**

தெய்வஉத்தி ........ 23

தெய்வத்து இள நலம் ........ 290

தெய்வம் ........ 287

**தே**

தேய்வை ........ 33

**தொ**

தொடி ........ 114

தொண்டகச் சிறு பறை ........ 197

தொல் குடி ........ 178

**ந**

நக்கீரர் ........ வெ. 10

நகர் ........ 238, 244

நறைக் காய் ........ 190

**நா**

நாகம் ........ 302

நாற் பெருந் தெய்வம் ........ 160

நான்முக ஒருவன் ........ 165

**நெ**

நெடுவேள் ........ 273

நெய்தல் ........ 74

**ப**

பந்து ........ 68

பரங்குன்று ........ வெ.9

பருமம் (மேகலை) ........ 146

பலி ........ 234

பழம் முதிர் சோலைமலை ........ 317

பழையோள் ........ 259

பன்னிருகைக் கோமான் ........ வெ. 9

பன்னிருகைக் கோலப்பன் ........
........ வெ. 5

**பா**

பாடு இன் படு மணி ........ 115

பாம்பு ........ 49, 150

பார் முதிர் பனிக் கடல் ........ 45

பாவை ........ 68

**பி**

பிடி ........ 304

பிண்டி ........ 31

பிணிமுகம் ........ 247

பிணையல் ........ 30

பிரப்பு ........ 234

**பு**

புட்டில் ........ 191

புலவர் ஏறு ........ 268

புலவன் ........ 261

புள் அணி நீள் கொடிச் செல்வன் ........
........ 151

**பூ**

பூதப் பொரு படை ........ வெ. 1

பூந் துகில் ........ 15

**பே**

பேய்மகள் ........ 51

**பொ**

பொதியில் ........ 226

பொரி ........ 231

பொன்னுரை ........ 145

**ம**

மகரப்பகுவாய் ........ 25

மஞ்சள் ........ 235

மஞ்ஞை ........ 122, 310

மஞ்ஞையன் ........................................ 210

மணி (ஒலிக்கின்ற மணி) .................... 80

மந்தி ........................................................ 42

மயில் ......................................................205

மரா அம் .......................................... 10, 202

மருது ........................................................ 28

மருது இணர் .......................................... 34

மலைமகள் ............................................257

மள்ளன் ................................................262

மறி ......................................................... 218

மறை ...................................................... 186

மன்றம் ...................................................226

மா

மா (மா வடிவினான சூரபன்மன்) 60

மாயோன் ........................................... வெ. 7

மாயோன் மருகன் ........................... வெ. 7

மாவின் தளிர் .............................. 143–144

மானின் உரிவை ......................... 128–129

மீ

மீன் (நட்சத்திரம்) .............................. 169

மு

முசுக்கலை ............................................303

முடி .......................................................... 84

முத் தீ ..................................................... 181

முதல்வன் .......................................... வெ. 7

முரசம் .................................................... 121

முருகன் .................... 269, வெ. 6, 7, 8, 10

முருகு ஆற்றுப்படை ................. வெ. 9, 10

முருகு இயம் .........................................243

முனிவர் ................................................. 137

மூ

மூஎயில் (முப்புரம்) .............................. 154

மூன்று புரி நுண் ஞாண் .................... 183

யா

யாழ் ......................................................... 141

யாறு .......................................................224

யூ

யூகம் .......................................................302

வ

வண்டு ............................................ 76, 199

வயல் ........................................................ 72

வயிர் ....................................................... 120

வல் வில் ................................................ 194

வலம்புரி .......................................... 23, 127

வள்ளி .................................................... 102

வளை (சங்கு) ........................................ 120

வா

வாடா மாலை (பொன்னரி மாலை) ...........
.................................................................. 79

வாழை ....................................................307

வான்அரமகளிர் .................................... 117

வானோர் ................................. 260, வெ. 5

வி

விடை .....................................................232

விண்ணோர் .................................... வெ. 3

விழவு .....................................................220

விறற் களம் ............................................. 55

வெ

வெட்சி ...................................................... 21

வெண் கூதாளம் .................................. 192

வெள் ஏறு (கொடி) ................................ 151

வெள்ளில் ................................................. 37

வெறி அயர் களன் ...............................222

வே

வேங்கை .................................................. 36

வேல் .................................... வெ. 2, 3, 4, 6

வேலப்பன் ......................................... வெ. 5

வேலன் .........................................190, 222

வேழம் ..................................................... 82

## 2. [1]பொருநராற்றுப்படை

அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
குளப்பவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
யெய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
யெண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
யண்ணா வில்லா வமைவரு வறுவாய்ப்
பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை யாய்தொடி கடுக்குங்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவி
னாய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்வீசித் தொடையன்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
யாறலை கள்வர் படைவி ட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை
வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்துஞ்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி

---

1. இது கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. இவர் காலம் கி.பி. 60–90–பொருநர் – போர்க்களம் பாடுவோர்.

யறல்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
னாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னாடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடை போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்கா ழல்கு
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்துதிரள் குறங்கிற்
பொருந்துமயி ரொழுகிய திருந்துதாட் கொப்ப
வருந்துநாய் நாவிற் பெருந்தகு சீறடி
யரக்குருக் கன்ன செந்நில னொதுங்கலிற்
பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுகுநீர் மொக்கு
ணன்பக லந்தி நடையிடை விலங்கலிற்
பெடைமயி லுருவிற் பெருந்தகு பாடினி
பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி
யிலையின் மராத்த வெவ்வந் தாங்கி
வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்
பீடுகெழு திருவிற் பெரும்பெயர் நோன்றாண்
முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிந

வறியா மையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந
வாடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டி னீடின்
றெழுமதி வாழி யேழின் கிழவ
பழுமர முள்ளிய பறவையின் யானுமவ
னிழுமென் சும்மை யிடனுடை வரைப்பி
னசையுநர்த் தடையா நன்பெரு வாயி
லிசையேன் புக்கென் னிடும்பை தீர
வெய்த்த மெய்யே னெய்யே னாகிப்
பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்தவென் கண்ணகன் றடாரி
யிருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடிய
லொன்றியான் பெட்டா வளவையி னொன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி யிரீஇப்
பருகு வன்ன வருகா நோக்கமோ
டுருகு பவைபோ லென்பு குளிர்கொளீஇ
யீரும் பேனு மிருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை நல்கி
மழையென மருளு மகிழ்செய் மாடத்
திழையணி வனப்பி னின்னகை மகளிர்
போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
வார வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை மற்றவன்
றிருக்கிளர் கோயி லொருசிறைத் தங்கித்
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ

ததன்பய மெய்திய வளவை மான
வாறுசெல் வருத்த மகல நீக்கி
யனந்தர் நடுக்க மல்ல தியாவது
மனங்கவல் பின்றி மாழாந் தெழுந்து
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையுங்
கனவென மருண்டவென் னெஞ்சே மாப்ப
வல்லஞர் பொத்திய மனமகிழ் சிறப்பக்
கல்லா விளைஞர் சொல்லிக் காட்டக்
கதுமெனக் கரைந்து வம்னெக் கூஉ
யதன்முறை கழிப்பிய பின்றைப் பதனறிந்து
துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
பராஅரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய்வெய் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறுபல் லுருவின் விரகுதந் திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியா
ழொண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநா
ளவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பரல்வறைக் கருனை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி
யுயிர்ப்பிடம் பெறாஅ தூண்முனிந் தொருநாட்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
யகறி ரோவெம் மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு

துடியடி யன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறி யளவையிற் றரத்தர யானு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென் வென்வே
லுருவப் பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குருசி
றாய்வயிற் றிருந்து தாய மெய்தி
யெய்யாத் தெவ்வ ரேவல் கேட்பச்
செய்யார் தேஎந் தெருமரல் கலிப்பப்
பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன்
னாடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
வாளி நன்மா னணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டங் களிறட் டாஅங்
கிரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு
மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
விருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
றாணிழன் மருங்கி லணுகுபு குறுகித்
தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்
றீற்றா விருப்பிற் போற்றுபு நோக்கிநுங்
கையது கேளா வளவை யொய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர

வைகல் வைகல் கைகவி பருகி
யெரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தே
ரூட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
றாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழந்
தரவிடைத் தங்கலோ விலனே வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்தித் தெற்றெனச்
செலவுகடைக் கூட்டுதி ராயிற் பலபுலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்ல னொல்லெனத்
திரைபிறழிய விரும்பௌவத்துக்
கரைசூழ்ந்த வகன்கிடக்கை
மாமாவின் வயின்வயினெற்
றாழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினாற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கவவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்க
ணீற்றியாமைதன் பார்ப்போம்பவு
மிளையோர் வண்ட லயரவு முதியோ
ரவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவு
முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய

செஞ்சுளைய கனிமாந்தி
யறைக்கரும்பி னரிநெல்லி
னினக்களம ரிசைபெருக
வறளடும்பி னிவர்பகன்றைத்
தளிர்ப்புன்கின் றாழ்காவி
னனைஞாழலொடு மரங்குழீஇய
வவண்முனையி னகன்றுமாறி
யவிழ்தளவி னகன்றோன்றி
நகுமுல்லை யுகுதேறுவீப்
பொற்கொன்றை மணிக்காயா
நற்புறவி னடைமுனையிற்
சுறவழங்கு மிரும்பௌவத்
திறவருந்திய வினநாரை
பூம்புன்னைச் சினைச்சேப்பி
னோங்குதிரை யொலிவெரீஇத்
தீம்பெண்ணை மடற்சேப்பவுங்
கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தண் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்
தியாழ்வண்டின் கொளைக்கேற்பக்
கலவம்விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பலபெயரத்
தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவுந்
தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவுங்
குறிஞ்சி பரதவர் பாட நெய்த
னறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக்கவர
வரைமந்தி கழிமூழ்கக்

கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பினா னாடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி
யொருகுடையா னொன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
யறனொடு புணர்ந்த திறனறி செங்கோ
லன்னோன் வாழி வென்வேற் குருசில்
மன்னர் நடுங்கத் தோன்றிப் பன்மா
ணெல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவு
மருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையு
நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே.

*பாணன் ஒருவன் கொடை வழங்கும் வள்ளல்களைத்தேடி அலைந்து திரிகின்றான். அவன் பின்னே அவன் மனைவியாகிய விறலியும் கரிய பெரிய சுற்றத்தினராகிய சிறுவரும் செல்கின்றனர். அவர்கள் செல்கின்ற இடம் காட்டுவழி.*

*பாடினி சிறந்த அழகி. அவள் கூந்தல் ஆற்றின் கருமணல் போன்று இருண்டு நெளிந்தது; நெற்றி பிறைபோன்றது; புருவம் கொலைத்தொழிலுடைய வில்லை ஒப்ப வளைந்தது; அழகிய கடைகளுடைய கண்கள் குளிர்ந்த நீர்மையின; இனிய சொற்களை மிழற்றும் சிவந்தவாயோ இலவிதழ் போன்றது; பற்கள்*

முத்தை நிரைபட வைத்தாற் போன்றவை; மகரக்குழைகள் அசைந்து ஊசலாடும் காதுகள் கத்தரிகையின் குழைச்சுப்போல் அமைந்து அழகுறுவன; கழுத்தோ நாணம் வருத்துதலால் பிறரை நோக்காது முன் வளைந்திருக்கும் இயல்பினது; தோள்கள் பருத்துத் திரண்ட மூங்கில்போலத்திரண்டவை; அவர் முன்கையில் ஐதமயிருண்டு; அவள் விரல்கள் உயர்ந்த மலைகளில் வளரும் காந்தட் பூப் போன்றவை; நகங்கள் கிளியின் அலகு போல் சிவந்து விளங்குவன; தனங்கள் சுணங்கணிந்து ஈர்க்கிடை போகாத எழுச்சியும் அழகுமுடையன; கொப்பூழ் நீர்ச்சுழி போன்றது; இடை உண்டு என்று பிறரால் அறிய முடியாது ஒடுங்கி அசையும் இயல்பினது; அரை பல மணிகள் கோத்த மேகலாபரணம் அணியப் பெற்றது; துடைகள் பெண்யானையின் தும்பிக்கைபோன்று திரட்சியுடையன; அடிகள் ஓடி இளைத்த நாயின்நாக்குப் போன்றன; வாய் மயிர் ஒழுங்கு பெற்ற கணைக்காலுக்குப் பொருத்தமானவை.

**பாடினி யாழ் வாசித்துத் தெய்வத்தைத் துதித்தல்**

இவ்வாறு பேரழகு வாய்ந்த பாடினி, சாதிலிங்கம் உருக்கி வார்த்தாற் போன்று சிவந்த நிலத்திலே நண்பகல் வெய்யிலில் நடந்து செல்கின்றாள்; கால்களில் கூரிய சுக்கான்கற்கள் உறுத்து கின்றன; அதனால் பன்னைப் பழம் போன்று கால்களிற் கொப்புளங்கள் உண்டாகின்றன. அவள் மேலும் நடத்தற்கு இயலாத வளாகின்றாள். யானைகள் உலாவுகின்ற காட்டுப்பாதை யின் ஓரத்தே இலைகள் உதிர்த்த மராமரம் நிற்கின்றது. அதன் நிழல் வலை விரித்தது போன்ற ஐதாகக் காணப்படுகின்றது. அந் நிழலில் பாடினி சிறிது தங்கி இருந்து இளைப்பாறுகின்றாள். அவள் தனது பாலையாழை எடுக்கின் றாள். அங்கு உறையும் தெய்வங்கள் மகிழும்படி நரம்புகளைவாரியும், வடித்தும், உந்தியும், உறழ்ந்தும் தெய்வங்களைத் துதிக்கும் பாடல்களைப் பாடுகின்றாள்.

**யாழின் வடிவு**


அப் பாலையாழின் [1]பத்தர் மானின் குளம்பு அழுத்தின இடம் போன்று இரண்டருகுந் தாழ்ந்து நடு உயர்ந்துள்ளது.

1. "பத்தரானது தோணி வடிவாகவும், மகரமீன் வடிவாகவும், குடத்தின் வடிவாகவும் பலதிறப்பட்டிருந்ததெனக் காண்கின்றோம். போர்வைத் தோலினை நீக்கப் பத்தரின்

இரண்டு தலையும் கூட்டித் தைக்கப்பெற்ற போர்வை பொன்னிறத் தோலினாலானது. இரண்டு பத்தருஞ் சேர்வதற்குக் கடாவிய ஆணிகள் நண்டின் கண் போன்றவை; வாய் எட்டாநாள் திங்கள் போன்று உண்ணாக்கில்லாதது; கரிய தண்டு பாம்பு தலையை நீட்டினாற்போன்ற தோற்றமுடையது. வார்க்கட்டுக்கள் பெண்கள் கையிலணியும் வளையல்கள் போன்றவை. விரலால் அலைத்து வாசிக்கப்படும் நரம்புகள் தினையின் குற்றலரிசி போன்றவை.


**பரிசில் பெற்றுவரும் பாணன் பொருநனை எதிர்ப்படல்**

இவ்வாறு பாணன் விறலியுடனும் தனது சுற்றத்துடனும் இளைப்பாறியிருக்க அவ்வழியே இன்னோர் பாணன் தனது சுற்றத்தோடு வருகின்றான். அவன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிப் பரிசில் பெற்று வருகின்றவனாவன். வறுமையால் மெலிவுற்றிருக் கின்ற பாணனை அவன் நோக்கிக் கூறுகின்றான்.


யாழ்

விழாக் கொண்டாடுங்காலத்துச் சுற்றத்துடன் மிகுந்த சோற்றை உண்டு மகிழ்ந்தும் அது கழிந்த பின் பிறிதோர்விழாக் கொண்டாடும் ஊரை அடைந்தும் திரிகின்ற பொருநனே! யாழையுடைய கூத்தருக்குத் தலைவனே! பிறர் புகழை அரசர் சபையில் உயர்வடைவிக்க

வறுவாய் தோன்றும். தமிழ்நாட்டு யாழ்களிலே இது எண்திங்கள் வடிவிற்றாக விருந்த தெனத் தமிழ்ப்புலவர் வாய்மொழியால் அறியக்கிடக்கின்றது. பத்தரினது மேற்புறத்தில் ஒரு பாதியே வறுவாய் ஆக்கப்பட்டதென்பதும் இதனூடாக மற்றப் பாதி மரமும் குடைந்தெடுக்கப் பட்டமையின் 'இருள் தூங்கு வறுவா' யாயிற்று எனவும் அறிகின்றோம்.....போர்வைத் தோலைப் பத்தரோடு பொருத்தும் சுள்ளாணிகளின் தலை நண்டின்கண் போலப் புறப்பட்டுத் தோன்றும்.....மான் குளம்பு அழுத்திய இடம் நடு உயர்ந்து இருபுறமுந் தாழ்ந்திருக்குந் தோற்றம் போல அமைந்திருப்பதனைப் படத்திற் காண்க. அப்படத்திலேயுள்ள போர்வைத்தோல் இருதுண்டாக அமைந்து முழு நீளமும் படத்திற்போல வறுவாய் எண்ணாட்டிங்கள் வடிவிற்றாக அமையுமிடத்துப் பொல்லம் பொத்துதல் போர்வைத்தோலின் ஒரு பகுதியில், அஃதாவது




வறுவாய் மூடுகிற பாதியில் மாத்திரம் அமையும், நரம்பு நிற்கும் பகுதி அதுவாதலின் மடந்தையது மார்பிடத்தை அணுகிப் பின்பு இல்லையென மயிர் ஒழுங்குபட்டுக் கிடக்கின்ற அழகிய வயிற்றிடத்தின் தோற்றம் பொல்லம் பொத்திய போர்வை யென்று பெறப்பட்டது...... போர்வையாக்கு தற்குரிய தோலாகிய பச்சை துவரூட்டப் பெற்று அழகிற் சிறந்த தோற்றத்தை உடையதாயிருந்த தென்பது பெறப்பட்டது."

வல்ல வனே! யான் கூறுகின்றவற்றை விரும்பிக் கேட்பாயாக. வழி அறியாமையால் இவ்வழியைத் தப்பி வேறொரு வழியிற் சென்று விடாதே. இவ் வழியிடத்தே நீ என்னைக் கண்டது நீ முற்பிறப்பிற் செய்த நல்வினையின் விளைவாகும். உன்னையும் உனது கரிய சுற்றத்தையும் என்றும் வருத்துகின்ற பசியைப் போக்கிக்கொள்ள விரும்புகின்றாயாயின் விரைவில் எழுந்திரு. யானும் பழ மரங்களைத் தேடி அலையும் பறவைகளைப்போலப் பரிசில் தருவாரைத் தேடி அலைந்தேன்.

## தன்னைக் கரிகால் வளவன் வரவேற்றுப் பரிசில் வழங்கிய வகையினைப் பாணன் எடுத்து மொழிதல்

ஒரு நாள் கரிகாற் சோழனது ஆரவாரமிக்க கோபுரவாயிலை அடைந்தேன்; வாயில் காப்போ னிடமுங் கூறாது உள்ளே சென்றேன். செல்கின்ற மகிழ்ச்சியினால் எனது இளைப்பு நீங்கிற்று. எனது உடுக்கையின் கண்கள் கைபடுதலினால் பாம்பின் படத்திலுள்ள பொறிகள் போன்ற தழும்புகள் பெற்றிருந்தன. நான் அதனிடத்தே இரட்டைத் தாளத்தைப் பிறப்பித்து எனது வறுமை தீரும்படி ஒரு பாட்டுப் பாடினேன். அப்போது விடி வெள்ளியின் வெளிச்சம் தோன்றும் விடியற் காலம். உடனே அரசன் உறவினரைப்போலத் தன்னிடத்தில் நான் உறவு கொள்ளும்படி பல முகமன் மொழிகள் கூறினான்; தான் எப்பொழுதும் பார்க்கக்கூடிய அண்மையில் என்னை இருக்கும்படி செய்தான்; என்னை அன்புடன் பார்த்தான்; அப்பார்வையால் எனது எலும்புகள் உருகும்படி குளிர்ந்தன; எனது ஆடையில் ஈரும் பேனும் இருந்து ஆட்சி செய்தன; அது பல தையல்களிடப் பட்டதாயும் வியர்வையால் நனைந்ததாயும் இருந்தது. அவன் எனது பழைய ஆடையைக் களையும்படி செய்தான். அதற்குப் பதில் நூல்போனவிடம் எது என்று அறிய முடியாத நுண்மை யுடையதும், பூ வேலைப்பாடுடையதுமாகிய பாட்டாடையை



[1]போர்வை

1. “போர்வைத்தோல் இருகூறாகி நடுவிலே பொல்லம் பொத்தப்பட்டிருந்தது. போர்வை யின் கீழுள்ள யாப்பு உறுப்பிலே கட்டப்பட்ட நரம்பு பொல்லம் பொத்தலினூடாக வெளியே கொண்டுவரப்பட்டுக் கோட்டிலமைந்த முறுக்காணிகளிலே தொடுக்கப் பட்டிரந்தது.”

உடுக்கும்படி தந்தான். அரண்மனையிலே அழகிய ஆபரணங் களை அணிந்த பெண்கள் இருந்தார்கள். அவர்கள் பாட்டாலும் கூத்தாலும் அரசனை மகிழ்வித்தார்கள். அவர்கள் பொன் கிண்ணத்தில் [1]கள்ளை வார்த்துத் தந்தார்கள்; அவர்கள் தரத்தர வழி நடந்த வருத்தம் தீரும் படி அதனை நிறைய உண்டேன்; உண்டதனால் இது வரையும் கள்ளுண்ண வில்லையே என்னும் வருத்தத்தைப் போக்கினேன். மாலைக் காலத்தில் களிப்பு மிகுந்தவனாய் அரண்மனையின் ஒரு புறத்தில் தங்கினேன்; தவஞ் செய்வார் தமது உடம்பை அழியவிடாது அத்தவத்தாற் பெறும் பயனைப் பெறுவதுபோல வழி நடந்த வருத்தம் சிறிதும் இல்லாமல் போக்கினேன். கள் ளுண்டதனால் உண்டான மெய்வருத்தமல்லாது வேறு வருத்தம் யாதுமின்றி நித்திரை விட்டெழுந்தேன். அரசனைக் காண்பதற்கு முதல்நாள் சொல்லுக் கடங்காத வறுமையுடையவனா யிருந்தேன். அரசனைக் கண்ட மற்ற நாட் காலையில் என்னைக் கண்டோர், நேற்று வந்தவன் இவனல்லன் என ஐயுற்ற னர். நான் பலவகை நறுமணப் பொருள்களை உடலிற் பூசியிருந்தேன்; அதனால் வண்டுகள் இடையறாது என்னை மொய்த்தன. இது கனவாயிருக் கலாமென்று நினைத்தேன். இது கனவன்று நனவு என்று எனது நெஞ்சு துணிந்து சொல்லிற்று. கொடிய வறுமையால் வருந்திய எனது சுற்றத்தினர் மகிழ்ச்சி யடைந்தனர். “இப்பொழுது மாறுதலடைந்திருந்த போதும் நேற்று வந்த இரவலனே நீ” என்று என்னுடன் வந்த இளைஞர் சொன்னார்கள். அதனைக் கேட்ட அரசன் அவர்களைக் காவலாளர்கள் மூலம் அழைத்து அவர் களுக்குச் செய்யும் முறைமைகளைச் செய்தனுப்பினான். யானும் என் சுற்றத்தினரும் புல்லாற்றிரித்த பழுதையைத் தின்று வளர்ந்த செம்மறிக்கிடா யின் புழுக்கிய இறைச்சியை உண்டோம்; இரும்புக்கம்பியில் கோத்துப் பொரித்த கொழுத்த இறைச்சிப் பொரியலை வாயின் இடப்புறத்தும் வலப் புறத்தும் சேர்த்தி ஆற்றி உண்டு களித்தோம். இவ்வாறு இறைச்சிப் பொரியலையும் இறைச்சிப் புழுக்கலையும் உண்டு அலுத்தோம். இன்னும் பல வடிவினையுடைய பலகாரங்களையும் உண்டோம். கள்ளுண்டு

1. கள் என்பது இங்குப் பனை தென்னைகளிலிருந்து இறக்கப்படும் கள்ளன்று; பழம், தேன் தாதகிப்பூ முதலியவற்றைப் புளிக்கவிட்டுச் செய்யப்படும் ஒருவகை வெறிப்பானம்.

பல நாட்களைக் கழித்தோம். நீங்கள் சோறும் உண்ணுதல் வேண்டும், என்று கூறி முல்லை முகை போன்ற சோற்றையும் பொரிக் கறியையும் கழுத்துவரையும் நிரம்பும் படி அரசன் உண்ணத்தந்தான். பகலு மிரவும் இறைச்சியைத் தின்றதனால் எங்கள் பற்கள் கொல்லை நிலத்தை உழுதகொழுப்போல முனை மழுங்கிப் போயின. இளைப்பாற நேரமின்றி உணவுகளை உண்டு வெறுத்தோம். நாங்கள் நமது ஊருக்குச் செல்லுதல் வேண்டுமென ஒருநாள் அவனிடத்தில் மெதுவாகக் கூறினோம். அதைக் கேட்டுக் கோபித்தவன்போல் அவன் யாம் வருந்தும்படி பார்த்து, "எமது கூட்டத்தை விட்டுப் போகின்றீரோ" எனக் கூறினான். அவன் யானைகளைக் கன்றுகளுடன் கொடுத்தான்; இன்னும் ஊர்திகள், ஆடைகள், அணிகலன்கள் முதலியவற்றையும் தந்தான். அவற்றை வாரிக்கொண்டு இனி எக்காலமும் எமக்கு வறுமை இல்லையாகும் படி நாம் வருகின்றோம்.

**கரிகாலனின் சிறப்புக்கள்**

இரவலனே! கரிகாற் பெருவளத்தானின் சிறப்புக்கள் சிலவற்றைக் கூறு கின்றேன் கேள்! அவன் முருகக் கடவுளின் சீற்றம்போன்ற கோபமுடைய வன். அவன் தாய் வயிற்றிலிருந்தே அரசுரிமையைப் பெற்றுப் பிறந்தான். தவழுங்காலம் தொட்டே அவன் மிக வலிமை பெற்றிருந்தான். அவன் ஆத்தி மாலையைத் தரித்திருப்பான். பனங்குருத்தினாற் கட்டிய மாலையணிந்த சேரனையும், அரத்தின்வாய் போன்ற வேப்பிலையாற் றொடுத்த மாலையைத் தலையிலணிந்த பாண்டியனையும் அவன் வெண்ணி என்னும் போர்க் களத்தே பொருது வென்றான்.

இரவலனே! அவன்முன் நீ உனது சுற்றத்துடன் உனது வறுமை தோன்றும்படி நிற்பாயாயின் கற்றா தனது கன்றுக்குப் பால் சுரந்து கொடுக்க விரும்புவது போல அவன் உங்கள் வறுமை நீங்கப் போதுமான பரிசில் தருவான்; உங்கள் பாடல்களைக் கேட்பதன்முன் கொட்டைப் பாசியின் வேர் போல அழுக்கையும் தையல்களையுமுடைய உங்கள் துணிகளைக் களையும் படி செய்வான்; சிறு குஞ்சங்களைக் கரையிலுடைய பட்டாடைகளை உடுக்கும்படி தருவான்; பூமணங் கமழ்கின்ற காரமுள்ள கள்ளைப்

போதும் போதும் என்னும்படி பொன் வள்ளத்தில் வார்த்து நாள்தோறும் நல்குவான்; பாடினியின் சுருண்ட மயிரிடத்தே பொற்றாமரை மலரைச் சூட்டுவான்; அணிந்துகொள்வதற்குப் பொன்னரி மாலையையும் முத்துமாலையையும் கொடுப்பான். யானைத் தந்தத்தினால் செய்த தாமரை முகையினையுடைய தேரில் நான்கு குதிரைகளைப்பூட்டி அதில் உன்னை ஏற்றி ஏழடி பின் சென்று வழிவிடுவான்; பின் "நிலையில்லா உலகத்துப் புகழை நினைந்து நீ பெற்ற பரிசிலைப் பிறர்க்குங் கொடுத்துச் செல்லுதி" எனக் கூறிப் பல மருத நிலத்து ஊர்களையும், பல யானைகளையுந் தருவான்.

**சோழநாட்டு வளம்**

சோழநாடு மிக்க செழிப்புடையது. திடர்கள் தோறும் நெற்கூடுகள் (குதிர்)கிடக்கும். மக்கள் தென்னஞ் சோலைகளின் நடுவே வீடுகளமைத்து வாழ்வர். காக்கைகள் இரத்தம் அளைந்த சோற்றை உண்ணும்; உண்டு வீட்டைச் சூழ்ந்த நொச்சிச் செடியின் நிழலிற் பொரித்த ஆமைப்பார்ப்புகளை எடுத்துப் பசிக்கும் போது உண்பதற்கு மறைத்துவைக்கும். கடற்கரை மணற் குன்றுகளில் உழத்தியர் வண்டல் இழைத்து விளையாடுவர். பாகற் பழத்தை யும் பலாப்பழத்தையும் தின்ற மயிற் சேவல்கள் வளைந்த காஞ்சி மரத்திலும் மருதிலும் இருந்து பெடைகள் அழைக்கும்போது பறந்து செல்லும்; சென்று யாழின் ஓசை போன்ற வண்டின் பாடலைக் கேட்டு அதற்குப் பொருந்த நிலவுபோன்ற மணலில் நின்று ஆடும்.

நாட்டிலே கரும்பும் நெல்லும் செழித்துவளரும்; அடும்பும் பகன்றையும், புன்கும், ஞாழலும் ஏனைய மரங்களும் நெருங்கி நிற்கும். அங்குறைவோர் நாட்டு வாழ்க்கையை வெறுத்தாராயின் நீல நிறமுடைய முல்லைக் கொடிபடர்ந்த காடு சார்ந்த நிலத்தே சென்று வாழ்வர். அங்குத் தளவும், முல்லையும், தேற்றாவும், கொன்றையும் காயாவுமாகிய மரஞ் செடிகொடிகள் தழைத்து நிற்கும். முல்லை மருத நிலத்து வாழ்வோர் அங்கு வாழ்தலை வெறுத்தாராயின் வேறு நிலத்தே சென்று வாழ்வர். கடலிடத்தே இறால் மீனைத் தின்ற நாரை புன்னைக் கொம்பில் வந்து தங்கும்;

*பின்பு புன்னை மரத்தின்மீது கடல் சிந்துகின்ற நீரின் ஆரவாரத்துக்குப் பயந்து எழுந்து வாழை மரத்தில் தங்கும். கடற்கரை ஊர்களிலே குலைகளையுடைய தெங்குகளும், குலைக்கமுகும், குலைவாழை களும், பூக்கள் மலர்ந்த சுரபுன்னையும் காட்சி அளிக்கும். அவற்றின் செறிவிலே பேராந்தைகள் உறையும். அங்கு உறையும் பரதவர் நெய்தல் நிலத்தை வெறுத்தார்களானால் குறிஞ்சி நிலத்தே சென்று வாழ்வர்; தேனும் கிழங்கும் விற்ற குறிஞ்சி நில மக்கள் மீனின் நெய்யோடு கள்ளையும் பண்டமாற்றுச் செய்து போவர். மருத நிலத்து வீடுகளில் நிற்கும் கோழிகள் தினையை உண்ணும். மலையிடத்தே திரிகின்ற மந்திகள் உப்பங்கழியில் மூழ்கும்; கழியிலிருந்து எழும்பிய நாரைகள் மலையிடத்துத் தங்கும். இவ்வகை நான்கு நிலங்களும் மயங்கி இருக்கும் உலகத்துக்கு அருள் செய்தற்குச் செங்கோலை எடுத்த தலைவன் வாழ்வானாக!*

*வெய்யிலின் வெப்ப மிகுதியால் தாமரையும் குல்லையும் தீயும்; மரக் கொம்பர்கள் கரியும்; மலையிடத்து அருவிகள் வறளும்; மேகங்கள் கடல்நீரை முகத்தல் செய்யா. இவ்வகையான வறட்சிக் காலத்தும் நுரையைத் தலையிலுடைய காவிரிநீர் நறைக் கொடியையும், நரந்தம் புல்லையும், அகிலையும், சந்தனமரத்தையும் நீராடும் துறைகள்தோறும் தள்ளிக் குளத்தி லும் மருதநிலத் தூர்களிலும் புகும். நீராடு மகளிர் நீர் விளையாடுவர். நெல் அறுப்போர் அரிவாளால் அரிந்த நெற்போரினை மலைபோல் உயரும்படி அடுக்குவர். உழவர் தினமும் கடாவிட்டுப் போரினை உழக்கி நெல்லைத் திரட்டுவர்; திரட்டிய நெல்லைக் குதிர்கள் நிறையும்படி கொட்டுவர். வரம்பு களையுடைய வேலிநிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையும். கரிகாற் பெருவளத்தான் இவ்வாறு வளம் பொருந்திய காவிரி நாட்டுக்குத் தலைவன். (இரவலனே! நீ காலந்தாழாது இப்பொழுதே அவன்பாற் சென்று பாடி உனதும் உனது சுற்றத்தினரதும் வறுமையைக் கடிதிற்போக்கி இனிது வாழ்வாயாக.)*

**தனிப் பாடல்கள்**

ஏரியும், ஏற்றத்தினானும், பிறர் நாட்டு
வாரி சுரக்கும் வளன் எல்லாம் தேரின்
அரிகாலின் கீழ் உகூஉம் அந் நெல்லே சாலும்-
கரிகாலன் காவிரி சூழ் நாடு.

அரிமா சுமந்த அமளி மேலானைத்
திருமாவளவன் எனத் தேறேன்; திரு மார்பின்
மான மால் என்றே தொழுதேன்; தொழுத கைப்
போனவா பெய்த வளை!

முச் சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச் சக்கரமே அளந்ததால்-செய்ச் செய்
அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய் புனல் நீர்நாடன்
கரிகாலன் கால் நெருப்பு உற்று.

## சிறப்புப் பெயர் முதலியவை


**அ**

அகவர் ........ 220
அகில் ........ 238
அடும்பு ........ 195
அணங்கு ........ 20, 35
அரக்கு ........ 43
அரசவை ........ 55
அரம் ........ 144
அரவு ........ 83
அரிமா ........ வெ. 2
அருவி ........ 235
அலவன் ........ 9
அவல் ........ 216
அவிழ்ப் பதம் ........ 112
அவை ........ 188
அவையல் ........ 16
அறல் ........ 25
அறன் ........ 230
அறுவை ........ 83
அனந்தர் ........ 94

**ஆ**

ஆணி ........ 10
ஆயம் ........ 123
ஆரம் ........ 238
ஆளி ........ 139
ஆறு அலை கள்வர் ........ 21

**இ**

இரவு ........ 118
இரு சீர்ப் பாணி ........ 71
இரு பெரு வேந்தர் (சேர பாண்டியர்) 146
இலவு இதழ் ........ 27
இழை ........ 85
இளையோர் ........ 187
இறவு ........ 204

**ஈ**

ஈர் ........ 79
ஈர்க்கு ........ 36
ஈற்று ........ 151

**உ**

உருவப் பல் தேர் இளையோன் சிறுவன் ........ 130
உழு கொழு ........ 117

**ஊ**

ஊசல் ........ 30
ஊண் ........ 119
ஊர் ........ 170
ஊன் ........ 105, 118

**எ**

எக்கர் ........ 213
எண் நாள் திங்கள் ........ 11
எரி ........ 159, 234
எல்லை ........ 118
எழாஅல் ........ 56

**ஏ**

ஏரி ........ வெ. 1
ஏழின் கிழவன் ........ 63
ஏற்றம் ........ வெ. 1

**ஒ**

ஒக்கல் ........ 61

**க**

கடல் ........ 236
கடுந் தெற்று மூடை ........ 245

கதிர் ........................................................ 222
கரிகால் வளவன் .................................. 148
கரிகாலன் ...................................... வெ. 1, 3
கருங் காக்கை ...................................... 184
கரும்பு ............................................. 193, 216
கருனை .................................................. 115
கல்லா இளைஞர் .................................. 100
கலம் ...................................................... 156
கலவம் .................................................. 212
கழி நாரை ............................................. 225
களமர் .................................................... 194
களிறு .............................................. 49, 142
கனவு ....................................................... 98

**கா**

கா .......................................................... 196
காஞ்சி .................................................... 189
காடு உறை கடவுள் ................................ 52
காந்தள் .......................................... 33, 209
காயா ...................................................... 201
காலை ....................................................... 96
காவிரி ...................................... 248, வெ. 1
காழ் ........................................................ 105
கானக்கோழி ........................................ 222

**கி**

கிழங்கு .................................................. 214
கிளி ........................................................... 34

**கு**

குடை ..................................................... 228
குயம் ...................................................... 242
குருளை .................................................. 139
குல்லை .................................................. 234
குழை ........................................................ 30
குறவர் .................................................... 219
குறிஞ்சி ................................................. 218

**கே**

கேள்வி ..................................................... 18

**கொ**

கொட்டைக் கரைய பட்டு உடை ......... 155
கொடுஞ்சி ............................................. 163
கொல்லை ............................................... 117
கொளை ................................................... 211
கொன்றை .............................................. 201

**கோ**

கோடியர் .................................................. 57
கோடு (யானைக் கொம்பு) ................... 163
கோயில் ..................................................... 90

**ச**

சக்கரம் ............................................... வெ. 3

**சா**

சாலி ....................................................... 246
சாறு ............................................................ 2

**சீ**

சீறியாழ் .................................................. 109

**சு**

சுற ......................................................... 203

**சூ**

சூடு ....................................................... 243

**செ**

செங்கோல் ............................................. 230
செஞ் சுளைய கனி (பலாப் பழம்) ....... 192
செஞ் சோற்ற பலி ............................... 183
செந் நிலன் .............................................. 43

**சோ**

சோறு ........................................................... 2

**ஞா**

ஞாழல் ................................................... 197

**த**

தடாரி ....................................................... 70
தண்டலை (சோலை) ............................ 181
தவம் செய் மாக்கள் ................................ 91
தளவு ...................................................... 199

**தா**

தாமரை .................... 159
தாய் .................... 132
தாயம் .................... 132
தாழை (தெங்கு) .................... 181
தாறு .................... 167

**தி**

திருமாவளவன் .................... வெ.2
திவவு .................... 15
தினை .................... 223
தினையரிசி .................... 16

**து**

துடி .................... 125
துடிக் குடிஞை .................... 210
துரா அய் .................... 103
துருவை .................... 103
துறை .................... 239
துன்னற் சிதா அர் .................... 81, 154

**தெ**

தெங்கு .................... 208
தெவ்வர் .................... 120, 133

**தே**

தேர் .................... 163
தேறல் .................... 157
தேறு (தேற்றா) .................... 200
தேன் .................... 214

**தொ**

தொடி .................... 14

**தோ**

தோன்றி .................... 199

**ந**

நரம்பு .................... 17
நறவு .................... 215
நறை .................... 238
நன் பகல் அந்தி .................... 46

**நா**

நாகம் .................... 209
நாடு .................... 170, வெ. 1
நாய் .................... 42
நாரை .................... 204
நால் நாடு .................... 226

**நீ**

நீர் நாடன் .................... வெ. 3

**நூ**

நூலின் வலவா நுணங்கு அரில் மாலை .................... 161

**நெ**

நெல் .................... 242, 246, வெ. 1
நெல்லி .................... 193
நெற் கூடு .................... 180–182

**ப**

பகன்றை .................... 195
பச்சை .................... 5
பசி .................... 61, 62
பண் .................... 109
பணை (மருத நிலம்) .................... 169
பதி .................... 121
பரதவர் .................... 218
பரல் .................... 115
பவ்வம் .................... 135
பழுமரம் .................... 64
பனம் போந்தை .................... 143

**பா**

பாக்கம் .................... 210
பாகற் பழம் .................... 191
பாசி வேர் .................... 153
பாடல் .................... 56
பாடினி .................... 47, 162
பாணி .................... 48, 110
பாம்பு .................... 13, 69
பார்ப்பு .................... 186

பால் ........................................................ 165
பாலை (பண்) ........................................... 22

பி

பிடி .................................................... 40, 126
பிறை ........................................................ 25

பு

புரவி ........................................................ 165
புழுக்கு .................................................... 103
புறவு (காடு) ............................................202
புன்கு ...................................................... 196
புன்னை ..................................................205
புனலாடு மகளிர் .................................. 241

பெ

பெண்ணை ............................................207

பே

பேர் யாழ் ................................................. 168
பேன் ......................................................... 79

பொ

பொருந .........................................................3
பொலங் கலம் .......................................... 86

போ

போர்வை .....................................................8

பௌ

பௌவம் ....................................... 178, 203

ம

மஞ்ஞை .................................................. 212
மண் (மார்ச்சனை) .............................. 109
மது .......................................................... 217
மந்தி .......................................................224
மயிர் குறை கருவி .................................. 29
மயில் ............................................... 47, 190
மரல் ........................................................... 45
மராஅ ........................................................ 50
மருதம் ....................................................220
மருது ...................................................... 189
மருப்பு (யாழின் தண்டு) ......................... 13
மழை ................................................. 26, 84
மனை ...................................................... 185
மனைக் கோழி .......................................223

மா

மாடம் ........................................................ 84
மாதர் ......................................................... 19
மாயோள் ................................................... 14
மாலை ....................................................... 96
மான் ........................................................ 217

மீ

மீளி ......................................................... 140
மீன் ......................................................... 215

மு

முத்தம் .................................................... 162
முத்து ........................................................ 28
முதியோர் ............................................... 187
முரசு ......................................................... 54
முருகன் ................................................. 131
முல்லை ........................................ 200, 221
முழவு ..................................................... 109

மூ

மூவர் ......................................................... 54

யா

யாமை .................................................... 186
யாழ் ......................................................... 211

வ

வண்டல் அயர ...................................... 187
வண்டு ....................................................... 39
வண்டு சூழ் நிலை ................................. 97
வலை ......................................................... 51
வளை ................................................ வெ. 2
வறன் ......................................................237

வா

வாயில் ...................................................... 66
வாழை ....................................................208
வானம் ....................................................236

**வி**

விடியல் ........................................ 72
விரகு (பண்ணியாரம்) ........................ 108
வில் ........................................ 26
விறலியர் ........................................ 110

**வெ**

வெண்ணி ........................................ 147
வெவ் வெஞ் செல்வன் ........................ 136
வெள்ளி ........................................ 72

**வே**

வேம்பின் அம் குழைத் தெரியல் ......... 144
வேர் (வேர்ப்பு) ........................................ 80
வேல் ........................................ 129
வேழம் ........................................ 126, 172
வேளாண் வாயில் ........................................ 75

**வை**

வைப்பு ........................................ 226

● ● ●

# ௩. [1]சிறுபாணாற்றுப்படை

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
யணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கற
லயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
யைதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅ
யுயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்

---

1. ஒய்மான் நாட்டு நல்லியக்கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது – காலம். கி.பி. 70–90.

தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கி
னின்சே றிகுதரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியன்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பி
னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
வியங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல
கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழன்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத திருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்

வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
றென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
றமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
யோவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
யாசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
யேம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்புந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னா
ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி

வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்க
மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனுங் கரவாது.
நட்டோ ருவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
வோரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ
ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றா
ணறுவீ நாகமு மகிலு மாரமுந்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறுவின்றி விளங்கிய விடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்

பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக விந்நா
டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
யொல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையு
மழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்
டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரு
மிவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயி
னலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவுங்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவுங்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரி
னோங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோண்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து

நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
றளையவிழ் தெரியற் றகையோற் பாடி
யறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைந்நனை யவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயாக் கணமயி லவிழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோப மூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தி
னுறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
யெயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவன்
மதிசே ரரவின் மானத் தோன்று
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
யந்தண ரருகா வருங்கடி வியனக
ரந்தண் கிடங்கினவ னாமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி
னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்

தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
விருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
வவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவி
ரெரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா
ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினு
மருமறை நாவி னந்தணர்க் காயினுங்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
வடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையு
மின்முக முடைமையு மினிய னாதலுஞ்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
வஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையு
மாணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலு
மொருவழிப் படாமையு மோடிய துணர்தலு
மரியே ருண்க ணரிவைய ரேத்த
வறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
வின்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப்
பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
வங்கோட்டுச் செறிந்த வலிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்

கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானாது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவு
மிளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவு
மேரோர்க்கு நிழன்ற கோலினை யெனவுந்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவு
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடுஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
யானா விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
யுருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
வுள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி

யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடைய நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பி
னல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

**முதுவேனிற் காலம்**

மூங்கிலைத் தோளாகவுடைய நிலமகளுக்கு மலைகள் மார்பிடத்தே பொருந்திய பெரிய தனங்களாகும். மலை உச்சியினின்றும் இறங்கி ஆற்றிடைக் குறைகளில் பிளவுபட்டுப் பின் ஒன்று சேர்ந்து செல்லும் காட்டாறு அவ்வழகிய தனங்களில் அணியப்படும் முத்து வடமாகும். காட்டாற்றினால் குளிர்ச்சியடைந்த மரங்கள் மலர்களை நிறையப் பூக்கும். குயில்கள் அலகினால் கோதுதலால் உதிர்ந்த பூக்கள் உலர்ந்து கருமை அடைந்திருக்கும்; அத்தோற்றம் இளவேனிலாகிய மாது தனது கூந்தலை விரித்தாற் போன்றது. காட்டிடத்தே வேல்போற் கூரிய பருக்கைக் கற்கள் கிடக்கும்; முதுவேனிற் காலத்தில் வெயிலால் வெப்பமடைந்த அவை வழி நடப்போரின் கால்களைக் கிழிக்கும்; ஆகவே அவர்கள் மென்மையாக நடந்து கடப்பமர நிழலில் இருந்து இளைப்பாறிப் போவர். முதுவேனிற் காலம் ஞாயிற்றின் வெப்பத்தால் பாலைத்தன்மை உடையதாயிருக்கும். பாலைத் தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பயந்துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெருகுவதொரு காலம்.

**விறலியின் தோற்றம்**


இவ்வாறு பாலைத்தன்மையுடைய காட்டுவழியே, அழகிய முல்லை சூடுதற்கமைந்த கற்புடைய விறலி நடத்தலினால் களைப் படைந்து கடம்பமர நிழலில் தங்கி இருக்கின்றாள். அவளுடைய நோக்கு மான் போல் மருண்ட தன்மையுடையது; கூந்தல் கருமை யுடையது; அடிகள் ஓடி இளைத்த நாயின் நாக்குப் போன்றவை; வாழைத்தண்டுபோற் பருத்து ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடைகள் யானையின் துதிக்கை போன்றவை; கொண்டை வாழைப் பொத்தி போன்றது; அங்கு தேமல் படர்ந்த தனங்கள் கோங்கின் முகை போன்றவை; பற்கள் அழகு வாய்ந்தவை.

**பாணன்**

பாணன் பொற்கம்பி போன்று முறுக்கிய நரம்புடைய சீறியாழை இடப் பக்கத்தே தழுவி நட்ட பாடை என்னும் பண்ணை வாசிக்கின்றான். பரிசில் அளிக்கும் வள்ளல்களைப் பெறாமல் காட்டிடத்தே இப்பாணன் இவ்வாறு இருந்து வருந்தும் போது, நல்லிக் கோடனைப் பாடிப் பரிசில் பெற்று மீள்கின்ற ஒரு பாணன் அவனை எதிர்ப்பட்டுக் கூறுகின்றான்:

**சேர நாட்டின் செழுமை**

பாணர் தலைவனே! மேற்கே உள்ள சேரநாடு மிக்க செழிப் புடையது. அங்கு எருமைகள் கொழுத்த மீன்கள் நொறுங்கும்படி வயல்களில் நடந்துசென்று செங்கழு நீர்ப் பூவை உண்ணும்; உண்டு மிளகு படர்ந்த பலாமர நிழலில் காட்டு மல்லிகையாகிய படுக்கையில் கிடக்கும்; காற்றுக்குக் கொடி அசையும்; மஞ்சளின் மெல்லிய இலைகள் அதன் முதுகைத் தடவும்; இவ்வாறு கிடந்து அது தான் உண்ட செங்கழுநீர்ப்பூவைத்தேன் நாறும்படி மென்று அசையிட்டுத் துயில்கொள்ளும். இவ்வாறு செழுமை மிகுந்த நாடுகளையும், வலிய தோளினையும், ஓடுகின்ற தேரினையுமுடைய சேரனது வஞ்சிமூதூரில் கிடைக்கும் பரிசிலோ நல்லியக் கோடன் கொடுக்கும் பரிசிலைவிடக் குறைவுடையது.



சீறியாழ்

### கொற்கை நகரின் வளம்

தெற்கே உள்ள கொற்கை நகருக்குத் தலைவன் பாண்டியன். அந்நகர் திரை கொழிக்கும் கடலை எல்லையாகவுடையது. கடற்கரைகளிலிருந்து உப்பு வாணிகரின் வண்டிகள் செல்லும். [1]அவ்வண்டிகளின் அச்சுத்தங்கும் குடங்கள் தாது பனிக்கின்ற பூக்களுடைய முற்றிய நுணாத்தடியை உளியினால் கடைந்து செய்து செவ்வரக்கு பூசப்பட்டவை. கிடேச்சையால் செய்த பூமாலையை செவியடியில் நெற்றிமாலையாக அணியப் பெற்ற வலிய எருதுகள் வண்டியை இழுத்துச் செல்லும். உப்பு வாணிகர் பிள்ளைகளைப் போல வளர்க்கின்ற குரங்குகள் வண்டிகளோடு வரும். உப்பு வாணிகரின் குழந்தைகள் பெண்களின் பற்கள் போன்ற வெள்ளிய முத்தையும் வாள்போன்ற கிளிஞ்சிலையும் [2]அரையிலே ஆபரணமாக அணிந்திருப்பர். அக்குழந்தைகளோடு மந்திகள் கிலுகிலுப்பையைக் கையில் வைத்துக் கிலுக்கி விளையாடும். தமது கணவரைத் தழுவும் உமட்டியர் கூந்தலை ஐந்து வகையாகக் கோதி முடிந்திருப்பர். இவ்வாறு சிறப்புடைய கொற்கை நகரையும் வெண்கொற்றக் குடையையும் தேரையும் முத்து மாலையையுமுடைய பாண்டியனிடத்திற் சென்று பெறும் பரிசிலிலும் பார்க்க நல்லியக்கோடனிடம் பெறும் பரிசில் பெரியதாகும்.

### சோழ நாட்டின் சிறப்பு

சோழநாட்டிலுள்ள மருத நிலத்தே மலைபோல வளர்ந்த கடம்ப மரங்கள் நெருக்கமாகப் பூத்திருக்கும். அம்பூக்களின் தம்பலப் பூச்சிகளைப் போன்ற தாது உதிர்ந்து பரந்திருத்தலால் நீருண்ணும் துறையின் கரை ஓவியம் போல் அழகு பெற்று விளங்கும். அத்துறையிடத்தே மலர்ந்திருக்கும் தாமரை மலராகிய பீடத்தில் தும்பிகள் தமது பெடையைத் தழுவி மகிழ்ந்திருந்து 'சீகாமரம்' என்னும் பண்ணைப்பாடும். கிழக்குப் பக்கத்தே

1. "நுணாத்தடியைச் சீவிச் சிவப்புப் பூசிக் கட்டப்பட்ட மார்பையுடைய மந்தி முத்தைக் கிளிஞ்சிலில் பொதிந்து கிலுகிலுப்பையாகக் கொண்டு உமணச் சிறாரோடு விளையாடும்" என்னும் பொருளும் அமையும்.

2. அரை மூடி சலங்கை.

இவ்வாறு செழிப்பு மிக்குள்ள நாட்டுக்குத் தலைவனாகிய சோழன் தூங்கெயில் எறிந்த வீரவளை விளங்கும் கையுடையன். அவ்வரசனது உறந்தை நகரிற் சென்று பெறும் பரிசில் நல்லியக் கோடனிடம் பெறும் பரிசிலைவிடச் சிறியதாகும்.

பருவம் பொய்யாது மழை பெய்தலால். செல்வமிகுந்த மலைப் பக்கத்தே திரியும் மயில் கூவியதைக் கேட்ட பேகன் என்னும் வள்ளல் அது குளிர் மிகுதியால் கூவுகின்றது என எண்ணித் தனது போர்வையை அதற்கு அளித்தான். சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடி, சிறுபுன்னையின் நறியபூ தேன் துளிக்கின்ற வழியிடத்தே கொழுகொம்பின்றிக் கொழுந்து எறிந்து நின்றது. அதனைக் கண்ட பறம்புமலைக்குத் தலைவனாகிய பாரி அது படர்தற்குத் தனது தேரைக் கொடுத்தான்.

**கொடைப் பெரும் வள்ளல் எழுவர்**

காரி என்னும் வள்ளல் மணியையும் தலையாட்டத்தையு முடைய குதிரையோடு தனது நாட்டையும் இரப்பவர்க்குக் கொடுத்தான். ஆய் என்னும் வள்ளல் பாம்பு ஈன்று கொடுத்த ஒளியுடைய நீலப் பட்டாடையை ஆலின் கீழ் அமர்ந்த கடவுளுக்கு அன்பு மிகுதியால் கொடுத்தான்.

இளமையைக் கொடுத்தலின் அமிழ்தத்தின் தன்மையுடைய நெல்லிக்கனியைக் கமுகம் பூக்களுடைய பக்கமலையினின்று பெற்ற அதிகன் அதனை ஔவையாருக்கு அளித்தான். நள்ளி என்னும் வள்ளல் தன்னை நட்புச் செய்தோர் மகிழ்ந்து இல்லறம் நடத்துதற்கு வேண்டும் பொருள்களை அவர்க்கு நாடோறும் நல்கினான்.

காரி என்னும் குதிரையைப் பெற்ற காரி என்னும் வள்ளலுடன் போர் செய்த ஓரி என்னும் வள்ளல் முதிர்ந்த சுரபுன்னையும் குறிய மலைகளு முடைய நல்லநாடுகளைக் கூத்தாடுவோருக்குக் கொடுத்தான்.

**நல்லியக் கோடனின் ஓங்கு புகழ்**

பாணர் தலைவ! இவ்வெழுவருடைய கொடைகளையும் தாங்கி நிற்கும் ஒருவனாகிய நல்லியக் கோடனிடத்து நீ உனது

சுற்றத்துடன் செல்வா யாக. அவன் பகைவரது மார்பிலும் முகத்திலும் வெட்டின வீரவாளையும், புலிபோன்ற வலிமையையு முடையன்; ஓவியர் குடியில் உதித்தோன். நறும் பூக்களையுடைய சுரபுன்னையையும், அகிலையும், சந்தனமரத்தையும் நீராடுந் துறையில் புனலாடும் மகளிர்க்குத் தெப்பமாகத் தருகின்ற நீர்மோதும் மாவிலங்கையின் அரசர் தோன்றுதற்கு இடனாயுள்ள ஓவியர் குடியிற் பிறந்தோன். அவனது பின்னிடாத அடிகளில் வீரக்கழல் கிடந்து அசையும்; மழைபோன்று வழங்குகின்ற அவன் கைகளோ கூத்தரை வரவேற்றுப் பிடிகளைக் கொடுக்கும்.

**பரிசில் பெற முன் இரவலனின் வறுமை**

இரவலனே! யாங்கள் நல்லியக்கோடனையும் அவன் தந்தையின் மலையிடத்தேயுள்ள செல்வத்தையும் பாடிச் சென்றேம். அப்பொழுது நமது வறுமை சொல்லுக்கடங்காததாகவிருந்தது. நமது வீட்டில் தாயின் முலை உண்ணாமல் இருக்கமாட்டாத நாய்க் குட்டிகள் பசி மிகுதியால் சத்தமிட்டன. அடுக்களையின் இறப்புத் தடிகள் கட்டறுந்து கீழே விழுந்தன. சுவரில் எழுந்த கறையான் வீட்டின் வரிச்சுகளை உண்டது. ஒடுங்கிய நுண்ணிய இடையும் வளையலணிந்த கையும் உடையவளும் பசியால் வருந்து கின்றவளு மாகிய கிணையனுடைய மகள் குப்பையினின்றும் நகத்தினாற் கிள்ளிய கீரையை உப்பில்லாமல் சமைத்துக் கரிய சுற்றத்துடன் பசி நீங்கும்படி உண்டாள். இவ்வகையான கொடிய வறுமையும் பசியும் இனி நமக்கு ஒருபோதும் இல்லையாகும்படி நாம் மதஞ்சொரியும் யானைகளையும் பெரிய தேரையும் பெற்று அவ்விடத்தினின்றும் வருகின்றோம்.

**நெய்தல்நிலம்**

இரவலனே! கடற்கரையிடத்துள்ள தாழை அன்னம் போல் பூவை ஈனும்; செருந்தி பொன் போற் பூவை மலரும்; கழியிடத் துள்ளமுள்ளி நீலம்போற் பூவை மலர்த்தும்; புன்னை முத்துப் போல அரும்புகளை முகிழ்க் கும். இவ்வகைக் கழிசூழ்ந்த ஊர்களையும் குளிர்ச்சி பொருந்திய குளங்களையுமுடைய எயிற்பட்டினத்தே செல்வாயாக. அங்கு முறுக்கவிழ்ந்த அரும்பு களால் கட்டிய மாலையை அணிந்தவனும் தோட்டங்கள் பல

உடையவனு மாகியகிடங்கில் என்னும் ஊர்க்கரசனைக் காண்பாய். அவனைப் பாடுவாயா யின் அவன் அதற்கு மகிழ்ந்து விறலியும் உனது சுற்றமும் மகிழ்ந்து உண் ணும்படி சுட்ட குழல்மீனைத் தருவான்; பரதவர், நீவிருண்ணும்படி கள்ளையும் தருகுவர். அவர் உங்களுக்குக் கொடுக்கும் கள், திரையினாற் கொண்டு வரப்பட்டு உறங்குகின்ற ஒட்டகம் போற்குவிக்கப் பட்ட அகில் விறகைப் பெரிய தோளும் மதி போல் மறுவில்லாத முகமும் வேல்போன்ற கண்ணுமுடைய நுளைச்சியர் தீமூட்டி எரித்துக் காய்ச்சி அரித்ததாகும்.

**முல்லை நிலம்**

நெய்தல் நிலத்தைக் கடந்து காட்டுவழியே செல்வாயானால் அங்கு அவரை பவளம்போல் பூத்திருக்கும்; காயா மயிலின் கழுத்துப்போல் பூத்த கரிய அரும்புகளை உடையதாயிருக்கும்; காந்தட்கொடிகள் கைவிரல்கள் போல் மலர்ந்து காட்சியளிக்கும்; வழியிற் செல்லுமிடத்து வானவில் தோன்றும்; முல்லைக் கொடிகள் படர்ந்திருக்கும். வெடிப்புகளில் நீர் குதிக்கும் அருவிகளையுடைய மலையில் ஞாயிறு மறையும். இவ்வாறு எழும் மாலைக் காலத்தே நீ வேலூரை அடைவாயாயின் நீ உனது சுற்றத்துடனே உண்டு பசி தீரும்படி சமைத்த சோற்றைப் புளிங்கறியோடும் ஆமானின் சூட்டிறைச்சி யோடும் எயிற்றியர் தருவர்.

**ஆமூரின் மருத நில வளம்**

மாலை தொடுத்தாற் போன்று மலர்ந்த பூக்களுடைய கிளைத்த காஞ்சிமரத்தின் கிளைகளில் இருக்கும் பொன்னிற வாயினையும் நீல மணியின் நிறத்தினையுமுடைய சிச்சிலிப் பறவை நீரில் மூழ்கி மீன்களைப் பிடிக்கும். சிச்சிலிப் பறவையின் கால்கள் கிழித்த இலைகளுடைய தாமரையின் பூக்களில் தேன் நுகர்கின்ற நீல நிறத்தினையும் சிவந்த கண்ணினையு முடைய வண்டுகள் திங்களைச் சேர்ந்த கரும் பாம்பு போலத் தோன்றும்.

இவ்வாறு அழகிய வயல்களையுடைய ஆமூர், அரிய காவலையும், அகன்ற வீடுகளையும், அந்தணர் குடியிருப்பையும் உடையது. வீட்டின் உள்ளே இருக்கும் உழவருடைய மனைவியர் யானையின் துதிக்கை போன்று பின்னால் தொங்கும் பின்னிய

கூந்தலையும், வளை அணிந்த கையினையு முடைய தம் பிள்ளை களைக்கொண்டு நும் எல்லோரையும் போகாதபடி தடுப்பர்; தடுத்துப் பூணுலக்கையாற் குத்திய அரிசியைச் சமைத்த சோற்றை நண்டும் பீர்க்கங்காயும் கலந்த புழுக்குடன் உண்ணும்படி தருவர்.

**நல்லியக்கோடனின் மூதூர்**

நல்லியக் கோடனது விழாக் கொண்டாடும் மூதூர் சேய்மையிலன்று. மேல் நோக்கி எரிகின்ற நெருப்புச் சாய்ந்தால் ஒத்த நாக்கும், வெள்ளாட்டு மறிகள் கிடந்து அசைகின்ற காதும், கவைத்த காலுமுடைய பேய்மகள் நிணத்தைத் தின்று சிரிக்கும் போது விளங்கித் தோன்றுகின்ற பற்கள் போன்ற வும், போர்க் களத்தே பிணத்தலைகளைப் பெரிய கால்களால் தள்ளுதலால் சிவப்பேறினவுமாகிய நகங்களையுடைய யானைகளின் மத அருவி சிந்தித் தெருவில் எழும் தூசியை அடக்கும்.

அவனது கோபுரவாயில் பாணருக்கும் அறிவுடையோருக்கும் அடைக்கப்படாது

கோபுரவாயில் மேரு கண்விழித்துப் பார்த்தாற்போல், தோன்றும். கிணைப் பொருநருக்கும், அறிவுடையோருக்கும் அந்தணருக்கும் அதன் வாயில் ஒருபோதும் அடைக்கப்படாது; ஏனையோருக்கு அடைக்கப்பட் டிருக்கும். அரசன் பிறர் தனக்குச் செய்த நன்றியைச் செய்வான்; அறிவும் ஒழுக்கமும் இல்லாதார் அவனிடத்தில் இடம் பெறார்.

**நல்லியக்கோடனின் இனிய பண்புகள்**

தன்னை நோக்கினார்க்கு அவன் எக்காலமும் இனிய முக முடையன். தனது வீரத்தைக் கண்டு அஞ்சி அடிபணிந்தார்க்குத் தன்னுடன் இருப்போர் புகழும்படி அருளுவான்; போர்முகத்தே கெட்ட தனது படையைத் தாங்கி வாள்வலியிற் சிறந்த வீரர் புகழும்படி தான் விரும்பியவற்றை முடிப்பான்; பெண்கள் வசத்தனாகாத தன்மையன்; பரிசிலர் தரமறிந்து அவர் பெறத்தக் கவற்றைக் கொடுக்கும் இயல்பினன். கல்வி யில்லாத பரிசில் வேண்டுவோர்க் கும் கொடாதிருத்தலை மேற்கொள்ளாது அவர்கள் தரத்துக்குத் தக்கவற்றைக் கொடுப்பான்; இயலிசை

நாடகங்களாலும் இனிய மொழிகளாலும் மகிழ்ச் சியைத் தரும் கூட்டத்தினரோடு பல விண் மீன்களுக்கு நடுவிருக்கும் மதியம் போல் விளங்குவான்.

**குரங்கன் கையைப் பாம்பு சுற்றியது போன்ற யாழின் வார்க்கட்டு**

இரவலனே! நீ இவ்வியல்புடையனாய் இருக்கும் நல்லியக் கோடனைக்கண்டதும், குரங்கு பாம்பின் தலையைப் பிடித்தால் அப்பாம்பு ஒருகால் இறுகவும் ஒருகால் நெகிழவும் அதன் கையை எப்படிச் சுற்றுமோ அப்படியே யாழ்த்தண்டினிடத்தே நெகிழ வேண்டிய இடத்து நெகிழ்ந்தும் இறுக வேண்டிய இடத்து இறுகியும் சுற்றின நரம்பு துவக்கும் வார்க்கட்டும், காவி நிறம் ஊட்டப்பட்ட போர்வையும், அமிழ்தத்தைத் தம்மிடத்தே பொதிந்த தன்மையுடைய நரம்புகளுடைய சீறியாழைக் கையில் எடுப்பாயாக. எடுத்து அரசன், உவாத்தியாயன், தாய், தந்தை, தமையன் முதலியோர்க்குப் பலகாலும் குவித்த கையை யுடையவனே! வீரர் எறிதற்கு மகிழ்ந்து கொடுத்த மார்பையுடையவனே! ஏரினையுடைய குடிகளுக்கு நிழல் செய்யும் செங்கோலுடையவனே! என்று அவனது சில புகழ்களைக் கூறுவாயாக.

**அரசன் பாணர்க்குப் பரிசிலளிக்கும் முறைமை**

நீ அவ்வாறு கூறுவதன்முன் மூங்கில் ஆடையை உரித்தாற் போன்ற குற்றமில்லாத உடையை உடுக்கும்படி தருவான். பாம்பின் நஞ்சு ஏறி மயங்கினாற் போல மயக்கம் தரும் கட்டெளி வைத்தருவான். வீமசேனனது மடைநூலில் கூறிய முறைப்படி சமைத்த சோற்றைப் பொற்கலத்தி லிட்டுத் தான் உடன் நின்று உண்ணும்படி செய்வான். முடிவேந்தரின் அரண்களை அழித்து அப்பகைவர் நாட்டிற் பெற்ற பொருளைக் கொண்டு தம்மை விரும்பிவந்தவர்களதும், பாணரதும் வறுமையைப் போக்குவான். தச்சர் உளிகொண்டு வேலைப்பாடு செய்த தேரோடு யானை, குதிரை, அணிகலன் முதலியவற்றைத் தந்து உன்னைச் செல்லும் படி வழி விடுவான். ஆதலால், நீ குறிஞ்சி நிலத்தையுடையவனும் தழைவிரவித் தொடுத்த மாலை யணிந்த வனும் பெரும் புகழுடையவனுமாகிய நல்லியக்கோடனிடத்துச் செல்வாயாக.

**தனிப் பாடல்கள்**

அணி இழையார்க்கு ஆர் அணங்கு ஆகி, மற்று அந் நோய்
தணி மருந்தும் தாமே ஆம் என்ப-மணி மிடை பூண்
இம்மென் முழவின் எயிற்பட்டின நாடன்
செம்மல் சிலை பொருத தோள். 1

நெடு வரைச் சந்தனம் நெஞ்சம் குளிர்ப்பப்
படும், அடும் பாம்பு ஏர் மருங்குல்-இடு கொடி
ஓடிய மார்பன் உயர் நல்லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும். 2

• • •

## சிறப்புப் பெயர் முதலியவை


**அ**

அகளம் (பத்தர்) .......... 224
அகில் .......... 116, 263
அஞ்சினர் .......... 210
அட்டில் .......... 132
அடிசில் .......... 241
அதிகன் .......... 103
அந்தணர் .......... 187, 204
அமிழ்து .......... 227
அயில் .......... 7
அரக்கு .......... 74, 256
அரவு .......... 185
அரிசி .......... 194
அரிவையர் .......... 215
அருவி .......... 90, 170
அலவன் .......... 195
அவரை .......... 164
அவைப்பு .......... 194
அழிபடை .......... 211
அறல் .......... 6
அறிந்தோர் .......... 209
அறுவை .......... 236
அன்னம் .......... 146

**ஆ**

ஆண் அணி .......... 211
ஆமான் சூட்டு .......... 177
ஆமூர் .......... 188
ஆய் .......... 99
ஆயம் .......... 176, 220
ஆரம் (ஆர்) .......... 253
ஆரம் (சந்தனம்) .......... 116
ஆரம் (முத்து வடம்) .......... 2
ஆல் அமர் செல்வன் .......... 97
ஆவியர் பெருமகன் .......... 86

**இ**

இமயம் .......... 48
இயம் .......... 125, 229
இரவலர் .......... 93
இரவலன் .......... 40
இலங்கை .......... 119, 120
இளையோர் .......... 232
இன் புளி வெஞ் சோறு .......... 175

**ஈ**

ஈகைச் செந் நுகம் .......... 113

**உ**

உமட்டியர் .......... 60
உமணர் .......... 55
உரும் .......... 266
உலக்கை .......... 193
உழவர் தங்கை .......... 190
உளி .......... 52, 252
உறந்தை .......... 83

**ஊ**

ஊகம் .......... 221

**எ**

எயில் .......... 247
எயிற்பட்டின நாடன் .......... வெ. 1
எயிற்றியர் .......... 175
எயிறு .......... 28
எருது .......... 189

எருந்து (கிளிஞ்சில்) .............................. 58
எருமை ...................................................... 42
எழு ........................................................... 112
எழுவர் ...................................................... 113

ஏ

ஏம இன் துணை .................................... 76
ஏரோர் ..................................................... 233

ஒ

ஒக்கல் .................................................... 139
ஒட்டகம் .................................................. 154
ஒழுகை .................................................... 55

ஓ

ஓதி ............................................................ 22
ஓரி ............................................................ 111
ஓரிக் குதிரை ............................................ 111
ஓவம் ......................................................... 70
ஓவியர் பெருமகன் ............................... 122

ஔ

ஔவை ..................................................... 101

க

கச்சை ..................................................... 239
கடம்பு ........................................................ 69
கடல் ................................................ 114, 150
கடவுள் மால் வரை ................................ 205
கடை ........................................................ 138
கண்ணி ........................................ 65, வெ. 2
கணை ...................................................... 238
கதுப்பு .................................................. 6, 14
கயல் ......................................................... 181
கருந் தொழில் வினைஞர் .................. 257
கல்லா இளைஞர் .................................... 33
கலவை ..................................................... 195
கலாபம் ..................................................... 15
கலிங்கம் ........................................... 85, 96
கழுநீர் ...................................................... 42
கழை ........................................................ 265
கள் ............................................................ 45
களிறு ....................................................... 123
கறி ............................................................ 43

கா

கா (காண்டவ வனம்) ........................... 238
காஞ்சி ..................................................... 179
காந்தள் ................................................... 167
காம்பு ....................................................... 236
காமரம் (சீகா மரம்) ................................. 77
காயா ....................................................... 165
காரி ................................................ 95, 110
காரிக் குதிரை ........................................ 110
காலை ........................................................ 10
காளாம்பி ................................................. 134
கான்யாறு .................................................... 3
கானல் ..................................................... 150

கி

கிடங்கில் ................................................. 160
கிடங்கில் கோமான் ............................. 160
கிடங்கு ................................................... 188
கிலுகிலி ..................................................... 61

கு

குட்டம் ..................................................... 180
குட்டுவன் .................................................. 49
குடபுலம் .................................................... 47
குடபுலம் காவலர் மருமான் ................... 47
குணபுலம் .................................................. 79
குணபுலம் காவலர் மருமான் ................ 79
குதிரை ............................................ 110, 111
குப்பை ..................................................... 137
குமிழ் ....................................................... 225
குயில் ........................................................... 4
குரம்பை .................................................. 174
குரல் ........................................................ 229
குருளை ................................................... 130
குல்லை ...................................................... 29

குழற் சூட்டு ........................................... 163
குழற் பாணி ........................................... 162
குளவி ........................................... 46
குறங்கு ........................................... 20
குறடு ........................................... 252
குறிஞ்சிக் கோமான் ........................... 267

**கே**

கேணி ........................................... 172
கேள்வி ........................................... 228

கொ

கொங்கு ........................................... 71
கொங்கு கவர் நீலச்
செங்கட் சேவல் ........................... 184
கொட்டம் ........................................... 166
கொட்டை ........................................... 75
கொல்லை ........................................... 168
கொற்கைக் கோமான் ........................... 62

**கோ**

கோங்கு ........................................... 25
கோடியர் ........................................... 109, 125
கோபம் ........................................... 168
கோமான் ........................................... 91
கோவம் ........................................... 71
கோள்மீன் ........................................... 242

**ச**

சந்தனம் ........................................... வெ. 2

**சா**

சாந்து ........................................... 98
சாவம் (வில்) ........................................... 98
சாறு ........................................... 201

**சி**

சிதல் ........................................... 133
சிரல் ........................................... 181
சிலை ........................................... வெ. 1
சிற்றினம் ........................................... 207

**சீ**

சீறியாழ் ........................................... 35

**சு**

சுடர் கால் மாறிய செவ்வி ................... 171
சுணங்கு ........................................... 24
சுரன் ........................................... 12
சுரும்பு ........................................... 24, 87

**செ**

செம்பியன் ........................................... 82
செம்மல் ........................................... 5
செருந்தி ........................................... 147
செழியன் ........................................... 65

**ஞா**

ஞாயிறு ........................................... 10, 243

**த**

தங்கை ........................................... 190
தமனியம் ........................................... 147
தமிழ் ........................................... 66
தளிர்க் கண்ணி ........................................... 267

**தா**

தாமரை ........................................... 73, 183
தாழை ........................................... 146
தானை ........................................... 103

**தி**

திவவு ........................................... 222

**து**

துகில் ........................................... 262
தும்பி ........................................... 77
துறை ஆடு மகளிர் ........................... 117

## 4. [1]பெரும்பாணாற்றுப்படை

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்தத
னுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியனரக் கமுகின் பாளையம் பசும்பூச்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண,
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்

1. இது தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. காலம் கி. பி. 50–95.

பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வானுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ ணின்றும் வருது, நீயிரு
மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயிற்,
கேளவ னிலையே கெடுகநின் னவல
மத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவோர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புல
முருமு முரறா தரவுந் தப்பா
காட்டுமாவு முறுகண் செய்யா வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவலசிறக்கநின் னுள்ளங்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழுவி னன்ன முழுமர வுருளி
யெழூஉப்புணர்ந் தன்ன பருஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்குந்
துளையரைச் சீறுர றூங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்

மகவுடை மகஞூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
யெல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பயந் தரூஉ
மரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்றா
ளடிபுதை யரண மெய்திப் படம்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாய்
வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட்
கடம்பர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி
னீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக
ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
யீன்பிண வொழியப் போகி நோன்கா
ழிரும்புலை யாத்த திருந்துகணை விழுக்கோ

லுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்பா லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவி
னீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமக
னோடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇநும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
வகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கு
மரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாட்
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு
மருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட
வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனக
ரூகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுத்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்

தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகர் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெியினக் குறும்பிற் சேப்பிற்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் வெச்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
சென்னா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
யில்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பி
னதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பி
னள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
யாம்பி வான்முகை யன்ன கூம்புமுகி

முறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மக
ளளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா
ளெருமை நல்லான் கருநாகு பெறூஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய மழுத்தினி வன்கை
யுறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவன்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
யொன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்நு ணர்விர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலி
னின்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்

நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
வவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிலை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி
லுடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
யரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கரையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோன்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவி
னுழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்
களைஞர் தந்த கணைக்கா னெய்தற்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
யீருடை யிருந்தலை யாரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பி
னிரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்

புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றி
லவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉ
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
றூம்புடைத் திரடா டுமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழற
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுந்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்
குழூஉநிலைப் போரின் முழுமுத றொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்கு
லேணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
வூரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்

தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூ ழாலைதொறுங்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரும்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்த
ரிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பி
னவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
வெல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்லவாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்கநாண் கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
யுறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை

யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
வரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமையத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தனெப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவன
ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பைபயத் தோன்று
நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி

னெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துரு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பிற்
றாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழி றாழைக் குழவித் தீநீர்க்

கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்குங்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழந்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவுந்
தீம்பஃறார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயன்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்கா
யாறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉ
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியர் பாகொடு பிடித்த
விழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழறாழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிறொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுத
னறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயி
னருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்

கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்
காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்திற்
றிண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
வடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடும ணோங்கிய நெடுநர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூ
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னைவர் போல
வடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
வொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கச்சி யோனே கைவண் டோன்ற
னச்சிச் சென்றோர்க் கேம மாகிய
வளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப

நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோருந்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோருங்
கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்ன
ரிமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்க
ளொருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்குங்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவ
லின்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பட்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினு
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற

பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
விடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
யந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
யாவி யன்ன வவிர்நூற் கலிங்க
மிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
யரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
றெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்க
லருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசின்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தானா விருப்பிற் றானின் நூட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு
மாடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
யுரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
யரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த


விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச்சாரன்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கு
மொளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

**பாணனும் சுற்றத்தினரும் அலைந்து திரிதல்**

*முதுவேனிற் காலத்தில் ஒருநாள் பல கதிர்களையுடைய ஞாயிறு பரந்த ஆகாயத்தில் நிறைந்த இருளைப்போக்கி விளங்குகின்றது. ஞாயிறும் திங்களும் வலஞ்செய்கின்ற மேருவை உடையதும் கடல் சூழ்ந்ததுமாகிய இவ்வுலகிலே தம்மை ஆதரிப்பார் இன்மையால் யாழை இடப்பக்கத்தே அணைத்த பெரும்பாணன் ஒருவன் தனது கரிய பெரிய சுற்றத்துடன் அலைந்து திரிகின்றான். அவன் தோட்புறத்தே அணைத்திருக்கும் யாழ் உள்நாக்கில்லாத வறுவாயுடையது; அதன் கவைக்கடை பிறை ஏந்தினாற் போன்றது. வார்க்கட்டுப் பெண்கள் கையில் அணியும் வளையலை ஒப்ப நெகிழவேண்டிய இடம் நெகிழ்ந்து இறுக வேண்டிய இடம் இறுகப்பெற்றது; கரிய பெரிய தண்டு நீலமணி ஒழுகினாற் போன்றது; நரம்புகள் இழுக்கப்பட்ட பொற்கம்பிகள் போன்றன; போர்வை விரியாத கமுகம் பூவைப்போலத் தையலழுந்தும்படி தோலை மூட்டிச் செய்யப்பட்டன.*

**பரிசில் பெற்று வரும் பாணன் பெரும் பாணனை எதிர்ப்பட்டது**

*இவ்வகை யாழை இடத்தோள்மீது சார்த்திய பாணன், மழை இல்லாமையால் பழுத்த மரத்தைத் தேடத் திரியும் பறவைபோல ஓரிடத்தில் தங்காமல் ஆவிசூழ்ந்த மலையிடத்தில் ஓடித்திரிகின்றான். தொண்டைமான் இளந்திரையனைப்பாடி அவன்பால் பரிசில் பெற்று மீள்கின்றபாணன் ஒருவன் இப்பெரும் பாணனை வழியிடத்தே எதிர்ப்படுகின்றான்; அவன் இவனுடைய மெலிவைக் கண்டு கூறுகின்றான்: பொலி விழிந்த தோற்றத்தினையும் கல்வியை*




செங்கோடியாழ்

வெறுத்துக் கூறுகின்ற நாவினையும் உடைய இரவலனே! யான் இளந்திரையனது அரசிருக் கையாகிய காஞ்சி நகரினின்றும் பிறர்க்குக் கொடுக்கக் குறைவுபடாத செல்வத்தையும், வெள்ளிய தலையாட்டத்தை யுடைய குதிரை களையும் யானைகளையும் பரிசிலாக வாரிக் கொண்டு வருகின்றேன். சேரசோழ பாண்டியரினும் மிக்க தலைமை யுடையவனும் சோழர் குடியிற் பிறந்தவனுமாகிய இளந்திரையனை நீயும் உனது சுற்றத் தினரும் நினைப்பீராயின் உங்கள் வறுமை ஒழிந்துவிடும். நீவிர் செல்ல வேண்டிய வழியின் இயல்பினைக் கூறுகின்றேன். கேட்பீராக!

இரவலனே! அவனுடைய நகரில் வழிப்போக்கரை அலறும் படி வெட்டி அவன் பொருளைக் கொள்ளை கொள்ளும் தீயோர் இல்லை. அவனுடைய காட்டில் இடியேறும் இடியாது; பாம்புகளும் தீண்டா; புலி முதலிய விலங்குகளும் தீங்கிழையா. இவ்வியல்புடைய காட்டிடத்தே நீங்கள் இருந்து இளைப்பாறிச் செல்லுங்கள்.

**உப்பேற்றிச் செல்லும் உமணர் வண்டிகள்**



கவைக் கடை

காட்டிடத்தே செல்லும் கவர்பட்ட வழிகள் உண்டு; அவ்வழி களில் உமணரின் உப்பேற்றிய வண்டிகள் செல்லும். அவ்வண்டி களின் அச்சுமரம் தங்கும் குடங்கள் மத்தளத்தின் வடிவின. அக்குடங் களில் அச்சுமரம் மாட்டப் பட்டிருக்கும். அச்சுமரத்தினூடே ஏணிக் கால் போன்று நீண்ட திரண்ட மரங்கள் கடாவப்பட்டிருக்கும். அம் மரங்களில் குத்துக்கால்கள் போல உயரமான கம்புகள் நாட்டப்பட் டிருக்கும். கம்புகள் நாட்டிய முன்புறம் தொத் துளிப்பாயால் வேயப்பட்டிருக்கும். அது, தினைப்புனத்தை யானைமேயாது இருந்து காவல் செய்வ தற்கு அமைத்த பரண்மீது கட்டிய குடிலைப்போல் தோற்றமளிக்கும். அதன் முன்புறத்தே கோழிக் கூடுகள் கிடக்கும். மேலே மரத்தினாற் செய்ததும் யானையின் முழந்தாள் போன்றதுமாகிய உறி துளை இட்டுக் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். அதன்மீது, நாடக

மகளிர் ஆடுகளத்தில் கொட்டப்படும் மத்தளத்தை ஒப்ப வரிந்து கட்டப்பட்ட காடிப்பானைகள் வைக்கப்பட்டிருக்கும். உமணப் பெண் வண்டியின் முன்புறத்தே யிருந்து எருதுகளை அடித்து ஓட்டுவாள். அவள் கையிடத்தே பிள்ளையையும் அதற்குக் காவலாக பூவோடு கூடிய வேப்பிலையையும் வைத்திருப்பாள். வலுவேறின உடலின ராகிய உமணர் தழையினால் தொடுத்த மாலையை மார்பிடத்தே அணிந்திருப்பர்; வண்டியை இழுத்துச் செல்லும் எருதுகள் இளைத்து விட்டால் அவைக்குப் பதில் பூட்டுதற்குப் பல எருதுகளை அடித்து ஓட்டிச் செல்வர். பல துளைகளையுடைய நுகத்தில் ஒருமுகப்படக் கயிற்றினாற் கட்டிய பல எருதுகள் வண்டிகளை இழுத்துச் செல்லும். உமணர் அவற்றின் பக்கத்தே அச்சு முறியாதபடி காத்துச்சென்று உப்பின் விலையைக் கூறுவர். இவ்வகை வண்டிகள் பல கவர்பட்ட வழிகளிற் செல்லும்.

**வணிகர் மிளகு பொதிகளைக் கழுதைகளில் ஏற்றிச் செல்லும் காட்சி**

பிற நாடுகளினின்றும் வந்த வணிகர் மாணிக்கம், முத்து, சந்தனம் முதலியவற்றை எவ்விடங்களிலும் கொண்டு சென்று விற்பர். அவர்களின் மார்பில் அம்புகள் கிழித்தலால் உண்டான புண்கள் ஆறிய தழும்புகள் கிடக்கும். அவர்கள் அரையிற்கட்டிய உடையிலே உடைவாள் செருகியிருப்பர்; யானைத் தந்தத்தைக் கடைந்து வாளையிட்டு அதனை வரியுடைய துணியில் கோத்துத் தோளிடத்தே தொங்கவிட்டிருப்பர்; காலில் செருப்புத் தரித்திருப்பர். இவ்வியல்பினராகிய வணிகர் பலாப்பழத்தைப் போன்று ஒத்த கனமாகச் சேர்க்கப்பட்ட மிளகு பொதிகளைச் சுமந்து செல்லும் கழுதை களின் பின்னே கவர்பட்ட வழிகளாற் செல்வர். கழுதை களுக்கு நீண்ட செவிகளும் முதுகிலே தழும்புகளும் உண்டு.

**பாலைநில மக்களின் குடிசைகள்**

இவ்வாறு வண்டிகளும் கழுதைகளும் செல்கின்ற வழிகள் கூடுகின்ற சந்தியில் அரசனால் நியமிக்கப்பட்ட சுங்கங் கொள்வோர் விற்படையுடன் காத்து நிற்பர். அவர் தங்கிநிற்கும் காட்டிடத்தில் எயினர் குடியிருப்பு உண்டு. எயினரின் சிறு குடிசைகள் அணிலும் எலியும் நுழைய முடியாதபடி ஈந்தின் ஓலையால் வேயப்பட்டு முட்பன்றியின் முதுகுபோலத் தோன்றும்.

*பிள்ளை களைப் பெற்ற எயிற்றியர் அக்குடிசைகளின் ஒருபுறத்தே மான் தோலில் முடங்கிக் கிடப்பர். ஏனைய பெண்கள் பாரையினால் கரம்பை நிலத்தைக் கிளறி எறும்பு சேர்த்துவைத்த புல்லரிசியை எடுத்து வருவர்; எடுத்துவந்து [1]பார்வைமான் கட்டி நிற்கும் விளாமரம் நிழல் செய்கின்ற முற்றத்திலே தோண்டப்பட்டுள்ள நில உரலில் இடுவர்; இட்டு வயிர உலக்கையினால் குத்துவர்; ஆழ்ந்த கிணற்றில் உவர்நீரை மொள்வர்; மொண்டு கொண்டு வந்து பழைய ஓறுவாய் போன பானையிலே உலைவார்த்து முரிந்த அடுப்பிலே வைத்து ஆக்குவர். அவர் குடிசைகளை நீவிர் அடைவீராயின் அவர்கள் தாம் சமைத்த புல்லரிசிச் சோற்றை உப்புக் கண்டத்துடன் உண்ணும்படி தேக் கிலையில் இட்டுத்தருவர்.*

**கானவர் பன்றி வேட்டையாடுதல்**

*பாலை நிலத்தே நீரின்மையால் அலைந்து திரிகின்ற மான்களின் அடிச்சுவடுடைய வழிகள் உண்டு. அவ்வழிகளின் பக்கத்தே மழை வறண்ட காலத்து நீர் நிற்றற்குத் தோண்டிய குழிகள் காணப்படும். கானவர் அவற்றிற் பதுங்கியிருந்து நடு இரவில் நீருண்ண வருகின்ற அத்திப்பூப்போன்று வளைந்த மருப்புடைய பன்றிகளை வேட்டையாடுவர். பகற்காலத்தே வளைந்த வேலியிடத்தே வலைகளை மாட்டி, அங்காந்த வாயுடைய நாய் களுடனே சென்று புதர்களை அடித்துத் தாமரைப் பூவின் புறவிதழ் போன்ற செவியுடைய முயல்களை அவற்றிற்கிடவாமல் வலையிடத்தே செல்லும்படி ஓட்டி வேட்டையாடுவர்.*

*இவ்விடத்தேவிட்டு அப்பாற் செல்வீர்களானால் எயினரின் கோட்டை தோன்றும். அதன் உயர்ந்த மதிற்சுவர் ஊகம்புல்லால் வேயப்பட்டிருக்கும். உள்ளே முள்வேலியாலும் அதன் புறத்தே காவற் காட்டாலும் சூழப்பட்ட அகன்ற வீடுகள் காணப்படும். அவற்றின் வாயிலில் சங்கிலியிற் கட்டிய நாய்கள் காவல் காத்து நிற்கும். திரண்ட மரங்களினால் வீடுகளின் உட் கதவுகள் தாழிடப்*

1. வேட்டையாடுவோர் விலங்குகளையோ பறவைகளையோ தங்கள் தொழிலுக்கு இசைந்து நடக்குமாறு பழக்கி வலைமுதலிய கட்டுமிடத்தில் விடுவார்கள். இவற்றால் நம்பிக்கை கொண்டு இவற்றின் இனங்கள் வந்து கண்ணியில் மாட்டிக்கொள்ளும். இவற்றுள் பறவையைப் பார்வைப் பறவை என்றும், விலங்கை பார்வை விலங்கென்றும் கூறுதல் மரபு.

பட்டிருக்கும். கழுகுகள் நிரையாக இருக்கும் வீடுகளின் உட்புறத்தே பகைவரைக் குத்தியதால் கூர்மழுங்கிய வேல்களும், மணி கட்டிய பரிசைகளும், விற்களும், அம்புகளும் சார்த்திவைக்கப்பட்டிருக்கும். தலைவாயில்களில் மலையிடத்துள்ள தேன்கூட்டைப் போன்ற கீழ்ப்புறத்தை உடைய அம்புக் கட்டுகளும் மிக்க ஓசையுடைய பறையும் தூங்கும். இவ் வியல்பினதாகிய ஊரிடத்தே செல்வீராயின் ஈந்தின் விதைபோன்ற சோற்றை நாய் வேட்டையாடிக் கொண்டுவந்த சங்குமணி போன்ற முட்டைகளை யுடைய உடும்பின் பொரியலாலே மறைத்து எயினர் தர நீவிர் மனை கடோறும் பெறுகுவிர்.

### குறிஞ்சி நிலத்து மறவன்

பாலை நிலத்தைக் கடந்து அப்பாற் செல்வீராயின் குறிஞ்சி நிலத்தை அடைவீர்கள். அந்நிலத்துத் தலைவன் தோன்றிய மறக்குடியிலுள்ளோர் வலிமையால் கொள்ளையடித்துண்ணும் உணவினையும், வாட்போர் செய்யும் தொழிலையுமுடையர். அக்குடியிலுள்ள சூற்கொண்ட மகளிர் யானை எதிர்ப்பட்டாலும், பாம்பு தம்மீது ஏறி ஊர்ந்து சென்றாலும், மேகம் இடிந்தாலும் அஞ்சார். இவ்வாறு மறம் மிக்க குடியிற் பிறந்த அந்நாட்டுத் தலைவன் தனது சொற்கேளாத பகைவருடைய நாட்டகத்தே துணைவர் களுடன் குறிவைத்த விலங்கைத் தப்பாமற் பிடிக்கின்ற வேட்டை நாயைப் போற் செல்வான்; அவர்களின் பசுக்கூட்டங் களைக் கவர்ந்துவந்து கள்ளுக்கு விலையாகக் கொடுப்பான். பின் தனது வீட்டிலே வடிக்கப்பட்ட கள்ளை உண்டு பலரும் கூடும் ஊர்நடுவே உள்ள மரத்தடியிலே கிடாயை அறுத்து அதன் இறைச்சியை உண்டு மத்தளங்கொட்ட இடத்தோளை வலப்புறத்தே வளைத்து மகிழ்ச்சி உண்டாகும்படி ஆடுவான்.

### முல்லை நிலத்து ஊர்

இவ்வியல்பினதாகிய ஊரைக் கடந்து சென்றால் முல்லை நிலத்து ஊர்களை அடைவீர்கள். அங்கு வீடுகள் குறுகிய தடி களைக் காலாக இறுக்கி அவைகள் மீது கட்டப்பட்டிருக்கும். கால்களில் ஆட்டு மந்தைகள் நின்று தின்னும்படி தழைகள் கட்டப்பட்டிருக்கும். வீட்டின் வாயில்களில் சிறு புதர்கள்

காணப்படும். வீட்டின் கதவுகள் கயிற்றால் வரியப்பட்டவை. கயிற்றினால் வரிந்து வரகு வைக்கோல் பரப்பப்பட்ட படுக்கையில் கிடாயின் தோலை விரித்து அதன் மீது முதியவன் காவலாகப் படுத்திருப்பான். முற்றத்தே அறையப்பட்டுள்ள முளைகளில் பசுக்களைக் கட்டும் கயிறுகள் கிடக்கும் ஊரைச் சூழ்ந்து வேலியின் பக்கத்தே வெள்ளாடும் செம்மறியாடும் படுத்திருக்கும்.

### மோர் விற்கும் இடைப்பெண்

இவ்வியல்பினதாகிய முல்லை நிலத்து ஊரிடத்தே பறவைகள் துயில் எழுகின்ற விடியற்காலத்தே இடைப் பெண்கள் மத்துகள் ஆரவாரிக்கும்படி தயிரைக் கடைந்து வெண்ணெயை எடுப்பர். தாளுருவி அசைகின்ற காதும் பொன்னிற மேனியுமுடைய ஆய்மகள் புள்ளியாகத் தயிர்தெறித்த பானையி லுள்ள மோரைப் பூவாற்செய்த சும்மாட்டின் மீது தலையில்வைத்துக் குறிஞ்சி நிலத்தே சென்று விற்பாள்; விற்றதனால் கிடைத்த நெல் முதலிய வற்றைக் கொண்டு சுற்றத்தாரை உண்ணும்படி செய்வாள். குறிய கரிய கூந்தலை யுடைய இடைமகள் தான் நெய்யை விற்றவிலைக்குக் கட்டியாகிய பசும் பொன்னை வாங்காளாய் பாலெருமையையும், நல்ல பசுவையும் எருமை நாகையும் கொள்வாள். இவ்வியல்பின ராகிய பெண்களும் வாயைமடித்துச் சீழ்க்கை அடிக்கின்ற வருமாகிய இடையரும் உறையும் குடியிருப்பில் தங்குவீராயின் அவர்கள் சிலுத்த தினையரிசிச் சோற்றைப் பாலுடன் தருவார்கள்.

### இடையர் மந்தை மேய்க்கும் புல்வெளி

முல்லை நிலத்து ஊரைக் கடந்து செல்லும் போது மந்தைகளை மேய்க்கும் இடையரைக் காண்பீர்கள். செருப்புத் தரித்திருத்தலால் அவர் அடிகளில் தழும்பு ஏறியிருக்கும்; கோடாரியைக் கையில் பிடித்திருப்பதால் அவர்களின் கை காய்த்து விறைத்திருக்கும். அவர் கையிலே பசுக்களை அடித்து ஓட்டுகின்ற கோலை வைத்திருப்பர். காவடியின் இரண்டு தலைகளி லும் உறிகளைத் தூக்கிச் செல்வதால் தோள்கள் காய்த்து மயிருடையனவா யிருக்கும். அவர்கள் மயிரிடத்தே பாற்கறையைத் தடவியிருப்பர்; மரக் கொம்பு களின் உச்சியிலிருந்தும், கொடிகளிலிருந்தும் பறித்த பூக்களை மாலையாகக் கட்டி அணிந்திருப்பர்; அரையில் ஒரு

உடையை உடுத்திருப்பர்; பாற்சோற்றை உணவாகக் கொள்வர்; கன்றுகளுடைய பசுக் கூட்டத்தைக் காட்டில் மேயும் படி விட்டுத் தாம் மரநிழல்களிலிருந்து, நெருப்புக் கொள்ளியால் இட்டதுளை களையுடைய குழல்களில் பாலைப் பண்ணை இனிமையாகப் பாடுவர்; குழலை ஊதி வெறுத்தார்களாயின் குமிழின் கொம்பை வளைத்துக்கட்டிய அரலையின் தும்பாகிய நரம்பைக் கையினால் தெறித்து, வண்டினங்கள் தம்மினத்தின் ஓசையென்று காது கொடுத்துக் கேட்கும்படி குறிஞ்சிப்பண் பாடுவர்.

**தானியம் விளைத்தும் மந்தை மேய்த்தும் வாழும் இடையர் குடியிருப்பு**

இவ்வகைப் புல்லடர்ந்த இடத்தைக் கடந்து முள்ளடர்ந்த விடர்த்தர் மரங்கள் சூழ்ந்த மாடு தங்குமிடத்தையுடைய ஊர்களிற் செல்வீராயின், வீடுகளின் முற்றத்தே யானைக் கூட்டம் நின்றாற் போல வரகு முதலிய தானி யங்கள் நிறைக்கப்பட்ட குதிர்கள் தோன்றும். தலைவாயில்களில் யானையின் கால்கள்போன்ற குதிர்கள் நடப்பெற்றிருக்கும். புகைபிடித்த கொட்டில்களின் சுவர் களில் வண்டிச் சக்கரங்களும் கலப்பைகளும் சார்த்தி வைக்கப் பட்டிருக்கும். வீடுகளின் கூரைகள் கரிய வரகு வைக்கோலால் வேயப்பட்டு மாரிகாலத்து மேகம்போலத் தோன்றும். இவ்வியல்பின வாகிய குடியிருப்பு களை அடைவீராயின் வரகுடன் அவரை விதையை இட்டுச் சமைத்த சோற்றினை உண்ணும்படி அங்குள்ளார் தருவர்.

**மருத நிலக்காட்சி**

இக்குடியிருப்பைக் கடந்து செல்வீர்களாயின் வீடு நிறைந்த உணவுப் பொருள்களுடைய உழவரின் வீடுகளைக் காண்பீர்கள். உழவர் எருதுகளை நுகத்தில் பூட்டிப் பெண்யானையின் வளைந்த வாய் போன்ற கலப்பையின் உடும்பின் முகம் போன்ற பெரிய கொழுக்கள் மறையும்படி அமுக்கி உழுது விதைத்த பயிர்கள் தோட்டங்களில் விளைந்து காட்சி அளிக்கும். அவற் றினிடையே தங்கியிருந்த காடை அறுப்புக் காலத்துக்களமரின் ஆரவாரத்துக் கஞ்சித் தனது பறக்கலாற்றாதவும் கடம்பின் பூப்போன்று வெண்ணிற முடையனவுமாகிய குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு முல்லை நிலத்தே சென்று தங்கும்.

அமுக்கி ஊதுகின்ற உலையில் தொழில் செய்கிற் கொல்லனது முறிந்த குறட்டைப்போன்ற கவர்பட்ட கால்களுடைய நண்டுகள் வயல்களிலே, புற்றுகளில் வாழும். கோரைப் புல்லை வேருடன் கொம்பால் குத்தி எடுக்கின்ற எருதுகள் நண்டுப் புற்றுகள் அழியும்படி அங்கு நின்று ஒன்றோடு ஒன்று சண்டையிடும். இவ்வியல்பினதாகிய வயலை உழவர் ஒப்புரவு செய்து நாற்று முடிகளை நடுவர். வயல்களில் வேலை புரிவோரின் இரும்புத் தகடுபோன்று திரையாத மெல்லிய தோலுடைய பிள்ளைகள் சண்பகக் காயின் தாதை மார்பிடத்தே பூசியிருப்பர். அவர்கள் களை பறிப்போர் பிடுங்கிப் போட்ட நெய்தற் பூவை அணிவதை வெறுத்தார்களாயின் முள்ளியின் பூவைப் பறித்துப் பல்லினால் மென்று கிழித்து முடிந்த கோரைநாரால் அதனை மாலையாகக் கட்டி ஈருடைய கரியதலை நிறையும்படி சூடுவர். அவர்கள் பழஞ்சோற்றை வெறுத்து வரம்பிலே கட்டப்பட்டுள்ள சிறிய குடிலின் முற்றத்தில் அவலிடிப்பர். அவ்வோசைக்கு அஞ்சிக் கிளிகள் பறக்கும். நெல்லறுப்போர் வளைந்த கதிருடைய முற்றிய நெல்லின் தாள் களை அறுப்பர்; அறுத்துக் களங்களில் உறையும் தெய்வங்கள் பலி கொள் ளும்படி பாம்புறையும் மருதமர நிழலில் போரடுக்குவர். போர்களின் அடிப் பக்கங்களில் துணங்கையாடும் பூதங்களின் வெள்ளாடைகளைப் போல் சிலந்தி நூல்கள் சூழ்ந்து கிடக்கும். போர்களின் அடியைப்பிடித்து விரித்துக் கடாக்களால் மிதித்து வைக்கோலையும் கூளத்தையும் மணியினின்றும் பிரித்து ஈரம் புலரும்படி மேல் காற்றில் கையினால் தூவித் தூற்றின பொலி மேருவைப் போல உயர்ந்து தோன்றும். இவ்வாறு சிறப்பு மிக்க மருத நிலஞ் சூழ்ந்த குடியிருப்புகளிலே வீடுகளின் பக்கத்து இறுக்கப் பெற்ற முளைகளில் ஆன்கன்றுகளைக் கட்டும் கயிறுகள் கிடக்கும்; தலையைத் திறந்து தானியங்கள் உள்ளே கொட்டப் பெற்ற குதிர்கள் தோன்றும். தச்சச்சிறார் செய்த சிறு தேர்களை உருட்டிச் சென்ற களைப்பால் பிள்ளைகள் செவிலித் தாயருடைய பாலை நிறையவுண்டு படுக்கையிலே கண்வளர்வர். இவ்வாறு வறுமை தெரியாத குடியிருப்பினையுடைய ஊரிலே செல்வீராயின் அங்குள்ளார் நெற்சோற்றினைக் கோழிப்பேட்டின் பொரியலோடு தருவர்.

**கரும்பு ஆலைகள்**

வயல்களிலே புகைசூழ்ந்த கொட்டில்கள் காணப்படும். அங்குக் கரும்பு ஆலைகள் ஆடுகையினாலே மலையிடத்தில் சிங்கம் பாய்தலால் யானை பயந்து சத்தமிட்டாற் போன்று ஆரவாரம் உண்டாகும். இவ்வாறு ஆட்டிப்பிழியப்பட்ட கருப்பஞ் சாற்றை அங்குள்ளார் கட்டியாகக் காய்ச்சுவர். அக்கொட்டில்களிற் செல்வீராயின் கருப்பஞ்சாற்றையும் கற்கண்டையும் உண்ணும் படி பெறுகுவிர்.

**மீன் பிடிப்போர் குடியிருப்பு**

இக்கொட்டில்களைக் கடந்து அப்பாற் சென்றால் ஏரி களிலும் மடுக்களிலும் மீன் பிடிப்பாரின் குடியிருப்பைக் காண்பீர்கள். அவர்களின் வீடு காஞ்சி வஞ்சி முதலிய மரங்களின் கொம்புகளைக் கைமரங்களுக்கு நடுவே தூணாக நாட்டி மூங்கிற்றடிகளை வரிச்சாக நிரைத்து வைத்துத், தாழை நாராற் கட்டித் தருப்பைப் புல்லால் வேய்ந்த இறப்புகளை உடையன. தலை வாயில்கள் புன்னைக் கொம்பினால் கட்டப்பட்டிருக்கும். அவற்றின் கூரைகளில் படரவிடப்பட்ட சுரைக் கொடிகளில் காய்கள் தொங்கும். முற்றத்தே மீன்களை வாரி எடுக்கும் வலைகள் கிடக்கும். இளையவர்களும் முதியவர் களும் தலைவாயிலில் தங்கி இருப்பார்கள்; பின்பு இறாலும் கயல் மீனும் பிறழுகின்ற ஆழ்ந்த குளங்களில் உலாவி மீன்களைப் பிடிப்பார்கள். அவர்கள் குற்றாத கொழியலரிசியைக் கழியாகத் துழாவி அடுவர்; அட்ட கூழை அகன்ற வாயுடைய தட்டுப்பிழாவிலே விட்டு ஆற்றுவர்; பாம்பு இருக்கும் புற்றிற் கிடக்கும் புற்றாம் பழஞ்சோற்றை ஒத்த புறத்தினையுடைய நெல் முளையை இடித்துச் சேரும்படி அதிலே கலப்பர்; பின்பு விரலாலே கலக்கி அரிப்பர். அவர் குடியிருப்பில் தங்குவீராயின் இவ்வாறு அரித்துச் சாடியில் விட்டு முற்றிய காரமுள்ள கள்ளை மீன் சூட்டோடு பெறுகுவிர்.

இக்குடியிருப்பைக் கடந்து சென்றால் அங்கு நீர்நிலைகள் காணப் படும். தூண்டிலில் கோக்கும் இரையை இட்டு வைக்கும் தோற்பையை உடையவனும் மீனைத் தப்பாமற் பிடிக்கும் திறமை யுடையவனுமாகிய பாணன் மூங்கிற்றடியிற் கட்டிய கயிற்றிடத்துள்ள

தூண்டிலில் இரையைக் குற்றி நீருள்விடுவான். அவ்விரையைக் கவர்ந்து அகப்படாமற் போன வாளைமீன் நீர் நிலையின் பக்கத்தே நின்ற பிரம்பின் நிழலைக்கண்டு அஞ்சும். அந்நீர் நிலையில் பூத்த கடவுள் சூடுதற் குரிய தாமரைப் பூவைச் சூடாது, பொய்கைகளில் வானவிற் போன்று பூத்துள்ள குவளையையும் நீலத்தையும் பிற பூக்களையும் அவற்றைப் பறிப்பார் உங்கட்குத் தர நீவிர் அவற்றைப் பெற்றுச் சூடிக் கொண்டு அப்பாற் செல்வீராக.

**பார்ப்பார் இல்லம்**

அப்பாற் சென்றால் பார்ப்பார் இல்லங்களைக் காண்பீர்கள். பசுக்கள் பசும் புற்றரைகளைத்தேடி மேயச் செல்ல அவற்றின் செழிய கன்றுகள் பந்தற் கால்களில் கட்டி நிற்கும். கோழி, நாய் முதலியவை அவ் வில்லங்களுள் செல்லமாட்டா. சாணியால் மெழுகப்பட்டிருக்கும் வீடுகளுள் வழிபடு தெய்வங்களின் உருவங்கள் காணப்படும். கிளிகள் வேதம் படிக்கும். அருந் ததியைப்போன்ற சிறந்தகற்பும் நல்லொழுக்கமும் வளையணிந்த கைகளுமுடைய பார்ப்பனப் பெண்கள் நல்ல சுவையுள்ள உணவுகளை ஆக்கு வார்கள். அவ்வீடுகளை அடைந்தால் இராசான்னம் என்னும் சோற்றினையும், மாதுளங்காய்களைப் பில்லைகளாக அரிந்து மிளகுத்தூள் தூவிக் கருவேப்பிலை கூட்டி நெய்யில் வெதுப்பிய பொரியல்களையும், மாங்காய் ஊறுகாய் முதலியவற்றையும் உண்ணும்படி பெறுகுவிர்.

**நீராடுந் துறை**

நீராடுந் துறைகளிலே மகளிர் விளையாடிப் போகவிட்டுப் போன குழையினை நீல நிறமுடைய சிச்சிலிப் பறவை எடுத்துக் கொண்டு பறவைகள் நிறைந்திருக்கும் பனையிற் செல்லாது, அந்தணர் யாகசாலையில் நட்ட யூபத்தின் மேலிருக்கும். அது சோனகர் பாய்மரத்தின் மேலேற்றிய அன்ன விளக்கைப் போலவும் விடி வெள்ளியைப் போலவும் ஒளிவிட்டு விளங்கும்.

**துறைமுகக் காட்சி**

கடற்கரையிலே மேற்குத் திசையிலுள்ள குதிரைகளையும் திசையிலுள்ள பண்டங்களையும் கொண்டு வந்த மரக்கலங்கள்

சூழ்ந்து நிற்கும். மணல் மிக்குடைய வீதிகளில் தொழிலாளர் காவல்புரியும் பண்ட சாலைகளும் பரதவர் வாழும் வானை முட்டும் மாளிகைகளும் காணப் பெறும். வீடுகளில் விளை பொருள்கள் நிறைந்து கிடக்கும். வயல்களில் உழுகின்ற எருது களைப் பசுக்கள் நெருங்காதபடி ஆட்டுக்கடாக்களும் நாய்களும் சுழன்று திரியும்.

**பெண்கள் பந்தாடுதல்**

உயர்ந்த மாடங்களில் உறையும் பேரணிகலன்களை அணிந்த மகளிர் பசிய மணிகோத்த வடங்கள் உடைய அரையில் கிடக்கின்ற மெல்லிய துகில் அசைய மலையிலே ஆரவாரிக்கின்ற மயில்கள் போல உலாவுவர்; காலிடத்துள்ள பொற் சிலம்புகளொலிக்க நூலினால் வரிந்து செய்யப்பட்ட பந்தினை அடித்து விளையாடுவர்; மெத்தெனக் கையிற் றரித்த வளைகள் அசையும்படி பொற்கழங்கு கொண்டு முந்தை ஒத்த வார்ந்த மணலில் விளையாடுவர்.

**கட்கடை**

கள்ளுண்பார் பலரும் புகுகின்ற கள் விற்கும் கடை வாயிலில் பசிய கொடிகள் ஆடிக்கொண்டிருக்கும். முற்றத்தே தெய்வத் துக்குத் தூவின பூ வாடல்கள் காணப்படும். அவ்விடத்தே கள்ளைச் சமைக்கின்ற மகளிர் வீட்டில் கழுவியநீர் வடிதலின் நிலம் சேறாடியிருக்கும். அச் சேற்றில் புரளுகின்ற பெண் பன்றியோடு சேர்க்கைக் கருத்தால் செல்லாமல் குழியில்விட்டு, இடித்தமாவை உணவாகக் கொடுத்து ஆண்பன்றி வளர்க்கப் படும். நீவிர் நெய்தல் நிலத்திலுள்ள பட்டினத்திற்றங்கு வீராயின் அப்பன்றியின் தசையோடு கள்ளையும் உண்ணும்படி பெறுகுவிர்.

**கலங்கரை விளக்கம்**

துறைமுகத்தில் வானை முட்டும்படி உயர்ந்ததும் கற்றை முதலிய வற்றால் வேயப்படாததுமாகிய கலங்கரை விளக்கம் தோன்றும். அது கடலிற் செல்லும் மரக்கலங்கள் தாம் சேரும் இடத்தை அறிந்து செல்லும்படி அமைக்கப்பட்டது. அவ்விடத்தைக் கடந்து சென்றால் தென்னங்கீற்றால் வேய்ந்த கூரையையும் முற்றத்தே மஞ்சட்செடிகளையுமுடைய வீடுகளைக் காண் பீர்கள்.

அவ்வீடுகளில் தங்குவீராயின் இளநீரையும், வாழைப் பழத்தையும், பனையின் நுங்கினையும், வேறு பண்டங்கயைும் முற்றின வள்ளி முதலிய கிழங்குகளையும் உண்ணும்படி பெறுகுவிர். இச்செல்வம் பொருந்திய பட்டினத்தே வழிச்செல்வோர் பசி தீரும்படி சோற்றை ஆக்குகின்ற பானை அசைந்து விழும்படி கமுகின் பக்கத்தே நிற்கும் தெங்கின்காய் விழும்.

**திரு எஃகா**

இப்பட்டினத்தை விட்டுச் சென்றால் பல மரங்கள் அடர்ந்த இடங்களில் அமைக்கப்பட்ட விண்ணைத்தொடும் மாடங்கள் விளங்கும். ஊர்களில் பெண்கள் வள்ளிக்கூத்து ஆடுவர். இவ்வகைப் புறநாடுகளைக் கடந்தபின் காந்தள் வளர்கின்ற மலையிடத்து யானை கிடந்தாற் போலப் பாம்பணை யிலே திருமால் பள்ளி கொள்கின்ற திரு எஃகாவை அடைவீர்கள்.

அங்கு வெய்யில் நுழையாதவும் இலை நெருக்கத்தால் குயில்கள் நுழைகின்றவுமாகிய இளமரச் சோலைகள் உண்டு. அச்சோலைகளுள் உள்ள காஞ்சி மரத்திலே படர்ந்திருக்குதம் குருக்கத்திக் கொடியின் வரிகளை யுடைய பூக்கள், வார்ந்த மணலிடத்தே குழிகளில் நிற்கும் நீரில் விழுந்து அப்பவாணிகர் சுட்ட அப்பம் பாலிலே கிடந்தாற் போல் தோன்றும். முன்பு நீர்நின்ற அப்பொழில்களிடத்தே, இளம்பிறையைக் கரும்பாம்பு பற்றினாற் போல மகரவாயென்னும் தலைக்கோலமும், வண்டுகள் சூழும் நெற்றியும், கள்ளுண்ணலால் குளிர்ச்சி பொருந்திய கண்களுமுடைய மகளிர் பகற் பொழுதில் விளையாடுவர். அவர்களோடு நீவிரும் விளையாடுவீர்களாக. பின்பு, நீங்கள் பெரிய நீராடும் துறையில் இளவேனில் இன்பம் நுகர்பவர் களோடு இருந்து இளைப்பாறுங்கள்; சூல் கொண்ட கமுகின் வயிற்றைப் போன்ற பச்சைக் குப்பிகளை (தொன்னைகளை) உண்டு கழித்து நாடோறும் பெரிய மகிழ்ச்சிக்குரிய அவ்விடத்தே இருங்கள்; நும்முடைய கரிய தண்டினையுடைய இனிய யாழை வாசித்துத் திரு வெஃகாவிலிருக்கும் கடவுளை வாழ்த்தி அவ்விடத் தினின்றும் செல்லுங்கள்.

## காஞ்சி மூதூர்

அப்பாற் சென்றால் காஞ்சி மூதூரை அடைவீர்கள். அங்குச் சோலை களில் பரிக்கோலைக் கையிலேயுடைய யானைப்பாகர் சோர்ந்திருக்கும் போது, சூலுடைய மந்தி யானைக்கு நெய்யுடன் கலந்து வைக்கப்பட்ட அரிசியைத் திருடிக்கொண்டு சென்று உண்ணும். தேர் ஓடுதலால் தெருக்கள் குழிந்திருக்கும். புகழுடைய மூதூரிடத்து வாழும் மக்கள் கடைகளில் விற்றலும் வாங்கலும் செய்வர். உலகத்தே கொடுப்பாரைக் கொடாது தடுத்த[1] அம் மூதூர் பரிசிலர்க்கு அடையாத வாயிலுடையது; செங்கற்களால் எடுக்கப் பட்ட மதில்கள் காவற்காடு சூழ்ந்த பக்கங்களை உடையன. அந்நகர், புலால் நாற்றமுடைய கடல் சூழந்த இவ்வுலகில், புறாக்களிருக்கின்றவும் பூவாமற் காய்க்கின்றவும் மரங்களுட் சிறந்த பலாவைப் போன்று சிறப்புடையது; பலசமயத்த வர்கள் தொழும் படி எடுக்கப்படும் விழாக்களால் சிறந்தது.

## ஐவர் நூற்று வரை வென்றது

ஐவர் தாமரைமுகையுடைய நெடிய தேரை உடையர். தருமன் முதலானோர், பிறையை மேலே சூடி அந்திக் காலத்தே உலாவுகின்ற முகிலைப் போன்றவும், வெள்ளிய கொம்புடையவு மாகிய யானைகளின் பிணத்தை இரத்த ஆறு இழுத்துச் செல்லும் படி பொருது துரியோதனன் முதலிய நூற்றுவரும் மடியும்படி வென்றான். அத்தருமன் முதலானோர் போல இளந்திரையன் மட்டுக் கடங்காப் படையுடன்; அவன் வந்த பகைவரை வென்று பரிசிலை விரும்பி அடைக்கலமாகச் சென்றார்க்குப் பாதுகாவலாகக் காஞ்சி நகரில் வீற்றிருக்கின்றான்.

## அரசன் காஞ்சி மூதூரில் இரவலர்ப்புரந்து வீற்றிருக்கும் இயல்பு

தன்னோடு மாறுபட்ட அரசனின் மன்றுகளில் மக்களின்றாம் படி அழித்தலும், தன்னை விரும்பிவந்தோர் நாடு திருமடந்தை பொலிவு பெற்றிருக்கும்படி அளித்தலும் அவனுக்கு எளிது. மலையிடத்தினின்றும் இழிகின்ற அருவி அம் மலையிலுள்ள பண்டங்களை வாரிக்கொண்டு வந்து கடலுக்குக் கொடுத்தாற்

1. தான்பெரிதும் கொடுத்தலால் இரவலர் பிறரிடம் இரக்கச் செல்லார் என்பது.

போலத் திறைகளுடன் வந்த பலநாட்டு வேந்தர் அவனுடைய தலைவாயிலில் காத்துநிற்பர். அன்னோர், கங்கையைக் கடக்க விரும்பினோர் தோணிக்குக் காத்திருந்து தூங்கினது போலயானை முதலிய செல்வங்களோடு நெருங்கி நின்று காலம் பார்த்திருப்பர்.

**இளந்திரையனின் நல்லியல்புகள்**

மாடத்திருக்கும் சேவற்புறா, யானைக்கு வளைந்த பூண் செய்கின்ற கொல்லனது கூடத்தில் எழுந்த ஓசைக்கு வெருவித் துயில் நீங்கும். கடவுள் இருப்பதற்கும் இலக்குமி உறைவதற்கும் இடமாயுள்ள இத்தொன்னகரில் வேந்தன் இருப்பான். அவன் கடலின் நடுவே ஞாயிறு தோன்றி ஒளிசெய்தாற் போல மயக்க மில்லாத அறிவுடையன். அவன் வறியராய் நலிவெய்தி னோர்க்கும் வறுமையுற் றிரந்தோர்க்கும் விரும்பியவற்றைக் கொடுப்பான்; புலவருக்கு ஆபரணங்களை அளிப்பான்; பரிசிலருக்கு அளித்துக் கொடுமை இல்லாத அமைச்சரோடு வீற்றிருப்பான். நீ அவனைப் பார்த்து, "யானையைக் கண்ட சிங்கக்குட்டி அதன் மத்தகத்தைக் கொள்ள விரும்பி னாற் போலப் பகைவரது மதில்களை அழித்து அரசருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடி புனையும் வெற்றியினையும், பகைப் புலத்துக்கொண்ட கொள்ளையாகிய உணவினையும், மாறுபட்ட அரச ரோடு சந்துசெய்யும் விருப்பமின்மையையும் உடையவனே! தொண்டைக் கொடியைச் சூடிய மரபில் உதித்தவனே! வீரர்க்கு வீரத்தைக் கொடுக்கின்ற வனே! கொடியார்க்குக் கொடியவனே! செல்வ முடையோர்க்குக் கொடுத்தலை விரும்புகின்றவனே! போர்த் தொழிலில் புகழ்பெற்றவனே! கடலிடத்தே சென்று சூரனைக் கொன்ற முருகனைப் பெற்ற பெருமையுடைய வயிற்றை யும் பேய்களாடும் துணங்கைக் கூத்தையுமுடைய இறைவிக்குப் பேய்மகள் சில நொடி சொன்னாற்போலக் குறையாத கொடை யுடைய நின்புகழிற் சில வற்றைக் கூறிப் புகழ்ந்து வந்தேன்; நெடிது வாழ்க!" என்று சொல்லி யாழை வாசிக்கும் முறைமையில் வாசிப்பாயாக. மயில்கள் ஆரவாரிக்கின்ற இளமரக் காட்டில் மந்திகள் பாய்வதால் சிந்திக்கிடக்கும் மலர்களையுடைய காடும், தெய்வங்கள் உறைகின்றவும், கின்னரப் பறவை பாடுகின்றவும், முற்றத்தே மானும் புலியும் துயில்கொள்ள யானை முறித்துக்

கொண்டு வந்த விறகால் முனிவர் ஓமஞ்செய்கின்றவுமாகிய சாரல்களும் பல அருவிகளுமுடைய மலைகளுக்குத் தலைவனாகிய அரசன் செல்வமும் யாக்கையும் நிலை யில்லாத இவ்வுலகில் புகழைப் பெறுதல் நன்று என உணர்ந்து உன்னை விரும்பி அழைப்பான்;

### இளந்திரையன் இரவலர் புகழக்கேட்டுப் பரிசில் வழங்கும் தன்மை

அழைத்து உனது அரையிற் கிடக்கும் கொட்டைப் பாசியின் வேரைப் போன்ற கிழிந்த உடையைப் போக்கிப் பாலாவியை ஒத்து விளங்குகின்ற நூலால் செய்த பட்டாடைகளை நீயும் உனது சுற்றத்தினரும் உடுக்கும்படி தருவான். வளைந்த அரிவாளைப் பிடித்தலால் கைகாய்ப்பேறின மடையன் ஆக்கிய இறைச்சியையும் சோற்றையும் இனிய சுவையுடைய பிற உணவு களையும் வெள்ளிக் கலங்களிலிட்டு உனது பிள்ளைகளினிடையே வைத்து ஆசையுடன் உண்ணும்படி செய்வான். கார் காலத்து மின்னல் தோன்றினாற் போன்று விறலி மயிரிடத்தே சூடும்படி பொன்மாலையையும் பொற்றாமரைப் பூவையும் அளிப்பான்; சங்கின் நிறம்போன்ற வெள்ளிய குதிரைகள் பூட்டிய பொற்றேரினைத் தருவான்; அதோடு அமையாது பகை அரசரிடமிருந்து கவர்ந்த குதிரை களையும் சேணத்தையும் கொடுப்பான்; நாவலந் தண் பொழில் குற்றமின்றி விளங்கும்படி இவை ஒழிந்த பரிசில்களையும் வழங்கு வான். இரவலனே காலந் தாழ்த்தாது கடிதில் அவன்பால் ஏகுக.

### தனிப் பாடல்

கங்குலும் நண் பகலும் துஞ்சா இயல்பிற்றாய்,
மங்குல் சூழ் மாக் கடல் ஆர்ப்பதூஉம்- வெஞ் சின வேல்
கான் பயந்த கண்ணிக் கடு மான் திரையனை
யான் பயந்தேன் என்னும் செருக்கு.

● ● ●

## சிறப்புப் பெயர் முதலியவை


### அ

அகல் ........ 377
அடிசில் ........ 476
அடி புதை அரணம் ........ 69
அடை ........ 278
அணங்கு ........ 459, 494
அணில் ........ 85
அதளோன் ........ 151
அந்தணர் ........ 315
அந்தி வானம் ........ 413
அமளி ........ 252
அமுது ........ 475
அரக்கு ........ 293
அரவு ........ 42, 134
அரிசி ........ 474
அருவி ........ 427, 500
அரை நாள் ........ 111
அலவன் ........ 208
அவரை ........ 195
அவல் ........ 226
அவையா அரிசி ........ 275
அளகின் வாட்டு ........ 256
அளியும் தெறலும் ........ 422
அளை ........ 163

### ஆ

ஆ (பசு) ........ 141, 243
ஆம்பி ........ 157
ஆய்மகள் ........ 162
ஆயம் ........ 311
ஆரம் ........ 46
ஆரை ........ 50
ஆலை ........ 261
ஆவி ........ 469
ஆன் ........ 165

### இ

இடையன் ........ 175
இமையவர் ........ 429
இரவலன் ........ 45
இரவில் மாட்டிய இலங்கு சுடர்ஞெகிழி ........ 349
இரவு ........ 279
இரியல் மாக்கள் ........ 432
இரும்பு ........ 437
இல் அடு கள் ........ 142
இலவம் ........ 83
இவுளி ........ 492
இமு மென் புள் ........ 406
இளையர் ........ 268
இறை ........ 439
இன் இயம் ........ 56

### ஈ

ஈகை ........ 460
ஈத்து இலை ........ 88
ஈந்து ........ 130
ஈர் ........ 219
ஈர்–ஐம்பதின்மர் (துரியோதனன் முதலிய நூற்றுவர்) ........ 415

### உ

உடம்பிடி ........ 76
உடுப்பு (உடும்பு) ........ 200

உடும்பு ........ 132
உதள் ........ 151
உமணர் ........ 65
உரல் ........ 54
உரும் ........ 42
உருளி ........ 47
உருளை ........ 188
உல்கு ........ 81
உலக்கை ........ 97
உலகம் ........ 32, 410
உலை ........ 207
உவரி ........ 98
உழவர் ........ 197
உளி ........ 92
உறிக்கா ........ 171

ஊ

ஊகம் ........ 122
ஊரா நல் தேர் ........ 249
ஊன் கொழுங்குறை ........ 472

எ

எஃகம் ........ 119
எகினம் ........ 326
எந்திரம் (ஆலை) ........ 260
எய் ........ 88
எய்ற்றியர் ........ 94
எயினக் குறும்பு ........ 129
எரு ........ 154
எருத்து ........ 65
எருமை ........ 165
எல்லை ........ 279
எழூஉ ........ 48

ஏ

ஏணி ........ 347
ஏழகம் ........ 326
ஏற்றை (ஆண் பன்றி) ........ 344
ஏனம் ........ 110

ஐ

ஐவர் (பஞ்ச பாண்டவர்) ........ 417

ஒ

ஒக்கல் ........ 25, 470
ஒரு மரப் பாணி ........ 433
ஒழுகை ........ 63
ஒன்று அமர் உடுக்கை ........ 175

ஓ

ஓதிம விளக்கு ........ 317
ஓரி ........ 172

க

கங்குல் ........ வெ. 1
கங்கை ........ 431
கச்சி ........ 420
கச்சு ........ 71
கஞ்சக நறு முறி (கருவேப்பிலை) ........ 308
கட்டளை (பொன் உரைகல்) ........ 220
கடம்பு ........ 75, 203
கடல் ........ 18, 67, 409 ........ 427, 483, வெ. 1
கடவுள் ........ 391
கடவுள் ஒண்பூ ........ 290
கடுப்புடைப் பறவை ........ 229
கடும்பு ........ 105
கடை ........ 399
கணை ........ 70, 121
கந்து ........ 396
கமுகு ........ 7, 363, 381
கயம் ........ 289
கயல் ........ 270
கருங்கை வினைஞர் ........ 223
கருங்கோட்டு இன் இயம் ........ 392
கருப்பை ........ 85
கரும்பின் தீம் சாறு ........ 262
கல் ........ 427

கலப்பை .................. 188
கலம் .................. 350
கலம் கரையும் துறை .................. 350
கலை .................. 496
கழங்கு .................. 335
கழல் .................. 102
கழனி .................. 228
கழு .................. 128
கழுதை .................. 80
கழை .................. 285
கள் அடு மகளிர் .................. 339
களவு ஏர் வாழ்க்கை .................. 40
களிறு .................. 27, 187, 372, 396, 499
களைஞர் .................. 213
கறவை .................. 325
கறி .................. 307
கன்று .................. 297
கன்று அமர் நிரை .................. 176

**கா**

காஞ்சி .................. 375
காட்டுமா .................. 43
காடி (ஊறுகாய்) .................. 310
காடி வைத்த கலன் .................. 57
காந்தள் .................. 372
கார் ஏறு .................. 210
காழ் .................. 329
காழோர் .................. 393
கானம் .................. 23
கானவர் .................. 116

**கி**

கிணறு .................. 97
கிள்ளை .................. 227, 300
கிளை .................. 163
கின்னரம் .................. 494

**கு**

குட்டம் .................. 271
குடகாற்று .................. 240
குடுமி கொள்ளும் வென்றி .................. 451–452
குண கடல் .................. 441
குதிர் .................. 186
குமிழ் .................. 180
குயில் .................. 374
குரம்பை .................. 88, 148
குருகு .................. 376
குருதி .................. 414
குரும்பி .................. 277
குழல் .................. 179
குழவித் திங்கள் .................. 384
குழிசி .................. 99, 159, 366
குழை .................. 161
குளகு .................. 148
குளம் .................. 273
குறிஞ்சி (பண்) .................. 182
குறுநர் .................. 295
குறும்பூழ் .................. 205
குறை வேண்டுநர் .................. 443

**கூ**

கூடம் .................. 438
கூடு(கோழிக் கூடு) .................. 52
கூடு (நெற்கூடு) .................. 247
கூந்தல் .................. 162
கூவியர் .................. 377
கூழ் (சோறு) .................. 327
கூழ் (பாற் சோறு) .................. 175

**கொ**

கொக்கு (மாமரம் .................. 309
கொட்டில் .................. 189
கொடி .................. 337
கொடிறு .................. 207
கொடுஞ்சி .................. 416
கொடு நுகம் .................. 127
கொடுவாய் இரும்பு .................. 286

கொடை ............ 400
கொடைக் கடன் ............ 446
கொண்டி உண்டி ............ 454
கொப்பூழ் ............ 402
கொல்லன் ............ 207, 437
கொன்றை ............ 328

**கோ**

கோடை ............ 272
கோவலர்குடி ............ 166
கோழி ............ 52, 299
கோள் ............ 400
கோள் (செம்பாம்பு) ............ 384
கோளி ............ 407

**ச**

சகடம் ............ 50
சா
சாடி ............ 280
சாத்து ............ 80
சாபம் ............ 121

**சி**

சிமையம் ............ 429
சிரல் ............ 313
சில்பத உணவு ............ 64
சிலதர் ............ 324
சிலம்பி ............ 236
சிலை ............ 145, 269

**சு**

சுடுமண் ............ 405
சுண்ணம் ............ 221
சுமடு ............ 159
சுரும்பு ............ 385
சுற்றம் ............ 21, 139, 447
சுற்று வீங்கு செறிவு உடை ............ 73
சுறவு ............ 385
சுனை ............ 10

**சூ**

சூட்டு ............ 46
சூர் (சூரபன்மன்) ............ 457
சூல் மகள் ............ 136

**செ**

செங்கோல் ............ 36
செந்தீ ............ 498
செந்நெல் ............ 230, 473
செம் பொன் மலை ............ 241
செரு ............ 490
செரு மேம்படுநன் ............ 456
செல்வர் ............ 456
செல்வி ............ 459
செவிலி அம் பெண்டிர் ............ 251
செறு ............ 212
சென்னியம் ............ 103

**சே**

சேஎய் ............ 458
சேதா ............ 306
சேம்பு ............ 361

**ஞ**

ஞமலி ............ 112, 132, 299
ஞெ
ஞெகிழி ............ 178, 349
ஞெண்டு ............ 167
ஞெலிகோல் ............ 178

**த**

தச்சச் சிறாஅர் ............ 248
தண்டலை உழவர் ............ 355
தண்டு ............ 170
தண்ணுமை ............ 144
தயிர் ............ 158
தருப்பை ............ 264

**தா**

தாமரை ............ 114, 481
தாமரைப் பொகுட்டு ............ 404

தாழை ................................................ 264
தாழைக் குழவித்
தீம் நீர் (இளநீர்) ..........................................
.................................................... 357
தானை ................................................ 418

**தி**

திங்கள் ................................................ 480
திரி (திரிகை) ........................................ 187
திரு ................................................ 29
திரையன் ................................... 37, வெ. 1
திவவு ................................................ 13
தினை ................................................ 168

**தீ**

தீம் பல் தாரம் ..................................... 361

**து**

துடவை ................................................ 201
துடி ................................................ 124
துணங்கை ........................................... 235
துணங்கை அம் செல்வி ..................... 459
துணையிலோர் ..................................... 426
துப்புக் கொளல் .................................. 426
தும்பை ................................................ 101
துருவை ................................................ 153
துழவை ................................................ 275
துறக்கம் ................................................ 388
துறை ................................................ 351

**தூ**

தூண்டில் ............................................. 285

**தெ**

தெங்கின் முப்புடைத் திரள் காய்
(தேங்காய்) ........................................ 364
தெங்கு ................................................ 353
தெய்வ மடை ....................................... 104
தெரு ................................................ 397
தெவ்வர் ............................... 118, 419, 491

**தே**

தேஎம் ........................................... 423, 424
தேக்கு இலை ...................................... 104
தேர் ..................................... 397, 416, 490

**தொ**

தொடி .................................... 13, 334, 436
தொடு தோல் ....................................... 169
தொடை ................................................ 68
தொடை அமை கேள்வி ........................ 16
தொண்டையோர் ................................ 454
தொழு ................................................ 185

**தோ**

தோப்பி ................................................ 142

**ந**

நகர் ...................................... 405, 435, 440
நச்சிச் சென்றோர் ............................... 421
நட்புக் கொளல் .................................. 425
நண்பகல் ................................. (வெண்பா)
நயந்திசினோர் ................................... 425
நயந்தோர் ........................................... 424
நரம்பு ................................................ 15
நறவு ........................................... 141, 386
நறா ................................................ 345

**நா**

நாகு ................................................ 165
நாஞ்சில் ............................................. 199
நாடக மகளிர் ........................................ 55
நாண் ................................................ 285
நாய் ........................................... 125, 139
நாவல் அம் தண் பொழில் ................ 465
நாவாய் ................................................ 321
நாறு ................................................ 212
நான்முக ஒருவன் ............................... 403

**நி**

நில்லா உலகம் ................................... 466
நில உரல் ............................................. 96

**நீ**

நீர்ப் பெயற்று ........ 319
நீலப் பைங் குடம் ........ 382
நீலம் ........ 293

**நு**

நுகம் ........ 62
நுங்கு ........ 360

**நூ**

நூலோர் ........ 487
நூற் கலிங்கம் ........ 469

**நெ**

நெடியோன் ........ 402
நெய் ........ 164
நெய்தல் ........ 213
நெய்ம்மிதி கவளம் ........ 394
நெல் ........ 131, 325

**நொ**

நொடித்தல் ........ 459

**ப**

பகடு ........ 58, 198, 238, 325
பகல் செய் மண்டிலம் ........ 442
பகழி ........ 269
பகைவர் ........ 450
பச்சிறா ........ 270
பச்சூன் ........ 283
பச்சை ........ 6
பசும் படை ........ 492
பஞ்சாய்க் கோரை ........ 217
பட்டினம் ........ 336
படப்பை ........ 126, 321, 354
படம் (சட்டை) ........ 69
படலைக் கண்ணி ........ 60, 174
படை ........ 398
பணை ........ 161
பதம் ........ 105
பந்தல் ........ 124, 297
பந்து ........ 333
பயம்பு ........ 108
பரதர் ........ 323
பரிசில் ........ 493
பருதி ........ 2
பருந்து ........ 117
பல்காற் பறவை ........ 183
பலகை ........ 120
பலவு ........ 77
பலாஅ ........ 408
பலி பெறு வியன் களம் ........ 233
பழுமரம் ........ 20
பள்ளி ........ 89
பறவைப் பெயர்ப்படு வத்தம்
(இராசான்னம் என்னும் நெல்) ........ 305
பறி ........ 265

**பா**

பாகொடு பிடித்த இழை சூழ் ........
வட்டம் (அப்பம்) ........ 377–378
பாசி ........ 468
பாண்மகன் ........ 284
பாணன் ........ 22
பாதிரி ........ 4
பாம்பு ........ 232, 277
பாம்பணைப் பள்ளி
அமர்ந்தோன் ........ 373
பார் ........ 48
பார்வை ........ 95
பால் ........ 168, 172, 251, 378
பாலை (பண்) ........ 180

**பி**

பிடி ........ 53, 186, 199, 358
பித்தை ........ 482
பிரம்பு ........ 288
பிழா ........ 276
பிழி ........ 281
பிறை ........ 11

**பு**

புகர் முகம் தாக்கிய வயமான் ............. 448
புதை (அம்புக்கட்டு) .............................. 123
புரவி ..................................... 27, 320, 488
புல் ................................................... 94, 184
புலவர் ..................................................... 450
புலவு ....................................................... 269
புலி .......................................................... 156
புலிப் போத்து ......................................... 138
புழுக்கல் ........................................ 100, 474
புழுக்கு ..................................................... 195
புறவு ....................................................... 439
புன்னை ................................................. 266

**பூ**

பூண் கடன் ............................................. 450
பூளைப்பூ ................................................ 192

**பெ**

பெண்ணை .................................... 314, 360
பெருமகன் ............................................... 101

**பே**

பேர்யாழ் .................................................. 462

**பை**

பைஞ்சாய் ............................................... 209
பைஞ் சேறு (ஆப்பீ) ............................. 298

**பொ**

பொதும்பர் ............................................... 374
பொழில் .................................................. 380
பொற் சிலம்பு ......................................... 332
பொன் ............... 164, 424, 431, 440, 485
பொன் துஞ்சு வியல் நகர் ................... 440
பொன்னின் தொடை
அமைமாலை ................................ 485–486

**போ**

போர்வை ..................................................... 9

**ம**

மகமுறை ................................................ 478
மஞ்சள் ..................................................... 354
மஞ்ஞை ......................................... 331, 495
மணி ........................................................ 313
மத்தம் ...................................................... 156
மதலை (தூண்) ...................................... 346
மதி ............................................................. 17
மதில் ........................................................ 451
மந்தி ............................................. 395, 497
மரப் பந்தர் .............................................. 187
மரல் ......................................................... 181
மருது ....................................................... 232
மருப்பு (யாழ்த் தண்டு) ............................ 14
மலை .......................................................... 67
மலைந்தோர் ........................................... 423
மழு .......................................................... 170
மழை .......................................................... 19
மள்ளர் ..................................................... 455
மள்ளன் .................................................... 455
மறம் பூண் வாழ்க்கை .......................... 136
மறவர் ..................................................... 455
மறவன் .................................................... 455
மறை ........................................................ 300
மறை காப்பாளர் ..................................... 301
மன்றம் .......................................... 143, 423
மனவு ....................................................... 132

**மா**

மா ............................................................ 497
மாடம் ...................................................... 322
மாதுளம் பசுங் காய் .................... 306–307
மான் ........................................................ 106
மான் (குதிரை) ................................... வெ. 1
மான் தோல் ............................................... 89

**மி**

மிதி உலை ............................................. 207
மிரியல் ....................................................... 78
மிளை .......................................... 126, 401

மின்னு ........ 484
மீ
மீளி ........ 75
மீன் ........ 318, 477
மீன் சூட்டு ........ 282

மு

முத்தம் ........ 335
முதியர் ........ 268
முந்நீர் ........ 441
முந்நீர் வண்ணன் ........ 30
முயல் ........ 115
முரசு ........ 33
முழவு ........ 47
முழுவலி மாக்கள் ........ 61
முள்ளி ........ 215
முற்றம் ........ 435
முறை வேண்டுநர் ........ 443
முன்றில் ........ 96, 152, 225
முனிவர் ........ 498

மூ

மூதூர் ........ 411
மோ
மோர் ........ 306, 160
யா
யாழ் ........ 182
யாளி ........ 258
யானை ........ 134, 352, 394, 436

வ

வட வளம் ........ 320
வடி (மா வடு) ........ 309
வண்டல் ........ 311
வண்டு ........ 481
வம்பலர் ........ 76, 365
வயமான் குருளை ........ 448–449
வயவர் ........ 101
வரகு ........ 193
வரைத் தேன் ........ 123
வரைப்பு ........ 405
வல்லோன் ........ 472
வலம்புரி ........ 35
வலிக் கூட்டு உணவு ........ 137
வலை ........ 113
வலைஞர் ........ 274
வள்ளம் ........ 339
வளர் பிறை ........ 412
வளை ........ 34, 304
வளை (சங்கு) ........ 488

வா

வாகைப் பூ ........ 109
வாட்குடி ........ 137
வாடா வள்ளி (வள்ளிக் கூத்து ........ 370
வாடு ஊன் ........ 1 0 0
வாழை ........ 3 5 9
வாள் ........ 71, 453, 471
வாளை ........ 287
வான் கலம் ........ 477
வானத்து வடவயின் விளங்கும் சிறு மீன் (அருந்ததி) ........ 302–303
வானம் ........ 24, 346, 409, 480, 483

வி

விசயம் ........ 261
விசும்பு ........ 1, 135
விடியல் ........ 155
விடை ........ 143
விண் ........ 369
வில் ........ 74, 82, 292
விழவு ........ 411
விளவு ........ 95
விறலியர் ........ 486
வினை உடம்படல் ........ 452

வீ

வீழ் இல் தாழை (தெங்கு) ........ 357

**வெ**

வெண்ணெய் ........................................ 306

வெண்ணெல் ........................................ 255

வெள்ளை (வெள்ளாடு) ........................ 1 5 3

வெறுக்கை ............................................ 434

வே

வேங்கை வீ ........................................... 194

வேட்டம் ................................................... 111

வேம்பு ....................................................... 59

வேயா மாடம் ......................................... 348

வேல் ............................................ 87, வெ. 1

வேலி .............................................. 126, 154

வேள் ........................................................ 75

வேள்வித் தூணம் ............................... 316

வேழம் .......................................... 259, 263

வேழம் காவலர் ......................................... 51

வேனில் ...................................................... 3

**வை**

வை (வைக்கோல்) ............... 191, 225, 239

# 5. [1]முல்லைப்பாட்டு

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்

1. பாடினார் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார். பாட்டுடைத் தலைவன் நெடுஞ்செழியன் என்பது சிலர் கருத்து. காலம். கி. பி. 90–130.

சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி நிழத்திய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப

மத்திகை வளைஇய மறந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து
மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு

வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

**நற்சொற்கேட்டல்**

முல்லைக்குரிய கார்காலம் நேர்ந்தது. போர்வயிற் பிரிந்த தலைவரின் பிரிவைப் பொறுக்கமாட்டாத இராசமாதேவி துயருற்றுத் துயில் கொள்ளப் பெறாளாயினாள். அவள் கண்கள் முத்துப்போற் கண்ணீரை உதிர்த்தன. அவள் தனது நெகிழ்ந்த கைவளைகளைத் திருத்தினாள்; அம்பு தைத்த மயில்போல நடுநடுங்கி அணிகலன்கள் நெகிழப்பெற்றாள். அதனைக் கண்டு வருந்திய முதுபெண்டு பல இனியமொழிகளைக் கூறினாள்; தலைவனது மானம் புகழ் முதலியவற்றையும், அரசியல் நடப்பதற்கு அவன் பிரிய வேண்டிய இன்றியமையாமையையும் எடுத்துக் காட்டினாள். தலைவிதனது ஆற்றாமை மிகுதியால் முதுபெண்டு கூறியவற்றைத் தெளியும் திறமை இல்லாளாயினாள். அஞ்ஞான்று அம்முதுபெண்டு இராசமாதேவியை நோக்கி, "படைத்தலைவர் ஊர்ப்புறத்துள்ள பாக்கத்தே நற்சொற்கேட்பாரைப் போக்கினார். அவர்கள் தாம் நாழியிற்கொண்டு சென்ற நெல்லையும் முல்லை மலரையும் தூவித் தெய்வத்தை வணங்கி நற்சொற் கேட்க நின்றார்கள். குளிரால் நடுங்கும் இடைச்சி தோளிற் கட்டின கையளாய்ப் போந்து, தாம்பிற் பிணிக்கப்பட்டு நிற்பனவும் முலையுண்ணாமையால் சுழன்று வருந்துகின்றவுமாகிய கன்று களை நோக்கி, 'உங்கள் தாய்மார் நிரம்பமேய்ந்து இப்பொழுதே வருவர்' என்றாள். அந்நற்சொல்லின் பலனாக நின்தலைவர்

பகவரைவென்று அவரிடத்திற் பெற்ற திறைப் பொருள்களுடன் மகிழ்ச்சி பெருக இப்பொழுதே வருவர் எனக் கூறினாள். அதனைச் செவிக் கொண்ட தலைவி தலைவர் இவ்வாறு பிரிந்தாலன்றி அரசியல் நிகழாதென மனதிற் கொள்வாளாயினள்.

**இராசமாதேவி அரசனின் வரவை எதிர்நோக்கிக் கிடத்தல்**

சக்கரத்தையும் வலம்புரிச்சங்கையும் தாங்கிய பெரிய கைகளையும், இலக்குமியைத் தாங்கும் மார்பினையுமுடைய திருமால் மாவலியிடம் குறள் வடிவிற் சென்று மூவடி மண்ணிரந்தார். அதனை அளிக்கவேண்டி மாவலி அங்கையில் நீர் பெய்த ஞான்று திருமால் நெடிய வடிவு கொண்டார். கட லிடத்து நீரைக்குடித்த முகில்கள் அந்நெடிய மாலைப்போல உயர்ந்து மலையில் தங்கி மாலைக் காலத்தில் மழையைப் பெய்தன. அரண்மனையிடத்துப் பள்ளியறையில் பொற்பாவை ஏந்தி நின்ற தகளியிலே விளக்கு நின்றெரிந்தது. ஏழுநிலை மாடத்தின் மூட்டுவாய்களி னின்றும் சொரிகின்ற நீர்த்தாரை யின் ஓசைகள் ஆரவாரித்தன. இவ்வாறு நிகழ்தலும் தலைவன் வருவேன் என்று கூறிச் சென்ற பருவகாலம் வந்ததாதலின் அவன் தவறாது வருவான் என்னும் எண்ணத்தோடு இராசமாதேவி படுக்கையில் கிடப்பாளாயினள். இஃது இவ்வாறாகப் பகை அரசன்மீது படை எடுத்துச் சென்ற தலைவனது நிலை மேல் வருமாறுள்ளது.

**பாசறை வகுத்தல்**

பகைமேற் சென்ற அரசனது படைவீரர் காட்டாறு சூழ்ந்த காட்டிடத்தே பிடவம் முதலிய புதர்களை வெட்டினார்கள்; பகைப் புலத்தே காவல் காத்து நின்ற வெட்டுவர் அரண்களை அழித்தார்கள்; அரணாக நாற்புறமும் முள் வேலி இட்டார்கள்; அதன் நடுவே பரந்த பாடி வீட்டை அமைத்தார்கள். அரசன் அப்பாசறையினிடத்தே, ஒருகையைப் படுக்கையின் மேல் வைத்தும் ஒரு கையை முடியுடன் சேர்த்தியும் இருந்து, யானையை எறிந்து பட்ட வீரரை நினைந்தும் அம்பு தைத்த வருத்தத்தால் செவி சாய்த்துப் புல்லுண்ணாமல் நிற்கும் குதிரைகளை நினைந்தும், இப்படை நொந்த அளவுக்கு நாளை எவ்வாறு பொருதும் என்று நினைந்தும் வருந்துவான். அப்பாசறையில் தங்கும் பல

மொழிகளைப் பேசும் படை வீரருக்கு நடுவில் ஓரிடத்தை அரசனுக்குக் கோயிலாக எல்லாரும் அமைத்தார்கள்; கால்களைக் கூடமாக நட்டார்கள்; கயிற்றை வளைத்துக் கட்டினார்கள்; வலிய விற்களை ஊன்றினார்கள். அவற்றின் மீது துணிகளைத் தூக்கினார்கள். அத்தோற்றம் முக்கோல் அந்தணன் முக்கோலில் தனது காவி உடையை இட்டுவைத்த தன்மையை ஒத்திருந்தது. பின்பு பூத்தொழிலைத் தலையிலுடைய எறிகோல்களை ஊன்றினார்கள்; பரிசைகளை நிரையாக வைத்தார்கள்; பல நிறமூட்டிய துணிகளைக் குத்துக் கால்களில் தைத்து அவற்றை வளைத்து வைத்தார்கள். இவ்வாறு அமைக்கப்பட்ட அரசனது கூடாரத்தின் வாயிலில் சட்டையிட்ட வலிய யவனர் புலியைச் சங்கலியிற் கட்டிவைத்த வடிவனை எழுதினர்.

### அரசனது இல்

அங்குக் காலத்தின் அளவை அளந்து சொல்லுவோர்அரசனை வணங்கி வாழ்த்தி நாழிகை வட்டிலிற் சென்ற நாழிகை இத்தனை எனக் கூறினர். அப்போது தூவெண்துகிலுடுத்தபெண்கள் [1]விளக்கைக் கொளுத்திக் காட்டினார்கள். அரசன் திரைச்சீலை தொங்க விடப்பட்ட உள்ளறையில் துயிலும்படி சென்றான்.

### பாசறைக் காட்சி

தெருவின் நாற்சந்தி தழைகளால் வேயப்பட்டிருந்தது. அங்குக் காவலாக நிறுத்தப்பட்ட யானை கரும்பையும் நெற் கதிரோடு கலந்து கட்டிய இலையையும் அதிமதுரத் தழையையும் உண்ணாது அவற்றால் தனது நெற்றியைத்துடைத்தும் கொம்பின் மீது இட்ட தனது நெற்றியிடத்தே அவற்றைக்கொண்டும் நின்றது; யானைப் பாகர் யானைப் பேச்சாகிய வட மொழியைச் சொல்லிக் கவர்உடைய பரிக்கோலால் கவளத்தை உண்ணும்படி குத்தினார்கள். சிற்றாட்கள் நெய் கொப்பளிக்கின்ற திரிக்குழாயில் நீண்ட திரியைக் கொண்டு ஒழுங்காயமைத்த விளக்குகளைக் கொளுத்தினார்கள். விளக்குகள் அவியுந்தோறும் தம் கையிடத்துள்ள பந்தத்தைக் கொளுத் தினார்கள்.

1. ஆலத்தி.

**அரசன் வெற்றி பெற்று மீளுமிடத்து வழியிற் காணும்காட்சி**

*தலைப்பாகையும் சட்டையும் தரித்து மெய்க்காப்பாளர் அரசனைக் காவலாகச் சூழ்ந்து திரிந்தனர். சட்டையிட்ட ஊமராகிய மிலேச்சர் பள்ளி கொள்ளுமிடத்தைச் சூழ்ந்து திரிந்தனர். இவ்வாறு மணியோசை அடங்கிய நடுச்சாமத்தும் மற்றையநாள் செய்யவிருக்கும் போரை நினைந்து அரசன் துயில் கொள்ளானாயினான். அடுத்தநாள் அவன் பகைவரைக்கொல்லக் கருதி வைத்த வாளைப் பிடித்து வெற்றியைப் பெற்றான்; பகை அரசர் விரும்பும் நிலங்களை வென்ற வெற்றியின் அடையாளமாக வெற்றிக்கொடியை உயர்த்தினான். அவன் மீண்டு வரும் காட்டு வழியிலே காயா கரிய பூக்களைப் பூத்தது. கொன்றை பொன்னிற மலர்களை மலர்ந்தது; வெண்காந்தள் உள்ளங்கைபோல் விரிந்தது. முறுகிய கொம்புடைய ஆண்மான் பெண்மானோடு துள்ளி விளையாடிற்று; திரண்ட தோன்றி இரத்தம்போற் பூத்தது. வெற்றிக் கறிகுறியாகிய கொம்பும் சங்கும் முழங்கின. நிரைத்த சேனைக்கும் குதிரைப் படைக்கும் முன் வந்த அரசனது தேரிற் பூட்டிய குதிரைகள் இராசமாதேவியின் செவி நிரம்பும்படி ஆரவாரித்தன.*[1]

---

1. இவ்வாறு தலைவி பிரிவாற்றியிருத்தல் கற்பின்பாற்படும். கற்பொழுக்கம் முல்லை எனவும் படும். இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்கு உரிப்பொருள்களாகும். போர் வயிற்பிரிந்த அரசன் வருகையை எதிர்பார்த்து இராசமாதேவி வருந்தியிருப்பதாக இப்பாடல் செய்யப்பட்டுள்ளமையின் இது முல்லைப்பாட்டு எனப்பெயர் பெற்றது.

   அது ஒழுக்கம் களவு, கற்பு என இருவகைப்படும். கற்பு என்பது தலைவன் தலைவியைப் பலரறிய மணந்து இல்லிருந்து நல்லறம் நடத்துதல். இவ்வாறு இல்லறம் நடத்தும்போது தலைவன் ஏதேனுமொரு காரணத்தின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து தூர தேசம் செல்வான். அப்பொழுது அவன் தான் வரும்காலம் இன்னதெனக் குறிப்பிட்டுச் சொல் வான். தலைவி தலைவன் வருந்துணையும் பிரிவாற்றி வருந்தியிருப்பாள். இப்பொருள் பற்றிப் புனையப்பட்ட பாடல்கள் முல்லை ஒழுக்கத்தின் பாற்படும். அகத்துறைப் பாடல் களில் தலைவன் தலைவியர் இயற்பெயர் கூறுதல் மரபன்றாதலின் இப்பாட்டில் தலைவன் பெயர் கூறப்படவில்லை.

   "மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்
   சுட்டி யொருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்" **(தொல்–அகத். 54)**

## தனிப் பாடல்கள்

வண்டு அடைந்த கண்ணி வளர் ஆய்ச்சி வாள் நெடுங் கண்
சென்று அடைந்த நோக்கம் இனிப் பெறுவது என்றுகொல்-
கன்று எடுத்து ஓச்சி, கனி விளவின் காய் உகுத்து,
குன்று எடுத்து நின்ற நிலை? 1

புனையும் பொலம் படைப் பொங்கு உளை மான் தின் தேர்
துனையும் துனைபடைத் துன்னார் முனையுள்,
அடல் முகந்த தானை அவர் வாராமுன்னம்,
கடல் முகந்து வந்தன்று, கார்! 2

● ● ●

## சிறப்புப் பெயர் முதலியவை


அ

அஞ்சனம் ................ 93
அதிரல் ................ 51
அயில் ................ 34
அரசு ................ 79
அருவி ................ 87

ஆ

ஆய்ச்சி ................ வெ. 1
ஆய்மகள் ................ 13

இ

இரலை ................ 99
இல் ................ 62
இழை ................ 84
இன் குளகு ................ 33

ஈ

ஈர் அறைப் பள்ளி ................ 64

உ

உலகம் ................ 1
உவலைக் கூரை ................ 29

எ

எஃகம் ................ 68
எழிலி ................ 5
எழினி ................ 64
எழு நிலை மாடம் ................ 86

க

கச்சு ................ 47
கடகம் ................ 76
கடல் ................ 4, வெ. 2
கண்ணி ................ 71, 78
கதிர் ................ 32
கயிறு வாங்கு இருக்கை ................ 40
கரும்பு ................ 32
கல் ................ 37
கல்லா இளைஞர் ................ 36
கவலை முற்றம் ................ 30
கவளம் ................ 36
கவை முட் கருவி ................ 35
கன்று ................ 12, வெ. 1

கா

காய் ................ 93
கார் ................ வெ. 2
காழ்க் கண்டம் ................ 44

கி

கிடுகு ................ 41

கு

குத்தி ................ 40
குந்தம் ................ 41
குருதி ................ 96
குறு நீர்க் கன்னல் ................ 58

கூ

கூடம் ................ 40

கை

கைஅமை விளக்கம் ................ 49

கொ

கொன்றை ................ 94

கோ

கோடல் ................ 95
கோவலர் ................ 15

செ

செந் நிலப் பெருவழி ................ 97

**சோ**

சோறு வாய்த்து ஒழிந்தோர் .................. 72

**த**

தலைவர் .................................................... 20

**தா**

தாம்பு .......................................................... 12

தானை ......................................... 90, வெ. 2

**தி**

திங்கள் .................................................. 100

திரி ............................................................ 48

திருமணி விளக்கம் ............................... 63

திறையர் .................................................... 19

**து**

துகில் ........................................................ 53

துன்னார் ............................................ வெ. 2

**தூ**

தூணி ....................................................... 39

**தெ**

தெவ்வர் ..................................................... 18

**தே**

தேர் ............................................ 103, வெ. 2

**தொ**

தொடி ....................................................... 45

**தோ**

தோன்றி .................................................. 96

**ந**

நல்லோர் வாய்ப்புகள் .............................. 18

நன் மொழி ................................................ 17

**நா**

நாழி ............................................................. 9

**நெ**

நெய் உமிழ் சுரையர் ............................... 48

நெல் ............................................................. 8

**நே**

நேமி ............................................................. 1

**ப**

பகழி .......................................................... 73

பகைவர் .................................................... 77

படம் .......................................................... 66

படிவப் பார்ப்பான் .................................... 37

பரி .......................................................... 102

**பா**

பாசறை ..................................................... 79

பாம்பு ....................................................... 70

பாவை விளக்கு ....................................... 85

**பி**

பிடவம் ..................................................... 25

பிடி ............................................................ 69

**பு**

புதல் .......................................................... 25

புரிசை ....................................................... 27

புலித் தொடர் ........................................... 62

**பெ**

பெரு–முது பெண்டிர் ............................... 11

பெரு மூதாளர் ......................................... 54

**பொ**

பொழுது அளந்து அறியும்
பொய்யா மாக்கள் ................................... 55

பொன் ...................................................... 94

**ம**

மஞ்ஞை .................................................... 84

மத்திகை .................................................. 59

**மா**

மா ................................................ 2, 74, 103

மாஅல் .......................................................... 3

மாலை .......................................................... 6

மான் ......................................................... 99

மான் (குதிரை) .................................. வெ. 2

**மி**

மிலேச்சர் ................................................. 66

**மு**

முக் கோல் ............ 38
முரசு ............ 79
முல்லை ............ 9
முனை ............ 19, வெ. 2

**மூ**

மூதூர் ............ 7

**மெ**

மெய்ப்பை ............ 60

**ய**

யவனர் ............ 61

**யா**

யாழ் இசை ............ 8
யாறு ............ 24
யானை ............ 31

**வ**

வடமொழி ............ 35
வண்டு ............ 8
வயிர் ............ 92
வரகு ............ 98
வலம்புரி ............ 2
வள்ளிஅம் காடு ............ 101
வளி ............ 52
வளை ............ 92
வளை (வளையல்) ............ 82

**வி**

விசயம் ............ 91
விரிச்சி ............ 11
வில் ............ 39, 42
விளவு ............ வெ. 1

**வே**

வேட்டுப் புழை அருப்பம் ............ 26
வேழம் ............ 69

**வை**

வையகம் ............ 57

# 6. [1]மதுரைக் காஞ்சி

ஓங்குதிரை வியன்பரப்பி
னொளிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கு முயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியானாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு
மிரவுச்செய்யும் வெண்டிங்களு
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
வோங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டா கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தா
னுயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரோடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக
பிணக்கோட்ட களிற்றுக்குழும்பி

1. இது தலை ஆலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடியது. காலம் கி. பி. 90–130

னிணம்வாய்ப்பெய்த பேய்மகளி
ரிணையொலியிமிழ் துணங்கைச்சீர்ப்
பிணையூப மெழுந்தாட
வஞ்சுவந்த போர்க்களத்தா
னாண்டலை யணங்கடுப்பின்
வயவேந்த ரொண்குருதி
சினத்தீயிற் பெயர்புபொங்கத்
தெறலருங் கடுந்துப்பின்
விறல்விளங்கிய விழுத்சூர்ப்பிற்
றொடித்தோட்கை துடுப்பாக
வாடுற்ற வூன்சோறு
நெறியறிந்த கடிவாலுவ
னடியொதுங்கிப் பிற்பெயராப்
படையோர்க்கு முருகயர
வமர்கடக்கும் வியன்றானைத்
தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந
விழுச்சூழிய விளங்கோடைய
கடுஞ்சினத்த கமழ்கடாஅத்
தளறுபட்ட நறுஞ்சென்னிய
வரைமருளு முயர்தோன்றல
வினைநவின்ற பேர்யானை
சினஞ்சிறந்து களனுழக்கவு
மாவெடுத்த மலிகுரூஉத்துக
ளகல்வானத்து வெயில்கரப்பவும்
வாம்பரிய கடுந்திண்டேர்
காற்றென்னன் னடிதுகொட்பவும்
வாண்மிகு மறமைந்தர்
தோண்முறையான் வீறுமுற்றவு
மிருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருதவரைச் செருவென்று
மிலங்கருவிய வரைநீந்திச்

சுரம்போழ்ந்த விகலாற்ற
லுயர்தோங்கிய விழுச்சிறப்பி
னிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோ னும்பன்
மரந்தின்னூஉ வரையுதிர்க்கு
நரையுருமி னேறனையை
யருங்குழுமிளைக் குண்டுகிடங்கி
னுயர்ந்தோங்கிய நிரைப்புதவி
னெடுமதி னிரைஞாயி
லம்புமி ழயிலருப்பந்
தண்டாது தலைச்சென்று
கொண்டுநீங்கிய விழுச்சிறப்பிற்
றென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்தொழுகிய
கொற்றவர்தங் கோனாகுவை
வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னியசைய முரசமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
நாடார நன்கிழிதரு
மாடியற் பெரநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லி
னூர்கொண்ட வுயர்கொற்றவ
நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கு மகலாம்பியிற்

கயனகைய வயனிறைக்கு
மென்றொடை வன்கிழாஅ
ரதரி கொள்பவர் பகடுபூண் டெண்மணி
யிரும்பு ளோப்பு மிசையே யென்று
மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்
பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப
ஒருசார், விழவுநின்ற வியலாங்கண்
முழவுத்தோண் முரட்பொருநர்க்
குருகெழு பெருஞ்சிறப்பி
னிருபெயர்ப் பேராயமொ
டிலங்கு மருப்பிற் களிறுகொடுத்தும்
பொலந்தாமரைப் பூச்சூட்டியு
நலஞ்சான்ற கலஞ்சிதறும்
பல்குட்டுவர் வெல்கோவே
கல்காயுங் கடுவேனிலொ
டிருவானம் பெயலொளிப்பினும்
வரும்வைகன் மீன்பிறழினும்
வெள்ளமா றாது விளையுள் பெருக
நெல்லி னோதை யரிநர் கம்பலை
புள்ளிமிழ்ந் தொலிக்கு மிசையே யென்றுஞ்
சலம்புகன்று சுறவுக்கலித்த
புலவுநீர் வியன்பௌவத்து
நிலவுக் கானன் முழவுந் தாழைக்
குளிர்ப்பொதும்பர் நளித்தூவ
னிரைதிமிழ் வெட்டுவர் கரைசேர் கம்பலை
யிருங்கழிச் செறுவின் வெள்ளுப்புப் பகர்நரொ
டொலியோவாக் கலியாணர்
முதுவெள்ளிலை மீக்கூறும்
வியன்மேவல் விழுச்செல்வத்
திருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரோடு
தொன்றுமொழிந்து தொழில்கேட்பக்

காலென்னக் கடிதுராஅய்
நாடுகெட வெரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட வமருழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேந்தே
நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்துமுதிர்ந்த விழுமுத்தி
னிலங்குவளை யிரஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந
செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்
றஞ்சுவரத் தட்கு மணங்குடைத் துப்பிற்
கோஒழூஉன்குறைக் கொழுவல்சிப்
புலவிற் பொலிகூவை
யொன்றுமொழி யொலியிருப்பிற்
றென்பரதவர் போரேறே
யரியவெல்லா மெளிதினிற்கொண்
டுரிய வெல்லா மோம்பாது வீசி
நனிபுகன் றுறைது மென்னா தேற்றெழுந்து
பனிவார் சிமையக் கானம் போகி
யகநாடு புக்கவ ரருப்பம் வௌவி
யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குருசி
லுறுசெறுநர் புலம்புக்கவர்
கடிகாவி னிலை தொலைச்சி
யிழிபறியாப் பெருந்தண்பணை
குரூஉக்கொடிய வெரிமேய
நாடெனும்பேர் காடாக
வாசேந்தவழி மாசேப்ப

லூரிருந்தவழி பாழாக
விலங்குவளை மடமங்கையர்
துணங்கையஞ்சீர்த் தழூஉமறப்ப
வவையிருந்த பெரும்பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட
வணங்குவழங்கு மகலாங்க
ணிலத்தாற்றுங் குழூஉப்புதவி
னரந்தைப் பெண்டி ரினைந்தன ரகவக்
கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்
கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியோடு கண்பமன் றூர்தர
நல்லேர் நடந்த நசைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவோடு கேழ லுகள
வாழா மையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎ
மெழாஅத்தோ ளிமிழ்முழக்கின்
மாஅத் தாள் உயர் மருப்பிற்
கடுஞ்சினத்த களிறுபரப்பி
விரிகடல் வியன்றானையோடு
முருகுறழப் பகைத்தலைச்சென்
றகல்விசும்பி னார்ப்பிமிழப்
பெயலுறழக் கணைசிதறிப்
பலபுரவி நீறுகைப்ப
வளைநரல வயிரார்ப்பப்
பீடழியக் கடந்தட்டவர்
நாடழிய வெயில்வெளவிச்
சுற்றமொடு தூவறுத்தலிற்
செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப
வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
யரசியல் பிழையா தறநெறி காட்டிப்

பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றங்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்க
முயர்நிலை யுலக மகிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
யீத லுள்ளமோ டிசைவேட் குவையே
யன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
கொன்னொன்று கிளக்குவ லடுபோ ரண்ணல்
கேட்டிசின் வாழி கெடுகநின் னவலங்
கெடாது நிலைஇயர்நின் சேண்விளங்கு நல்லிசை
தவாப்பெருக்கத் தறாயாண
ரழித்தானாக் கொழுந்திற்றி
யிழித்தானாப் பலசொன்றி
யுண்டானாக் கூர்நறவிற்
றின்றானா வினவைக
னிலனெடுக் கல்லா வொண்பல் வெறுக்கைப்
பயனற வறியா வளங்கெழு திருநகர்
நரம்பின் முரலு நயம்வரு முரற்சி
விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்
பாண ருவப்ப களிறுபல தரீஇக்
கலந்தோ ருவப்ப வெயிற்பல கடைஇ
மறங்கலங்கத் தலைச்சென்று
வாளுழந்ததன் றாள்வாழ்த்தி
நாளீண்டிய நல்லகவர்க்குத்
தேரோடு மாசிதறிச்

சூடுற்ற சுடர்ப்பூவின்
பாடுபுலர்ந்த நறுஞ்சாந்தின்
விழுமிய பெரியோர் சுற்ற மாகக்
கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு
பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறைப்
படுகண் முரசங் காலை யியம்ப
வெடிபடக் கடந்துவேண்டுபுலத் திறுத்த
பணைகெழு பெருந்திறற் பல்வேன் மன்னர்
கரைபொரு திரங்குங் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே யுரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே
அதனால், குணகடல் கொண்டு குடகன் முற்றி
யிரவு மெல்லையும் விளிவிட னறியா
தவலு மிசையு நீர்த்திரள் பீண்டிக்
கவலையங் குழும்பி னருவி யொலிப்பக்
கழைவளர் சாரற் களிற்றின நடுங்க
வரைமுத லிரங்கு மேறொடு வான்ஞெமிர்ந்து
சிதரற் பெரும்புயல் சிறத்தலிற் றங்காது
குணகடற் கிவர்தருங் குரூஉப்புன லுந்தி
நிவந்துசெ னீத்தங் குளங்கொளச் சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க்கழனி
யொளிறிலஞ்சி யடைநிவந்த
முட்டாள சுடர்த்தாமரை
கட்கமழு நறுநெய்தல்
வள்ளித ழவிழ்நீல
மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்
கம்புட் சேவ லின்றுயி லிரிய
வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழி லாட்டுக்

கரும்பி னெந்திரங் கட்பி னோதை
யள்ளற் றங்கிய பகடுறு விழுமங்
கள்ளார் களமர் பெயர்க்கு மார்ப்பே
யொலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞ ரரிபறை யின்குரற்
றளிமழை பொழியுந் தண்பரங் குன்றிற்
கலிகொள் சும்மை யொலிகொ ளாயந்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்துட னாடு மிசையே யனைத்து
மகலிரு வானத் திமிழ்ந்தினி திசைப்பக்
குரகுநரல மனைமரத்தான்
மீன்சீவும் பாண்சேரியொடு
மருதஞ் சான்ற தண்பணை சுற்றி யொருசார்ச்
சிறுதினை கொய்யாக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகி னிருங்குரல் புலர
வாழ்ந்த குழும்பிற் திரு மணி கிளர,
வெழுந்த கடற்றி னன்பொன் கொழிப்பப்
பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி
மடக்கட் பிணையோடு மறுகுவன வுகளச்
சுடர்ப்பூங் கொன்றை தாஅய நீழற்
பாஅ யன்ன பாறை யணிந்து
நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன வொள்வீ யுதிர்ந்து
சுரிமுகிழ் முசுண்டையொடு முல்லை தாஅய்
மணிமரு ணெய்த லுறழக் காமர்
துணிநீர் மெல்லவற் றொய்யிலோடு மலர
வல்லோன் றைஇய வெறிக்களங் கடுப்ப
முல்லை சான்ற புறவணிந் தொருசார்
நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கா லையவி
யையவன வெண்ணெலொ டரில்கொள்பு நீடி
யிஞ்சி மஞ்சட் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டித்
தினைவிளை சாரற் கிளிகடி பூசன்

மணிப்பூ வவரைக் குரூஉத்தளிர் மேயு
மாமா கடியுங் கானவர் பூசல்
சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்
கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர்
நறும்பூக் கொய்யும் பூச லிருங்கே
ழேறடு வயப்புலிப் பூசலொ டனைத்து
மிலங்குவெள் ளருவியோடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்
தருங்கடி மாமலை தழீஇ யொருசா
ரிருவெதிர்ப் பைந்தூறு கூரெரி நைப்ப
நிழத்த யானை மேய்புலம் படரக்
கலித்த வியவ ரியந்தொட் டன்ன
கண்விடு புடையூஉத் தட்டை கவினழிந்
தருவி யான்ற வணியின் மாமலை
வைகண் டன்ன புன்முளி யங்காட்டுக்
கமஞ்சூழ் கோடை விடரக முகந்து
காலுறு கடலி னொலிக்குஞ் சும்மை
யிலை வேய் குரம்பை யுழையதட் பள்ளி
யுவலைக் கண்ணி வன்சொ லிளைஞர்
சிலையுடக் கையர் கவலை காப்ப
நிழலுரு விழந்த வேனிற்குன் றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்
முழங்குகட றந்த விளங்குகதிர் முத்த
மரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூல
மிருகழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்த நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்து புரவியொ டனைத்தும்
வைக றோறும் வழிவழிச் சிறப்ப

நெய்தல் சான்ற வளம்பல பயின்றாங்
கைம்பாற் றிணையுங் கவினி யமைவர
முழுவிமிழு மகலாங்கண்
விழவுநின்ற வியன்மறுகிற்
றுணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி
யின்கலி யாணர்க் குழூஉப்பல பயின்றாங்குப்
பாடல் சான்ற நன்னாட்டு நடுவட்
கலைதாய வுயர்சிமையத்து
மயிலகவு மலிபொங்கர்
மந்தி யாட மாவிசும் புகந்து
முழங்கால் பொருத மரம்பயில் காவி
னியங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணற்
கான்பொழி றழீஇய வடைகரை தோறுந்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னொழுகும் விரிநீர் நல்வர
லவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
யழுந்துபட் டிருந்த பெரும்பா ணிருக்கையு
நிலனும் வளனுங் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வே
ளழும்பி லன்ன நாடிழுந் தனருங்
கொழும்பல் பதிய குடியிழந் தனருந்
தொன்றுகறுத் துறையுந் துப்புத்தர வந்த
வண்ணல் யானை யடுபோர் வேந்த
ரின்னிசை முரச மிடைப்புலத் தொழியப்
பன்மா றோட்டிப் பெயர்புறம் பெற்று
மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசைத்
தொல்வலி நிலைஇய வணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையி னிவந்த மாடமொடு
வையை யன்ன வழக்குடை வாயில்
வகைபெற வெழுந்து வான மூழ்கிச்

சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
பல்வேறு குழாஅத் திசையெழுந் தொலிப்ப
மகா லெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
கயங்குடைந் தன்ன வியந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடுங் கலிகொள் சும்மை
யோவுக்கண் டன்ன விருபெரு நியமத்துச்
சாறயர்ந் தெடுத்த வுருவப் பல்கொடி
வேறுபல் பெயர வாரெயில் கொளக்கொள
நாடோ றெடுத்த நலம்பெறு புனைகொடி
நீரொலித் தன்ன நிலவுவேற் றானையொடு
புலவுப்படக் கொன்று மிடைதோ லோட்டிப்
புகழ்செய் தெடுத்த விறல்சா னன்கொடி
கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்
பெருவரை மருங்கி னருவியி னுடங்கப்
பனிமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயிறரீஇ யிதைபுடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல
விருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக்
கந்துநீத் துழிதருங் கடாஅ யானையு
மங்கண்மால் விசும்பு புதைய வளிபோழ்ந்
தொண்கதிர் ஞாயிற் றூறளவாத் திரிதருஞ்
செங்கா லன்னத்துச் சேவ லன்ன
குரூஉமயிர்ப் புரவி யுராலிற் பரிநிமிர்ந்து
காலெனக் கடுக்குங் கவின்பெறு தேருங்
கொண்ட கோலன் கொள்கை நவிற்றலி
னடிபட மண்டிலத் தாதி போகிய
கொடிபடு சுவல விடுமயிர்ப் புரவியும்

வேழத் தன்ன வெருவெரு செலவிற்
கள்ளார் களம ரிருஞ்செரு மயக்கமு
மரியவும் பெரியவும் வருவன பெயர்தலிற்
றீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர்
பூந்தலை முழவி னோன்றலை கடுப்பப்
பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்
தகைசெய் தீஞ்சேற் றின்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி யிலையினர் கோடுசுடு நூற்றின
ரிருதலை வந்த பகைமுனை கடுப்ப
வின்னுயிரஞ்சி யின்னா வெய்துயிர்த்
தேங்குவன ரிருந்தவை நீங்கிய பின்றைப்
பல்வேறு பண்ணியந் தழீஇத்திரி விலைஞர்
மலைபுரை மாடத்துக் கொழுநிழ லிருத்தர
விருங்கடல் வான்கோடு புரைய வாருற்றுப்
பெரும்பின் னிட்ட வானரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன
செய்யர் செயிர்த்த நோக்கினர் மடக்க
ணைஇய கலுழு மாமையர் வையெயிற்று
வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட்
சோர்ந்துகு வன்ன வயக்குறு வந்திகைத்
தொய்யில் பொறித்த சுணங்கெதி ரிளமுலை
மையுங் கன்ன மொய்யிருங் கூந்தன்
மயிலிய லோரு மடமொழி யோருங்
கைஇ மெல்லிதி னொதுங்கிக் கையெறிந்து
கல்லா மாந்தரோடு நகுவனர் திளைப்பப்
புடையமை பொலிந்த வகையமை செப்பிற்
காம ருருவிற் றாம்வேண்டு பண்ணியங்
கமழ்நறும் பூவோடு மனைமனை மறுக
மழைகொளக் குறையாது புனல்புக மிகாது

கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக்கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட வெழுநா ளந்தி
யாடுதுவன்று விழவி னாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட
னாளங் காடி நனந்தலைக் கம்பலை
வெயிற்கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச்
செக்க ரன்ன சிவந்துநுணங் குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்
பொன்புனை வாளொடு பொலியக் கட்டித்
திண்டோப் பிரம்பிற் புரளுந் தானைக்
கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி
மொய்ப்பிறந்து திரிதரு மொருபெருந் தெரியன்
மணிதொடர்ந் தன்ன வொண்பூங் கோதை
யணிகிளர் மார்பி னாரமொ டளைஇக்
காலியக் கன்ன கதழ்பரி கடைஇக்
காலோர் காப்பக் காலெனக் கழியும்
வான வண்கை வளங்கெழு செல்வர்
நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு
தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற்
றாவற விளங்கிய வாய்பொ னவிரிழை
யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்
மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ
வொண்குழை திகழு மொளிகெழு திருமுகந்
திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம்,
தெண்கடற் றிரையி னசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத் தரமியந் தோறு
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய
நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து

நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமா
ரந்தி விழவிற் றூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியுஞ்
சிறந்த வேதம் விளங்கப்பாடி
விழுச்சீ ரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
யுயர்நிலை யுலக மிவணின் றெய்து
மறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற்
பெரியோர் மேஎ யினிதி னுறையுங்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும்
வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வருஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையுங்
குன்றுபல குழீஇப் பொலிவன தோன்ற
வச்சமு மவலமு மார்வமு நீக்கிச்
செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்

சிறந்த கொள்கை யறங்கூ றவையமு
நறஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர்துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி
யன்பு மறனு மொழியாது காத்துப்
பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்களு
மறநெறி பிழையா தாற்றி னொழுகிக்
குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்
பல்வேறு பண்டமொ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரு
மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவுங்
கோடுபோழ் கடைநருந் திருமணி குயினருஞ்
சூடுறு நன்பொன் சுடரிழை புனைநரும்
பொன்னுரை காண்மருங் கலிங்கம் பகர்நருஞ்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
பூவும் பிகையு மாயு மாக்களு
மெவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடித்
தெண்டிரை யவிரறல் கடுப்ப வொண்பல்
குறியவு நெடியவு மடிதரூஉ விரித்துச்
சிறியரும் பெரியருங் கம்மியர் குழீஇ
நால்வேறு தெருவினுங் காலுற நிற்றரக்
கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
தண்கட னாட னொண்பூங் கோதை

பெருநா ளிருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் பம்பலை கடுப்பப் பலவுடன்
சேறு நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனுங்
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடகு
மமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
புகழ்படப் பண்ணிய பேரூன் சோறுங்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவு
மின்சோறு தருநர் பல்வயி னுகர
வாலிதை யெடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்ட மிழிதரும் பட்டினத்
தொல்லெ னிமிழிசை மானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத்திரை யோத
மிருங்கழி மருவிப் பாயப் பெரிதெழுந்
துருகெழு பானாள் வருவன பெயர்தலிற்
பல்வேறு புள்ளி னிசையெழுந் தற்றே
யல்லங் காடி யழிதரு கம்பலை
யொண்சுட ருருப்பொளி மழுங்கச் சினந்தணிந்து
சென்ற ஞாயிறு நன்பகற் கொண்டு
குடமுதற் குன்றஞ் சேரக் குணமுத
னாண்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
பகலுரு வுற்ற விரவுவர நயந்தோர்
காத லின்றுணை புணர்மா ராயிதழ்த்
தண்ணறுங் கழுநீர் துணைப்ப விழைபுனையூஉ
நன்னெடுங் கூந்த னறுவிரை குடைய
நரந்த மரைப்ப நறுஞ்சாந்து மறுக
மென்னூற் கலிங்கங் கமழ்புகை மடுப்பப்
பெண்மகிழ் வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கங் கொளீஇ நெடுநக
ரெல்லை யெல்ல நோயொடு புகுந்து

கல்லென் மாலை நீங்க நாணுக்கொள
வேழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
தாழ்பயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து
வீழ்துணை தழீஇ வியல்விசும்பு கமழ
நீர்திரண் டன்ன கோதை பிறக்கிட்
டாய்கோ லவிர்தொடி விளங்க வீசிப்
போதவிழ் புதுமலர் தெருவுடன் கமழ
மேதகு தகைய மிகுநல மெய்திப்
பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்துமோந் தன்ன சிறந்துகமழ் நாற்றத்துக்
கொண்டன் மலர்ப்புதன் மானப்பூ வேய்ந்து
நுண்பூ ணாகம் வடுக்கொள முயங்கி
மாயப் பொய்பல கூட்டிக் கவவுக்கரந்து
சேயரு நணியரு நலனயந்து வந்த
விளம்பல் செல்வர் வளந்தய வாங்கி
நுண்டா துண்டு வறும்பூத் துறக்கு
மென்சிறை வண்டின மானப் புணர்ந்தோர்
நெஞ்சே மாப்ப வின்றுயி றுறந்து
பழந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்
கொழுங்குடிச் செல்வரும் பிறரு மேஎய
மணம்புணர்ந் தோங்கிய வணங்குடை நல்லி
லாய்பொன் னவிர்தொடிப் பாசிழைமகளி
ரொண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர்
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றிறளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி
மணங்கமழ் மனைதொறும் பொய்த லயரக்
கணங்கொ ளவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னாட்

கோணந் தின்ற வடுவாழ் முகத்த
சாணந் தின்ற சமத்தாங்கு தடக்கை
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா துற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்
கடுங்களி றோட்டலிந் காணுந ரிட்ட
நெடுங்கரைக் காழக நிலம்பர லுருப்பக்
கடுங்கட் டேறன் மகிழ்சிறந்து திரிதரக்
கணவ ருவப்பப் புதல்வர்ப் பயந்து
பணைத்தேந் திளமுலை யமுத மூறப்
புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு
வளமனை மகளிர் குளநீ ரயரத்
திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
னொண்சுடர் விளக்க முந்துற மடையோடு
நன்மா மயிலின் மென்மெல வியலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப வொருசா
ரருங்கடி வேலன் முருகொடு வளைஇ
யரிக்கூ டின்னயங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நேடுவேட் பேணித் தழூஉப்பிணையூஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறு
முரையும் பாட்டு மாட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு
முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிந் தடங்கக் கார்சாய்த்து
நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமத
ரொள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை

யயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வகையமை மோதகந்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னாடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடுப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப
விரும்பிடி மேஎந்தோ லன்ன விருள்சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்விளை நுணங்கற
னிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக முளியர் கலனசைஇக் கொட்குங்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கைய
ரறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
யூர்காப் பாள ரூக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமு
மசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலு
மச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்டகமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றாங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்

பணைநிலைப் புரவி புல்லுணாத் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
வொண்பொ னவிரிழை தெழிப்ப வியலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
வுண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்கு குர றோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
விமிழ்முர சிரங்க வேறுமாறு சிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
யானையங் குருகின் சேவலொடு காம
ரன்னங் கரைய வணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிப்
கூட்டுறை வயமாப் புலியோடு குழும
வான நீங்கிய நினிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலர்ந்தனர் பரிந்த
பரூஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுட நெருப்பி னிலமுக் கென்ன
வம்மென் குரும்பைக் காண்படுபு பிறவுந்
தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலோடு நன்கலஞ் சீப்ப
விரவுத்தலைப் பெயரு மேம வைகறை
மைபடு பெருந்தோண் மவழ ரோட்டி
யிடைப்புலத் தொழிந்த வேந்துகோட் டியானை
பகைப்புலங் கவர்ந்த பாய்பரிப் புரவி
வேல்கோ லாக வாள்செல நூறிக்
காய்சின முன்பிற் கடுங்கட் கூளிய
ரூர்சுடு விளக்கிற் றந்த வாயமு

நாடுடை நல்லெயி லணங்குடைத் தோட்டி
நாடொறும் விளங்கக் கைதொழூஉப் பழிச்சி
நாடர வந்த விழுக்கல மனைத்துங்
கங்கையும் பேரியாறு கடற்படர்ந் தாஅங்
களந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப்புக ழெய்திய பெரும்பெயர் மதுரைச்
சினைதலை மணந்த சுரும்படு செந்தீ
யொண்பூம் பிண்டி யவிர்ந்த காவிற்
சுடர்பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்
றிலங்குகதி ரிளவெயிற் றோன்றி யன்ன
தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப மேதகப் பொலிந்து
மயிலோ ரன்ன சாயன் மாவின்
தளிரே ரன்ன மேனித் தளிர்ப்புறத்
தீர்க்கி னரும்பிய திதலையர் கூரெயிற்
றொண்குழை புணரிய வண்டாழ் காதிற்
கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாதுபடு பெரும்போது புரையும் வாண்முகத்
தாய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து
கோதையிற் பொலிந்த சேக்கைத் துஞ்சித்
திருந்துதுயி லெடுப்ப வினிதி னெழுந்து
திண்கா ழார நீவிக் கதிர்விடு
மொண்கா ழாரங் கவைஇய மார்பின்
வரிக்கடைப் பிரச மூசுவன மொய்ப்ப
வெருத்தந் தாழ்ந்த விரவுப்பூந் தெரியற்
பொலங்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்
வலிகெழு தடக்கைத் தொடியொட சுடர்வரச்
சோறாமை வுற்ற நீருடைக் கலிங்க
முடையணி பொலியக் குறைவின்று கவைஇ
வல்லோன் றைஇய வரிப்புனை பாவை
முருகியன் றன்ன வுருவினை யாகி
வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்

தொன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்
வாள்வலம் புணர்ந்தநின் றான்வலம் வாழ்த்த
வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின்
மாதாங் கெறுழ்த்தோண் மறவர்த் தம்மின்
கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கி
னல்லெயிலுழந்த செல்வர்த்தம்மின்
கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரச மோவில கறங்க
வெரிநிமிர்த் தன்ன தானை நாப்பட்
பெருநல் யானை போர்க்களத் தொழிய
விழுமிய விழ்ந்த குரிசிலர்த் தம்மின்
புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை
நீர்யா ரென்னாது முறைகரதுபு சூட்டிக்
காழ்மண் டெஃகமொடு கணையலைக் கலங்கிப்
பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து
வானத் தன்ன வறநகர் பொற்ப
நோன்குறட் டன்ன வூன்சாய் மார்பி
னுயர்ந்த வுதவி யூக்கலர்த் தம்மி
னிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியற்
பெருஞ்செ யாடவர்த் தம்மின் பிறரும்
யாவரும் வருக வேனோருந் தம்மென
வரையா வாயிற் செறாஅ திருந்து
பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிர் வருகென
விருங்கிளை புரக்கு மிரவலர்க் கெல்லாங்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்
களந்தோறும் கள்ளரிப்ப
மரந்தோறு மைவீழ்ப்ப
நிணவூன்சுட் டுருக்கமைய
நெய்கனிந்து வறையார்ப்பக்
குரூஉக்குய்ப்புகை மழைமங்குலிற்
பரந்துதோன்றா வியனகராற்
பல்சாலை முதுகுடுமியி

னல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகர்சால் சிறப்பி
னிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி
யரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீ னடவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் றலைவ னாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோச
ரியனெறி மரபினின் வாய்மொழி கேட்பப்
பொலம்பூ ணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பியற் குறுநில மன்ன
ரவரும் பிறருந் துவன்றிப்
பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.

**அரசன் நல்லாட்சியில் நிகழ்வன**

*உலகம் பெரிய திரைகள் வீசுகின்ற கடலை எல்லையாக வுடையது. அது தேன்கூடு தூங்கும் உச்சியனவாகிய மலைகளை யுடையது. திசைகள் குளிரவும், மரங்களும் பல்லுயிரும் தழைக்கவும் வானம் பொய்யாது பெய்தது. ஞாயிறும் திங்களும் களங்கமின்றி விளங்கின. விண்மீன்கள் செல்லும் முறைமையிற் சென்றன. மக்கள் பசியும் பிணியுமின்றி வாழ்ந்தனர். அரசன் உலகத்தைக் காத்தலால் திக்கு யானைகள் வருத்தந் தீர்ந்தன. இவ்வகை உலகைப் பொய்மொழியாத அமைச்சருடன் பல ஊழிகளிலும் தமது புகழ் நிலைக்கும்படி ஆண்ட உயர்ந்த அரசர் மரபில்*

உதித்தவனே! அச்சந்தரும் போர்க்களத்தே குறைத்தலைப் பிணங்கள் எழுந்து தாளத்துக்கு ஆடும்படி, கொம்புகளுடைய யானையின் பிணந்தின்ற பேய்மகள் ஆரவாரம் பொருந்திய துணங்கைக் கூத்தாடுவாள்.

## இராவணனை அகத்தியர் தெற்கே இயங்காது தவிர்த்தது

சோறடுகின்ற பேய், வீரரின் தலையாகிய அடுப்பில் அரசருடைய இரத்தமாகிய உலைசினமாகியதீயினாலே கொதித்துப் பொங்குகையால் வீர வளையணிந்த தோளுடைய கைகளை அகப்பையாகக் கொண்டு துழாவிச் சமைத்த ஊன்சோற்றைப் பிறங்கிடாத வீரர்க்கு வேள்வி செய்யும். இவ் வகைத்தாகிய போரை வெல்லும் படையுடைய இராவணன் தமிழ் நாட்டை ஆளாதபடி போக்கின பொதியின் மலையில் இருக்கும் அகத்தியனுக்குப் பின் சான்றோனாயிருக்கும் சிறப்புடையவனே!

## வடிம்பலலம்ப நின்ற பாண்டியன்

முகபடாத்தையும் நெற்றிப்பட்டத்தையும் கோபத்தையும், மதத்தையு முடைய மலைபோலுயர்ந்த போர்க்களிறு கோபித்து வீரரைக் கொன்று திரிந்தது; பகைவர்மேற் செல்கின்ற குதிரைகளின் வேகத்தால் எழுகின்ற புழுதி ஞாயிற்றை மறைத்தது; குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள் காற்றைப் போல் விரைந்துசென்றன; வாள்வீரர் வாளினால் விரைந்து வெட்டினர். இவ்வாறு நடக்கின்ற போரில் சேர சோழர்களாகிய இருபெருவேந்தரோடு குறுநில மன்னரும் இளைக்கும்படி பொருது வென்றதோ டமையாது குறிஞ்சிநில மன்னரையும் வென்று பகைவர் நிலங்களைக் கைக் கொண்டு பொன் னாரத்தை மார்பில் அணிந்த வடிம்பலம்பநின்ற பாண்டியன் மரபில் வந்த வேந்தே! பகைவர் கிட்டுதற்கரிய காவற்காட்டையும் உயர்ந்த கோபுர வாயில் களையும் நீண்ட மதிலையும் நிரைத்த[1] சூட்டினையுமுடைய அம்புகள் உமிழும் அரணையும் மதியாது சென்று பகைவர் நிலங்களைக் கொண்டவனே!

கடலிடத்தே வேகமாக அடிக்கின்ற காற்றால் வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படி பாய் விரித்துச் சென்று

1. அம்பு எய்து மறைந்திருத்தற்குரிய இடம்.

செல்வ மிகுதற்குக் காரணமாகிய சரக்குகளை இறக்கும்படி கரையைச் சேர்ந்து கருமேகஞ் சூழ்ந்த மலைகள் போல மரக் கலங்கள் சூழ்ந்து நிற்கும் கடலையும் அகழியையு முடைய சாலியூருக்குத் தலைவனே!

வயலிடத்துள்ள பயிர்கள் தழைக்கும்படி நீர்நிறைந்த குளங்களில் துலாக்கோலிற் கட்டி இறைக்கும் பன்றிப் பத்தல் என்னும் இறை கூடையின் ஓசை ஒருபால் எழும்; ஒருபால் எருதுகளிற் கட்டப் பட்ட மணி ஓசை ஒலிக்கும்; ஒருபால் பயிர்களிடத்தே விழும் கிளிகளை ஓட்டுவோர் ஓசை எழும்.

**குட்ட நாட்டுச் சிறப்பு**

இவற்றோடு நீல மலருடைய கழிமுள்ளிகள் நிற்கும் மணற் குன்றுகளுடைய கடற்கரையில் நின்று பரதவர் மகளிர் ஆடும் குரவை ஆரவாரமும் சேர்ந்து ஒலிக்கும். ஊர்களின் வெவ்வேறிடங் களில் விழாக் கொண்டாடும் ஓசைகளும் ஒலிக்கும். இவ்வாறு செல்வமிகுந்த ஊர்களி லிருந்து கிணைப் பொருநருக்குக் கன்றுடன் பிடிகளையும் கொம்புள்ள களிறுகளையும் கொடுத்துப் பொற்றாமரைப் பூவைச் சூட்டி நல்ல அணிகலன் களையும் கொடுக்கும் குட்ட நாட்டாரை வென்ற வேந்தே!

நெடுஞ்செழியன் குறுநில மன்னரையும் சேர சோழரையும் வென்றது

இவ்வுலகில் தொழில்களுள் மேலாகச் சொல்லப்படும் உழவு வாணிகம் என்னும் இரண்டால் பெறப்பட்ட பெரிய செல்வத்தால் புகழ்நிறைந்த குடிகள் உனது நாட்டில் வாழ்வர். முதுவெள்ளிலை என்னும் குறுநில மன்னனது நாடு செல்வம் மிகுந்தது. வேனிலால் மேகம் வறப்பினும், தோன்றவேண்டிய காலத்தே தோன்றும் வெள்ளி தெற்கே எழினும் ஆற்று வெள்ளம் வந்து பெருகுதலால் அந்நாட்டில் விளைவுமிகும்; முற்றி விளைந்த நெற்கதிர்கள் காற்றிலசைந்து ஒலிக்கும்; அவற்றை அறுப்போர் ஆரவாரிப்பர். அவ்விடத்தே தங்கிப் பறவைகள் ஓசை செய்யும், சுறாக்கள் திரிகின்ற கடலில் வெண்மணல் பரந்த கரையில் குடமுழாப் போன்ற காய்களைத் தாழைகள் தாங்கி நிற்கும். தாழைகளை

வேலியாகவுடைய குளிர்ந்த இளமரக்காவில் வந்து வீசுகின்ற நீர்த் துவலையின் ஓசையும், படகில் மீன் பிடிக்கச் சென்றோர் வந்து இறங்கும் ஆரவாரமும், கரியபெரிய கழியிடத்துள்ள உப்புப் பாத்திகளில் வெள்ளிய உப்பை விற்கும் அளவர் ஒலியும், சிறுகுடியாய்ப் பெரிய தொழில்களைச் செய்வோரின் ஆரவாரமும் கலந்தொலிக்கும். இவ்வியல்புடைய நாடுகளையுடைய குறுநில மன்னரும், நானிலத்தோரும் ஏவல் கேட்கும்படி விரைந்து சென்றாய்; சென்று தீக் கொளுவித் தலையாலங் கானம் என்னும் ஊரிற் றங்கிப் பெருநிலமன்ன ரிருவரும் குறுநில மன்னர் ஐவரும் படும்படி போர்வென்று அவர் முரசைக் கொண்டு கள வேள்வி வேட்டாய். இவ்வாறு புரிந்தவலிய புயங்களை யுடையவனே!

நன்மக்களிடையே தலைமையும், சங்கும் முத்துமுடைய சங்கு குளிப்பார் சேரியும், கள்ளை உண்ணும் குடிகளுடைய ஊர்களுமுடைய கொற்கையிலுள்ளோர் விரும்பும் பொருநனே!

**போரில் பாழடைந்த பகைவர் நாடு**

நீ நின் ஊரிடத்தே இருத்தலை விரும்பாது பகைவர் மேற் சென்று பொருதலை மேற்கொள்வை; யானைகளைப் பரப்பிப் புறங்கொடுத்தார் மேற் செல்லாத படையோடு முருகன் பகைமேற் செல்வதுபோலத் தடையறப் பகைவரிடத்திற் செல்லுவை; சென்று நாவலந் தீவிலுள்ள சோழ மண்டலம், தொண்டை மண்டலம் என்னும் மண்டலங்களை அடிப்படுத்திப் பகைவர் நின் ஏவல் கேட்கும்படி ஒழுகுவை; நின்னோடு நட்புக் கொண்டவர் குடியை உயர்த்துவை. அம்முறையினால் நின் குலத்துப் பெரியோர் ஒழுகிய அரசமுறை இதுவென்று அவர்க்கு விளக்குவை. பின்னர் அம்மண்டலங்களைச் சூழவிருக்கும் குறுநில மன்னர் அரண் களிலுள்ளவற்றை எளிதிற் கொண்டு அவற்றை எல்லாம் நினக்கெனப் பாதுகாவாது ஊரிடத்திருந்து பிறர்க்குக் கொடுப்பை. பனி ஒழுகும் மலைகளுள்ள காடுகளைக் கடந்து பகைவரின் உள்நாடுகளிலே புகுந்து அவர் அரண்மனைக் கைக்கொள்வை. தொன்றுதொட்டு வரும் பகைவர் நின் ஏவல் கேட்டு ஒழுகாமையால் அவர் நிலத்தை அடைந்து, மரங்களைச் சுட்டு மலைகளை நீறாக்கும் இடிபோன்றாய். அரசர் படை எடுக்கும் முறைமையில் எழுந்த

நின்படையின் ஆரவாரம் விண்ணில் ஒலித்தது. குதிரைகள் செல்லும் வேகத்தில் தூசி எழுந்தது; சங்கும் கொம்பும் ஆர்த்தன; வீரர் மழை போல் அம்புகளைத் தூவினர்; காவற் காட்டை வெட்டி மதில்களைக் கைக்கொண்டு சுற்றத்தாரோடு கூடிய பகைவரின் வலியைத் தொலைத்தனர். மருத மரங்களை நெருப்பு உண்டது. நாடென்னும் பெயர் பெற்ற இடம் காடென்னும் பெயர் பெற்றது. பசுத்திரள் தங்குமிடம் புலி தங்குமிடமாயிற்று; ஊராயிருந்த இடங்கள் பாழாய்க் கிடந்தன. வளையணிந்த கையும் அழகுமுடைய மகளிர் துணங்கைக் கூத்தையும் தாள அறுதியுடைய குரவைக் கூத்தையும் மறந்தனர். சான்றோர் இருந்த அம்பலங்களில் இரட்டை அடிகளையும் அச்சந்தரும் பார்வையினையுமுடைய பேய்மகளிர் உலாவி ஆடினர். இல்லுறை தெய்வங்கள் உலாவும் அகன்ற ஊரிடத்து மக்களை உள்ளேவிடும் வாயில் காப்போர் நின்ற வாயில்களில் மன வருத்தமுடைய பெண்கள் இருந்து வருந்தி அழுதனர். பசியால் உலர்ந்த குடிகளுக்குப் பாதுகாவலாக அயல் நாடுகளிலுள்ள சுற்றத்தார் வந்து சேர்ந்தனர். பெரிய மாளிகைகளிலே வெந்து வீழ்ந்த கரிந்த குதிரிலே சூட்டினையுடைய கூகைச் சேவல் பேட்டுடனிருந்து குழறிற்று. செங்கழுநீர் நெருங்கிவளரும் இடமகன்ற பொய்கையிடத்து யானை நின்றால் மறையும் வாட்கோரையுடன் சண்பகக் கோரையும் வளர்ந்தன. எருதுகள் உழுத விளைகின்ற வயல்களில் பெண்பன்றிகளோடு ஆண்பன்றிகள் ஓடித் திரிந்தன. நின் ஏவல் கேளாமையால் பகைவரது நாடுகள் இவ்வாறு கெட்டுப் பாழாயின. அந் நாடுகளை ஆளவேண்டுமாதலின் அங்குப் பல ஆண்டுகள் தங்கியிருப்பை; நீ அங்குத் தங்குதலால் அந்நாடுகள் முன்னிலுமதிகம் சிறப்படைதற்குக் காரணமாயுள்ள வெல்லும் போரினையுடைய தலைவனே! தென்திசைக்குமரி வடதிசை இமயம், கிழக்கும் மேற்கும் கடல் ஆகிய எல்லைகளுக்குட்பட்ட நாட்டிலுள்ளார் எல்லாரும் நின் ஏவல் கேட்கும்படி வெற்றிமிகுந்த தன்மையுடையை ஒரு பொய் சொல்லித் தேவருலகை அமுதத்தோடு பெறலாமாயினும் அதனைவிரும்பாது மெய்யுடன் நட்புச் செய்தலுடையை. இவ்வுலகிலுள்ள எல்லாருடனும் தேவர்களும் பகைவர் களாய்ப் படை எடுத்துவரினும் பகைவருக்கஞ்சிப்

பணியாய். தென்றிசைக் கண் மலைகள் நிறையும்படி வாணன் என்னும் அசுரன் வைத்த பொருட்டிரள் கிடைப்பதாயினும் பிறர் கூறும் பழி வருமென்பதால் அதனை விரும்பாய்; பிறர்க்குக் கொடுக்கும் புகழை விரும்புவை. புகழுடையவனே! எல்லாராலும் தொழப்படும் பிறை நாள்தோறும் வளர்தல் போல உனது வெற்றித் திருவினால் உன் கால் வழியில் வருவோரின் வெற்றியும் தலைமுறை தலைமுறையாக வளர்வதாக. பகைவரது ஆக்கம் தேய்பிறைத் திங்கள் போல நாடோறும் தேய்வதாக. சேய்மைக் கண் சென்று விளங்கும் புகழ் ஒரு போதும் கெடாது நிலை பெறுவதாக.

திருவழுதி நாடென்னுஞ் சிறப்புப் பெயர் பெற்ற பாண்டிய மண்டலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெரியோரால் வரையறுக்கப்பட்ட ஐவகை நிலங்களும் பொருந்தி இனிது விளங்கும்.

**மருத நிலங்கள்**

கீழ்த்திசைக் கடலில் நீரையுண்ட மேகம் மேற்றிசைக் கடற்கரையிலுள்ள மலையிற்றங்கி மருதநிலத்தே மழையைப் பொழியும். அதனால் எழுந்த வெள்ளம் கவலைக் கிழங்கு அகழ்ந்த குழிகளில் பாய்ந்து ஓசை செய்யும். மலையிடத்துள்ள யானைக் கூட்டங்கள் அஞ்சும்படி இடியோடு கூடிப் பெய்கின்ற பெரு மழை மிகுதலால் ஆறு முட்டி ஆற்றிடைக் குறையில் ஏறும்படி வெள்ளம்பாயும். அவ்வெள்ளத்தைத் தேக்கி வைத்த குளத்து நீரால் வயல்களில் யானை நின்றால் தெரியாது வளர்ந்த நெல் விளைந்திருக்கும். மடுக்களிலும் பொய்கைகளிலும் தாமரைப் பூவும், இதழ் விரிந்த நீலப்பூவும் மெல்லிய இலையினையும் வண்டுகளையுமுடைய ஆம்பற்பூவும், வண்டுகள் தங்கும் நறுமண முள்ள பிற பூக்களும் விளங்கும். ஒருபால், வளைந்த கொண்டை யுடைய வலைஞர், சம்பங் கோழிகள் உறங்கும்படி வள்ளைக் கொடிகளைத் தள்ளி மீன்களை வாரிக்கொண்டு வந்து விலை கூறி விற்கும் கம்பலை எழும். கரும்பிற்கு இட்ட ஆலையிடத்து ஓசையும், களை பறிக்குமோசையும் ஒருபால் எழும். வயலிடத்துச் சேற்றிலே கிடக்கும் கிழ எருதின் வருத்தந் தீர்க்கும் கள்ளுண்ட

களமரின் ஆரவாரமும் நெல்லறுப் போரின் ஆரவாரமும் ஒருபால் எழும். மழைத்துளிகளைத் தூறும் மேகந் தங்கும் திருப்பரங் குன்றில் விழாக் கொண்டாடு மோசையும், மகளிர் கூட்டம் தமது கூந்தல் தம்கணவர் மாலையுடன் சேரும்படி புதுப்புனலாடும் ஓசையும் ஒரு பால் வானில் ஒலிக்கும். பலவகைப்பட்ட ஓசை களோடு பறவைகள் ஒலித்துக் கொண்டிருக்கும்படி மீன்களை அறுக்கின்ற பாணர் வீடுகளில் எழும் பாடல் ஓசையும் சேர்ந்து ஒலிக்கும்.

**முல்லை நிலம்**

முல்லை நிலத்தே வெள்ளிய முசுட்டைப்பூவும் முல்லைப் பூவும் பாறைகள் மீது உதிர்ந்து பரந்து கிடக்கும். கரிய காலினை யுடைய வரகும் எள்ளின் காயும் முற்றியிருக்கும். ஒருபால் மக்கள் தினையினை அறுப்பர். அங்குமிங்கும் ஆழ்ந்த குழிகளில் இரத்தினங்கள் கிடந்து விளங்கும். பள்ளங்களில் நிற்கும் நீரில் நெய்தல் பூத்திருக்கும்.

**குறிஞ்சி நிலம்**

குறிஞ்சி நிலத்தே ஐவன நெல்லும் தோரை நெல்லும் வளர்ந்திருக்கும். ஒருபால் தினையிடத்தில் கிளியை ஓட்டு மோசையும், ஒருபால் அவரையைத் தின்னும் ஆமாவை ஓட்டும் ஓசையும், ஒருபால் குறவன் ஆண்பன்றியைப் பொறிக் கிடங்கில் வீழ்த்திக் கொன்றதினால் உண்டான ஓசையும் எழும். ஒருபால் வேங்கைப் பூவைப் பறிக்கும் மகளிர் புலி புலி என்னும் ஆரவார மும், ஒருபால் பன்றியைக் கொல்லும் புலியின் ஆரவாரமுமாகிய இவ்வோசைகளெல்லாம் மலையிடத்து எதிரொலி செய்யும்.

**பாலை நிலம்**

அருவிகளில்லாத அழகு குன்றின பாலை நிலத்து ஊகம்புல் வைக்கோல் போற் காய்ந்திருக்கும். மலை முழைஞ்சுகள் சூறாவளியை முகந்து கொள்ளும். அதனால் வேனிற் குன்று கடல்போல் ஒலிக்கும். இலையால் வேய்ந்த குடிசைகளில் வாழ்வோரும், மான்தோலாகிய படுக்கையையும், தழை விரவின மாலையையும் உடையோருமாகிய இளையோர் ஆறலைகள் வரைக் காக்கும்படி அரசர் ஆணையால் சுரத்தே வில்லோடு செல்வர்.

**நெய்தல் நிலம்**

நெய்தல் நிலத்தே மக்கள் முத்தையும் சங்கையும் கடல் தந்த பல் வகைப் பண்டங்களையும் விற்பர். யவன முதலிய நாட்டினர் குதிரை முதலியவற்றைக் கொணர்ந்து கொடுத்து வெள்ளுப்பும் தீம்புளியும் கொழுத்த மீன்களைத் துணித்து உப்பிட்டு உலர்த்திய கருவாடும் என்றிவற்றைக் கொண்டு போவர்.

**மதுரை நகர்ச் சிறப்பு**

இவ்வைந்திணைப்பாங்கும் அழகுறப் பெற்றுப் பாடல் சான்ற நன்னாட்டு நடுவில் திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்னும் நான்கும் கூடுதலால் நான்மாடக்கூடல் எனப் பெயர் பெற்ற மதுரை மாநகரம் உள்ளது. அது பூமாதின் அழகிய முகம்போல் பொலிவு பெற்றிருக்கும். வையை ஆற்றங்கரையில் வானளாவி உயர்ந்து நெருக்கிய மரக் கிளைகளில் மந்திகள் தாவி விளையாடும்; மயில்கள் இருக்கும்; மலை உச்சிகளினின்றும் குதிக்கும் நீர் கொண்டுவந்து குவித்தமணல் குவிந்து குன்று களாகக் கிடக்கும். இவ்வாறு மரங்களாலும் மணற் குன்று களாலும் சிறப்புடை யது ஆண்டுள்ள சோலைகள். நீராடுங் கரைகளிலே மரங்கள் உதிர்த்த மலர்கள் மாலைபோல வையை ஆற்றிற் செல்லும். அவ்வாற்றின் கண்ணுள்ள துறைகள்தோறும் பாண் சாதியினர் குடியிருப்புகளுண்டு. நகரைச் சூழ்ந்த அகழி, பெரிய செல்வமுடைய மானவிறல்வேளின் அம்பி ஊரை ஒத்த நாடுகளைப் பறிகொடுத்த அரசர் படை எடுத்து வந்து புறங் காட்டி ஓடுவதற் கேதுவாக மண்ணுற ஆழ்ந்திருக்கும். நகரைச் சூழ்ந்த மதில்கள் சுரங்கவழி யுடையனவாய் வானுற ஓங்கி நிற்கும். நெய் பூசுதலால் கருமை எய்திய நெடிய நிலைகளையும், திண்ணிய கதவினையுமுடைய வாயில் மீதமர்ந்த மாடங்கள்மேக முலாவும் மலைபோல உயர்ந்திருக்கும். மாந்தரும் மாவும் இடையறாது போக்குவரத்துச் செய்தலின் கோட்டைவாயில் இடையறாது ஓடு கின்ற வையை ஆற்றினைப் போன்றிருக்கும். வாயிலைக் கடந்த அளவில் அகன்ற தெருக்களும் அவற்றின் இருபுறங்களிலும் சாளரங்கள் பலவமைந்த வீடுகளும் உயர்ந்து தோன்றும்; அவ்வீடுகளும் வீதியும் ஆறும் அதன் இரு கரையும்

போல் தோன்றும். கடைவீதியில் பல மொழிகள் பேசும் மக்களின் மிக்க ஆரவாரம் எழும். ஒருபால் முரசை ஒலித்து விழாவைச் சாற்று மோசை காற்றால் கொந்தளிக்கும் கடலொலிபோல் முழங்கும். நீரைக் கையால் குடைந்து விளையாடினால் எழும் ஓசையுடைய வாத்தியங்களின் ஒலியைக் கேட்டோர் தெருக் களில் நின்று ஆடி ஆரவாரஞ் செய்வர். அங்காடித் தெரு விலே கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டின அழகிய கொடி களும், படைத்தலைவர் பெற்ற வெற்றியின் பொருட்டு எடுத்த வெற்றிக் கொடிகளும், கட்கடைகளில் கள்ளின் களிப்பு மிகுதியைச் சாற்றுகின்ற கொடிகளும் பெரிய மலையிடத்து அருவி அசையுமாறு அசைந்து கொண்டிருக்கும்.

**தேர்ப்படை**

பனைமீனும் சங்கும் உலாவுகின்ற கடலில் பாய்மரம் அடியோடு முறியும்படி காற்றடிக்கையினால் மரக்கலங்கள் நங்கூரக்கற் கட்டிய கயிற்றுடனே நின்றுலாவி நீர்ச் சுழியிலே அகப்பட்டு நின்று சுழலும். அரசனுடைய யானைப்படை அம்மரக்கலங்களை ஒப்பக் கோபம் மிகுந்து சுழன்று குத்துக் கோற்காரரைக் கொன்று பாகரை எறிந்து காலிற் சங்கிலியைப் பிணித்திருக் கும் கட்டுத்தறியை முறித்தனவும் முன்னும் பின்னும் சங்கொலிக்கப் படுவனவுமாகிய மதயானைகளை உடையது. தேர்ப்படை, காற்றைப் பிளந்து ஞாயிற்றை அடையவேண்டுமென விரும்பிப் பறக்கும் சிறந்த காலையுடைய அன்னச் சேவலை ஒத்த வெண்ணிறக் குதிரைகள் பூட்டப் பெற்றுக் காற்றெனச் செல்லும் தேர்களையுடையது.

**குதிரைப்படை**

குதிரைப்படை வட்டமாகவும் நேராகவும் ஓடும் கடுஞ் செலவினை யுடையது. காலாட்படை கள்ளுண்டு மயங்கி யானைபோற் செல்லும் வீரரை யுடையது.

**நாற்படையின் செலவுக்குப் பண்ணியம் விற்போர் அஞ்சியிருத்தல்**

இவ்வியல்புடைய யானையும் தேரும் குதிரையும் வீரரு மாகிய நாற்படைகள் வந்து மீள்கின்றமையால் இனிய உணவுப்

பண்டங்களை விற்பாரும், பொற்பூக்கள் சூடிய தலையினரும் வீரக்கழலணிந்த காலினரு மாகிய வீரரின்முன் நின்று கொட்டப் படும் வீரமத்தளத்தினது கண்போன்று வட்டமான பூந்தட்டிலே இட்டு வந்த பூவினை விற்பாரும், சுண்ணம் விற்பாரும், சுண்ணாம்புடன் வெற்றிலையும் பாக்கும் விற்பாரும் இன்னு யிரஞ்சி ஏங்கியிருப்பர்; நாற்படைகளும் அகன்றபின்னர் வருத்தம் நீங்கி, மாட மாளிகை கூட கோபுரங்களின் குளிர்ந்த நிழலிலே இருந்து இளைப் பாறுவர்.

**அங்காடி மகளிர்**

இளமகளிர் அழகும் சிவந்தநிறமும் ஆடவரை வருத்தும் கண்களும், நாருரித்த ஆம்பற்றண்டு போன்ற நிறமுமுடையரா யிருப்பர்; நேரிய கூரிய பற்களுடைய வாயும், தொய்யிற் குழம்பால் கொடி எழுதப் பெற்றவும் நெகிழ்ந்து சிந்துவது போன்று அழகு தேமல் பரந்தவுமாகிய இளைய தனங் களும், மையொழுகினாற் போன்ற நெருங்கிய கூந்தலும், மயிலின் சாயலும், மெல்லிய பேச்சுமுடைய நல்லியல்பினர். அவர்கள் தம்மைக் கோலஞ் செய்து மெத்தென நடந்து கையைத் தட்டி, காமநுகர்ச்சியன்றி வேறொன்றுங் கல்லா இளைஞரோடு மகிழ்ந்து சேர்வர். சங்குபோல் நரைத்த மயிரினைக் கோதிப் பின்னே முடிந்த கிழப்பெண்டிர் அவ் வின்பம் நுகரும் அழகினை யுடையார் விரும்பும் பொருள்களை நறும்பூவுடன் ஏந்திச் சென்று மனை கடோறும் உலாவி விற்பர். மேகம் முகப்பவும் ஆறுகள் பெருகவும் கடலின் நீர் கூடுதல் குறைதல் இன்றியிருக்கும். அதுபோல அங்காடித் தெருவில் பலர் வந்து கொள்ளக் கொள்ளக் குறை யாமலுங் கொண்டுவரக் கொண்டுவரப் பண்டங்கள் மிகாமலும் இருக்கும்.

**விழாக்காணும் பெண்களின் முகம் அசையும் கொடிகளிடையே தோன்றுதல்**

மாலைக்காலத்தே பூத்தொழிலுடைய பட்டாடைகளை உடுத்து அரையிலே உடைவாளைச் செருகித் தோளிலே மேலாடை தரித்து, வீரக்கழலும் வேப்பமாலையும் மாணிக்க மாலையும் செங்கழுநீர் மாலையும் அணிந்த செல்வர், குதிரைகள் பூட்டிய

தேரில் காலாட்கள் சூழ வீதிகளில் செல்வர். மாடங்கள்தோறும் நிலாமுற்றத்து நின்று விழாக்காணும் பொன்னாபரணங்களையும் பூத்தொழிலுடைய வளைகளையும் சிலம்பையும் அணிந்த மகளிரின் முகங்கள், கொடிகளின் மீது மந்தமாருதம் பட்டு அசைதலால் அவற்றின் இடையே மேகத்தில் மறையும் திங்கள் போல ஒருகால் தோன்றி ஒருகால் மறையும்.

**மாலைக் காலத்துக் கடவுளருக்கு விழா எடுத்தல்**

செல்வர் தமது அழகிய உடலிற்றடவியிருக்கும் புனுகு முதலியவற்றின் நறுமணம் தெருக்களிற் கமழும். பெண்களின் மதியை ஒத்த முகங்கள் மறுவின்றித் தோன்றும். சிவனை ஏனைக் கடவுளரிலும் மேலாகக் கொண்டு, வாடாத பூக்களையும் இதழ் குவியாத கண்ணினையும் அவியாகிய உண வினையு முடைய மாயோன் முருகன் முதலிய தெங்வங்கட்குப் பலி கொடுத்தற்கு அந்திக் காலத்திற்குச் சிறிது முன்பு தொடங்கிய விழாவில் வாத்தியங்கள் ஒலிக்கும். பௌத்தமதக் கொள்கையினராகிய இளமகளிர் தாமரைப் பூவைப் பிடித்தாற் போலச் சிறு பிள்ளை களை எடுத்துக்கொண்டு, தங்கணவரோடு பூசைக்கு வேண்டும் பூவினையும் தூபங்களையும் கைகளில் ஏந்திச்சென்று வணங்கும் பௌத்தப் பள்ளிகள் ஓரிடத்து விளங்கும்.

**பல வேறு சமயத்தவர் உறையுமிடங்கள்**

சிறந்த வேதங்களை ஓதி யாகாதி கருமங்களைச் செய்து பிரமங்கள் தாங்களேயாய் வீட்டின்பத்தை இவ்வுலகில்தானே அடைகின்ற பிரம வித்துக்கள் இருப்பிடம் ஒருபால் தோன்றும். மலைக் கூட்டம் போல மாட மாளிகைகள் உயர்ந்து தோன்றும் நகரில் பூக்களைக் கையிற் கொண்டு விரதங் காப்போர் துதிக்கின்ற அமணப் பள்ளியிடத்து மூன்றுகாலமும் மூவுலகின் செய்தியும் முழுதுணரும் சமணமுனிவர் உறைவர். அப்பால் துலாக் கோல் போன்று நடுவு நிலையுடைய தருமத்தைக் கூறும் அறங் கூறவை தோன்றும். யாகங்களைப் பண்ணிப் பெரிய சுவர்க்கத்தை ஏறப் போகும் அந்தணர் அரசனை அடக்குவர். அரசன் தன்னிடத்துள்ள நன்மையும் தீமையும் நெஞ்சத் தாலே கண்டு அத்தீங்குகளை ஆராய்ந்து அவற்றிலே ஒழுகாமல் தான் அடக்குகின்ற

சுற்றத்தினையுடையன். காவிதிப்பட்டம் கட்டப் பெற்றவரும், தலைப்பாகை தரித்தவரும் அரசனை அறத்தினின்றும் திறம்பாமல் பாதுகாப் பவருமாகிய அமைச்சர் இருக்கை அப்பால் தோன்றும். இதற்கு அப்பால், பருந்துகள் இளைப்பாறியிருந்து பின்பு உயரப் பறக்கும் தன்மையவும் பல தொழில் மாட்சிமைப் பட்டவுமாகிய, பிறநாடுகளினின்றும் வந்து செல்பவர் களுடைய மனைகள் மலைகள் போன்று தோன்றும்.

இடைவிடாது மழை பெய்கின்றமையால் விளைவுடைய மோகூரிடத்துக் கோசர் விளங்கினாற் போல பழையன் என்னும் குறுநில மன்ன னுடைய, புரோகிதர், சேனாபதியர், தூதர், ஒற்றர் என்னும் நால்வகைப் பெரிய கூட்டத்தினரும் விளங்குவர்.

**அந்திக் கடை**

சங்கை அறுத்து வளையல் முதலியன செய்வோரும், மணி களைத் துளையிடுவோரும், பொற்கொல்லரும், பொன்வாணிகரும், ஆடை விற்பாரும், செம்பை நிறுத்து வாங்குவாரும், பூக்களையும் சாந்தையும் விற்பாரும், ஓவியக்காரரும், நெய்தற் றொழில் செய் வோரும் பிறருங்கூடி அந்திக் கடையில் ஒருவர்க்கொருவர் கால் நெருங்கும்படி நிற்பர். அவ்வாரவாரம் பனங் குருத்து மாலையணிந்த சேரனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே அறிவுடையோர் கூடித் தருக்கங்களைக் கூறும் ஆரவாரம் போன்றிருந்தது.

**அறக் கூழ்ச்சாலை**

அறக்கூழ்ச் சாலையில் பலாப்பழம், வாழைப்பழம், முந்திரிகைப் பழம் முதலிய பழங்களையும், பாகற்காய், வாழைக்காய், வழுதுணங்காய் முதலிய காய்களையும் இலைக்கறிகளையும் கண்டசருக்கரைத் தேற்றையும், இறைச்சி யுடைய சோற்றையும், கிழங்குகளுடனே பால் முதலியவற்றையும் பரிமாறுவோர் கொண்டுவந்து பசி தாகங்களால் வருந்துவார்க்கும் வறியவர்க்கும் இடுவர்.

**மரக்கலங்களிலிருந்து பண்டங்களை இறக்கும் ஓசை**

மரக்கலங்கள் கொண்டுவந்த பண்டங்களைப் பறிப்பதால் பட்டினத்தே பெரிய ஆரவாரம் எழும். பண்டங்களை இறக்குவதால்

பல்லிடங்களிலும் எழும் ஓசை குஞ்சுக்கு இரையைக் கவர்ந்து பறந்து செல்கின்ற பல்வகைப் பறவைகளின் ஆரவாரத்தை ஒத்திருக்கும்.

**மாலைக் காலத்து மகளிர் செயல்கள்**

ஞாயிறு மேற்குமலையில் மறைந்ததும், நிறை உவாத் தோன்றும் போது பெரிய நகரிடத்துவாழும் பெண்ணைப் பெண்காமுறும் அழகிய மகளிர் ஒளியுடைய விளக்கை ஏற்றுவார்கள்; தாம் காதலிக்கும் இனிய கணவரைச் சேர்தற்கு நெடிய கூந்தலிற்றடவிய மயிர்ச்சாந்தை அலைத்து நீக்குவார்கள்; கத்தூரியையும் நறிய சந்தனத்தையும் தடவுவார்கள்; மெல்லிய நூலாற் செய்த ஆடைக்கு அகிற்புகை ஊட்டுவார்கள். இவ்வாறு மாலைக் காலம் ஓசை உடையதாயிருக்கும். கணவரைப் பிரிந்து கூட்டத்தை விரும்பியிருந்தார்க்கு நோய் செய்யும் முன் யாமம் கழிந்தது.

**விலை மகளிர்**

நீல ஆகாயத்தே விளையாடும் தெய்வமகளிர் வருத்துமாறு போலத் தம்மைக் கண்டோருடைய நெஞ்சை வருத்திப் பொருள் வாங்கும் பரத்தையர் விளக்கின் ஒளியில் பலரும் ஒன்று சேரக் கூடுவர். கடற்கரைத் துறையில் குவிந்தமணலில் யாழ் வாசித்து மத்தளங் கொட்டி ஆடுவர். அதனை வெறுத்துக் குவளை மலரால் தொடுத்த மாலையை ஆடையின் விளிம்பிலே படும்படி அணிவர். வெள்ளிய பூக்களாற் கட்டிய மாலைகளை ஆகாயத்தில் சென்று நாறும்படி கொண்டையில் வைத்து முடிவர். தமது வடிவழகை விரும்பி வந்த உள்ளூராரும் பிறநாட்டாருமாகிய செல்வ இளைஞரைப் பல வஞ்சனையுடைய தம் மொழிகளால் கூட்டிச் சென்று அவர்கள் மார்பு தம் மார்பிற் படும்படி முயங்குவர். பொருள் பெறுமளவும் அன்புடையார் போல வஞ்சனையாகத் தழுவி அவர்களின் செல்வம் எல்லாவற்றையும் வாங்குவர். பூவிரிகின்ற காலமறிந்து அதன் நுண்ணிய தாதை உண்டு தாதற்ற வறிய பூவைப் பின் நினையாமல் நீங்கும் வண்டுகளைப்போல் தம்மைக் கலந்தாருடைய நெஞ்சு கலங்கும்படி அவருடைய கூட்டத்தைக் கைவிடுவர்; முற்பட்ட பலரைச் சேர்ந்த சேர்க்கையால் குலைந்த ஒப்பனைகளைப் பின்னும் அழகு

செய்வர். அரும்புகள் அலரும் செங்கழுநீர்ப் பூவையும் ஏனைய மலர் களையும் கொண்டு மழைக்கு மலர்ந்த சிறிய புதரைப்போல் தோன்றும்படி தமது கூந்தலை வேய்ந்துகொள்வர்; அலரும் பருவமடைந்து மலர்ந்த அப்புதிய விடுபூக்கள் தெருக்களெங்கும் கமழும். வளையணிந்த கையுடைய அவ்விலைமாதர் கை வீசி நடந்து மனைகடோறும் சென்று பழமரத்தைத் தேடிச் சென்று அதன் பழங்களை உண்ணும் புள்ளினம் போலப் பொருள் கொடுத்தற்குரிய இளைஞரோடு விளையாடுவர்.

### திருமால் பிறந்த ஓணநாள் விழா

அவுணர் கூட்டத்தை வென்றவரும் பொன்னாற் செய்த மாலை யணிந்தவருமாகிய திருமால் பிறந்த ஓணநாளில் ஊரிடத்து விழா நடக்கும். போர்த்தினவுடைய மறவர் கள்ளுண்டு ஒருவரோ டொருவர் பொருது நெற்றியிலே காயம் பட்டவர்களாகத் தோன்றுவர். போர் பழகும் யானை ஓட்டுதலால் ஓடுகின்ற யானயைப் பரிக்கோற்காரர் சென்று பிடிப்பர்; அதனைப் பிடிக்குமளவும் போர் யானை அணுகாதபடி நீலத்துணியில் இட்டு வைத்திருக்கும் [1]கப்பணத்தைச் சிதறுவர்; கப்பணங்கள் காலைத்துளைக்க அஞ்சாதவர்களாகிய மறவர் நெற்றியிற்பட்ட காயங்களுடன் திரிவர்.

### குழந்தையை ஈன்று இடுக்கண் நீங்கிய மகளிர் நீராடிக் கடவுளைப் பரவுதல்

ஈன்றணிமை நீங்கிய செல்வ மகளிர் தெய்வத்தினருளால் ஓர் இடுக்கணுமற்றுக் குளத்து நீரிற் குளிப்பர். அப்போது முதற் சூற்கொண்ட மகளிர் இவ்வாறே இடுக்கணின்றிப் புதல்வரைப் பயத்தல் வேண்டுமென்று தெய்வத்தைப் பரவுவர்; பின்பு தமது சுற்றத்துடன் பூசைக்கு வேண்டும் பொருள்கள் பலவற்றுடன் [2]தேவராட்டியரோடு யாழிற் செவ்வழிப் பண்ணை வாசித்து முழவு கொட்டிச் சிறுபறை ஒலிப்ப மயில் போல மெத்தென மெத்தென நடந்து கையாற்றொழுது பாற்சோறு முதலியவற்றை உண்பர். கார் காலத்தே பூத்த குறிஞ்சிப் பூவைச் சூடிய மகளிர்

1. இரும்பாற் செய்த ஆனை நெருஞ்சிக்காய்.
2. தெய்வமேறப் பெற்ற பெண்கள்.

கடப்ப மாலையைச் சூடு கின்ற முருகனை மெய்யிடத்தே நிறுத்தி வழிபட்டுக் கைகோத்து மன்று கடோறும் குரவையாடுவர். இவற்றோடு சேரிகடோறும் எழும் பாட்டுக்களும் கலத்தலினாலே வெவ்வேறு ஆரவாரம் ஒலிக்கும். நன்னன் கொண்டாடும் பிறந்த நாளிடத்துச் சேரியிலுள்ளார் கொண்டாடுகின்ற விழாவால் ஆரவாரம் உண்டானாற் போலக் கம்பலை நிறைந்த முதற்சாமம் கழிந்தது.

**யாமத்தில் தெய்வங்கள் இயங்குதல்**

பதினைந்து நாழிகைகொண்ட பாதிஇரவில் இரண்டாஞ் சாமத்துக்கும் நாலாம் சாமத்துக்குமிடையில் தெய்வங்கள் உலாவும். சங்குகள் ஆரவாரமின்றிக் கிடக்கும்; மடப் பத்தினையும் களிப்பினையும் ஒள்ளிய அணிகலன் களையுமுடைய மகளிர் துயில் கொள்வர். இனிய பாகோடு சேர்த்துக் கரைத்த மாவை வைத்திருக்கும் அப்பவாணிகர் இருந்து உறங்குவர். திருநாளிலே கூத்தாடும் கூத்தர் கூத்து ஒழிந்து உறங்குவர். பேய்களும் தெய்வங் களும் உறவுகொண்டு சுழன்று திரியும்.

**நகர் காவலர்**

நகர் காவலர் புலிபோல் வீரமுடையர்; துயில் கொள்ளாத கண்ணர்; அஞ்சா நெஞ்சர்; களவுத் தொழிலையும் தந்திரங்களையும் கண்டறியும் நுண் ணறிவினர்; குறி தப்பாத அம்பினர்; தெருக்களில் நீர் பெருக்கெடுத்தோடும் காரிருள் மூடிய யாமங்களிலும் ஊர் சுற்றிவரும் இயல்பினர்; கறுத்த உட லினர்; கரிய உடையினர்; வாள்கைக் கொண்ட கையினர்; மெல்லிய நூலேணி சுற்றிய அரையினர்; விழித்தகண் இமைக்கு முன் மறைந்தோடும் வலியுடைய கள்வரையும் கடிதிற் பிடிக்கும் ஆற்றலுடையர். இவ்வியல்பினராகிய காவலர் உலாவிக் காவல் புரிதலால் எங்கும் ஒலியின்றி அடங்கிய கடலைப் போல் அடங்கியிருக்கும். படுக்கையில் துயில்வோர் இனிது துயில்வர்.

**வைகறையில் நிகழ்வன**

வைகறைக் காலத்தே வேதத்தை முற்ற ஓதுகின்ற அந்தணர் அவற்றிலுள்ள துதிகளைப் பாடுவர். பரிக்கோற்காரர் யானைகளுக்குக்

கவளத்தைத் தீற்றுவர். தேரிற் பூட்டும் குதிரைகள் பந்தியில் நின்று புல்லை மெல்லும். பண்டம் விற்பார் பல்வேறு பண்டங் களுடைய தமது கடைகளை மெழுகுவர். கள் விற்போர் களிப்பினை யுடைய கள்ளுக்கு விலை கூறுவர். திண்ணிய சுவர்களுடைய வீடுகளின் கதவுகள் திறப்பதாலும் மூடுவதாலும் ஒலி செய்யும். கள்ளை உண்டுகளித்தோர் முழங்குகின்ற மழலை வார்த்தை களைக் கூறுவர். நின்றேத்துவார் நின்று வாழ்த்துவர். [1]வைதாளிகர் தத்தமது துறைக்குரிய பாடல்களைப் பாடுவர். நாழிகை சொல்வோர் சொல்லப் பள்ளி எழுச்சி முரசு ஒலிக்கும். பொறியினையுடைய கோழிச் சேவல் விடியற் காலத்தை அறிவித்துக் கூவும். சேவற் பறவைகள் தத்தம் பெடைகளை அழைத்து நின்று தீங்குரல் செய்யும். கூட்டில் உறைகின்ற கரடி, புலி முதலிய விலங்குகள் முழங்கும். பிடியோடு கூடிய யானைகள் பிளிறும். போரில் முதுகு காட்டிய வீரரதும் வெட்டுண்ட வீரரதும் யானைகளும், பகைவர் ஊரைச் சுடுகின்ற விளக்கிலே பார்த்து நிரைகாத்து நின்ற வீரரை மாளவெட்டி வேல்கோலாக அடித்து வந்த பசுத்திரளும், தோற்ற வேந்தர் திறையாகக் கொண்டு வந்த ஆபரணங்களும் அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும். இவ்வாறு கங்கையாறு கடலிற் கலந்தாற் போல உலகிற் பொருள் களெல்லாம் மதுரையை அடையும்.

### அரசன் துயிலெழுந்து செய்வன

இம்மாநகரில் கோயில் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற பாண்டியன், விளங்குகின்ற அணிகலன்கள் பூண்ட மகளிர் பொன்னாற் செய்த வட்டில்களிலே வார்த்த நறுமணம் வீசும் கள்ளைக் கொடுக்கக் கொடுக்க அதனைஉண்பான்; உண்டு சிறந்த கற்பும், அழகிய தேமலும், மணி களழுத்திய பொன்னணிகளும், மாந்தளிர் போன்ற நிறமும், கூரிய எயிறும், விளங்குகின்ற மகரக்குழை பொருந்திய காதும், மலர்ந்த செந்தாமரை போன்ற முகமும், வளைகளுமுடைய அரசியின் தோளில் முயங்குவான், தூங்கு மாலைகள் தொங்கும் படுக்கையில் துயில் கொள்ளுவான். தான் செய்யும் “நல்லறனும் ஒண் பொருளும் சிந்தித்து” வைகறை

1. வைதாளிகர் – பள்ளி எழுச்சி பாடுவோர்.

யாமத்துத்துயிலெழு வான்; எழுந்து காலைக்கடன்களை முடிப்பான்; மார்பிலே மாலை தரித்து, கையிலே வீரவளையையும் விரலிலே கணையாழியையும் செறித்து, கஞ்சி யிட்ட துகிலை உடுத்து, அதன் மேல் அணியும் அணிகலன்களை அழகுற அணிந்து கொலுமண்டபத்தில் வீற்றிருப்பான். இருந்த அளவிலே ஏனாதிப் பட்டம் முதலிய சிறப்புப் பெற்ற படைத்தலைவர் அவனது வெற்றித் திறத்தை வாழ்த்துவர்.

### அரசன் ஓலக்க மண்டபத்திலிருந்து வீரர்க்கும் பிறர்க்கும் பரிசளித்தல்

பின்பு அவன் தான் நாடு நகர் பெறும்படியாகவும் வெற்றி சிறக்கும் படியாகவும் உதவிய வீரரை எல்லாம் அழைத்தும் பாவலருடனே பாணர் பாட்டியரை வரவேற்றும் யானை தேர் என்பன போன்ற பரிசுகள் அளிப்பான். அவ்வாறு அவன் பற்பல பொருள்களைக் கொடுத்தலால் அந் நாட்டில் வாழும் குடிமக்கள் செல்வ வளம்பெற்றிருப்பர். இவ்வாறெல்லாம் சிறப்புற்றிருக்கும் வேந்தே! வாழ்க.

### இவ்வுலகில் புகழ் ஓங்க வாழ்ந்த மன்னர் மாண்டனர்

இவ்வுலகிற் புகழுடைய பற்பல வேந்தர் வாழ்ந்தனர். புகழ் செறிந்த வேந்தர் செல்வவருவாயினையுடைய தமது நகரிலிருந்து யாழ் வாசித்தாற் போன்று பாடும் விறலியர் அணியும்படி வளைகளை நாடோறும் நல்கினர். கொழுத்த இறைச்சியைத் தின்று சோற்றை வெறுத்துக் கள்ளருந்தி அவற் றாலும் ஆசை தணியப் பெறாதபாணர் மகிழும்படி பல பிடியானைகளையும், தம் சுற்றத்தினர் மகிழும்படி பகை அரசர் அரண்களை அழித்துக் கவர்ந்த பொருள்களையும் வழங்கினர். விடியற் காலையில் வந்து பாடும்[1]சூதர்க்குத் தேருடன் குதிரையைக் கொடுத்தனர். பெரிய குப்பிகள் வற்றும்படி கள்ளுண்டு வஞ்சி சூடிப் பூசிப் புலர்ந்த சந்தனத்தை யுடையோரைத் தமக்குப் படைத்தலைவராகக் கொண்டனர்; தம்மை வழிபட்டோர் ஏவல் கேட்டு வழி படாதோர் நாடுகள் திறை அளித்து ஏவல் கேட்கும்படி போர்மேற் சென்றனர்; உயரப் பறக்கும் பருந்துகளும் பறக்கலாற்றாத உச்சியுடைய அரண்களுடைய பாசறை யிடத்தே விடியற்காலத்தே நாள் முரசம்

1. புகழ்ந்து பாடுவோர்.

ஒலிக்கும்படி தங்கினர். பகைவர் படைக்குக் கேடுண்டாக வென்று எண்ணிப் பின்னும் அழிக்க வேண்டுமென்று விரும்பி நிலங்களை அழித்தனர். இவ்வகை வலியினையும் வெற்றி முரசினையு முடையராய் விளங்கினர். இவ்வாறு புகழ் விளங்கும் படியும் உலகம் ஏவல் கேட்கும்படியும் வாழ்ந்து பிறப்பற முயலாது மாண்ட மன்னர் கடற்கரை மணலிலும் பலராவர். அண்ணலே! அப் பயனின்மை யாலே நீயும் அவ்வாறு கழிதல் ஆகா தென்று இவ்வாழ்விற் பெரியதாயிருப்ப தொரு பொருளை யான் கூறுகின்றேன். அஃது என்னாற் காட்டுதலரிது. அதனைக் கண்ணனைப் போன்றவும் யாகசாலை முதுகுடுமியைப் போன்றவும் தொல்லாணை நல்லாசிரியரிடத்திற் கேட்பாயாக. கந்தழியிடத்திற் கண்டவியப்பையும் பின்பு பெற்ற அமைதியையும் தலைமை பெற்ற பலர் சொல்ல நீ கேட்பாயாக. பெருமானே! நல்ல ஊழிக்காலத்தே இத்துணைக் காலமிருத்தி யெனப் பால்வரை தெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப் பெற்ற நாள் முழுதும் இனிதாகப் பேரின்பத்தை நுகர்ந்திருப்பாயாக. அதனை நுகராது ஐம்பொறிகட்கும் முன்னிற்கப் படுவனவாகிய இந்நுகர் பொருள் கட்கு நின்னோடு என்ன உறவுண்டு? இனி உன்னிடத்து உண்டாகிய மாயை கெடுவதாக.

### தனிப் பாடல்கள்

பைங் கண் இளம் பகட்டின் மேலானை, பால் மதி போல்
திங்கள் நெடுங் குடையின் கீழானை, அங்கு இரந்து
நாம் வேண்ட, நல் நெஞ்சே! நாடுதி போய், நானிலத்தோர்
தாம் வேண்டும் கூடற் தமிழ்.

சொல் என்னும் பூம் போது தோற்றி, பொருள் என்னும்
நல் இருந் தீம் தாது நாறுதலால், மல்லிகையின்
வண்டு ஆர் கமழ் தாமம் அன்றே-மலையாத
தண் தாரான் கூடற் தமிழ்?

• • •

## சிறப்புப் பெயர் முதலியவை


### அ

அகம் ........ 508
அகவர் ........ 223
அடகு (இலைக் கறி) ........ 531
அடுப்பு ........ 29
அணங்கு ........ 164, 353, 446, 632
அதரி கொள்பவர் ........ 94
அந்தணர் ........ 656
அந்தணர் பள்ளி ........ 474
அந்தி ........ 427
அந்தி விழவு ........ 460
அமர் ........ 128
அமிர்து ........ 532
அமிழ்து ........ 197
அரசியல் ........ 191
அரசு ........ 132
அரமியம் ........ 451
அரிக் கூடு இன் இயம் ........ 612
அரிநர் கம்பலை ........ 110
அருப்பம் ........ 67, 149
அருவி ........ 42, 57, 299, 306, 374
அல் அங்காடி ........ 544
அவரை ........ 292
அவலும் மிசையும் ........ 240
அவிர் இழை ........ 445
அவுணர் ........ 590
அவை ........ 161
அவை அகம் ........ 508
அழும்பில் ........ 345
அற நெறி ........ 191, 472, 500
அறம் கூறு அவையம் ........ 492
அன்னம் ........ 386, 675

### ஆ

ஆ ........ 157
ஆகுளி ........ 606
ஆட்டு ........ 616
ஆண் ........ 29
ஆதி ........ 390
ஆம்பல் ........ 252
ஆம்பி (பன்றிப் பத்தர்) ........ 91
ஆமா ........ 293
ஆயம் (பசுத் திரள்) ........ 692
ஆரம் (சந்தனம்) ........ 715
ஆரம் (முத்து வடம்) ........ 439, 681, 716
ஆலங்கானம் ........ 127
ஆவுதி ........ 494
ஆன்று அடங்கு அறிஞர் ........ 481

### இ

இஞ்சி ........ 289
இதை ........ 79, 376, 539
இயம் ........ 304, 363
இயவர் ........ 304
இரவு ........ 8, 239, 686
இரு பெயர்ப் பேர் ஆயம் ........ 101
இரு பெரு வேந்தர் (சேரன் சோழன்) ........ 55
இரு வகையான் இசை (உழவு வாணிகம்) ........ 121
இல் ........ 358, 502, 578, 667
இலஞ்சி ........ 248

இலை (வெற்றிலை) .............................. 401
இளம் பல் செல்வர் .............................. 572
இறா அல் .............................................. 624

ஈ

ஈர்க்கு .................................................... 708

உ

உடை அணி ......................................... 722
உண்டு தண்டா மிகு வளம் ................... 17
உந்தி ..................................................... 245
உப்பு ....................................................... 318
உப்புப் பகர்நர் ......................................... 117
உம்பல் ...................................................... 61
உயர்ந்த தேஎத்து விழுமியோர் .......... 200
உயர்நிலை உலகம் ....................... 197, 471
உரும் ......................................................... 63
உரை ....................................................... 616
உலகம் ................................. 133, 199, 237
உலகம் ஆண்ட உயர்ந்தோர் ................ 23
உவலைக் கண்ணி ................................ 311
உளியர் .................................................... 641

ஊ

ஊஉன் குறை ......................................... 141
ஊண் ...................................................... 503
ஊர் ......................................................... 158
ஊர் காப்பாளர் ..................................... 647
ஊர் சுடு விளக்கு ................................ 692
ஊழி ......................................................... 21
ஊன் சோறு ................................. 35, 533

எ

எயிர் .................................... 187, 220, 693
எரி ........................................................... 126
எல்லை .................................................. 239

ஏ

ஏற்றம் ....................................................... 90
ஏறு ............................................... 298, 672

ஐ

ஐம்பால் திணை .................................... 326
ஐயவி ...................................................... 287
ஐவன வெண்ணெல் ............................ 288

ஒ

ஒழுக்கம் ...................................... 469, 478
ஒன்னார் ................................................. 726

ஓ

ஓடை ........................................................ 43
ஓண நல் நாள் ...................................... 591
ஓவு .......................................................... 365

க

கங்குல் ........................................... 631, 651
கங்கை அம் பேர் யாறு ......................... 696
கச்சம் ..................................................... 436
கட் கொண்டி ......................................... 137
கடம்பு ..................................................... 613
கடல் ...................................... 86, 180, 199,
.................................. 407, 450, 540, 629
கடவுட் கயம் ......................................... 710
கடவுட் பள்ளி (பௌத்தப் பள்ளி) ....... 467
கடவுள் ................................................... 651
கடறு ...................................................... 274
கடி ......................................................... 153
கடி வாலுவன் .......................................... 36
கடுங் கால் ............................................... 78
கடுங் காற்று .......................................... 378
கடும்பு .................................................... 523
கடு வேனில் ........................................... 106
கடை ...................................................... 622
கண்டு தண்டாக் கட்கு இன்பம் ........... 16
கண்ணி ................................................. 596
கண்ணுள் வினைஞர் .......................... 518
கண்பு ..................................................... 172
கண் மாறு ஆடவர் (கள்வர்) ............... 642
கணை .......................................... 183, 739

கணையினர் .......... 647
கதவு .......... 354
கந்து .......... 383
கம்புட் சேவல் .......... 254
கம்மியர் .......... 521
கயம் .......... 363
கயிறு .......... 376
கரண்டை .......... 482
கரும்பின் எந்திரம் .......... 258
கல் (நங்குரக் கல்) .......... 378
கல்லா மாந்தர் .......... 420
கலந்தோர் .......... 220
கலம் .......... 104
கலன் .......... 322
கலிங்கம் .......... 433, 554, 721
கலிங்கம் பகர்நர் .......... 513
கலை .......... 332
கவ்வை .......... 271
கவயம் .......... 740
கவலை .......... 241, 312
கழல் .......... 436
கழனி .......... 247, 261
கழி .......... 318, 541
கழிச் செறு .......... 117
கழுது .......... 633
கழுநீர் (செங்கழுநீர்ப் பூ) .......... 171, 551
கழுநீர் (தீர்த்த நீர்) .......... 427
கழை .......... 242
கள் .......... 228, 372, 753
கள்ளோர் .......... 662
களம் வேட்டல் .......... 129
களமர் .......... 260, 393
களன் .......... 48
களிற்றினம் .......... 242
களிறு .......... 15, 24, 102, 172, 179, 219, .......... 247, 597, 643, 659, 676, 752,
கற் சிறை .......... 725
கறி .......... 289

**கா**

கா .......... 153, 335, 701
கால் .......... 125
காவிதி மாக்கள் .......... 499
காழ் .......... 286, 382
காழ் மண்டு எஃகம் .......... 739
காழகம் .......... 598
காழோர் .......... 658
காற்று .......... 52
கானல் .......... 96
கானவர் .......... 293

**கி**

கிடங்கு .......... 64, 351
கிழங்கு .......... 534
கிழாஅர் (பூட்டைப் பொறி) .......... 93
கிளி .......... 291

**கு**

குட்டுவர் .......... 105
குட கடல் .......... 238
குடமுதல் குன்றம் .......... 547
குடி .......... 131
குடி அகற்றல் .......... 766
குடை .......... வெ. 1
குண்டு அகழி .......... 86
குண கடல் .......... 238, 245
குண குட கடல் எல்லை .......... 71
குணமுதல் .......... 195, 547
குதிர் .......... 169
குய்ப் புகை .......... 757
குரம்பை .......... 310
குரவை .......... 97, 615
குரால் .......... 170
குரிசிலர் .......... 736
குருகு .......... 268

குருசில் .................................................. 151
குவளை ..................................... 566, 588
குழை ........................................ 448, 709
குளநீர் .................................................. 603
குளம் .................................................. 246
குறிஞ்சி ..................................... 300, 613
குறுநில மன்னர் .................................. 776
குறுமாக்கள் ........................................ 461
குன்று ......................................... 488, 501

கூ

கூகை .................................................. 170
கூட்டு உறை வய மாப் புலி ................ 677
கூடல் .................................................. 429
கூடல் தமிழ் ................................. வெ.1, 2
கூம்பு .................................................. 377
கூலம் .................................................. 317
கூவியர் ................................................ 627
கூவை .................................................. 142
கூளியர் ................................................ 691

கே

கேழல் ......................................... 174, 295

கொ

கொடி ......................... 79, 368, 371. 372
கொடுஞ்சி .......................................... 752
கொண்டி மகளிர் ................................ 583
கொழுங் குடிச் செல்வர் ...................... 577
கொழுந் திற்றி ..................................... 211
கொழு வல்சி ........................................ 141
கொற்கையோர் .................................. 138
கொன்றை ........................................... 277

கோ

கோங்கு ................................................ 338
கோசர் ......................................... 509, 773
கோடியர் .............................................. 523
கோடு (சங்கு) ..................................... 407
கோடு சுடு நூற்றினர் ........................ 401
கோடு போழ் கடைநர் ......................... 511
கோணம் .............................................. 592
கோதை ................................................ 265
கோதை (சேரன்) ................................. 524
கோதை (தூக்கு மாலை) .................... 713
கோதையர் .......................................... 398
கோலன் .............................................. 389
கோலோர் ............................................ 381

சா

சாந்து ...................... 226, 493, 553, 745
சாலினி ................................................ 610
சாவகர் ................................................ 476
சாறு .................................................... 366
சான்ற கொள்கை ................................ 480

சி

சிமிலி .................................................. 483
சில் காற்று .......................................... 358
சிலம்பு ................................................ 444
சிலை .................................................. 312
சினத் தீ .................................................. 31

சீ

சீர் (தாள அறுதி) ................................ 657
சீறியாழ் .............................................. 559

சு

சுடர் விளக்கம் .......................... 580, 607
சுண்ணத்தர் ........................................ 399
சுணங்கு .............................................. 416
சுரும்பு ............................... 566, 596, 700
சுற்றம் .............................. 188, 227, 770
சுறவு .................................................... 112

சூ

சூடுறு நன் பொன் சுடர்
இழை புனைநர் ................................... 512
சூதர் .................................................... 670
சூல் மகளிர் ........................................ 609
சூழி ....................................................... 43

**செ**

செஞ் ஞாயிறு ........ 7
செப்பு ........ 421
செம்பு ........ 485
செம்பு நிறை கொண்மர் ........ 514
செல்வர் ........ 442
செவ்வழி ........ 604
செற்றவர் ........ 132
செறுநர் ........ 152

**சே**

சேக்கை ........ 713
சேக்கை (அமணப் பள்ளி) ........ 487
சேணோன் ........ 294
சேரி விழவு ........ 619

**சொ**

சொன்றி ........ 212

**ஞா**

ஞாயிறு ........ 385, 431, 546, 702, 768
ஞாலம் ........ 4

**ஞி**

ஞிமிறு ஆர்ப்ப ........ 684

**ஞெ**

ஞெமன் கோல் ........ 491

**த**

தண்டலை ........ 341
தண் பணை ........ 270
தமனியம் ........ 704
தலை ........ 29

**தா**

தாமரை ........ 249, 463, 710
தார் ........ 265
தாரம் ........ 697
தாழை ........ 114
தானை ........ 39, 180, 369, 734
தானை (மேலாடை) ........ 435

**தி**

திங்கள் ........ 769, வெ. 1
திமில் வேட்டுவர் ........ 116
திமிலர் ........ 319
திருமணி குயினர் ........ 511
திவவு ........ 604
திறை ........ 230
தினை ........ 271, 291

**தீ**

தீ ........ 453
தீம் சேற்றுக் கடிகை
(கண்ட சருக்கரை) ........ 532

**து**

துகில் ........ 494
துடி ........ 320
துடுப்பு ........ 34
துணங்கை ........ 26, 160, 329
தும்பி ........ 655
துறை ........ 85

**தூ**

தூரியம் ........ 460

**தெ**

தெரு ........ 359
தெவ்வர் ........ 189
தெவ்வர் ஆக்கம் ........ 196
தென் குமரி ........ 70
தென்னவன் ........ 40

**தே**

தேஎம் ........ 229, 230
தேர் ........ 51, 224, 388, 648, 659, 752
தேறல் ........ 599, 780
தேன் ........ 475

**தொ**

தொடி ........ 34, 218, 563, 579, 720
தொடுதோல் ........ 636
தொடுப்பு ........ 11

தொய்யில் ........................................ 283, 416
தொல் ஆணை நல் ஆசிரியர் ............ 761
தொல் முது கடவுள் (அகத்தியன்) ........ 41
தொழுவனர் .......................................... 466

தோ

தோரை .................................................. 287
தோல் (யானை) .................................... 370

ந

நகர் ............................ 169, 216, 556, 758
நகரம் .................................................... 484
நட்டவர் .................................................. 131
நட்பு ........................................................ 198
நரந்தம் (கத்தூரி) ................................ 553
நரம்பு ............................................ 217, 657
நரைக் கூந்தவர் .................................. 408
நல் ஊழி ................................................ 782
நல் எயில் உழந்த செல்வர் ................. 731
நல் மாந்தர் .............................................. 20
நறவு .............................................. 213, 679
நன்கலம் ................................................ 685
நன்னன் .................................................. 618

நா

நாடு ........................................................ 187
நாண் மீன் .................................................. 6
நால் நிலவர் .......................................... 123
நால் வேறு தெரு .................................. 522
நாவாய் .................................. 83, 321, 379
நாழிகை இசைப்ப ................................ 671
நாள் அங்காடி ...................................... 430
நாள் மகிழ் இருக்கை .......................... 443
நாள் முதிர் மதியம் .............................. 548
நாற் பெருங் குழு .................................. 510
நாற்ற உணவின் உரு
கெழு பெரியோர் .................................. 458
நானிலத்தோர் .................................... வெ. 1

நி

நிண ஊன் ............................................ 755
நிணம் ........................................................ 25
நியமம் .................................................. 365
நிலம் .................................................... 705
நிலம் தரு திருவின் நெடியோன் ....... 763
நிலவு .................................................... 114
நிலன் .................................... 12, 453, 479
நிலா ...................................................... 548

நீ

நீர் .......................................................... 453
நீர்த் தெவ்வு நிரைத் தொழுவர் ............. 89
நீலக் கச்சினர் ...................................... 639
நீலம் .............................................. 251, 279

நூ

நூல் ஏணி ............................................ 640
நூழிலாட்டு .......................................... 257

நெ

நெடியோன் .............................................. 61
நெடு வேள் ............................................ 614
நெய்தல் ............................ 250, 282, 325
நெல் ........................................................ 110
நெல்லின் ஊர் ................................ 87–88

நோ

நோய் ........................................................ 13

நௌ

நௌவி .................................................. 275

ப

பகடு .................................. 94, 259, வெ. 1
பகல் .................................................. 7, 546
பகன்றை ................................................ 261
பகைப் புலம் .......................................... 689
பகைவர் .................................................. 201
பகைவர் தேஎம் .................................... 176
பசுங்காய் (பாக்கு) ................................ 400
பட்டினம் ................................................ 537

பண் ........ 560
பண்ணியக் கடை ........ 661
பண்ணியம் ........ 405, 422, 506
பணிந்தோர் ........ 229
பணியார் ........ 230
பணிலம் ........ 380, 621
பணை ........ 154, 234, 414
பணை (முரசு) ........ 362
பதாகை ........ 373
பரங்குன்று ........ 263
பரதர் ........ 317
பரதவர் ........ 144
பரதவர் மகளிர் ........ 97
பரி ........ 51, 440
பருந்து ........ 231, 502
பல்சாலை முதுகுடுமி ........ 759
பல் வேறு உருவின் காய் ........ 529
பல் வேறு உருவின் பழன் ........ 529
பலவின் களை ........ 527
பலி ........ 459
பழஞ் செருக்காளர் ........ 669
பழனம் ........ 257
பறை ........ 262, 523

பா

பாசறை ........ 231
பாட்டியார் ........ 749
பாட்டு ........ 616
பாண் சேரி ........ 269
பாணர் ........ 219, 749
பாலை ........ 314
பாவை ........ 410, 723
பாழ் ........ 158
பானாள் ........ 542

பி

பிடகை ........ 398
பிடி ........ 634, 676
பிண்டி ........ 701
பிணவு ........ 174
பிணை ........ 276
பிரசம் ........ 717
பிரம்பு ........ 435
பிறை ........ 193

பு

புகழ் அவை ........ 778
புகையினர் ........ 466
புத்தேள் உலகம் ........ 698
புதல்வர் ........ 600
புதவு ........ 65, 165
புது மலர் ........ 564
புரவி ........ 184, 323, 387, 391, 660, 689
புரிசை ........ 352
புரையோர் ........ 737
புலவர் ........ 750
புலி ........ 298, 643
புழல் ........ 395
புள் ஒப்பும் இசை ........ 95
புளி ........ 318

பூ

பூந்தொடி ........ 446
பூரிமம் ........ 18
பூவினர் ........ 397, 466
பூவும் புகையும் ........ 476
பூவும் புகையும் ஆயும் மாக்கள் ........ 515

பெ

பெயல் ........ 107, 244
பெரிய கற்றல் ........ 767
பெரியோர் ........ 192, 227, 473
பெருஞ்செய் ஆடவர் ........ 746
பெருநாள் இருக்கை ........ 525
பெருநீர் ஒச்சுநர் ........ 321
பெரும்பாண் இருக்கை ........ 342

**பே**

பேய் ........ 632
பேய் மகளிர் ........ 25, 163
பேர் இளம் பெண்டிர் ........ 465

**பை**

பைக்கலம் ........ 228

**பொ**

பொதியில் ........ 161
பொதும்பர் ........ 115
பொய்கை ........ 171, 253, 654
பொய்தல் ........ 589
பொருநர் ........ 99
பொருப்பு(பொதியில் மலை) ........ 42
பொலங்கலம் ........ 779
பொலந் தாமரைப் பூ ........ 103
பொலம் பூண் ஐவர் ........ 775
பொலம் பூந் தும்பை ........ 737
பொறி மயிர் வாரணம் ........ 673
பொன் ........ 274, 445, 505
பொன் அவிர் இழை ........ 666
பொன் உரை காண்மர் ........ 513
பொன் சுடு நெருப்பு ........ 682

**போ**

போர்க்களம் ........ 28, 735

பௌ

பௌவம் ........ 76, 113

**ம**

மகிழ்ந்தோர் ........ 364
மஞ்சள் ........ 289
மடை ........ 607
மண்டிவம் ........ 190, 390
மணி ........ 94, 273, 282, 292
மதாணி ........ 461
மதி ........ 195, 452, வெ, 1
மதில் ........ 66
மதுரை ........ 699
மந்தி ........ 334
மயில் ........ 333, 418, 608, 675, 706
மரன் ........ 12
மருதம் ........ 270
மருதம் (பண்) ........ 658
மல்லிகை ........ வெ. 2
மழலை ........ 668
மழவர் ........ 395, 687
மழுவாள் நெடியோன் (சிவன்) ........ 455
மழை ........ 10
மறம் கொள் சேரி ........ 594
மற மைந்தர் ........ 53
மறவர் ........ 596, 726, 729
மன்று ........ 615
மனை ........ 268, 423

**மா**

மா ........ 49, 157, 224, 706, 729
மாகதர் ........ 670
மாங்கனி மாடம் ........ 355, 406, 429, 451
மாண் இழை மகளிர் ........ 680
மாதிரம் ........ 5, 10
மாயப் பொய் ........ 570
மாயோன் ........ 591
மாலை ........ 558
மாறன் ........ 772
மான விறல் வேள் ........ 344

**மி**

மிளை ........ 64
மின்னு ........ 665, 679

**மீ**

மீன் ........ 255, 269, 320, 375
மீன் (நட்சத்திரம்) ........ 769
மீன் (வெள்ளி) ........ 108

**மு**

முசுண்டை ........ 281
முண்டகம் ........ 96

முத்தம் ................................ 315, 505, 681
முத்து ................................ 135
முது பெண்டிர் ................................ 409
முது வெள்ளிலை ................................ 119
முந்நீர் ........... 2, 75, 235, 361, 425, 768
முரசம் ........................ 80, 232, 349, 733
முரசு ................................ 129, 672
முருகு ........................... 38, 181, 611, 724
முல்லை ................................ 281, 285
முழவு ................................ 99, 114, 327,
................................ 396, 585, 605, 307

மே

மேய் புலம் ................................ 303
மேலோர் ................................ 381

மை

மை ................................ 417, 754

மோ

மோகூர் ................................ 508
மோதகம் ................................ 626

யா

யாமம் ................................ 584
யாழ் ................................ 584, 605, 658
யாறு ................................ 359
யானை ................................ 47, 303, 348,
................................ 383, 688, 735, 744
யானையங்குருகு ................................ 674

யூ

யூபம் ................................ 27

வ

வங்கம் ................................ 536
வடபெருங்கல் (மேரு) ................................ 70
வண்டினம் ................................ 574
வண்டு ................................ 253, 475
வந்திகை ................................ 415
வம்பு நிறை முடிநர் ................................ 514
வய வேந்தர் ................................ 30
வயிர் ................................ 185
வயிரியர் ................................ 628, 750
வரகு ................................ 272
வரையா வாயில் ................................ 748
வல்சி ................................ 395
வல்லோன் (சித்திரகாரி) ................................ 723
வலைஞர் ................................ 256
வள்ளை ................................ 255
வள நகர் ................................ 741
வளி ................................ 5, 453
வளை ................................ 159, 316
வளை (சங்கு) ........................ 136, 185, 375
வறை ................................ 756
வன் கை வினைஞர் ................................ 262

வா

வாடாப் பூ ................................ 457
வாணன் ................................ 203
வாய்மொழி ................................ 19, 774
வாள் ........................... 53, 222, 434, 727
வாளர் ................................ 636
வானம் ....... 50, 107, 267, 479, 678, 741
வானவ மகளிர் ................................ 582

வி

விசயம் ................................ 625
விசும்பு ................................ 334, 454
விசும்பு வழங்கும் பெரியோர் ............... 495
விடியல் ................................ 664
விரை ................................ 552
வில் ................................ 142, 728
விலைஞர் ................................ 405
விலோதம் ................................ 449
விழவு ........................... 98, 328, 428, 628
விளக்கம் ................................ 556
விளையுள் ................................ 109
விறலியர் ................................ 218
வினைஞர் ................................ 539

**வெ**

வெண் திங்கள் ........................................ 8

வெதிர் ................................................ 302

வெள்ளம் (பேரெண்) ............................. 22

வெள்ளி ............................................. 280

வெறிக்களம் ...................................... 284

வெறுக்கை ......................................... 215

**வே**

வேங்கை ............................................ 296

வேதம் ....................................... 468, 656

வேதாளிகர் ........................................ 671

வேல் .................................................. 690

வேலன் ............................................... 611

வேழம் ...................................... 257, 392

வேள்வி ............................................. 760

வேளிர் ................................................. 55

**வை**

வை (வைக்கோல்) ............................. 307

வைகல் .............................................. 324

வைகறை ................................. 673, 686

வையம் .............................................. 470

வையை ................................... 340, 356

# 7. [1]நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயர் பொழிந்தென
வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோட
னீடிதழ்க் கண்ணி நீரிலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாட்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
யகலிரு விசும்பிற் றுவலை கற்ப
வங்க ணகல்வய லார்பெயற் கலித்த
வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமட லவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை

---

1. இது நக்கீரராற் பாடப்பட்டது.

நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லன் மூதூ
ராறுகிடந் தன்ன வகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்
திருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோண்
மெத்தேன் சாயன் முத்துறழ் முறுவற்
பூங்குழைக் கமர்ந்த வேந்தெழின் மழைக்கண்
மடவரன் மகளிர் பிடகைப் பெய்த
செவ்விய யரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கி னீர்ந்திரிக் கொளிஇ
நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவ
லின்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணா
திரவும் பகலு மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டந்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தன் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுந் தகர முளரி நெருப்பமைத்
திருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்பப்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த

செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானூற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய் கதவந் தாழொடு துறப்பக்
கல்லென் றுவலை தூவலின் யாவருந்
தொகுவாய்க் கன்னற் றண்ணீ ருண்ணார்
பகுவாய்த் தடவிற் செந்நெருப் பார
வாடன் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டில
மிருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்
தொருங்குடன் வளைஇ யோங்குநிலை வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமான் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன வோங்குநிலை வாயிற்
றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பிற்

றருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற வேற்றை
குறுங்கா லன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிட குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலிந்துவீ ழருவிப் பாடுவிறந் தயல
வொலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
யறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ளணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா வருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவ
ருருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லிற்
றசநான் கெய்திய பணைமரு ணோன்ற
ளிகன்மீக் கூறு மேந்தெழில் வரிநுதற்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீரும் செம்மையு மொப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற வீரிரை யிடையிடுபு
தூங்கியன் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்
டுள்ளி நோன்முதல் பொருத்தி யடியமைத்துப்

பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமா ணுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகளர்ந்
தூட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுண ரன்னத் தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை
யாரந் தாங்கிய வலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழர் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகின் மரீஇய வேந்துகோட் டல்கு
லம்மா சூர்ந்த வவிர்நூற் கலிங்கமொடு
புனையா வோவியங் கடுப்பப் புனைவி
றளிரேர் மேனித் தாய சுணங்கி
னம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியன் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவு நெடியவு முரைபல பயிற்றி

யின்னே வருகுவ ரின்றுணை யோரென
வுகத்தவை மொழியவு மொல்லாண் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கா
லூறா வறுமுறை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பி னாடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
வுரோகிணி நினைவன னோக்கி நெடிதுயிரா
மாயிதழ் ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
கின்னா வரும்படர் தீர விறறந்
தின்னே முடிகதில் லம்ம மின்னவி
ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ
ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல
வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
விருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்
புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ
வாடோட் கோத்த வன்கட் காளை
சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

**கூதிர் காலத்தின் இயல்பு**

பருவம் பொய்யாத முகில்கள் மேருவை வலமாக வந்து உலகம் குளிரும்படி மழைபெய்தன. மந்தைகளை அடித்து ஓட்டும் கோலைக் கையிலுடைய இடையர் வெள்ளத்தை வெறுத்தவர்களாய் ஏறுகளுடைய மந்தைகளை மேயும்படி மேட்டுநிலத்தே விட்டனர். அவர்கள் மார்பிடத் தணிந்த காந்தள் இதழ்களாற் கட்டிய மாலைகள் மழைத்துளிகள் வீழ்தலால் அழகு அழிந்தன. குளிரால் வருந்தும் இடையர் கையிடத்தே நெருப்பைக் கொண்டு அலகுடன் அலகு சேர்ந்து பற்பறை கொட்டும்படி நடுங்கினர். விலங்குகள் மேயாது நின்றன. குரங்குகள் குளிரால் நடுங்கின. காற்று மிகுதியால் பறவைகள் மரங்களினின்றும் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் கன்றுக்குப் பால் கொடாது காலால் உதைத்தன. புதர்களில் நின்ற முசுட்டை வெண்ணிற மலர்களை மலர்ந்தது. பீர்க்குப் பொன்னிறப் பூவைப் பூத்தது. விரைந்து பாயும் நீருக்கெதிரே கயல் மீன்கள் நீந்திச்சென்றன. மழை ஓய்ந்ததும் பசியகாலுடைய கொக்குத்திரளும் வரியுடைய நாரைக் கூட்டமும் பரந்த கரிய வண்டலும் சேறும் பரந்த ஈரமுடைய வெண்மணலிலிருந்து மீன்களை உண்டன. வானில் எழுந்த வெள்ளிய முகில்கள் துளிகளைச் சிதறின. வயல்களில் நீருக்குமேல் உயர்ந்து வளர்ந்த நெற் பயிர்களீன்ற கதிர்கள் முற்றி விளைந் திருந்தன. பருத்த அடியினையுடைய கமுகின் நீலமணி போன்ற தலையினை யுடைய காய்கள் உள்ளே நீர் நிறைந்தாற்போல் திரண்டு முற்றியிருந்தன. மலர்கள் நிறைந்த சோலையிடத்துள்ள மரங்கள் கிளைகளிலே தங்கிய நீரைச் சொரிந்தன. உயர்ந்த மாடங்களும் செல்வமும் மலிந்த பழைய ஊரிடத்து அகன்று நீண்ட தெருக்கள் ஆறு கிடந்தாற் போல் காட்சியளித்தன. தழை விரவித் தொடுத்த மாலைகளைக் கழுத்தில் அணிந்தவரும், வண்டு மொய்க் கின்ற கள்ளை உண்டுகளிப்பு மிகுந்தவர்களும், முன்னும் பின்னும் தொங்கும் படி உடைஅணிந்தவர்களும், முறுக்கேறிய உடம்பினருமாகிய மிலேச்சர் மழைத்துளிக்கு அஞ்சாதவர்களாய் தெருக்களிலே திரிந்தனர். மாடப் புறாக்கள் இராக்காலமும் பகற்காலமும் அறியாது மயங்கின; சேவற் புறா தனது பேட்டுடன் வெளியிற் சென்று இரைதேடி உண்ணாது பலகை மீது இருந்து கடுத்தகால்கள் ஆறும்படி காலை மாற்றி மாற்றி இருந்தது.

**மகளிர் கூந்தலுக்கு நறும்புகை ஊட்டுதல்**

வேலை புரிவோர் காவலுடைய வீடுகளில் சாந்தரைக்கும் அம்மியிலே கத்தூரி முதலிய பசிய கூட்டை அரைத்தனர். ஆகவே, வடநாட்டார் கொண்டுவந்த வெள்ளிய சந்தனக் கற்களும் தெற்கே கிடைக்கின்ற சந்தனக் கட்டைகளும் பயன் படாது கிடந்தன. குளிர் மிகுதியால் கூந்தலிடத்து மாலையைச் சூட முடியாத மகளிர் அதனிடத்துச் சில மலர் வைத்து முடிக்க விரும்பிச், சந்தனக் கட்டையை எரித்து அதனிடத்தே அகிற் கட்டையையும் செவ்வரக்கையும் இட்டுப்புகைத்தனர். கைதேர்ந்த கம்மியரால் அழகு பெறச் செய்யப்பட்ட செந்நிற ஆலவட்டங்கள் சிவந்த உறைகளில் இடப்பட்டும் சிலந்தியின் வெள்ளிய நூலாற் சூழப்பட்டும் வளைந்த முளைகளில் தொங்கின.

**இளையோரும் முதியோரும் தீக்காய்ந்தனர்**

படுக்கையிடத்தில் இளவேனிற் காலத்துக் குளிர்ந்த தென்றற் காற்றை வீசுகின்ற சாளரங்களில் உலாவுவாரின்மையால் அவற்றின் இரண்டு கதவுகளும் சேரும்படி தாழிட்டடைக்கப்பட்டிருந்தன. வாடைக் காற்றுக் கல்லென்னும் ஓசையுடைய சிறு திவலைகளை எங்கும் பரப்பிற்று. இளையோரும் முதியோரும் குளிர் மிகுதியால் குவிந்த வாயுடைய கரகத்தில் நீருண்ணாது தீச்சட்டியிலுள்ள நெருப்பில் குளிர் காய்ந்தனர். ஆடும் மகளிர் தாம்பாடுகின்ற பாடல்களைக் கரிய தண்டினையுடைய யாழில் வாசித்தற்கு நரம்புகளைத் தமது தனங்களிடத்தே தடவிவெப்பம் ஊட்டி யாழைப் பண் நிற்கும் முறையில் நிறுத்தினார்கள். இவ்வாறு கார்காலம் மழை மிகுந்து கூதிர் காலமாக நிலை பெற்றது.

**சிற்ப நூலார் அரசனுக்கு மாளிகை அமைத்தல்**

சித்திரைத் திங்களின் மத்தியில் ஒரு நாளில் பதினைந்தாவது நாழிகையில் அரசனுடைய மனை அமைப்பதற்கு நாள் குறிக்கப் பட்டது. சிற்பநூலோர் அம் முகூர்த்தத்தில் நூலை நேரே பிடித்துத் திசையை அறிந்து அத்திசைகளுக்குரிய கடவுளரை வழிபட்டனர்; பின்பு அரசனுக்கு வேண்டிய மனைகளையும் வாயில்களையும் மண்டபங்களையும் வகுத்தனர். அவைகளைச் சுற்றி மதில் இடப்பட்டது. மதிலின் வாயில் இரும்பினால் அமைக்கப் பட்டுச்

செவ்வரக்குப் பூசப்பட்டது. அதன் கதவுகள் சேர்த்துத் தாழிடும் படி இரண்டாக அமைக்கப்பட்டன. [1]உத்தரக்கற்கவியில் பல மரங்கள் இடை வெளியின்றிச் செருகப்பட்டன. உத்தரக் கற்கவியின் நடுவே இலக்குமியும் இருபுறத்தும் செங்கழுநீர்ப் பூவுமாகிய வேலைப்பாடு செய்யப் பட்டிருந்தது. நிலைகள் மீது நெய் பூசிச் சிறுவெண்கடுகு அப்பப்பட்டிருந்தது. வாயில் மலையை இடையே திறந்தாற்போன்று யானைகள் வெற்றிக் கொடியுடன் செல்லும்படி உயரமுடையது. அதனிடத்தே கவரிமாவும் அன்னப்புள்ளும் தாவித்திரிந்தன. முற்றம் வெண்மணல் பரப்பப்பட்டு இலக்குமி தங்கும் சிறப்புப் பெற்றிருந்தது.

**அந்தப்புரம்**

பந்தியில் நின்று வெறுத்தனவும் பிடரிமயிரினை யுடையனவு மாகிய குதிரைகள் புல்லை அதக்குதலால் ஓசை எழுந்தது. நிலா முற்றத்தில் நீர் வந்து கொப்பளிக்கும்படி அமைக்கப்பட்ட குழாய் மீனின் அங்காந்தவாயைப் போன்றிருந்தது. குழாயினின்றும் விழுந்த நீர் நிறைதலினாலே கலங்கி ஓடும் அருவி ஓசை செய்தது. அதன் பக்கத்தே மயில்கள் கொம்பு வாத்தியத்தின் ஒலி போல் ஆரவாரித்தன. இவ்வோசைகளெல்லாம் மலைகளில் எழுகின்ற ஆரவாரத்தை ஒத்தன. கோயிலின் அந்தப்புரத்தேயுள்ள தூண்கள் நீல மணியால் அமைக்கப்பட்டவை போன்று கருமையும் திரட்சியும் பெற் றிருந்தன. உயர்ந்த சுவர்கள் செம்பினாற் செய்தாற் போன்ற பல வேலைப் பாடுகளுடையனவாயிருந்தன. சுவரின் பல விடங்களில் பல பூக்களை யுடைய கொடிகள் விளங்கும்படி செஞ்சாந்தினால் எழுதப்பட்டிருந்தன. அவை பல நிறமுடையனவாகத் தோன்றின. கோயிலின் அந்தப்புரத்தே யவனர் செய்த பாவை விளக்கின் நெய் நிறைந்த தகளியில் பெரிய திரிகள் கொளுத்தி எரிய விடப்பட்டிருந்தன. அரசி இருக்கும் அந்தப்புரம் விளக்கில் நெய் வற்றி ஒளி மழுங்கிய காலத்துப் பாண்டியனல்லது வேறு குற்றேவல் செய்யும் ஆண்கள் திரியைத் தூண்டாத அரிய காவலையுடையது.

1. நிலையைத் தாங்கும் சுவரின் பகுதி.

### அரசி பள்ளிகொள்ளும் கட்டில்

பள்ளியறையிலே பாண்டிமாதேவி பள்ளிகொள்வாள். அவள் பள்ளி கொள்ளும் கட்டில் வட்டவடிவினது; நாற்பதி யாண்டு நிறைந்து போர்க் களத்தே பட்ட களிற்றின் தானாக வீழ்ந்த மருப்பினைச் சீவிக் கம்மியரால் மூட்டுவாய் தெரியாமல் பொருத்தி அமைக்கப்பட்டது. தச்சர் தமது உளி களால் இலையின் வடிவங்களை அதன் இடையே செதுக்கி யுள்ளார்கள்; பல நிற மயிர்களை[1] உள்ளே வைத்து அவற்றின் மேலே சிங்கம் முதலிய வற்றை வேட்டையாடுகின்ற வடிவாகச் செய்த தகடுகளை வைத்தும், முல்லைப் பூக்களையும் பிறபூக்களையும் அமைத்தும் சாளரங்களாகத் திறந்த வெளி களை ஆணிகளால் தைத்தும் பல வேலைப்பாடுகள் செய்துள்ளார்கள். நூலிற் கோக்கப்பட்ட முத்து மாலைகள் கட்டிலைச் சூழ்ந்து தொங்கும்படி தூக்கப் பட்டன. நடுவேயுள்ள வெளி புலியின் நிறமுடைய நாடாவினாற் பின்னப் பட்டது. கால்கள் சூல்கொண்ட பெண்களின் தனங்கள் போன்று திரண்டு ஓரிடத்தில் சிறுமையும் ஓரிடத்தில் பருமையும் தோன்றும் படி வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தன. இவ்வியல்பினதாகிய படுக்கைமீது பேட்டுடன் சேர்ந்த அன்னச் சேவலின் தூவியைப் பரப்பி அதன்மேல் கஞ்சி தோய்த்த வெள்ளைத் துகிலினை விரித்து அதன் மீது செங்கழுநீர் முதலியவற்றின் பூவிதழ்கள் பரப்பப்பட்டன.

### தோழியர் அரசியைத் தேற்றுதல்

இராசாமாதேவி அப்படுக்கை மீது கிடந்து அரசனது பிரிவாற்றா மையால் துயர் உழந்து தனது அணிகலன் முதலிய வற்றை வெறுத்தாள். முத்துக்களைக் கோத்துச் செய்த கச்சுச் சுமந்த தனங்கள் மீது தாலிநாண் ஒன்றுமே கிடந்தது; பொன்வளைகள் கிடந்து தழும்பேறிய கையில் வலம்புரிச் சங்காற் செய்த வளையலும் காப்பாகக் கட்டிய நூலுமே கிடந்தன; பூத்தொழிலுடைய பட்டாடையை உடுக்கும் அரையில் நூலாற் செய்த மாசேறிய ஆடை கிடந்தது; கையினால் தடவாமையால் உலர்ந்த மெத்தென்ற மயிர்கள் சிதைந்து நெற்றியிற் படும்படி கிடந்தன. இவ்வாறு கூதிர்

1. புலி முதலியவற்றின் வரி தோன்ற.

காலத்து நடுயாமத்தே அரசி துயிலின்றிக் கிடந்தாள். அப்பொழுது அவள் தோழியர், "உனது மனதுக்கினியவர் இப்பொழுதே வருவர்" என்பன போன்ற பொருளோடு புணராப் பொய்மொழியும் மெய் மொழியுமாகிய உரைகள் பல வற்றைச் சொல்லித் தேற்றினர்; அவள் அவற்றைக் கேட்டும் தேறாளாயினாள். மெழுகு பூசி வழித்த கட்டிலின் மேற் கட்டி மேலே புதிதாக எழுதிய திங்களின் பக்கத்தே இருக்கும் உரோகிணியைப் பார்த்து, "இது போன்று யாமும் பிரிவின்றியிருக்கப் பெற்றிலேமோ" என்று சிந்தித்துப் பெருமூச்செறிந்தாள். கண்களினின்றும் ததும்புகின்ற நீரைத் தனது [1]முடக்கு மோதிரம் அணிந்த சிவந்த விரலால் எடுத்துத் தெறிந்தாள். மாந்தளிர் போன்ற மேனியும் அம்மேனியின் இடையே பரந்த சுணங்கும், மூங்கில் போற்றிரண்ட மெல்லிய தோளும், கச்சினால் வலித்துக் கட்டப்பட்ட தாமரை முகை போன்ற தனங்களும், ஒடுங்கி வளைகின்ற இடையும், மெத்தென்ற தன்மையும் உடைய ராகிய தோழியர், அவளது செம்பஞ்சு ஊட்டப்படாத அடிகளைத் துயில் உண்டாகுமாறு மெல்ல வருடினார்கள். நிறங்கள் ஊட்டி எழுதப் பெறாத வடிவுடைய ஓவியம் போன்றவளாய் தனிமை யோடு கிடக்கும் அன்புமிகு கின்ற அரிவைக்குக் கொற்றவையை நோக்கிப் பரவுகின்றவள் கூறுகின்றாள்.

**கொற்றவையைப் பரவும் தேவராட்டி கூறுகின்றாள்**

அம்மா! கேட்பாயாக. சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமை யூரான், இருங்கோ வேண்மான், பொருநன் முதலில் எழுவரோடு பொருதல் குறித்துச் சென்ற அரசன் மாற்றாரின் பாசறையிடத்துள்ளான்.

நெற்றிப் பட்டத்தையுடைய யானைகளைக் கொன்ற வீரர் மாற்றாரின் விளங்கும் வாளால் வெட்டிக் காயப்படுத்தப் பட்டனர். அரசன் அவர்கள் புண்களைப் பரிகரித்தற்கு நடுயாமத்தே நித்திரை கொள்ளாதவனாய் வெளியே போந்து திரிவான். வாடைக் காற்று வீசுந்தோறும் விளக்குகள் தெற்கு நோக்கிய தலை யுடையனவாய் எரியும். வேப்பமாலையைத் தலையிலே கட்டிய வேலுடன் முன்னே நடந்து செல்கின்ற படைத்தலைவன் புண்பட்ட

1. முடக்கு–மீனின் அங்காந்த வாய் போன்ற மோதிரம்.

வீரரை முறையே காட்டுவான். அரசன் அவர்களின் அகம் மலரும் படி முகமலர்ந்து இன்னுரை கூறுவான். ஆங்காங்குக் கட்டி நிற்கும் குதிரைகள் தம்மீது விழும் மழைத்துளிகளை உதறும். அரசன் வாளெடுத்தற்குத் தோளிலே வைத்த வலக்கையனாய் இடத்தோளினின்றும் நழுவி வீழ்கின்ற உத்தரியத்தை இடப்பக்கதே அணைப்பான். முத்துமாலை கட்டப்பட்ட வெற்றிக்குடை மழையை மறைக்கும். இவ்வாறு பாசறையிலிருந்து போர் செய்கின்ற தொழில் அரசனுக்கு வெற்றியுண்டாகி இனிது முடிவதாக.

### தனிப் பாடல்

வாடை நலிய, வடிக் கண்ணாள் தோள் நசைஇ,
ஓடை மழ களிற்றான் உள்ளான்கொல்-கோடல்
முகையோடு அலமர, முற்று எரி போல் பொங்கி,
பகையோடு பாசறை உளான்?

• • •

## சிறப்புப் பெயர் முதலியவை


**அ**

அகல் ........ 102
அகில் ........ 56
அணை ........ 133
அம்பணம் ........ 96
அயிர் ........ 56
அருவி ........ 97
அரை நாள் ........ 75
அறுவையர் ........ 35
அன்னம் ........ 92, 132

**ஆ**

ஆடல் மகளிர் ........ 67
ஆடவர் ........ 107
ஆடு (மேட ராசி) ........ 160
ஆர்கலி (வெள்ளம்) ........ 3
ஆரம் ........ 136
ஆவணம் ........ 44
ஆறு ........ 30

**இ**

இரு கோல் குறிநிலை வழுக்காமை .... 74
இரும்பு ........ 80
இரும்பு செய் விளக்கு ........ 42
இல் ........ 114

**உ**

உரோகிணி ........ 163
உள்ளி ........ 122
உளி ........ 119

**ஊ**

ஊறா வறு முலை ........ 158

**எ**

எஃகம் ........ 176
எகினம் ........ 91
எரி (விளக்கு) ........ 103

**ஏ**

ஏறு ........ 4

**ஐ**

ஐயவி ........ 86

**ஒ**

ஒடை ........ 169, வெ. 1

**க**

கட்டளை (சாளரம்) ........ 62
கடிகை நூல் ........ 142
கண்ணி ........ 6
கம்மியன் ........ 57
கமுகு ........ 23
கயல் ........ 18
கழுவுறு கலிங்கம் ........ 134
களிறு ........ 171, வெ. 1
கறவை ........ 10
கன்று ........ 11
கன்னல் ........ 65

**கா**

கா ........ 27
காடி ........ 134

**கி**

கிம்புரி ........ 96

**கு**

குடக்கு ........ 74

குவளை ........ 83
குழை ........ 38
குறுந் தொழுவர் ........ 49

கூ

கூட்டு ........ 50
கூதிர் ........ 72
கூதிர்ப் பானாள் ........ 12

கை

கைக் கொள் கொள்ளியர் ........ 8
கை வல் கம்மியன் ........ 85

கொ

கொக்கு ........ 15
கொடி ........ 87, 109, 113
கொள் ........ 50

கோ

கோடல் ........ 5, வெ. 1
கோவலர் ........ 3

சா

சாந்து ........ 52
சாலேகம் (சாளரம்) ........ 125

சி

சிலம்பி ........ 59
சின்மலர் ........ 54

சீ

சீறியாழ் ........ 70

சு

சுதை ........ 110

செ

செம்பு ........ 112
செவ்வரக்கு ........ 80
செவிலியர் ........ 153

சே

சேக்கை ........ 135
சேவல் ........ 45
சேறு (சாதிலிங்கம்) ........ 157

த

தகரம் ........ 55
தடவு (இந்தளம்) ........ 66

தா

தாழ் ........ 84

தி

திரி ........ 42

து

துணை ........ 137
துணை மாண் கதவம் ........ 81
துணையோர் ........ 155

தெ

தெரு ........ 30
தென்வளி ........ 61

தே

தேறல் ........ 33

தொ

தொடை ........ 68

ந

நகர் ........ 49, 90
நரை ........ 152

நா

நாகம் (யானை) ........ 117
நாரை ........ 17
நாளொடு பெயரிய கோள் அமை விழுமரம் (உத்தரம்) ........ 82

நி

நிலவு ........ 95

நூ

நூல் அறி வுலவர் ........ 76
நூற் கலிங்கம் ........ 146

நெ

நெடு வெண் முற்றம் ........ 95
நெய் அணி ........ 86
நெருப்பு ........ 55, 66
நெல் ........ 22, 43

ப

படலைக் கண்ணி .................................... 31
பணை ...................................................... 115
பரப்பு ....................................................... 73
பள்ளி ...................................................... 186

பா

பாசறை ....................................... 188, வெ. 1
பாசறைத் தொழில் ................................ 188
பாடல் ....................................................... 67
பாண்டில் (வட்டக் கட்டில்) ................... 123
பாண்டில் விளக்கு ................................ 175
பாவை ...................................................... 101

பி

பிடகை ...................................................... 39
பிடி ........................................................... 178
பித்திகம் ................................................... 40

பீ

பீரம் ........................................................... 14
பீலி ............................................................ 98

பு

புதுப் பெயல் ................................................ 2
புரவி .......................................................... 93
புலி ........................................................... 126
புனையா ஓவியம் .................................. 147

பூ

பூந் துகில் ................................................ 145

பெ

பெருந்தகை ........................................... 106
பெரும் பனி ................................................. 7

பொ

பொங்கல் வெண் மழை .......................... 19
பொலந் தொடி ........................................ 141

போ

போர் வாய் கதவம் .................................. 63

ம

மண்டிலம் ................................................ 161
மணி ......................................................... 111
மதலைப் பள்ளி ....................................... 48
மந்தி ............................................................ 9
மயில் ......................................................... 99
மலர் .......................................................... 43
மன்று ......................................................... 46
மனை வகுத்தல் ...................................... 78

மா

மா ........................................................ 9, 179
மாடம் ....................................................... 29
மாலை ....................................................... 44

மு

முசுண்டை ................................................ 13
முத்து ............................................. 37, 125
முரண் மிகு சிறப்பின் செல்வன் ....... 162
முல்லை .................................................. 130
முழு வலி மாக்கள் (மிலேச்சர்) ............. 32
முற்றம் ..................................................... 90
முன்னோன் .............................................. 177

மூ

மூதூர் ....................................................... 29

மெ

மெழுகு செய் படம் ................................ 159

ய

யவனர் ...................................................... 101

யா

யாமம் ...................................................... 186
யானை ..................................................... 169

வ

வட்டம் (ஆல வட்டம்) ............................. 58
வடந்தை ................................................. 173
வடவர் ....................................................... 51
வண்டு ....................................................... 33
வணக்கு ................................................. 143
வம்பு ........................................................ 150
வயமான் ................................................ 128

வயல் ........................................................ 21
வயிர் ........................................................ 99
வரை ........................................................ 108
வல்லோன் ............................................. 118
வலம்புரி ................................................ 142
வள்ளி (சங்குவளை) ............................ 36

**வா**

வாடை ................................................. வெ.1
வாயுறை ................................................ 140
வாள் தோட் கோத்த வன்
கண் காளை ......................................... 182
வாளைப்பகுவாய் ................................. 143
வான் ....................................................... 60
வானம் ....................................................... 2

**வி**

விசும்பு .................................................... 20
வியல் வாய் மண்டிலம் .......................... 73
வில் ........................................................ 109

**வெ**

வெண்குடை ......................................... 184
வெள்ளி .................................................. 110

**வே**

வேந்தர் .................................................. 187
வேம்பு .................................................... 176
வேழம் ....................................................... 87
வேனிற் பள்ளி .......................................... 61

**வை**

வையகம் ..................................................... 1

# 8. [1]குறிஞ்சிப்பாட்டு

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்ந்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருஞ் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
வாற்றின் வாரா ராயினு மாற்ற
வேனையுல கத்து மியைவதா னமக்கென

1. இஃது ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்தற் பொருட்டுக் கபிலர் பாடியது. காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானாச் சிறுமைய ளிவளுந் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்
வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா தீமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
யெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மரமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி
யுரவுக்கதிர் தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிலைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீ
ரவிர்துகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்

பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ் தொத் துந்தூழ் கூவிள
மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடச
மெருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇயப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கத் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்த
றாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்க
மீங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
யடும்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரந்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி

யாரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்
பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிதிஞ் றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயித ழலரி
யந்தொடை பொருகாழ் வளைஇச் செந்தீ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து

நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்த வீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரி
னுரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளு
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
மிடும்பை கூர் மனத்தே மருண்டுபுலம் படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெ
மலமர லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லியி வினிய மேவரக் கிளந்தெ
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி
யசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கிக்
கெடுதியும் விடீஇ ராயி னெம்மொடு
சொல்லலும் பழியோ மெல்லிய லீரனெ
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவி ழலரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெஞ்
சொல்லற் பாணி நின்றன னாக
விருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோண் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்தி மகிழ்சிறந்த
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனா

தரவுற ழஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா லுடற்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிரக்
கார்ப்பெய லுருமிற் பிளறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்
திணிநிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎ
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரைவுத்திரை
யடுங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசையல் யாவது
மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்க னந்நிலை
நாணு முட்கு நண்ணுவழி யடைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெரி பிரசமொ டீண்டிப் பலவி

னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேற
னீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொரஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனம் விழைதரு பெருவிற
லுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீர் தெண்ணீர் குடத்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லை செல்ல வேழுர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மரமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற

வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
யந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துணைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
துணைபுண ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்தப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று
மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதநாய் குரைப்பி
நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனிய லுறாஅ
னிளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை தீர்ந்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரெறி மலரிற் சாஅயிதழ் சோரா
வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்க
ணாகத் தரிப்பணி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்கு
லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்

துருமுஞ் சூரு மிரைதே ரரவமு
மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமு
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடரக முடையவா லெனவே.

*(இது தோழி நற்றாய்க்கு அறத்தொடு நின்றதாகச் செய்யப் பட்ட பாடல். அறத்தொடு நின்ற லென்பது களவை வெளிப் படுத்தல். தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், நற்றாய் தந்தை தன்னையருக்கு அறத்தொடு நிற்கும்.)*

**தோழி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்**

*தாயே வாழ்வாயாக; அன்னாய்! யான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக. விளங்குகின்ற நெற்றியையுடைய எனது தோழி தன்னுயிரைத்தான் வைத்திராமைக்குக் காரணமாகிய தாங்கு தற்கரிய ஓர் எண்ணத்தை மறைத்து வைத்திருக்கின்றாள், அந்நினைவினால் அவளது ஆபரணங்கள் நெகிழ்ந்தன. மருந்தினால் மாற்றற் கரிய அவளது நோயை உனக்குச் சொல்லுதல் எளிதன்று; ஆகவே அதனை நான் என்னுள்ளே அடக்கி வைக் கலாயினேன். அவளுடைய அழகு கெட்டது; தோள்கள் மெலிந்தன; வளைகள் கழன்றன. இவ்வாறு நிகழும்படி அவள் தனிமையால் வருந்தும் வருத்தத்தைக் கண்டும் அது நேர் வதற்குரிய காரணம் யாது என அறியும் அறிவு இல்லையாயினை. நீ வருத்தமடைந்து ஊரிடத்துக் கட்டினாலும் கழங்கினாலும் அறிந்து குறி சொல்லுவாரை வினாவினாய். அவர் அது தெய்வத்தால் நேர்ந்த வருத்தம் எனக்கூறினர். ஆதலினால் நீ பன்னிற மலர்களும் தூபங்களும் சந்தனம் முதலியவும் கொடுத்துப் பல தெய்வங்களை வழிப்பட்டனை. அதனால் அந் நோய் தணியாமை கண்டு வருத்தமுற்று வருந்தினாய். யான் அவளிடத் துள்ள ஆற்றுதற்கரியநோய் யாதெனக் கேட்டேன். அவள் என்னை நோக்கி, "முத்தாலும் மணியாலும் பொன்னாலும் செய்த அரிய அணிகலன்கள் தொலைந்தனவாயினும் அவை பின்*

கிடைக்கவும் பெறும். அதுபோலன்றிக் குணங்களின் அமைதியும், மேம்பாடும், ஒழுக்கமும் கெட்டால் அக் குற்றத்தைக் கழுவி முன்போலப் புகழை நிறுத்துதல் குற்றமற்ற அறிவினை யுடைய முனிவர்க்கும் முடிவதன்று எனப் பழைய நூல்களை உணர்ந்த அறிஞர் கூறுவர். தலைவரும் யானும் காதல் மணஞ் செய்து கொண்டோ மென்பதை நாம் இருவரும் தாய்க்குத் தெரிவித்துக் கொள்வோமாயின் நமக்குப் புகழ் இன்றிப் பழி வருவதில்லை யாகும். இவ்வாறு நாம் நம் காதல் மணத்தை வெளிப்படுத்திய பின்பு, தமர் தலைவர்க்கே நம்மைக் கொடுக்க நேர்ந்திலராயினும் நாம் உயிர் போகும்வரையும் இவ்வருத்தத்தைப் பொறுத் திருந்தால் நமக்கு மறுமையில் இக்கூட்டம் வருவதாகும் என்று கூறினாள்; மான் போன்ற பார்வையின்றி மயங்கிய நோக்கங் கொண்டு செயலொழிந்து அயர்ந்து ஆற்றமுடியாத நோய் உடையளாயினாள். நினக்கும் இவள் வருத்தத்துக்கும் அஞ்சி இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் இருபகை அரசரைச் சந்து செய்விக்கும் சான்றோரைப் போல வருந்துகின்றேன். இருகுடி களும் ஒத்திருத்தலையும் குணத்தையும் சுற்றத்து உதவிகளையும் ஒத்து நோக்கி இக்களவு மணத்தைச் செய்தோம். முன்பு அது நிகழ்ந்த வகையைச் சொல்ல விரும்பினேன். தாயே! அதனைக் கேட்டுக் கோபம் கொள்ளா திருப்பாயாக.

**தலைவியும் தோழியும் தினைப்புனத்தே கிளி ஓட்டுதல்**

“பெரிய கதிர்களையுடைய தினையுள் வீழ்கின்ற கிளிகளை ஓட்டிப் பகற்பொழுது கழியாமுன் வீடுசேர்வீராக” என்று எங்களைப் புனத்தே போக்கா நின்றாய். யாங்களும் சென்று மரத்தினுச்சியிலே அமைக்கப்பட்ட பிரம்பினால் பின்னி அமைத்த பரணில் ஏறி இருந்தோம்; இருந்து கவணும் தட்டையும் பிறவு மாகிய கிளியோட்டும் கருவிகளை முறையே கையில் எடுத்து, “ஆயோ” என்றும் சொற்களை நடுவே சொல்லிக் கிளிகளை ஓட்டி னோம். வெயில் மிகுந்த பகற்காலத்தே பறவைகள் தாம் விரும்பும் சேர்க்கை களுக்குச் சென்றன. கடலிடத்தே நீரை உண்ட மேகம் குறு முழக்கஞ் செய்து முருகக் கடவுளின் வேல் போல் விளங்கும்படி மின்னி மலையிடத்து மழையைப் பொழிந்தது. மலைச் சிகரத்தினின்றும் வெள்ளிய அருவி குதித்தோடிற்று.

**நாங்கள் சுனை ஆடினோம்**

பளிங்கைக் கரைத்து ஊற்றினாற் போன்ற நீரிடத்து விருப்புடையே மாய் அதனிடத்தே விளையாடி நமக்கு விருப்பந் தரும் பாடல்களைப் பாடினோம். பொன்னிலே அழுந்தின நீலம் போன்று முதுகிலே தொங்கும் கூந்தலின் நீரைப் பிழிந்தோம். எங்கள் கண்கள் சிவந்திருந்தன.

**பூக்களைப் பறித்து பாறையில் குவித்தோம்**

பின்னர் அம்மலைச் சாரலிடத்துள்ள சிவந்த பூக்களையும் மலை எருக்கு, சிவந்த கோடல், ஆம்பல், அனிச்சம், செங்கழுநீர், குறிஞ்சி, வெட்சி, செங்கொடுவேரி, தேமா, செம்மணி, பெரு மூங்கில், எறுழ், மராமரம், கூவிரம், வடவனம், வெள்ளிய வொட்டப்பாலை, பஞ்சாய்க் கோரை, வெண்காக் கவணம், கருவிளம், பயினி, வானி, குரவம், பச்சிலை, மகிழ், காயா, ஆவிரை, சிறு மூங்கில், சூரை, சிறுபூளை, குன்றி, முருக்கிலை, மருது, கோங்கு, மஞ்சாடி, பாதிரி, செருந்தி, புனலி, கரந்தை, காட்டுமல்லிகை, மா, தில்லை, பாலை, முல்லை, கஞ்சா, பிடவம், செங்கருங்காலி, வாழை, வள்ளி, நெய்தல், தெங்கின் பாளை, செந்தாமரை, ஞாழல், மௌவல், கொகுடி, பவழக்கான் மல்லிகை, சாதி கருந்தாமரைக்கொடி, வெண்கோடல், தாழை, சுரபுன்னை, காஞ்சி, கருங்கு வளை, ஓமை, மாவம், இண்டம், இலவம், கொன்றை, அடும்பு, ஆத்தி, அவரை, பகன்றை, பலாசம், அசோகம், வஞ்சி, பிச்சி, கருநொச்சி, தும்பை, திருத்துழாய், தோன்றி, நந்தியா வட்டம், நறை, புன்னை, பருத்தி, பீர்க்கு, குருக்கத்தி, சந்தனம், அகில், நாரத்தம், நாகம், இருவாட்சி, குந்தம், வேங்கை, ஒண் செங்காந்தள் முதலியவற்றின் விரும்பப்படும் பூக்களை எல்லாம் பறித்து மழையினாற் கழுவப்பட்ட பாறைமீது குவித்தோம்; ஆயோ என்று இடையிடையே ஒலித்துக் கிளிகளை ஓட்டினோம்; தழைகளைக் கொய்து அரையிலே தழை உடையை உடுத்தோம்; மெல்லிய மலர்களை மிருதுவான கரிய கூந்தலில் அழகுபெறச் சாத்தினோம்.

**அழகிய தோன்றல் அவ்விடத்தே வந்தான்**

பின்னர் நெருப்புப் போன்ற நிறத்துடன் விளங்கும் அழகிய தளிருடைய அசோகின் பூந்தாது உதிர்கின்ற குளிர்ந்த நிழலில்

போயிருந் தோம். அப்பொழுது ஓர் அழகிய தோன்றல் வந்தான். அவன் மயிரிடத்து மயிர்ச் சாந்தைப் பூசி உலர்த்தி, அகிற்புகை ஊட்டி, அகில் நெய் தடவி முடிந்த நீலமணி போன்ற கொண்டை உடையன். அவன், மலையிடத்தும் நிலத்தும் மரக்கிளை களிடத்தும் சுனைகளிடத்தும் பூத்த பன்னிற மலர்களால் தொடுத்த மாலைகளையும் தாழம்பூவையும் முடியில் அணிந்து முருகன் போல் விளங்கினான்; சந்தனம் பூசிய அவனது மார்பிடத்துப்பல ஆபரணங்கள் விளங்கின; சென்னியிலே சுற்றிய பிச்சிமாலையும் காதிற் செருகிய அசோகந்தளிரும் அழகு செய்தன. அவன் ஆடையின்மேல் துலங்கும்படி கச்சுக் கட்டியிருந்தான். பூண் இறுகப் பெற்ற கையில் வில்லையும் அம்பை யும் ஏந்தி நின்றான். அவன், தன்னொடெதிர்த்த ஏறுகளை எல்லாம் வென்று புதிய ஆவைக்காணும் ஏறுபோல நம்முன் தோன்றினான். மூங்கில் முகை போன்ற வெள்ளிய பற்களுடைய நாய்கள் இமை கொட்டாது எங்களைப் பார்த்து வளைந்து வரலாயின. யாம் மிகுந்த அச்சம் அடைந்தேமாய் வேறு இடத்தே செல்லா நின்றோம். அப்போது அப்பெருந்தகையாம் வெருவுதற்கு அஞ்சி இனிய மொழிகளைச் சொல்லி எமது அழகைப் புகழ்ந்துரைத்தான். பின்னர், ''இளையீர்'' என எம்மை விளித்து, ''இவ்விடத்தே கணைக்குத் தப்பி வந்த யானையைப் பார்த்ததுண்டோ?'' என்று கேட்டான். அதற்கு யாம் பதில் எதுவும் கூறாது நின்றோம். அதுகண்டு அப்பெருந்தகை ''மெல்லியலீர் தப்பி ஓடிவந்த விலங்கைக் காட்டித்தாரீராயினும் என்னுடன் ஒரு வார்த்தை பேசுதல் நுங்கட்குப் பழியாகுமோ'' என்று கூறினான்; தழை பரந்த பூக்க ளுடைய கொம்பரை முறித்துப் பரிக்கோலை மதியாத மதயானைபோல ஓச்சிக் கல்லென்னும் ஓசைபடக் குரைக்கும் வேட்டை நாய்களின் ஓசையை மாற்றி யாங்கள் வார்த்தை சொல்வதோர் காலத்தை எதிர்பார்த்து நின்றான்.

**அவன் நம்மை யானையினின்றும் காத்தான்**

இஃது இவ்வாறாகக் குறிய கால்களையும் தினை வைக் கோலினால் வேய்ந்த கூரையையும் உடைய குடிசையிலிருக்கும் குறமகன் பிணை போன்ற நோக்கையுடைய மனைவி தானே சமைத்த கள்ளை எடுத்துக் கொடுக்க அதனை உண்டு தினைப் புனத்தைக் காவல் செய்ய மறந்தான். ஆகவே யானை தினைப்புனத்தை

அழித்தது. அதனைக்கண்டு வருத்தம் மிகுந்தவனாகிய குறவன் பாம்பின் வடிவினதாகி வில்லை வளைத்து அம்பை எய்து, தட்டையைத் தட்டி, வாயை மடித்துச் சீழ்க்கை அடித்து யானையைப் புனத்தினின்றும் வெருட்டினான். கோபம் மிகுந்த யானை மரங்களை முறித்து இடியேறுபோல் ஆரவாரஞ்செய்து கையை நிலத்தில் அடித்து எமனைப் போல எங்கள்மீது நெருங்கி வந்தது. நாம் அதனைக்கண்டு நடுக்கமுற்று உயிர் பிழைக்கும் ஓரிடத்தைப் பெறவேண்டி நாணைக் கைவிட்டு வளைகள் ஒலிப்ப அக்குரிசிலைச் சார்ந்து தெய்வமேறின மயில்போல நடுங்கி நின்றோம். அக்குரிசில் வில்லை நன்றாக வளைந்து யானையின் முகத்தில் அம்பைச் செலுத்தினான். புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகத்தில் அம்புபட்டு உருவின புண்ணிலிருந்து, முருகனால் வருத்தமுற்ற மகளிர்க்கு வெறியாடு களத்தில் குருதி குதிக்குமாறு இரத்தம் பெருகிற்று. அவ்வேழம் அவ்விடத்தில் நிற்றல் ஆற்றாது புறங் கொடுத்து ஓடிற்று.

**ஆற்றோட்டம் எங்களை இழுத்துச் சென்றது**

அதன்பின் நாம், முருகவேளுக்கு மலையிலுறையும் தெய்வ மகளிர் கைகோத்தாடுவது போன்று கடம்பின் அரையினை நெருங்கச் சூழ்ந்த மாலைபோல் கை கோத்துக்கொண்டு ஆற்றின் பெருக்கிலே குதித்து விளையாடினோம். இடிகரையினின்ற வாழை மரத்தை இழுப்பது போல ஆற்றோட்டம் எங்களை இழுத்துச் சென்றது. அது கண்டு அழகிய மாலை அணிந்த ஆண்டகை விரைந்து வந்து எங்களை எடுத்துத் தலைவியைப் பார்த்து, “நினது அழகிய நலத்தை நுகர்வேன், நின்னை நீங்கு வேனெனச் சிறிது மஞ்சாதே” என்று சொன்னான்; அவளின் ஒளி பொருந்திய நெற்றியைத் துடைத்து நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டுமென நினைத்து என் முகத்தை நோக்கிச் சிரித்தான். அங்ஙனம் அவன் அணுகிய போது அவளுக்கு இயல்பாகிய நாணமும் அச்சமும் அவ்விடத்து வந்து தோன்றுகையினாலே விரைய அவனிடத்தினின்றும் நீங்க முயன்றாள்; அவன் விடாத வனாய் அங்ஙனம் நின்ற நிலையிலே கையாலே அணைத்து இவள் மார்பு தன் மார்பிலே ஒடுங்கும்படி தழுவினான்.

**மயில்கள் கயிற்றில் ஏறி ஆடுமகள் போல் தளரும் மலை நாடு**

மிளகு பழம் சிந்திக்கிடக்கும் நீண்ட பாறையிடத்து மாம்பழங்களும் பலாப்பழங்களும் உதிர்ந்து கிடக்கும். இவற்றின் சாற்றினால் முற்றிய கட்டெளிவை நீரெனக் கருதி மயில்கள் உண்ணும்; உண்டு ஊர்களின் நடுவே கொண்டாடும் விழாக் களில் வாத்தியங்கள் ஒலிப்பக் கயிற்றிலே ஏறி ஆடுகின்ற மகளிர் தாளத்தினால் தளருமாறு போலத் தளரும். இவ்வியல்பின தாகிய மலை நாட்டையுடையவன் தான் முயங்குதலால் இவள் உள்ளத்து விரும்புவது மேல் வரைந்து கொண்டு இல்லறம் நடத்து வதாயிருக்கு மென்று உட்கொண்டான்; பலரும் வந்து உண்ணும் படி அகன்ற கதவு திறந்து கிடக்கின்ற வாயிலையுடைய செல்வ மிக்க நகரிடத்து மிடாக்களில் வருவார்க் கெல்லாம் இடும்படி சோறு சமைக்கப்பெறும். இவ்வாறு செல்வமிக்க மனை பொலிவு பெறும்படி உயர்ந்த எமது சுற்றத்தினர் விருந்துண்டு எஞ்சிய நிணமொழுகும் நெய்மிக்க சோற்றை நீ இட நானுண்ணல் உயர்ந்ததாகும்" என்று கூறினான்.

**மாலைக் காலம்**

அவன் மலையிடத்துள்ள முருகனைக் கை தொழுது பிரியேன் எனக்கூறி அவ்விடத்துள்ள தெளிந்த அருவி நீரைக் குடித்துச் சூள்உறவு செய்தான். தேவர்களும் விரும்பும் குகைகளிலுள்ள பூஞ்சோலையிலே களிறு கூட்டின கூட்டத்தை அன்றைப் பகற் பொழுதெல்லாம் போக்கினான். ஞாயிறு ஏழு குதிரை பூண்டி தேரை யேறிப் பகற் காலம் கழியும்படி மேற்கு மலையில் மறைந்தது. மான் கூட்டம் மரத்தடியிற் திரண்டது. பசுக் கூட்டங்கள் கன்றுகளை அழைக்கும் குரலுடையனவாய் மன்றுகள் நிறையும்படி புகுந்தன. கொம்பு போன்ற வளைந்த வாயையுடைய அன்றில் உயர்ந்த பெரிய பனையின் உள் மடலிலேயிருந்து பேட்டை அழைத்தது. பாம்பு தான் மேய்தல் காரணமாகத் தன்னிடத்துள்ள மாணிக்கத்தை ஈன்றது. இடையர் பல இடங் களினின்றும் ஆம்பல் என்னும் பண்ணினையுடைய அழகிய இனிய குழலிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலும் பரப்பினர். ஆம்பலின் அழகிய இதழ்கள் முறுக்கவிழ்ந்தன. பார்ப்பார்அந்திக்

காலத்துச் செய்யும் தொழில்களைச் செய்தனர். செல்வமுடைய மனைகளில் வளைகளை அணிந்த மகளிர் விளக்கை ஏற்றி அந்திக்காலக் கடமைகளைச் செய்தனர். காட்டில் வாழ்வார் விண்ணைத்தீண்டும் பரணிலிருந்து தீக்கடை கோலாலே நெருப்பைப் பிறப்பித்து எரித்தனர். மேகம் பெரிய மலையிடத்தைச் சூழ்ந்து இருண்டது. காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னும் ஓசை யுடையவாய் ஒன்றையொன்று மாறிக் கூப்பிட்டன. பறவைகள் காடுகளி லிருந்து ஒலித்தன. இவ்வாறு கோபித்த வேந்தனுடைய போரைப் போல இருண்ட மாலைக் காலம் வந்தது.

### தலைவி வரைந்து போவதை விரும்பினாள்

"விளங்குகின்ற பூணினையுடையாய்! உனது சுற்றத்தார் உனது முன்கையைப் பிடித்து நமக்குத்தர நாட்டிலுள்ளார் எல்லோரும் அறியும் நல்ல கலியாணத்தைப் பின்பு நிகழ்த்து வோம். களவொழுக்கத்தாற் பெறும் பேரின்பம் பெறுதற்கு இங்ஙனம் சில நாள் ஒழுகினேம் என்று நினைந்து நெஞ்சு கலங்கா திருப்பாய்" என அவள் நெஞ்சில் வருத்தந் தீரும்படி சொன்னான்; சொல்லிப் பசுவோடு நிற்கும் கன்றுபோல விடாமல் எம்மோடு கூட வந்து நம்மூர் வாயிலிலுள்ள நீருண்ணும் துறையில் எம்மை விட்டு மீண்டான். அச்சேர்க்கை தொடங்கிய அந் நாட்டோன்றிய விருப்பத்தோடே எந்நாளும் அவன் இரவுக் குறியிடத்தே வருவான். அங்ஙனம் வரும் போதெல்லாம் ஊர் காவலர் கடுகிக் காத்தா ராயினும், கோபமுடைய நாய் குரைத்ததாயினும், நீ துயிலுணர்ந்தா யாயினும், நிலவு வெளிப்பட்டு எறித்ததாயினும், மூங்கிலை ஒத்த அவள் மெல்லிய தோளில் பெறும் இனிய துயிலைப் பெறாது போவான். நாம் செய்யாத குறியைக் குறியெனக் கருதித் தலைவியை எதிர்ப்படாது சென்றாலும் அவன் மறுபடியும் நமது மனைக்கு வருவதற்கு வெறுப்படைய மாட்டான். அவன் இளமைப் பருவத்தைக் கடந்தவனும் அல்லன்; நற்குணங்கள் மாறுதற்குரிய செல்வச் செருக்கால் தன்குலத்துக்குரிய நற்குணங்களில் எந்நாளும் நீங்கியவனுமல்லன். பிறர் கூறும் பழிமொழி முதலியவற்றால் இரவுக் குறியிலே கூடுதற்கு வருதல் ஒழுக்க மன்றென்று நினைத்து அவன் வரைந்து கொண்டு இல்லறம் நடத்துதலே நல்லொழுக்க

*மென்று தலைவி துணிந்தாள். அதனால் இவளுடைய மதர்த்த கண்கள் கலங்கின. பின்னர் இவள், அவர் வருகின்ற மலையிடம் புலி, யாளி முதலியன துன்பம் செய்வனவாயிருக்கு மென்று நினைத்தாள். அப்போது அவள் வலையிலகப்பட்ட மயிலைப் போலத் தனது நலம் போம்படி மெலிந்து, கண்களில் வீழ்கின்ற நீர் நாள் தோறும் மார்பிலே துளிப்பக் கலங்கா நின்றாள். இதுகாண் நல்வினை நிகழ்ந்த வண்ணம். (இவ்வாறு தோழி நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள்.)*

## தனிப் பாடல்கள்

நின் குற்றம் இல்லை; நிரை தொடியும் பண்பு உடையள்;
என் குற்றம் யானும் உணர்கலேன்; பொன் குற்று
அருவி கொழிக்கும் அணி மலை நாடன்
தெரியுங்கால், தீயது இலன். 1

ஆற்றல் சால் கேள்வி அறம் பொருள் இன்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே-தேற்ற
மறையோர் மணம் எட்டின் ஐந்தாம் மணத்தின்
குறையாக் குறிஞ்சிக் குணம். 2

• • •

## சிறப்புப் பெயர் முதலியவை


அ

அகில் ........ 110

அடும்பு ........ 87

அணங்கு உறு மகளிர் ........ 175

அதிரல் ........ 75

அந்தணர் ........ 225

அந்தி ........ 225

அம்பு ........ 124

அரக்கு ........ 96

அரவம் ........ 255

அரவு ........ 158

அரிக்கூட்டு இன் இயம் ........ 193

அருவி ........ 55

அவரை ........ 87

அளை ........ 252

அறம் ........ 208

அறம் பொருள் இன்பம் ........ வெ. 2

அறியுநர் ........ 4

அன்றில் ........ 219

அன்னை ........ 1

அனிச்சம் ........ 62

ஆ

ஆ ........ 136

ஆடுகளம் ........ 185

ஆடுமகள் ........ 193

ஆத்தி ........ 87

ஆம்பல் ........ 62, 223

ஆம்பல் அம் தீம் குழல் ........ 222

ஆமான் புகல்வி ........ 253

ஆரம் ........ 93

ஆவிரை ........ 71

ஆளி ........ 252

ஆன் கணம் ........ 217

இ

இடங்கர் ........ 257

இதணம் ........ 41

இயல்பு ........ 15

இர (இரவு) ........ 239

இருவி ........ 153

இருவேம் ஆய்ந்த மன்றல் ........ 21

இலவம் ........ 86

இளமை ........ 244

ஈ

ஈகை ........ 126

ஈங்கை ........ 86

ஈர நல் மொழி ........ 234

உ

உட்கு ........ 184

உடு உறும் பகழி ........ 170

உண்துறை ........ 237

உந்தி ........ 140

உந்தூழ் ........ 65

உரும் ........ 255

உழுவை ........ 252

உளியம் ........ 252

ஊ

ஊர் ........ 245

ஊழ் அடி முட்டம் ........ 258

எ

எஃகு ........ 52

எண்ணெய் ........ 107
எந்தை ........ 20
எருவை ........ 68
எல் ........ 39
எல்லை ........ 215
எறுழம் ........ 66

**ஏ**

ஏமம் சால் அருவினை ........ 32
ஏறு ........ 49, 235
ஏனை உலகம் ........ 24

**ஐ**

ஐயர் ........ 17

**ஒ**

ஒன்னார் ........ 52

**ஓ**

ஓப்பி ........ 38

**க**

கங்குல் ........ 25
கச்சை ........ 25
கடம்பு ........ 176
கடவுட் பேணுதல் ........ 6
கடும்பு ........ 205
கணை ........ 160
கயிறு ஊர் பாணி ........ 194
கரந்தை ........ 76
கராம் ........ 257
கருவிளை ........ 68
கழல் ........ 126
களிறு ........ 150, 253
களிறு தரு புணர்ச்சி ........ 212
கன்று ........ 218

**கா**

காஞ்சி ........ 84
காந்தள் ........ 196
காயா ........ 70
காவலர் ........ 240
காழ்வை ........ 93
கானவர் ........ 225

**கி**

கிள்ளை ........ 101
கிளி ........ 44
கிளை இதழ் ........ 101

**கு**

குட்டம் ........ 256
குடசம் ........ 67
குடி ........ 30
குரவம் ........ 69
குரீஇப்பூளை ........ 72
குருக்கத்தி ........ 92
குருகிலை ........ 73
குருதி ........ 172
குருந்து ........ 95
குல்லை ........ 78
குவளை ........ 63
குளவி ........ 76
குளிர் ........ 43
குறிஞ்சி ........ 63, வெ. 2
குறுங் காற் குரம்பை ........ 153
குறுநறுங்கண்ணி ........ 72

**கூ**

கூவிரம் ........ 66
கூவிளம் ........ 65

**கெ**

கெடுதி ........ 142, 144

**கே**

கேள்வி ........ வெ. 2

**கை**

கைதை ........ 83

**கொ**

கொக்கின் தீம் கனி ........ 188
கொகுடி ........ 81
கொண்மூ ........ 50

கொன்றை ........ 86

**கோ**

கோங்கம் ........ 73
கோடல் ........ 83
கோதை ........ 103
கோவலர் ........ 221

**ச**

சண்பகம் ........ 75
சமம் ........ 229

**சா**

சால்பு ........ 15
சாறு ........ 192, 201
சான்றோர் ........ 28

**சி**

சிந்துவாரம் ........ 89
சிலை ........ 158
சிறுசெங்குரலி ........ 82
சிறுமாரோடம் ........ 78
சினைய மலர் ........ 113–114

**சு**

சுடர் (விளக்கு) ........ 224
சுரும்பு ........ 148
சுள்ளி ........ 66
சுற்றம் ........ 151
சுனை ........ 57, 187
சுனைய மலர் ........ 113–114

**சூ**

சூர் ........ 169, 255
சூரல் ........ 42, 71

**செ**

செங் காந்தள் ........ 62
செங் கொடுவேரி ........ 64
செம்மல் ........ 82
செயலை ........ 105
செருந்தி ........ 75
செருவிளை ........ 68

**சே**

சேஎய் ........ 51
சேடல் ........ 82
சேணோன் ........ 40
சேமம் ........ 156

**சொ**

சொல்லல் பாணி ........ 152

**ஞ**

ஞமலி ........ 131

**ஞா**

ஞாழல் ........ 81

**ஞெ**

ஞெகிழி பொத்தல் ........ 226

**த**

தகரம் ........ 108
தட்டை ........ 43
தணக்கம் ........ 85
தழல் ........ 43
தழை ........ 102
தளவம் ........ 80

**தா**

தாமரை ........ 80
தாழை ........ 80
தாறு ........ 150

**தி**

தில்லை ........ 77
திலகம் ........ 74
தினை ........ 38

**து**

துகில் ........ 55
துணை ........ 31
தும்பை ........ 90
துழாஅய் ........ 90

**தே**

தேம் (அகிலினது நெய்) ........ 111
தேம் பிழி தேறல் ........ 155

தேமா ........ 64
தேறல் ........ 190

**தொ**

தொடி ........ 139, 224
தொடையல் ........ 115
தொல் மருங்கு அறிஞர் ........ 18
தொழுதல் ........ 5

**தோ**

தோகை ........ 191
தோழி ........ 2
தோன்றி ........ 90

**ந**

நகர் ........ 202
நந்தி ........ 91
நரந்தம் ........ 94
நரம்பு ........ 147
நள்ளிருள்நாறி (இருவாட்சி) ........ 94
நறவம் ........ 91
நறை ........ 7

**நா**

நாகம் ........ 94
நாடு அறி நல் மணம் ........ 232
நாண் ........ 184
நாய் ........ 240

**நி**

நிலத்த மலர் ........ 113–114
நிலவு வெளிப்படல் ........ 241

**நீ**

நீர் எறி மலர் ........ 247

**நு**

நுரையுடைக் சுலுழி ........ 178

**நூ**

நூழில் ........ 258

**நெ**

நெடுவேள் ........ 174
நெய்தல் ........ 79, 84
நெல் ........ 35

**நை**

நைவளம் ........ 146

**ப**

பகன்றை ........ 88
பசும்பிடி ........ 70
பணவை ........ 226
பயினி ........ 69
பரவி ........ 5
பரு ஏர் அம் புழகு ........ 96
பல் கதிர் மண்டிலம் ........ 216
பலவு ........ 189
பலாசம் ........ 88
பழு ........ 250

**பா**

பாடி ........ 58
பாதிரி ........ 74
பாந்தள் ........ 259
பாம்பு ........ 221
பாரம் ........ 92
பாலை ........ 77
பாலை வல்லோன் ........ 146
பாறை ........ 187

**பி**

பித்திகம் ........ 89, 117
பிடவம் ........ 78
பிண்டி ........ 88, 119
பிணை ........ 154
பிரசம் ........ 189

**பீ**

பீரம் ........ 92

**பு**

புலி ........ 41
புள் ........ 10
புள் ஆர் இயம் ........ 99
புன்னாகம் ........ 91

புன்னை .................... 93
புனம் .................... 157

பூ

பூ மலி சோலை .................... 214

பெ

பெண்ணை .................... 220
பெருந்தகை .................... 179, 206

பை

பை .................... 102
பைந் நிணம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில் .................... 204

பொ

பொன் .................... 13, 59, வெ. 1

போ

போங்கம் .................... 74

பௌ

பௌவம் .................... 47

ம

மஞ்ஞை .................... 169, 250
மணி .................... 13, 59, 112, 221
மணிச்சிகை .................... 64
மராஅம் .................... 85
மருதம் .................... 73
மலை மீமிசைக் கடவுள் .................... 208–209
மலைய மலர் .................... 113
மன்று .................... 218
மனை .................... 223
மனையோள் .................... 154

மா

மா .................... 76
மான் .................... 25
மான் கணம் .................... 217

மி

மிச்சில் .................... 206
மிஞிறு .................... 111
மிடாஅச் சொன்றி .................... 201
மிளகு .................... 187

மு

முத்து .................... 36
முதலை .................... 257
முரசு .................... 49, 51
முல்லை .................... 77
முழவு .................... 236
முனை .................... 128

மூ

மூதூர் .................... 236

மௌ

மௌவல் .................... 81

யா

யாழ் .................... 110
யானை .................... 35, 171

வ

வகுளம் .................... 70
வஞ்சி .................... 89
வஞ்சினம் .................... 210
வடவனம் .................... 67
வண்டு .................... 148
வண்ணம் .................... 31
வண்ண வண்ணத்த மலர் .................... 114
வம்பு விரி களம் .................... 198
வயிர் .................... 219
வரை அரமகளிர் .................... 195
வலை .................... 250
வழை .................... 83
வள்ளி .................... 79
வளமை .................... 244
வளை (வளையல்) .................... 167

வா

வாகை .................... 67
வாய்மை .................... 210
வாழை .................... 79, 179
வான் .................... 98

வான் உரி உறையுள் வயங்கியோர் ..........
.......... 213
வான் திணைப் புரையோர் .......... 205
வானம் .......... 48, 227
வானி .......... 69

**வி**

விடர் அகம் .......... 261
விடை .......... 136
வியப்பு .......... 15
விருந்து உண்ணல் .......... 206
விரை .......... 7
வில் .......... 124
விழவுக் களம் .......... 192

**வீ**

வீளையர் .......... 161

வெ

வெட்சி .......... 63
வெண் போழ்க் கண்ணி .......... 115
வெதிர் .......... 35

வே

வேங்கை .......... 95
வேந்தன் .......... 229
வேரல் .......... 71
வேல் .......... 129
வேழம் .......... 165
வேறு பல் உருவின் கடவுள் .......... 6

## 9. [1]பட்டினப்பாலை

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டொருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு

1. இது கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகாற் பெருவளத்தானைப் பாடியது. காலம் கி. பி. 60–90.

முக்காற் சிறுதேர் முன்வரி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லோடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியி னணைமுதற் பிணிக்குங்
கழிசூழ்படப்பைக் கலியாணர்ப்
பொழிற்புறவிற் பூந்தண்டலை
மழைநீங்கிய மாவிசும்பின்
மதிசேர்ந்த மகவெண்மீ
னுருகெழுதிற லுயர்கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருகாமத் திணையேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருந்துஞ்சுந் திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
வறநிலைஇய வகனட்டிற்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள் கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயின் மாசூட்டுந்
தண்கேணித் தகைமுற்றத்துப்
பகட்டெருத்தின் பலசாலைத்
தவப்பள்ளித் தாழ்காவி
னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு
மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம்
மாயிரும் பெடையோ டிரியல் போகிப்
பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்

தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கு
முதுமரத்த முரண்களரி
வரிமண லகன்றிட்டை
யிருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியு
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடா அ
திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்
கல்லெறியுங் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
யுறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்
கிடுகுநிரைத் தெஃகூன்றி
நடுகல்லி னரண்போல
நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய
குறுங்கூரைக் குடிநாப்ப
ணிலவடைந்த விருள்போல
வலையுணங்கு மணன் முன்றில்
வீழ்த்தாழைத் தாட்டாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச்சுறவின் கோடுநட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு

பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லா
துவவுமடிந் துண்டாடியும்
புலவுமணற் பூங்கானன்
மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கு
மலியோதத் தொலிகூடற்
றீதுநீங்கக் கடலாடியு
மாசுபோகப் புனல் படிந்து
மலவ னாட்டியு முரவுத்திரை யுழக்கியும்
பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டு
மகலாக் காதலொடு பகல்விளை யாடிப்
பெறற்காருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்
துணைப்புணர்ந்த மடமங்கையர்
பட்டுநீக்கித் துகிலுடுத்து
மட்டுநீக்கி மதுமகிழ்ந்து
மைந்தர் கண்ணி மகளிர் சூடவு
மகளிர் கோதை மைந்தர் மலையவு
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலான்
மாஅகாவிரி மணங்கூட்டுந்
தூஉவெக்கர்த் துயின்மடிந்து
வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவி
னல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின் மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
றேர்பூண்ட மாஅபோல
வைகறொறு மசைவின்றி

யுல்குசெயக் குறைபடாது
வான் முகந்தநீர் மழைப்பொழிவு
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவு
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவு
மளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி
மழையோடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை
யேழகத் தகரோ டுகளு முன்றிற்
குறுந்தொடை நெடும்படிக்காற்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்துச்
சேவடிச் செறிகுறங்கிற்
பாசிழைப் பகட்டல்குற்
றூசுடைத் துகிர்மேனி
மயிலியன் மானோக்கிற்
கிளிமழலை மென்சாயலோர்
வளிநுழையும் வாய்பொருந்தி
யோங்குவரை மருங்கி னுண்டா துறைக்குங்
காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப

விழவறா வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர்தொழு கொடியும்
வருபுன றந்த வெண்மணற் கான்யாற்
றுருகெழு கரும்பி னொண்பூப் போலக்
கூழுடைக் கொழுமஞ்சிகைத்
தாழுடைத் தண்பணியத்து
வாலரிசிப் பலிசிதறிப்
பாகுகுத்த பசுமெழுக்கிற்
காழூன்றிய கவிகிடுகின்
மேலூன்றிய துகிற்கொடியும்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரிய
ருறழ்குறித் தெடுத்த வுருகெழு கொடியும்
வெளிலிளக்குங் களிறு போலத்
தீம்புகார்த் திரைமுன்றுறைத்
தூங்குநாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக்கொடியு
மீன்றடிந்து விடக்கறுத்
தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுநொடைக் கொடியோடு
பிறபிறவு நனிவிரைஇப்
பல்வே றுருவிற் பதாகை நீழற்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்
செல்லா நல்லிசை யமரர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகுடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு

மரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி
னீர்நாப்பண்ணு நிலத்தின் மேலு
மேமாப்ப வினிதுதுஞ்சிக்
கிளைகலித்துப் பகைபேணாது
வலைஞர்முன்றின் மீன்பிறழவும்
விலைஞர்குரம்பை மாவீண்டவுங்
கொலைகடிந்துங் களவுநீக்கியு
மமரர்ப் பேண்யு மாவுதி யருத்தியு
நல்லானொடு பகடோம்பியு
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணிய மட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுகநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையு
முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு

நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாயமூழி னெய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்
கடியரண் டொலைத்த கதவுகொன் மருப்பின்
முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றா
ளுகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையொ டுழீஞை சூடிப்
பேய்க்க ணன்ன பிளிறுகடி முரச
மாக்க ணகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கித்
தலைதவச் சென்று தண்பணை யெடுப்பி
வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையோடு நெய்தலு மயங்கிக்
கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்
செறுவும் வாவியு மயங்கி நீரற்
றறுகோட் டிரலையொடு மான்பினை யுகளவங்
கொண்டி மகளிர் ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவு
மருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் றீந்தொடை யோர்க்கும்
பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துச்
சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி
யழல்வா யோரி யஞ்சுவரக் கதிர்ப்பவு

மழுகுரற் கூகையோ டாண்டாலை விளிப்பவுங்
கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்
பிணந்தின் யாக்கைப் பேய்மக டுவன்றவுங்
கொடுங்கான் மாடத்து நெடுங்கடைத் துவன்றி
விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டி
லொண்சுவர் நல்லி லுயர்திணை யிருந்து
பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்
தொடுதோ லடியர் முடிபடக் குழீஇக்
கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட
வுணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து
வளைவாய்க் கூகை நன்பகற் குழறவு
மருங்கடி வரைப்பி னூர்கவி னழியப்
பெரும்பாழ் செய்து மமையான் மருங்கற
மலையகழ்க் குவனே கடறூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்
தான்முன்னிய துறைபோகலிற்
பல்லொளியர் பணிபொடுங்கத்
தொல்லருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் றிறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்து நோக்கிப்
புன்பொதுவர் வழிபோன்ற
விருங்கோவேண் மருங்குசாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇப்
பொருவேமெனப் பெயர்கொடுத்
தொருவேமெனப் புறங்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயின்

மின்னொளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி
விசிபிணி முழவின் வேந்தர் சூடிய
பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்
பொற்றொடிப் புதல்வ ரோடி யாடவு
முற்றிலை மகளிர் முகில்முலை திளைப்பவுஞ்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூ
ணரிமா வன்ன வஔங்குடைத் துப்பிற்
றிருமா வளவன் றெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே.

**காவிரி ஆறு வற்றாத வளமுடையது**

குற்றமில்லாத புகழையுடைய காவிரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையிற் றோன்றிக் கடலிடத்தே பாயும். வெள்ளி என்னும் விண்மீது தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாது தென் திசைக்கண் சேரினும் தன்னைப் பாடுகின்றதும் துளியாகிய உணவை உடையதுமாகிய வானம்பாடி மழைத் துளியைப் பெறாது புலரும்படி வானம் பொய்ப்பினும் பொன்கொழிக்கும் காவிரியிடத்தில் நீர் வறளாது. இவ்வகைச் சிறப்பமைந்த ஆற்றின் கரை யிடத்தே சோழ வளநாடுள்ளது.

**மருத நிலம்**

மருத நிலத்தே ஒன்றற்கொன்று அண்மையிலுள்ள ஊர் களுண்டு. வயல்கள் மிக்க விளைவைக் கொடுக்கும். ஆங்காங்கு இடப்பட்டுள்ள கருப் பஞ்சாறு காய்ச்சும் கொட்டில்களில் எழுந்த தீம்புகை படுதலால் வயலிடத்தே யுள்ள நெய்தற்பூ வாடும். செந்நெற் கதிரை உண்டு வயிறு பருத்த எருமைகள் ஆங்காங்கு கிடக்கும் நெற்குதிர்களின் நிழலில் உறங்கும். விளைவு நீங்காத அகன்ற கழனிகளில் குலைத்தெங்கும், குலை வாழையும், காய்க் கமுகும், மணநாறும் மஞ்சளும், பல இன மரங்களும், குலை களையுடைய பனையும், பரந்த அடியினையுடைய சேம்பும், முளையினையுடைய இஞ்சியும் நெருங்கி வளரும்.

**முற்றத்தே சிறுவர் தேருருட்டி விளையாடுவர்**

*சீறூர்களிடத்தே மனைகளின் முற்றத்து உலரவைத்த நெல்லைக் கோழி தின்னாதபடி ஒள்ளிய நுதலும் அழகுமுடைய சிறு பெண்கள் காவலாக இருப்பர். அவர்கள் நெல்லைத் தின்னும் கோழிகளைத் தமது பொன்னாற் செய்த மகரக் குழைகளால் எறிந்து ஓட்டுவர். காலிடத்தே தண்டை அணிந்த சிறார் குதிரை பூட்டாமற் கையாலுருட்டும் மூன்று உருளைகளுடைய சிறு தேர்களை முற்றத்தே உருட்டி விளையாடுவர். அம்மரக் குழைகள் அத்தேருருள் களை உருளாதபடி தடுக்கும்.*

**நெய்தல் நிலத்தே நெல்லேற்றிய படகுகள் கழிகளில் கட்டி நிற்கும்**

*சோழநாட்டின் பல ஊர்களிலும் சென்று உமணர் விற்ற உப்பின் விலையாகப் பெற்ற நெல்லை ஏற்றிவந்த படகுகள் பந்தியிலே நிற்கும் குதிரைகளைப் போலக் கழிசூழ்ந்த நெய்தல் நிலத்தே கட்டி நிற்கும். புது வருவாயுடைய தோப்புகளுக்கு வெளியே பூஞ்சோலைகள் காணப்படும். அச்சோலைகளிலுள்ள பொய்கைகளில் திங்களைச் சூழ்ந்து மகம் என்னும் விண்மீன் விளங்கினாற் போன்று மணங்கமழும் பன்னிற மலர்கள் நிரம்ப மலர்ந்திருக்கும். காவிரிப்பூம்பட்டினத்தில் இம்மையிலும் மறுமையிலும் காமவின்பத்தைக் கொடுக்கும் ஏரிகள் எங்கும் காணப்படும்.*

**அடுக்களையினின்றும் பெருகிய கஞ்சியைக் குடிக்கச் சென்ற மாடுகள் போரிடும்**

*உணவு அடும் அடுக்களைகளுக்குப் புலியின் வடிவங்கள் செதுக்கப் பட்டனவும் பலகைகளைப் பொருத்திச் செய்யப் படனவுமாகிய கதவுகள் உண்டு. அதனைச் சுற்றியுள்ள மதிலின் வாயிலில் திருமகளின் வடிவம் தீட்டப்பட்டிருக்கும். அடுக்களையிற் சமைத்த மிக்க சோற்றை வடித்தலால் ஒழுகிய கஞ்சி ஆற்றின் வெள்ளம் போலப் பெருகி ஓடும். அதனைக் குடிக்க விரும்பிச் சென்ற எருதுகள் ஒன்றோடு ஒன்று சண்டையிடுதலால் அது மண் கலந்து சேறாய்ப்பின் தேர்கள் ஓடுதலால் புழுதியாய் எழும்; எழுந்து பலவேறு ஓவியங்கள் தீட்டப்பட்ட வெள்ளிய அரண்மனை*

மீது படியும். அதனால் அதன் சுவர்கள் வெண்ணீற்றிற் புரண்ட களிற்றியானையின் தோற்றம் போல விளங்கும்.

**அமணப்பள்ளி**

குளிர்ந்த சிறிய குளங்களை உடைய முற்றத்தையும், பெரிய எருதுகளுக்கு வைக்கோலிடும் பல சாலைகளையு முடைய தவஞ் செய்யும் அமணப் பள்ளிகளும் ஆங்காங்கு காணப்படும்.

**ஓமஞ்செய்யும் முனிவர்**

விளங்குகின்ற சடைமுடியுடைய முனிவர் தாம் தங்கும் இளமரக் காவிலே நெருப்பில் நெய் பெய்து ஓமஞ் செய்வர். அப்புகையினைக் கண்டு முகிலென அஞ்சிய குயிற் சேவல்கள் அச்சோலையில் இருத்தலை வெறுத்துத் தம் பெடைகளோடும் அவ்விடம் விட்டுச் செல்லும்; பூதங்கள் காவலாயிருத்தலாற் புகுதற்கரிய காளி கோட்டத்திற் சென்று கல்லைத்தின்னும் புறாக்களோடு ஓர் ஒதுக்கிடத்தே தங்கியிருக்கும்.

**பரதவர் ஆட்டுக் கடாக்களையும் கவுதாரிகளையும் போர் செய்ய விட்டு விளையாடுவர்**

பனையிலிருக்கும் பறவைகள் அஞ்சும்படி கல் எறிகின்ற கவண்களை உடையவர்களும் வலிய தொழில்களைச் செய்கின்றவர் களுமாகிய பரதவர், இறால் மீனின் சுட்ட தசையையும், புழுக்கிய வயலாமை இறைச்சியையும் உண்பர்; வயலிலே படர்ந்த அடம்பின் பூவை மாலையாகக் கட்டித் தலையில் அணிவர்; நீரில் நின்ற ஆம்பற் பூவைப் பறித்துச் சூடுவர். ஆகாயத்தே வலமாக எழுகின்ற விண்மீன்களைப்போல அகன்ற மன்றிலே கூடுவர்; ஆட்டுக்கடாக்களையும் கவுதாரிகளையும் போர் செய்யவிட்டு விளையாடிப் பொழுது போக்குவர். அவ்வாறு போர் செய் வித்தலினாலே மாறுபட்டு எழுந்த சினத்தால் வாரடித்த கரு மணலுடைய மணல் மேடுகளுள்ளதும் முதிய கிளைத்த மரங்கள் நிற்கப் பெறுவதுமாகிய வெளியிடத்தே செல்வர்; சென்று கல்லிடத்தே நின்று தெய்வமானவனையும் அவனுக்கு வைத்த கிடுகையும் வேலையும் போலத் தமது கிடுகையும் வேலையும் ஊன்றி முதுகு கொடாமல் கையால் குத்தியும் படைக்கலங்களால்

வெட்டியும் ஒருவர் உடம்போடு ஒருவர் உடம்பு முட்டும்படி கலந்து பொழுது போக்காகப் போர் செய்வர். பாக்கங் களிலுள்ளவர்கள் இவ்வகைப் பகையை அல்லது பிறபகையை அறியார்.

**பரதவர் சுறாக்கொம்பு நட்டு வருணனை வழிபடுவர்**

குட்டிகளையுடைய பன்றிகளும் கோழிகளும் சிறிய கிணறு களுமுள்ள செம்படவர் புறச் சேரியில் செம்மறிக் கடாக்களோடு கௌதாரிகள் விளையாடும். அழகற்ற தலையினையுடைய பரதவர் பூரணைக்காலத்தே கரிய கடலிடத்தே மீன் பிடிக்கச் செல்லாது மனைகளில் தங்கியிருப்பர்; பசிய தழை உடையணிந்த கரிய நிறத்தினராகிய தமது மகளிரோடு நெடிய தூண்டிற் கோல்கள் சார்த்திக் கிடக்கும் குறிய இறப்பினையுடைய வீடு களின் நடுவே இருளைப்போல வலைகள் கிடந்து உலரும் மணலுடைய முற்றத்தே கூடுவர்; அங்குச் சினைச் சுறாவின் கொம்பை நடுவர். அதனிடத்து ஏறிய தெய்வத்தை வழிபடுதல் காரணமாக விழுதுடைய தாழையின் அடியிடத்தே நின்ற வெண் டாளியின் குளிர்ந்த பூவாற் கட்டிய மாலையை அணிவர். மடலையுடைய தாழயின் பூவைச் சூடுவர். மேலே சொர சொரப்புடைய பனையிலிருந்து இறக்கிய கள்ளையும் நெல்லாற் சமைத்த கள்ளையும் குடித்துக் களித்து விளையாடுவர். பின்பு எல்லோரும் புலால் நாற்றத்தையுடைய மணலிடத்தே பூக்களை யுடைய கடற்கரையிற் கூடி இருந்து, தெளிந்த நீருடைய கடலிடத்தே கலங்கிய நீருடைய காவிரியாறு, காய மேகஞ் சூழ்ந்த செக்கர் வானம் போலவும் [1]தாய்முலையைத் தழுவிய குழவி போலவும் கலக்கின்ற ஒலியுடைய புகார் முகத்தே தமது தீவினைபோகும்படி நீராடுவர். ஆடியபின் அவ்வுப்பு நீங்க ஆற்று நீரிலே குளித்தும் நண்டுகளைப் பிடித்தாட்டியும், பரந்து வருகின்ற திரைகளைக் காலால் உழக்கியும் மணலினாற் பாவைகளைச் செய்தும் ஐம்புலன்களால் நுகரப்படுவனவெல்லாம் நுகர்ந்து மயங்குவர். அவர்கள் ஒருவரை ஒருவர் நீங்காத விருப்புடையராய்ப் பகற் பொழுதை இவ்வகை விளையாட்டுகளிற் போக்குவர்.

1. சிறிய பொருள் பெரிய பொருளோடு சேருதற்குவமை.

**பெண்கள் உயர்நிலை மாடத்தே மகிழ்ந்திருப்பர்**

இராக்காலத்தே அழகிய பெண்கள் சுவர்க்கத்தை ஒத்த உயர்ந்த மாடங்களிலிருந்து பாடல்களைக் கேட்டும் நாடகங் களைக் கண்டும், நிலாவிடத்தே பெறும் இன்பத்தை நுகர்ந்தும் கள்ளுண்டலைவிட்டு உயர்ந்த மதுவகைகளைப் பருகியும் மகிழ்ந்திருப்பர். பட்டாடையைக் களைந்து வெண்துகில் உடுத்துத் தம் கணவரைச் சேர்ந்த மகளிர் கள்ளின் மயக்கத்தால் தங்கணவர் சூடிய மாலையைத் தமதென்றெடுத்துச் சூடுவர்; காதலர் தங்காதலியர் சூடிய மாலையைத் தமதென்றெடுத்தணிவர். இவ்வாறு இன்பம் நுகர்ந்த ஆடவரும் மகளிரும் கண்ணுறங்கிய கடையாமத்தே மாடங்களில் விளக்குகள் எரியும். வைகறைக் காலத்தே கட்டு மரங்களிற் சென்ற பரதவர் மாடங்களில் எரிகின்ற விளக்குகளை எண்ணுவர்.

காலையில், அகன்ற கடைத்தெருவிலே பலருந்தொழுந் தெய்வங்களுக்குப் பாடுமகளிரின் பாடல்களோடு புல்லாங்குழல், யாழ், முழவு, முரசு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க விழாக்கள் நடைபெறும்.

**அரசினரின் கடற்கரைப் பண்டசாலை**

வெள்ளிய பூங்கொத்துக்களையுடைய தாழைகள் நிற்கும் கடற்கரையி லுள்ள பரதவர் வாழும் அகன்ற தெருவிடத்தே காவலுடைய பண்டசாலை யுள்ளது. கப்பல்களில் ஏற்றும் பொருட்டு உள்நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட மிகுந்த பண்டங்கள் சுங்கம் மதித்துப் புலி முத்திரையிட்டுப் பண்டசாலை முற்றத்தே அடுக்கிக் கிடக்கும். மரக்கலங்களிலிருந்து இறக்கப் பட்ட பண்டங்கள் புலிப்பொறி இடப்பெற்றனவாய்ச் சுங்கம் மதித்தற் பொருட்டுப் பண்டசாலை முற்றத்தின் ஒருபக்கத்தே குவிந்து கிடக்கும். இவ்வாறு நிலத்திலிருந்து கடலிற் பரப்பு வதற்கும், கடலிலிருந்து நிலத்திற் பரப்புவதற்கும் காத்துக் கிடக்கும் பண்டங்கள், மேகம் தான் முகந்த நீரை மலையிடத்தே சொரிவதற்காகவும் மலையிடத்தே சொரிந்த நீரை மீண்டும் கடலிடத்தே பரப்புவதற்காகவும் பெய்கின்ற தன்மைபோல் இருக்கும். அரச னுடைய பொருளைப் பிறர் கொள்ளாமற்

காக்கும் பழைய புகழினையுடைய சுங்கங்கொள்வோர் எரிகின்ற கடிய கிரணங்களையுடைய பகலவன் தேரிற் பூட்டிய குதிரை களைப் போல் ஒரு காலும் ஓய்வின்றி நாடோறும் குறையாது சுங்கங்கொள்வர். மலையிடத்தே உலாவுகின்றவருடைய மான் போன்றனவும் கூரிய நகங்களை உடையனவுமாகிய ஆண் நாய்களும் ஆட்டுக் கடாக்களும் பண்டசாலை முற்றத்தே கிடக்கும் மூடைகளில் ஏறிக் குதிக்கும்.

**அழகிய மகளிர் மாடங்களி லிருந்து முருகன் விழாவையும் பிற கடவுளர் விழாக்களையும் காண்பர்**

அணுகிய படிகளுடைய ஏணிகள் நாற்புறத்தும் சார்த்தப் பட்ட வீடுகளுக்குப் பெரிய வாயில்களும் படிக்கட்டுகளும் நடைபாதைகளும் உண்டு. வானைத் தீண்டும் மாடங்களில் சிவந்த அடியினையும், தூசு போன்ற உடையினையும், பவள நிறத்தினையும், நெருங்கிய துடையினையும், பசிய ஆபரணங் களையும், பெரிய அரையையும், மான்போல் நோக்கையும், கிளிபோல் மழலைமொழியையும், மயிலின் சாயலையுமுடைய அழகிய இளம் மகளிர் உலாவுவர்; தென்றற் காற்று வீசும் சாளரங்களின் எதிரே நின்று அங்காடித் தெருவிடத்தே மாதர் பாட, புல்லாங்குழல் ஊத, யாழ் வாசிக்க, முழவு கொட்ட, முரசு ஒலிப்ப விழாக்கொண்டாடப்படும். வெறியாடுதற்குரிய முருகக் கடவுளையும், பிறப்பறுத்தற்குக் காரணமான பலருந் தொழுந் தெய்வங்களையும் வளைகள் நெருங்கிய செங்காந்தள் மலர் போன்ற கைகளைக் குவித்து வணங்குவர்.

**அங்காடியில் கொடிகள் நாட்டப்பட்டிருக்கும் காட்சி**

இல்லுறை தெய்வங்கள் மகிழும்படி வாயில்களில் கொடிகள் உயர்த்தப்பட்டிருக்கும். கடைத்தெருவின் இருமருங்குகளிலும் எடுத்த துகிற் கொடி காட்டாற்றங் கரையினின்ற அழகு பொருந்திய கரும்பின் பூவைப் போன்று விளங்கும். தானியங்களை நிரப்பித் தாழிடப்பட்ட தானிய அறைகளிலே நாட்டிய கொடிகளும் தானிய அறைக்கு முன்னே சாணியால் மெழுகி வெள்ளரிசியைப் பலியாகத் தூவிய கவிந்த பந்தரின் கால்களில் மாட்டிய கொடி களும் அசையும். பல நூல்களை முற்றக்கற்ற ஆசிரியர் பிறர்க்கு

மெய்ப்பொருள் தெருட்டுதற்கு நாட்டிய அச்சந்தரும் கொடிகளும், அசையாத கம்பத்தை அசைக்கும் யானகளைப் போலக் காவிரிப்பூம் பட்டினத்துள்ள துறைமுகத்தே நிற்கும் மரக் கலங்கள்மீது எடுக்கப்பட்ட கொடிகளும் விளங்கித் தோன்றும்.

### வீடுகளிலும் கடைகளிலும் பிறவிடங்களிலும் நாட்டிய கொடிகள்

கள்விற்றற்கு அடையாளமாகக் கொடிகள் உயர்த்தப்பட்ட கட்கடை களின் முற்றத்தே சிலர் மீன்களையும் இறைச்சியையும் அறுத்துப் பொரிப்பர். இக்கொடிகளோடு வேறு வேறு கொடிகளும், அழகாற் சிறந்த பெருங் கொடி களும் நிறைந்தமையால் அவற்றின் நிழலாலே ஞாயிற்றின் கிரணங்கள் வீதி யில் நுழைய மாட்டாவாயின.

### பல நாடுகளினின்றும் கொண்டுவந்த பண்டங்கள் கடைவீதியில் குவிந்து கிடக்கும்

கடவுளரது பாதுகாவலினாலே, காற்றின் உதவியால் ஓடும் மரக்கலங்களிற் கொண்டுவந்த குதிரைகளும், மிளகு பொதிகளும், மேருவிலே பிறந்த மாணிக்கமும் பொன்னும், பொதியின் மலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், தென்றிசைக் கடலிற் பிறந்த முத்தும், கீழ்த்திசைக் கடலிற் பிறந்த பவளமும், கங்கையாற்றில் உண்டாகிய பொருளும், பர்மா தேசத்திலுண்டான நுகரும் பொருள்களும், சீனம் முதலிய இடங்களினின்றும் வந்த கற்பூரம் பனிநீர் முதலியனவும், காவிரியிலுண்டான பொருள்களும், இலங்கையிலுண்டான உணவுப் பொருள்களும் இவையல்லாத பிறபொருள் களும் புகார்நகரிலும் துறைமுகத்தும் குவிகையினால் தெருக்கள் மதித் தறியமுடியாத செல்வமுடையனவாய் விளங்கும். பற்பல நாடுகளினின்றும் போந்த பலவேறு மொழிகளைப் பேசும் மக்கள் காவிரிப்பூம்பட்டினத்தே தங்கியிருப்பர்.

### வேளாண் மக்களின் அருள் ஒழுக்கம்

வலைஞர் முற்றத்தே மீன்கள் பாய்ந்து திரியும். ஊன் விற்பார் குடிசையிலே ஆடு முதலிய விலங்குகள் திரண்டு நிற்கும். அறத் தொழில் முட்டுப்படாத இல்வாழ்க்கையுடைய வேளாண் மக்கள் இவ்வாறு முதற்கண் மக்களிடையே கொலைத் தொழிலைப்

போக்கினர். பின் களவு செய்வாரை அக்களவினின்றும் விலக்கினர். இன்னும் அந்தணர்க்குண்டாகும் புகழினை நிலை நிறுத்தினர். பெரிய புண்ணியங்களைப்பண்ணி அவற்றைச் செய்ய மாட்டா தார்க்குத் தானங்களை ஈந்தனர்; அரிசி, கறி முதலியவற்றை அவர்க்கு உண்ண அளித்தனர்.

### வணிகரின் இயல்புகள்

வணிகர், மேழித் தொழிலுடைய உழவரது நுகத்தில் தைத்த பகலாணி போல நடுவுநிலை யென்னுங் குணம் நிலைபெற்ற நெஞ்சினையுடையவர்; தம்முடைய பல சரக்குகளையும் பிற சரக்குகளையும் கொள்முதலுகேற்ப இலாபத்தை ஆராய்ந்து பார்த்துத் தம் குடிக்க வடுவாமென்றஞ்சி மெய் சொல்லி விற்குமியல்பினர்; தாம் கொள்ளுஞ் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருட்கு மிகையாகக் கொள்ளார்; தாம் கொடுக்குஞ் சரக்கையும் தாம் வாங்கும் பொருட்குக் குறையக் கொடாமல் மெய்சொல்லி விற்பர். அவர் களிடத்தே கொள்ளப்பட்ட பழைய பண்டங்கள் மிக்கிருக்கும்.

### கரிகாலனின் புகழ்மிக்க வீரம் முதலியன

கூரிய நகங்களையுடைய புலி கூட்டிலே அடைபட்டு நின்று வளர்ந் தாற்போலக் கரிகாற்சோழன் பகைவருடைய சிறையி லிருந்து வலிமிகும்படி வளர்ந்தான். சிறையினின்றும் வெளியேற விரும்பிய அவன், குழியிலே அகப்பட்டயானை சுவரின் கரைகளை கொம்பாற் குத்தித் தூர்த்துப் பிடியிடத்தே சென்றாற்போலக், காவலாய் நின்றோரை வாளாற்றுணித்து அவ் விடத்தினின்றும் அகன்றான். அகன்று தனது அரசுரிமையை முறையாற் பெற்றான். அவன், அங்ஙனம் பெற்ற அரசுரிமையினால் நிறைவு அற்றவ னாய், முடியுடைய கரியதலைகளை உருட்டுகின்ற முன் காலில் நகங்களும், பகை அரசரின் மதிற் கதவுகளை முறித்து அரணை அழித்த கொம்புகளும் உடைய யானைகளோடும், மணிகட்டிய குதிரைகளோடும் போர் வேட்டுப் பகைப் புலஞ்சென்றான். பாசறையிடத்தே பேயின் கண்ணை ஒத்த முரசு முழங்கிற்று; வானிடத்தே பருந்து உலாவும்படி பகைவரின் தூசிப்படையை அழித்தான். முதலைகள் நெருங்கித் திரியும் பொய்கை

களுடையதும் கரும்புடன் நெல்லும் குவளைகளினிடையே நெய்தலும் வளரப்பெற்றது மாகிய மருத நிலத்தேயுள்ள குடிகளை ஓட்டினான். அதனால் வயல்களும் வாவிகளும் நீர் அற்றன. அவ்விடங்களில் கோரையும் அறுகும் பூளையும் வளர்ந்தன; ஆற்றின் கருமணல் படிந்த கொம்புடைய ஆண் மானோடு பெண் மான் துள்ளி விளையாடிற்று.

### அம்பலத்தில் நாட்டிய அருள்தறி

பூக்களைச் சூடிய அருட்டறி நிறுத்தப்பட்ட அம்பலம், சிறையாகப் பிடித்து வந்த பகை நாட்டு மகளிர் நீராடுந் துறையிலே சென்று முழுகிவந்து மெழுகிய மெழுக்கத்தினையும், அந்திக் காலத்திலே அணையாது கொளுத்தின விளக்கத்தினையு முடையது. அதனிடத்தே பிறநாட்டவர் பலருஞ் சென்று வணங்குவர். அவ்வகை அம்பலத்துள்ள தூண்கள் சாய்ந்து கிடக்க அவற்றில் களிறுகளும் பிடிகளும் தமது உடம்பைத் தேய்த்தன. தெருக்களில் பூக்களைத் தூவி மத்தளங் கொட்டி யாழ் ஒலித்துத் திருநாள் கொண்டாடப்படும் மன்றங்கள் விழாக்களை மறந்தன. அவ்விடத்தே சிறிய பூக்களையுடைய நெருஞ்சிற் பூண்டும் அறுகம் புல்லும் நெருங்கி வளர்ந்தன; அகன்ற வாயையுடைய நரிகள் ஊளையிட்டன; அழுங்குரலாய்க் கூப்பிடும் கூகைகளோடு கோட்டான்களுமிருந்து எதிர் கூவின; ஆண்பேய்த் தொகுதியுடனே மயிரை அவிழ்த்துத் தொங்கவிட்டு இருந்து பிணத்தைத் தின்னும் வளைந்த காலையுடைய பெண் பேய்கள் கூடியாடின.

### கரிகாலனின் பகைவர் நாடுகள் பாழாயின

அடுக்களை, விருந்தினர் மாடத்தே நீண்ட தலைவாயிலில் கூடி இருந்து பின்பு உள்ளே சென்று உண்டபின் மிக்கிருக்கின்ற பெரிய சோற்றை யுடையது. இவ்வகை அடுக்களைகள் பொருந்தப் பெற்ற சாந்திட்ட வீட்டின் உயர்ந்த திண்ணைகளிலே பசிய கிளிகள் இருந்து இனிய சொற்களைப் பேசும். இவ்வாறு செழுமை மிகுந்த நகரத்தே வளைந்த வில்லையுடைய வேடர் செருப்பிட்ட அடியினையுடையராய்த் துடியொலிப்பத் திரண்டு சென்று கொள்ளை கொண்டமையால் வறிதாய்ப்போன நெற்கூடுகளின் மேல் கூகைகள் நண்பகற் காலத்தே இருந்து குழறின.

இவ்வாறெல்லாம் அரிய காவலையுடைய மதிலையுடைய பகைவர் வீடுகள் அழகழியவும் அவர்கள் குலமின்றாகவும் நாட்டைப் பாழ் செய்தான். பல அரசர்கள் எதிர்த்து வரினும் தான் ஒருவனாய் நின்று போர்தொடுக்க வல்லனென்று வஞ்சினங் கூறிய நாற்படையையுடைய பாண்டியனை வென்ற கொற்றத்தாலும் இவன் மகிழ்ச்சி எய்தானாயினான். இவன் தெய்வத்தன்மை உடையவனாதலின், இம் மலைகளை எல்லாம் அகழ்தலைச் செய்வன். கடல்களை யெல்லாம் தூர்த் தலைச் செய்வன்; தேவருலகைக் கீழ் வீழச் செய்வன்; காற்றை இயங்காமல் விலக்குவன்; என உலகத்தார் மீக் கூறும்படி தான் நினைத்தவற்றை அந்நினைத்தவாறே துறைபோக முடிக்கவல்லவனாயினான். ஆகையால் ஒளி நாட்டார் பலரும் வந்து தாழ்ந்து ஒடுங்கவும், அருவாள நாட்டினரசர் அவன் ஏவிய தொழிலைச் செய்தற்கு அவன் சொற்கேட்கவும், வடநாட்டு அரசர் வாடி நிற்கவும், குடநாட்டார் மன வெழுச்சி குன்றவும், புல்லிய இடைய அரசரது கிளைமுழுதுங் கெட்டுப்போகவும், இருங்கோ வேள் சுற்றத்தார் அழியவும் காட்டை எல்லாம் அழித்து நாடாக்கிக் குளங்கள் அகழ்வித்துப் பல்வளங்களும் பெருகச் செய்தனன். விளங்கும் மாடங்களுடைய உறையூரிடத்துக் கோயில்களையும் குடி களையும் நிலைபெறச் செய்து, சிறுவாயிலும் பெருவாயிலும் அமைத்து மதில்களில் அம்பெய்யும்[1] ஞாயில்களில் அம்புக் கட்டுகளை வைத்தான். இவனைப் பணிய வந்த வாரிறுக்கின முழவினையுடைய மற்றை அரசர் தம் ஒளிமழுங்கப் பெறாரா யினர். அவர் இவன் அருள் நோக்கத்திற்குத் தக்கராகல் வேண்டி இவனைப் பணிதலால் அவர் முடிகளிற் பதித்த மணிகள் வீரக் கழல்கள் அணிந்த இவன் கால்களில் உரைஞ்சும். ஒள்ளிய பூணினையுடையவனும் சிங்கேற்றைப் போன்று பகைவர்க்கு வருத்தத்தைச் செய்பவனுமாகிய கரிகாற் சோழனது மார்பிடத் தேயுள்ள செஞ்சந்தனக் குழம்பு பொற்காப் பணிந்த தம் புதல்வர் ஓடி விளையாடவும் தொழில் முற்றுப் பெற்ற அணிகலன்களணிந்த மனைவிமாரின் கொங்கைகள் தழுவவும், கலைந்திருக்கும்.

1. அம்பெய்து மறையுமிடம்.

**செல்வமிக்க காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறுவதாயினும் காதலியைப் பிரிந்து செல்லேன்**

இப்பெற்றியனான அவ்வேந்தன் பகைவர்மேல் ஓச்சிய வேலைக் காட்டிலும் யான் போதற்கு எழுந்த கானம் கொடிய தாயிருந்தது. இவன் அகன்ற மெல்லிய தோள்களோடு அவன் செங்கோலினுங் குளிர்ந்தனவா யிருக்கின்றன. ஆதலின் இவ்வகைச் சிறப்புடைய காவிரிப்பூம் பட்டனத் தையே எனக்குரித்தாகப் பெறினும் நெஞ்சே! நீண்ட கரிய கூந்தலினையும் விளங்குகின்ற பூணினையு முடைய என் காதலி ஈண்டு தனியளாயிருப்ப இவளைப் பிரிந்து வருதற்கு உடன்படேன்.

**தனிப் பாடல்**

முச் சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச் சக்கரமே அளந்ததால்-செய்ச் செய்
அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய் புனல் நீர்நாடன்
கரிகாலன் கால் நெருப்பு உற்று.

• • •

## சிறப்புப் பெயர் முதலியவை


**அ**

அட்டில் ........ 43, 262
அடும்பின் மலர் ........ 65
அணங்கு ........ 87
அந்தி ........ 247
அமரர் ........ 184
அமரர்ப் பேணுதல் ........ 200
அரிசிப் பலி ........ 165
அரிமா ........ 298
அருங்கடிப் பெருங் காப்பு ........ 133
அருவாளர் ........ 275
அலவன் ........ 101
அறம் ........ 43
அறுகை ........ 256

**ஆ**

ஆண்டலை ........ 258
ஆம்பல் ........ 66
ஆமைப் புழுக்கு ........ 64
ஆயம் ........ 213
ஆரம் ........ 188
ஆலை ........ 9
ஆவணம் ........ 158
ஆவுதி ........ 55
ஆவுதி அருத்துதல் ........ 200
ஆன் ஓம்புதல் ........ 201

**இ**

இஞ்சி ........ 19
இடைகழி ........ 144
இரலை ........ 245
இரு காமத்து இணை ஏரி ........ 39
இருங்கோ வேள் ........ 282
இருள் ........ 82
இல் ........ 263
இறைவன் ........ 120

**ஈ**

ஈழத்து உணவு ........ 191

**உ**

உண்டு ஆடுதல் ........ 93
உணங்கு ........ 22
உப்பு ........ 29
உல்கு ........ 125
உவவு (உவா நாள்) ........ 93
உழவர் ........ 205
உழிஞை ........ 235
உறந்தை ........ 285
உறழ் குறித்து எடுத்த கொடி ........ 171
உறைக் கிணறு ........ 76

**ஊ**

ஊர் ........ 28, 269
ஊன் பொரிக்கும் ஒலி ........ 177

**எ**

எஃகு ........ 78
எயில் ........ 291
எயினர் ........ 266
எருத்தின் பல சாலை ........ 52
எருது ........ 52
எருமை ........ 14

**ஏ**

ஏழகத் தகர் ........ 141

**ஒ**

ஒக்கல் ........................................... 61, 214

ஒளியர் ........................................... 274

**ஓ**

ஓரி ........................................... 257

ஓவம் ........................................... 49

**க**

கங்கை வாரி ........................................... 190

கஞ்சி ........................................... 44

கடல் ........................... 6, 63, 99, 127, 271

கடல் ஆடுதல் ........................................... 99

கடல் இறவின் சூடு ........................................... 63

கடி அரண் ........................................... 229

கடி நகர் (காளி கோட்டம்) ........................... 57

கடை ........................................... 261

கடைக் கங்குல் ........................................... 115

கண்ணி ........................................... 109

கதிர்ச் செல்வன் ........................................... 122

கந்து ........................................... 249

கமுகு ........................................... 17

கராஅம் ........................................... 242

கரிகாலன் ........................................... வெ. 1

கருந் தொழிற் கலிமாக்கள் (பரதவர் பிள்ளைகள்) ........................................... 62

கரும்பு ........................................... 9, 162, 240

கலங்கு பகை ........................................... 26

கவண் ........................................... 73

கழல் ........................................... 294

கழனி ........................................... 8

களரி ........................................... 59

களவு நீக்குதல் ........................................... 199

களிறு ........................................... 48, 172

கறி ........................................... 186

**கா**

கா ........................................... 53

காடு கொன்று நாடாக்குதல் ............. 283

காந்தள் ........................................... 153

காப்பு ........................................... 41

காவிரி ........................................... 6, 116

காவிரிப் பயன் ........................................... 190

காழ் ........................................... 167

காழகத்து ஆக்கம் ........................................... 191

கான் யாறு ........................................... 161

கானல் ........................................... 94

**கி**

கிடுகு ........................................... 78, 167

கிளி ........................................... 150

கிளை ........................................... 196

**கு**

குடமலை ........................................... 188

குடவர் ........................................... 276

குடி ........................................... 286

குண கடல் ........................................... 189

குயில் ........................................... 55

குருளை ........................................... 221

குவளை ........................................... 241

குழல் ........................................... 156

குழவி ........................................... 96

குழை ........................................... 23

குளம் தொடுதல் ........................................... 284

குறுங் கூரைக் குடி ........................................... 81

**கூ**

கூகை ........................................... 258, 268

கூடல் (புகார் முகம்) ........................................... 98

கூடு ........................................... 221, 267

கூடு (நெற் கூடு) ........................................... 15

கூம்பின் நசைக் கொடி ........................... 175

கூழ் ........................................... 163

கூளி ........................................... 259

**கே**

கேணி ........................................... 51

கேள்வி ........................................... 169

**கொ**

கொடி ........ 160
கொண்டி ........ 212
கொண்டி மகளிர் ........ 246
கொண்மூ ........ 95
கொலை கடிதல் ........ 199

**கோ**

கோட்டம் ........ 36
கோடியர் ........ 253
கோதை ........ 110
கோயில் ........ 286
கோல் ........ 301
கோழி ........ 23, 75
கோள்மீன் ........ 68

**ச**

சக்கரம் ........ வெ. 1
சமம் ........ 238

**சா**

சாறு ........ 215
சாறு அயர் மூதூர் ........ 215

**சி**

சிவல் ........ 77
சிறு தேர் ........ 25

**சு**

சுடர் (விளக்கு) ........ 112
சுறவின் கோடு ........ 86

**செ**

செஞ் சாத்து ........ 297
செந் நெல் ........ 13, 240
செரு ........ 72
செருந்தி ........ 243
செவ்வேள் ........ 154
செற்றோர் ........ 228
செறு ........ 11, 244

**சே**

சேம்பு ........ 10
சோணாடு ........ 28
சோறு ........ 44

**ஞ**

ஞமலி ........ 140

**ஞா**

ஞாயில் ........ 288

**த**

தகைப்பு ........ 143
தண்டலை ........ 33
தவப் பள்ளி ........ 53
தழை ........ 91
தளி உணவின் புள் ........ 3–4

**தா**

தாய் ........ 96
தாயம் ........ 227
தாழ் ........ 164
தாழை ........ 84, 88, 118
தானை ........ 279

**தி**

திட்டை ........ 60
திணை (திண்ணை) ........ 263
திமில் ........ 112
திரு ........ 41
திருமாவளவன் ........ 299
திரை ........ 101

**தீ**

தீ ........ 10
தீது ........ 99

**து**

துகிர் ........ 148, 189
துகில் ........ 107
துகிற் கொடி ........ 168
துச்சில் (குடியிருப்பு) ........ 58
துடி ........ 265
துவன்று இருக்கை ........ 212
துறக்கம் ........ 104

**தூ**

தூசு உடை ............................................ 148
தூண்டில் ................................................ 80

தெ

தெங்கு ...................................................... 16
தெய்வம் ................................................ 159
தெவ்வர் ................................................ 299
தென் கடல் ............................................ 189
தென்னவன் ........................................ 277

**தே**

தேஎம் .................................................... 216
தேர் ................................................ 47, 123

தொ

தொடி ...................................................... 154
தொடு தோல் ........................................ 265
தொல் ஆணை நல் ஆசிரியர் ............ 170

**ந**

நகர் ................................................ 20, 183
நடு கல்லின் அரண் ............................. 79
நடுவு ...................................................... 207
நண்ணார் ............................................. 225
நந்தா விளக்கு ..................................... 247
நரம்பின் தீந் தொடை ......................... 254
நறவு நொடைக் கொடி ......................... 180

**நா**

நாடகம் ................................................... 113
நாவாய் ................................................... 174
நாள்மீன் ................................................. 68
நான்மறையோர் புகழ் பரப்பல் ........... 202

**நி**

நிலம் ............................................... 129, 130
நிலவு ....................................................... 114

**நீ**

நீர் ......................................... 129, 130, 185

**நு**

நுகத்துப் பகல் ...................................... 206

**நெ**

நெய்தல் ............................................ 11, 241
நெருஞ்சி ................................................ 256
நெல் ......................................................... 30

**ப**

பஃறி ......................................................... 30
பகடு ......................................................... 52
பகடு ஓம்புதல் ....................................... 201
பகல் ....................................................... 103
பகை ....................................................... 196
பசும் பதம் கொடுத்தல் ........................ 203
பசு மெழுக்கு ......................................... 166
பட்டினம் ................................................ 218
பட்டு ....................................................... 107
படப்பை ..................................................... 32
படிக்கால் ................................................ 142
பண்டம் .................................. 131, 136, 211
பண்ணியம் ............................................ 203
பணியம் ................................................. 164
பதாகை .................................................. 182
பதி .......................................................... 213
பரதவர் ............................................. 90, 112
பருந்து ................................................... 233
பன்றி ......................................................... 75
பனிக் கடல் ............................................. 92

**பா**

பாக்கம் ...................................................... 72
பாகு ........................................................ 166
பாடல் ...................................................... 113
பாவை ..................................................... 102

**பி**

பிடி ................................................. 224, 251
பிணம் ..................................................... 260
பிணியகம் .............................................. 222
பிணை .................................................... 245

பு

புகழ் நிலைஇய மொழி ........................ 42
புகார் ........................................................ 173
புண்ணியம் ............................................ 204
புணரி ........................................................ 97
புதல்வர் .......................................... 24, 295
புதவம் ...................................................... 243
புதை ........................................................ 288
புயல் .............................................................. 4
புரவி ................................ 24, 31, 185, 232
புலம் .......................................................... 12
புலம் பெயர் மாக்கள் ............................ 217
புலிப் பொறி ............................................ 40
புலி பொறித்தல் .................................... 135
புழை ........................................................ 287
புறச் சேரி (இழிகுலத்தோர் தெரு) ....... 76
புறவு .......................................................... 58
புனல் ................................................ 7, 100
புனர் நீர் நாடன் ................................ வெ. 1

பூ

பூ ................................................................. 12
பூதம் .......................................................... 57
பூமலி பெருந் துறை ............................ 105
பூளை ...................................................... 235

பெ

பெண்ணை .............................................. 18
பெண்ணைப் பிழி .................................. 89
பெருஞ் சோறு ...................................... 262

பே

பேய்க் கண் ............................................ 236
பேய்மகள் .............................................. 260

பை

பைங் கிளி .............................................. 264

பொ

பொதி மூடைப் போர் ............................ 137
பொதியில் .............................................. 249
பொதுவர் ................................................ 281
பொய்ம் .................................................. 242
பொருள் காக்கும்
தொழில் மாக்கள் .......................... 120–121
பொறி ...................................................... 102
பொன் ................................................ 7, 187

போ

போந்தை .................................................. 74
போர் ........................................................ 234
போர்க் கதவு ............................................ 40

ம

மக வெண் மீன் ...................................... 35
மகளிர் கோதை ...................................... 110
மஞ்சள் ...................................................... 17
மஞ்சிகை ................................................ 163
மட்டு ........................................................ 108
மணல் முன்றில் ...................................... 83
மணி ........................................................ 187
மதி ............................................................ 35
மது .......................................................... 108
மயில் ........................................................ 149
மருப்பு ...................................................... 229
மலர் .......................................................... 178
மலர் அணி வாயில் .............................. 160
மலை ...................................... 95, 127, 271
மறுகு ........................................................ 193
மன்றம் ........................................... 69, 255
மனை .......................................................... 87

மா

மா ............................................ 18, 123, 198
மாசு .......................................................... 100
மாடத்து ஒள் எரி .................................... 111
மாடம் ........................... 111, 145, 261, 285
மாரி பெய்யும் பருவம் .......................... 128
மான் .......................................................... 149

**மீ**

மீன் ........ 176, 197

**மு**

முக் காற் சிறு தேர் ........ 25
முத்து ........ 189
முதுமரம் ........ 59
முரசம் ........ 236
முரசு ........ 157
முருகு அமர் பூ ........ 37
முழவு ........ 157, 253, 293
முற்றம் ........ 20, 51
முன்றில் ........ 141, 177
முனிவர் ........ 54
முனை ........ 238

**மூ**

மூடைப் போர் ........ 137
மூதூர் ........ 215

**மெ**

மெழுக்கம் ........ 248

**மே**

மேழகத் தகர் ........ 77
மேழி ........ 205

**மை**

மைந்தர் கண்ணி ........ 109

**மொ**

மொய்ம்பினோர் ........ 72
மொழி ........ 216

**யா**

யாழ் ........ 156
யாறு ........ 45, 97
யானை ........ 224, 231, 251

**வ**

வடமலை ........ 187
வடவர் ........ 276
வடு ........ 208
வம்பலர் ........ 249
வயல் ........ 64
வயவர் ........ 232
வருடை ........ 139
வலை ........ 83
வலைஞர் முன்றில் ........ 197
வளம் பெருக்கல் ........ 284
வளி ........ 272
வளி நுழையும் வாய் (சாளரம்) ........ 151

**வா**

வாய் மொழிதல் ........ 208
வாயில் ........ 144, 287
வாவி ........ 244
வாழை ........ 16
வாள் ........ 226
வான் ........ 5, 126, 272
வானம் ........ 233

**வி**

விசும்பு ........ 67
விடக்கு ........ 176
விருந்து ........ 262
விலங்கு பகை ........ 26
விலைஞர் குரம்பை ........ 198
விழவு ........ 158
விழா ........ 255
விளைவு ........ 8

**வெ**

வெண் கூதாளம் ........ 85
வெண் கோயில் ........ 50
வெண் மீன் ........ 1
வெளில் ........ 172
வெறி ஆடு மகளிர் ........ 155

**வே**

வேட்டம் ........ 92
வேல் ........ 300
வேல் ஆழி வியன் தெரு ........ 119

**வை**

வைகல் ........ 124

## 10. [1]மலைபடுகடாம்

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பி
னிளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ றுதைஇ
நடுவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பிற்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கி
னெடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவ
ரிடுக்கண் செய்யா தியங்குந ரியக்கு
மடுக்கன் மீமிசை யருப்பம் பேணா
திடிச்சுர நிவப்பி னியவுக்கொண் டொழுகித்
தொடித்திரி வன்ன தொண்படு திவவிற்
கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பி
னரலை தீர வுரீஇ வரகின்

1. இது நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியது. காலம். கி. பி. 100–130.

குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
யிலங்குதுளை செறிய வாணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகம ழைம்பான்
மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்
தங்குமயி ரொழுகிய வவ்வாய் கடுப்ப
வகடுசேர்பு பொருந்தி யளவினிற் றிரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியா
ழமைவரப் பண்ணி யருணெறி திரியா
திசைபெறு திருவின் வேத்தவை யேற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொ
டுயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி னன்ன
துளங்கியன் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொ டோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழற்
புனல்கால் கழிஇய மணல்வார் புறவிற்
புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ
தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்
கியாமவ ணின்றும் வருது நீயிருங்
கனிபொழி கானங் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை யெழின்முலை வாங்கமைத் திரடோண்

மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பி
னிசைநுவல் வித்தி னசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயன்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வின்னவி றடக்கை மேவரும் பெரும்பூ
ணன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொ
டுள்ளினிர் சேறி ராயிற் பொழுதெதிர்ந்த
புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுதலி
னாற்றி னளவு மசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுருக்குமவ னாடுபடு வல்சியு
மலையுஞ் சோலையு மாபுகல் கானமுந்
தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியு
மிகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னாண்மகி ழிருக்கையு
நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமு
நீரகம் பனிக்கு மஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்
பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரு
ஞாயிறன்னவவன் வசையில் சிறப்பு
மிகந்தன வாயினுந் தெவ்வர் தேஎ
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கட னிறுத்தவவன் றொல்லோர் வரவு

மிரைதேர்ந் திவருங் கொடுந்தாண் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோ யிஞ்சி
யுரைசெல வெறுத்தவவன் மூதூர் மாலையுங்
கேளினி வேளைநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவது வந்தன் றிதுவதன் பண்பே
வானமின்னு வசிவு பொழிய வானா
திட்ட வெல்லாம் பெட்டாங்கு விளையப்
பெயலொடு வைகிய வியன்க ணிரும்புனத்
தகலிரு விசும்பி னாஅல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலி
னகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கௌவை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன குலவுக்குர லேனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறுங்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன லவரை
மேதி யன்ன கல்பிறங் கியவின்
வாதிகை யன்ன கவைக்கதி ரிறைஞ்சி
யிரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன வைவனம் வெண்ணெல்
வேலீண்டு தொகுதி யிரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்
குறையறை வாரா நிவப்பி னறையுற்
றாலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவி
னவற்பதங் கொண்டன வம்பொதிக் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை

பையவி யமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன விஞ்சி மாவிருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென
வூழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத்
துறுகல் சுற்றிய சோலை வாழை
யிறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக்
கூழுற் றலமரு முந்தூ ழகலறைக்
கால மன்றியு மரம்பயன் கொடுத்தலிற்
காலி னுதிர்ந்தன கருங்கனி நாவன்
மாறுகொள வொழுகின வூறுநீ ருயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்
துண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணிரிந்
தரலை யுக்கன நெடுந்தா ளாசினி
விரலூன்று படுக ணாகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்
சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே
தீயி னன்ன வொண்செங் காந்தட்
டூவற் கலித்த புதுமுகை யூன்செத்
தறியா தெடுத்த புன்புறச் சேவ
லூஉ னன்மையினுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களங் கடுக்கும் வியலறை தோறு
மணவில் கமழு மாமலைச் சாரற்
றேனினர் கிழங்கின ரூனார் வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்

தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
யிரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவி
ரன்றவ ணசைஇ யற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி
யலங்குகழை நரலு மாரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்றாண்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம் பகல வினிய கூறிப்
பரூஉக்குறை பொழிந்த நெய்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவி
ரேறித் தரூஉ மிலங்குமலைத் தாரமொடு
வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநும் மனந்த றீர
வருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி
னின்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து
வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்
குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி
யகமலி யுவகை யார்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குருசின் முன்னிய
பரிசின் மறப்ப நீடலு முரியி

ரனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவலைக் கடிவீ தொடினும்
வரையர மகளி ரிருக்கை காணினு
முயிர்செல வெம்பிப் பனித்தலு முரியிர்
பலநா ணில்லாது நிலநாடு படர்மின்
விளைபுன நிழத்தலிற் கேழ லஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி
யுடைய வாறே நள்ளிரு ளலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமி
னளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் ணுடைந்த பரலவற் போழ்விற்
கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங்ங் கொட்டி நோக்கிச்
செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிதுநெறி யொரீஇ வலஞ்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவ
ருயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ
வகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப்
பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்க
லிருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்போ டிரிய
வுயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமி
னுரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி
யிரவி னன்ன விருடூங்கு வரைப்பிற்
குமிழி சுழலுங் குண்டுகய முடுக்க
ரகழிழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉமருங் குடைய வழாஅ லோம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோ
டொருவி ரொருவி ரோம்பினிர் கழிமி
னழுந்துபட் டலமரும் புழகமல் சாரல்

விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா
வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
யடிநிலை தளர்க்கு மருப்பமு முடைய
முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோ
டெருவை மென்கோல் கொண்டனிர் கழிமி
னுயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
யோரியாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணிற்
றொழாநிர் கழியி னல்லது வறிது
நும்மியந் தொடுத லோம்புமின் மயங்குதுளி
மாரி தலையுமவன் மல்லல் வெற்பே
யலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியிற் றளரினுங்
கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினு
நேர்கொ ணெடுவரை நேமியிற் றொடுத்த
சூர்புக லடுக்கத்துப் பிரசங் காணினு
ஞெரேரென நோக்க லோம்புமி னுரித்தன்று
நிரைசெலன் மெல்லடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோ னேவொடு போகி
யிழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பி
னெறிக்கெடக் கிடந்த விரும்பிண ரெருத்தி
னிருடுணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயி
னளிபுகை கமழா திறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க்
குவளையம் பைஞ்சுனை யசைவிடப் பருகி
மிகுத்துப் பதங்கொண்ட பரூஉக்கட் பொதியினிர்

புட்கை போகிய புன்றலை மகாரோ
டற்கிடை கழித லோம்பி யாற்றநு
மில்புக் கன்ன கல்லளை வதிமி
னல்சேர்ந் தல்கி யசைத லோம்பி
வான்கண் விரிந்த விடியலேற் றெழுந்து
கானகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயங்கண் டன்ன வகன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமத னழிக்குந்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி
யிகந்துசேட் கமழும் பூவு முண்டோர்
மறந்தமை கல்லாப் பழனு மூழிறந்து
பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னா
ரிருங்கால் வீயும் பெருமரக் குழாமு
மிடனும் வலனு நினையினிர் நோக்கிக்
குறியறிந் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளி
னாடுகா ணனந்தலை மென்மெல வகன்மின்
மாநிழற் பட்ட மரம்பயி லிறும்பின்
ஞாயிறு தெறாஅ மாக நனந்தலைத்
தேஎ மருளு மமைய மாயினு
மிறாஅவன் சிலையர் மாதேர்பு கொட்குங்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே
யகன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
வியங்க லோம்பிநும் மியங்க டொடுமின்
பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவ ருளரே
நிலைத்துறை வழிஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
யுண்டற் கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
யூறு நிரம்பிய வாறவர் முந்துற

நும்மி னெஞ்சத் தவலம் வீட
விம்மென் கடும்போ டினியிராகுவி
ரறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு
குறியவு நெடியவு மூழிழிபு புதுவோர்
நோக்கினும் பனிக்கு நோய்கூ ரடுக்கத்
தலர்தாய வரிநிழ லசையினி ரிருப்பிற்
பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறு
மருவி நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறுந்
தெரியிமிழ் கொண்டநும் மியம்போ லின்னிசை
யிலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளி
னெய்தெற விழுக்கிய கானவ ரழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பி
னெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாட
றலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉ மேமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலி
னொண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்
கைக்கோண் மறந்த கருவிரண் மந்தி
யருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிடையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை
நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்
பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்ளை

யருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவே லண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை
நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்
துரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
யொலிகழைத் தட்டை புடைநர் புனந்தொறுங்
கிளிகடி மகளிர் விளிபடு பூச
லினத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறா மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொரூஉங் கல்லென் கம்பலை
காந்தட் டுடுப்பிற் கமழ்மட லோச்சி
வண்கோட் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார்
கன்றுகடாஅ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன வாலைதொறு ஞெரேரெனக்
கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமுந்
தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையுஞ்
சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பு
மென்றிவ் வனைத்து மியைந்தொருங் கீண்டி
யவலவு மிசையவுந் துவன்றிப் பலவுட
னலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையற் கோதை மகளிர்

முழவுத்துயி லறியா வியலுளாங்கண்
விழவி னற்றவன் வியன்கண் வெற்பே
கண்ண் டண்ண் ணெனக் கண்டுங்கேட்டு
முண்டற் கினிய பலபா ராட்டியு
மின்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்ப
னுருமுரறு கருவிய பெருமலை பிற்பட
விறும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்
மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை துவற்றலிற்
றேஎந் தேறாக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்டநும் மியந்தொய் படாமற்
கூவ லன்ன விடரகம் புகுமி
னிருங்க லிகுப்பத் திறுவரை சேராது
குன்றிடம் பட்ட வாரிட ரழுவத்து
நின்று நோக்கினுங் கண்வாள் வெளவு
மண்கனை முழவின் றலைக்கோல் கொண்டு
தண்டுகா லாகத் தளர்த லோம்பி
யூன்றினிர் கழிமி னூறுதவப் பலவே
யயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தரூஉ மின்ன லியக்கத்துக்
கதிர்சினந் தணிந்த வமயத்துக் கழிமி
னுரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ வுயரிய மழைமருள் பஃறோ
லரசுநிலை தளர்க்கு மருப்பமு முடைய
பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறு
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோ
லின்னிசை நல்யாழ்ப் பத்தரு விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணு மோம்பிக்

கைபிணி விடாஅது பைபயக் கழிமின்
களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகற்
றளிபொழி கானந் தலைதவப் பலவே
யொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே
யின்புறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்
தொன்றொழுகு மரபினும் மருப்பிகுத்துத் துனைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்
செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவுளோங்கிய காடேசு கவலை
யொட்டா தகன்ற வொன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
யோம்பா வள்ளற் படர்ந்திகு மெனினே
மேம்பட வெறுத்தவவன் றொஃறிணை மூதா
ராங்கன மற்றே நம்ம னோர்க்கே
யசைவுழி யசைஇ யஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கானமூ ழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்

கல்லென் கடத்திடைக் கடலி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலு மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயி ரடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்
கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பணிவி லாண்மைக்
கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
யோம்புந ரல்ல துடற்றுந ரில்லை
யாங்குவியங் கொண்மி னதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅ மெல்லிணரு
மும்ப லகைத்த வொண்முறி யாவுந்
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி
திரங்குமர னாரிற் பொலியச் சூடி
முரம்புகண் ணுடைந்த நடவை தண்ணென
வுண்டனி ராடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொ ளரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லி னவரையும் புளிங்கூ
ழற்கிடை யுழந்தநும் வருத்தம் வீட
வகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணே ரரிசி
வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை
தண்ணெ னுண்ணிழு துள்ளீ டாக
வசையினிர் சேப்பி னல்கலும் பெறுகுவிர்
விசையங் கொழித்த பூழி யன்ன
வுண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்

புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த வூர்தொரு நல்லியாழ்ப்
பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ணிற்பினுஞ் சேந்தனிர் செலினு
நன்பல வுடைத்தவன் றண்பணை நாடே
கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த விருஞ்சுவல் வாளை
நிலையோ ரிட்ட நெடுநாண் டூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅற்
றுடிக்க ணன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டாடு செறுவிற் றராய்க்கண் வைத்த
விலங்க லன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேற
லிளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டேர் நன்னற்கு மயினி சால்மெனக்
கண்டோர் மருளக் கடும்புட னருந்தி
யெருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்
வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்க ணெருமை யினம்பிரி யொருத்தல்
கனைசெலன் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வனைகலத் திகிரியிற் குமிழி சுழலுந்
துனைசெலற் றலைவா யோவிறந்து வரிக்குங்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்
யாண ரொருகரைக் கொண்டனிர் கழிமி
னிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ

வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்
தியாறெனக் கிடந்த தெருவிற் சாறென
விகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென வொலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலி னினிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரு
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கு மொள்வாண் மறவர்
கருங்கடை யெஃகஞ் சாத்திய புதவி
னருங்கடி வாயி லயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற வளியர் தாமெனக்
கண்டோ ரெல்லா மமர்ந்தினிதி னோக்கி
விருந்திறை யவரவ ரெதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட
வெரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி
யூமை யெண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தக
ரரவுக்குறும் பெறிந்த சிறுகட் டீர்வை
யளைச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
யரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரற்றவ ழுடும்பின் கொடுந்தா ளேற்றை
வரைப்பொலிந் தியலு மடக்கண் மஞ்ஞை
கானங் கோழிக் கவர்குரற் சேவல்
கானப் பலவின் முழவுமருள் பெரும்பழ
மிடிக்கலப் பன்ன நறுவடி மாவின்

வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரந்
தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பரூஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்த
ணாகந் திலக நறுங்கா ழாரங்
கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்
கானிலை யெருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிறாஅ
லுடம்புணர்பு தழீஇய வாசினி யனைத்துங்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனாச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யானைத்
தாதெருத் ததைந்த முற்ற முன்னி
மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிட மிமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்றா நல்லிசைச் சென்றோ ரும்ப
லின்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
விடைத்தெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்

சென்றது நொடியவும் விடாஅ னசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுர ணெதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்ற மணுகல் வேண்டிக்
கல்லெ னொக்க னல்வலத் திரீஇ
யுயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்
தகன்ற தாயத் தஃகிய நுட்பத்
திலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை யிழிதரு நீத்தஞ்சா லருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவா ழெக்கர் மணலினும் பலரே
அதனால், புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோ யுள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரி
துவந்த வுள்ளமோ டமர்ந்தினிது நோக்கி
யிழைமருங் கறியா நுழைநூற் கலிங்க
மெள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவ றந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லி னரிசிமுட் டாது
தலைநா ளன்ன புகலொடு வழிசிறந்து
பலநா ணிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பி னும்முட்
டலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
நீரியக் கன்ன நிரைசெல னெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழங்
கறங்குமணி துவைக்கு மேறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமோ டனைத்து
மிலம்படு புலவ ரேற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்

வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன வீகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றுங்
குன்றுசூ ழிருக்கை நாடுகிழ வோனே.

"நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொகுப்பது பத்துப் பாட் டெனப்படும்" (384)

**கூத்தரின் வாத்திய வகைகள்**

ஆகாயத்தில் முழங்கும் ஓசைபோல் ஒலிக்கும் மத்தளம் வலித்து இறுக்கிய வார்க்கட்டுடையது. கஞ்சதாளம் வெண் கலத்தை உருக்கித் தகடாகத் தட்டிச் செய்யப்பட்டது. கொம்பு மயிலிறகுந் தழையுங் கட்டப் பெற்றது. நெடுவங்கியம் யானையின் தும்பிக்கை போன்று கணுக்களிற்றுளை களுள்ளது. குறிய தூம்பு இளி என்னும் நரம்பின் ஓசையைத் தன்னிடத்தே தோற்றுவிற்கும் இயல்பினது. இனிய குழல் பாட்டின் சுருதி குன்றாமற் மேற் கொண்டு நிற்கும். கரடிகை மத்திமமாகிய ஓசையைச் செய்யும். எல்லரி தாளத்தைக் கொண்டு ஒலிக்கும். ஒருகண் மாக்கிணை மாத்திரை அறிவிக்கும் தாளத்தையுடையது. இவற்றோடு சிறு பறையும் இன்னும் கூறாதொழிந்த வாத்தியங்களும் இடுதற்குரிய உறைகளிலிட்டுச் சுருக்கிடப் பெற்று, பலாக் காய்க் கொத்துகள் போன்ற தோற்றத்தை உடையன வாயிருக்கும்.

**கூத்தர் மலைகளைக் கடந்துசெல்லுதல்**

கூத்தர் இவ்வகைப் பல வாத்தியங்களைத் தூக்கியவர்களாய் காட்டுவழியே செல்லா நின்றனர். முட்செடிகள் வளர்ந்த பக்க மலையிடத்தே கற்களைப் பதித்தாற் போன்ற அழுத்தமாகிய பாறைகள் கிடந்தன. அப் பாறை களின் பக்கத்தே, நிலத்தே கிடக்கின்ற வழியை எடுத்து நிறுத்தினாற் போன்று மலையை இடித்து அமைத்த அரிய ஒடுங்கிய வழியுண்டு. வில்லிடத்தே தொடுத்த அம்பினராகிய கானவர் தமது மனைவியருடன் அரசர்


ஆணை யால் அவ்விடத்தே காத்து நின்று வழிச்செல்வொரை ஆறலை கள்வர் வருத்தாமற் பாதுகாத்தனுப்புவர். செல்லு தற்கரிய இவ் வழியிடத்திற் போதலைக் கூத்தர் அஞ்சுவாரல்லர்.

**பேரியாழ்**


பெரிய ஓசையையுடைய பேரியாழ் பெண்கள் கையிலணியும் வளையல் போன்று ஒன்பது வார்க் கட்டினையுடையது. நூல்களிற் சொல்லிய இலக்கணம் அமையும்படி வடித்து முறுக்கின அதன் நரம்புகள் வெண்சிறு கடுகளவேனும். கொடுமுறுக்கு விழாதபடி உருவி ஓசை ஓர்ந்து பார்த்துக் கட்டப்பெற்றவை. ஒலித்தலமைந்த பத்தல் வரகின் கதிர் ஒழுகின தன்மை போல நுண்ணிய துளைகள் செய்து துளைகள் நிரம்பும்படி சுள்ளாணிகள் இறுகத்தைத்து யானைக்கொம்பாற் புதிதாகச் செய்த [1]யாப்பை வலிபெற இறுக்கப்பட்டது; பிசினோடு சேர்ந்த தோலாகிய புதிய போர்வை பொன்னிற முடையது. [2]உந்தி, தனது கூந்தலிலே இருந்த வண்டுக்கு கலியாணஞ் செய்த வளுடைய மணத்தைக் கொடுக்கின்ற

---

1. யாப்பு: என்பது, பத்தரின் குறுக்களவே நீளமாகச் சிறுவிரற் பருமனாக யானைத் தந்தத்தினாலே செய்யப்பட்டு நரம்பு தொடுப்பதற்கும் நரம்பின் இசையைப் பத்தரிலே தாக்கி ஒலியைப் பெருக்குதற்கும் அமைந்ததோர் உறுப்பு. இது பத்தருள் செறிக்கப்படும்.



உந்தி



யாப்பு

2. உந்தி: யென்பது போர்வைத் தோலிற்கும் யாப்புறுப்புக்கும் இடையே அமைந்து நிற்பதோருறுப்பு. இது உயர்ந்து வளைந்து பொல்லம் பொத்தலின் கீழே போர்வைத் தோலினைத் தாங்கி நிற்பது. யாப்பு நரம்புகள் இதனூடே வருவதாதலின் இதன் ஒரு பகுதி பகுக்கப்பட்டிருக்கும்.

"மருப்பு: கோடானது கருங்காலியினாற் செய்யப்பட்டு அழுத்தம் பண்ணப்பட்டதாய்ப் பாம்பு படமெடுத்தாற் பொன்று தலைதூக்கி நிற்குமென்று பெறப்பட்டது.

பழமை பொருந்திய சீறியாழ் பேரியாழிலே 'மாடகம்' எனப்பிற்காலத்து வழங்கிய முறுக்காணி அமைக்கப்படவில்லை. நரம்புகளைத் துவக்கும் வார்க்கட்டாகிய திவவவு அவை தம்மை வலித்தல் மெலித்தல் செய்தற்கும் பயன்பட்டது.......கோட்டின் மீது கட்டப்பட்ட திவவானது கரிய நிறமுடைய பெண்ணின் கையிலணியப்பட்ட வளையல் போலவும் வடிவு பெற்றிருந்ததென அறிகின்றோம். கவைக்கடை என்பது பேரிழயழினை நிறுத்துவதற்குத் தக்கவாறு அதன்பின்னே அமைக்கப்படுவதோருறுப்பு. சிறு பாணாற்றுப்படையில் அளகம் என்றது பத்தரினை." (யாழ்நூல்)

மடந்தையின் மார்பிடத்தே சென்று மறையும் மயிரொழுங்கு பெற்ற அழகிய வயிற்றை ஒத்தது. வளைந்து ஏந்திய தண்டு கழாப்பழத்தின் நிறமுடையது. பாணர், நூல்முறையிற் செய்யப் பட்ட யாழை அவைக்களத்தே அரசர் கேட்டு மகிழுமாறு துறைபோகக் கற்று விளங்கினர்.

**பாணன் கூத்தனை நோக்கிக் கூறுதல்**

விறல்படப் பாடியாடும் மகளிரின் கல்போன்ற சிற்றடிகள் மலை யிடத்தே ஓடி வலிகெட்ட நாயின் நாக்குப் போன்றன. பலவகை வாத்தியங்களுடன் பாணரும் விறலியரும் சூழ்ந்திருப்பத் தலைமை பெற விருந்த கூத்தர் தலைவனை, நன்னனிடத்தே பரிசில் பெற்று வந்தானொரு கூத்தன் எதிர்ப்பட்டுக் கூறுகின்றான்: குளத்திலே புகுந்தாலொத்த குளிர்ந்த நிழலிலே வழிநடந்த வருத்தந் தீர்ந்திருக்கும் கூத்தர் சுற்றத்துக்குத் தலைவனே! மலை உச்சியினின்றும் இழிந்த நல்ல பூக்கள் செறிந்த ஆறு கடலை நோக்கிச் சென்றாற்போல யான் நன்னனை நோக்கிச் சென்று சில பரிசில்களைப் பெற்று வருகின்றேன். பழங்களைச் சொரிகின்ற காட்டில் அவற்றைச் சுற்றத்தோடே சென்று தின்னற்கு விரைந்து பறக்கும் பறவைத்திரளையொப்ப நன்னன் மகனாகிய நன்னனிடத்தே நீவிரும் செல்வீராக. அவன் அழகிய மாலையை மார்பிடத்தே அணிந்துள்ளான். அவன், அழகிய தனங்களையும் மூங்கில் போற்றிரண்ட தோளையும், பூப்போல் குளிர்ந்த கண்ணினையு முடைய மகளிர்க்குக் கணவன். நாஏர் உழவர்களாகிய புலவர் களுக்கு வேண்டிய காலத்துப் புதுப் பெருக்காய் வந்த நீர்போலப் பொருளளிப்பான்; தன் ஆக்கத் தினை உணரும் நினைவினையும், விற்றொழிலிற் பயின்ற கையினையும் பேரணி கலன்களையு முடையன். அவன் தரும் பரிசில்கள் இவை என்று ஓர்ந்து அப்பரிசில்களை விரும்பி நீவிரும் அவன்பால் செல்வீராக. என்னை எதிர்ப்படுகையினாலே நீவிர் புறப்பட்ட நேரம் நன் முகூர்தத்தோடே நன்னிமித்தமும் உடையதாயிருந்தது. அவனை அடைதற்குச் செல்லும். வழியின் நன்மையினளவும், தீமையின் அளவும், நீர் தங்கும் நல்ல இடங்களின் தன்மையும், பிற நாட்டாருக்குக் கொடுக்கும் அவன் நாட்டில் விளையும் உணவு

களும், அவன் நாட்டின் மலைகளின் தன்மையும், சோலைகளின் தன்மையும், விலங்குகள் விரும்பித்திரியும் காட்டின் தன்மையும் கூறுவேன்.

**நன்னன் கொடைச் சிறப்பு**

இன்னும் பகைவரிடத்திருந்தும் கொள்ளை கொண்ட பேரணி கலன்களை முற்பட அறிவுடையோர்க்குக் கொடுத்துப் பின் அவர்க்குச் சொரி யும் பொன்மழையின் தன்மையையும். இகழ்ந்திருக்கும் பகைவரை அரசு கொடாமல் சுருக்கும் அறிவின் வலிமையையும் நவிலுவேன். சூதர், மாகதர், பாணர், கூத்தர் முதலியோருக்குத் தான் வென்ற பகைவ ரரசைக் கொடுப்பதோ டமையாது அத்தாணி மண்டபத்தே இருந்து பல பரிசில்களை அளிப்பான்.

**புலவர்களின் தண்ணளி**

தாம் கற்றவற்றைச் சொல்லும் வன்மையுடைய கற்றோர் குழுமியிருக்கும் அவனது அவைக்களத்தே, வந்த அறிவுடையோர் தாங்கற்றவற்றை எடுத்து விளக்கும் வன்மை இலராயின் அக்கற்றார் அவ்வறிவுடை யோரின் மாட்டாமையை மறைத்தும் தாம் பொருளைச் சொல்லிக் காட்டி எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படி அறிவித்து நடத்துவர்.

கடல்சூழ்ந்த உலகத்தவர் அஞ்சி நடுங்கும் நஞ்சை ஊணாக உடைய இறைவன் 'நவிர' மென்னும் மலையிடத்தில் இருப்பான். ஞாயிறு இருளைக் கடிவதுபோல நன்னன் தன் பகையாகிய இருளைக் கடிந்த தன்மையை யுடையன். அவனது முன்னோர், பகைவர் தேயம் தூரத்திலுள்ளதாயினும் அவ்விடத்தே சென்று முன்னணியிலுள்ள காலாட்களைக் கொன்று யானைப் படையிற் சென்று வேற்போர் புரிந்த வீரர்க்கு நாடு ஊர் முதலியவற்றைக் கொடுப்பர். அவனது புகழ் பரந்த பழைய ஊர் இரையைத் தேடி உலாவும் வளைந்த காலினையுடைய முதலைகளோடே திரையுண்டாக ஆழ்ந்த அகழியையும், மலையை ஒத்த உயரமுடைய வானைத் தீண்டும் மதிலையும் உடையது.

## நன்னனது நாட்டுக்குச் செல்லும் வழியிடத்தே காணப்படும் காட்சிகள்

இப்பொழுது நீவிர் நன்னனைக் கருதிச் செல்கின்ற திசையைக் கேட்பீராக. நிலத்தே இட்ட விதைகளெல்லாம் விளைய வேண்டுமென்று ஆண்டுள்ளார் விரும்பினாற் போல விளையும் படி மேகம் மின்னி மழையைப் பெய்யும். மழைபெய்த கொல்லை நிலத்துப் புல்லிய கொடியினையுடைய முசுண்டை ஆகாயத்தில் கார்த்திகை மீன்போல் வெள்ளிதாக மலர்ந்திருக்கும். வயல் களிலே முளைத்த பல கிளைகளையுடைய எள்ளுப் பயிர்கள் நீலமணி போன்று விளங்கும். நீர்ச்சாலை ஒத்த நிறைந்த சுனைகளை யுடைய காட்டிடத்தே மிகுந்த துளிபடுகையினாலே எள்ளுப் பயிர்களின் தடிகள் முற்றிச் சிவந்த நிறத்தை அடையமாட்டா. முற்றிக்கறுத்து நிறைந்த நெய் யுடைய விதைகளையுடைய ஏழுகாய்கள் ஒரு பிடியில் அடங்கும்படி கொழுத் திருக்கும். விளையாடிப் பொருகின்ற யானைக் கன்றுகளின் ஒன்றோ டொன்று சேர்ந்த கைகளை ஒத்த கதிர்களையுடைய தினைமுற்றி அறுக்கும் பருவத்தை அடைந்திருக்கும். தினை அரிந்த தாள் களில் அரிவாளின் வாயை ஒத்த காயைக் கொண்ட அவரையின் தயிர்த்துளிபோன்ற பூக்கள் உதிர்ந்து கிடக்கும். எருமை கிடந்தாற் போன்ற பாறைகளுடைய வழியிடத்தே, தர்க்கிக் கின்றவனது இணைத்த கை விரல்களையொத்த இரட்டித்த கதிர்கள் முற்றி விளைந்த வரகின் தாள்களை அறுப்போர் அரிவாளால் அரிவர். மலர் களையுடைய காட்டிடத்துள்ள தோரைநெல்முற்றி அவலிடிக்கும் பருவத்தை அடைந்திருக்கும். உழாது மண் வெட்டியால் கொத்திய தோட்டங்களில் விதைத்த வெண் சிறுகடுகு நெருங்கி விளைவெய்தியிருக்கும். ஓவியனால் வரையப் படாத இயற்கை ஓவியம் போன்றமைந்த இஞ்சிக் கிழங்கு உறைப்புப் பெற்றிருக்கும். கொழுவிய கொடிகளையுடைய கவலை குழி களிலே யானையின் மடித்த முழந்தாளைப் போன்றவும் மாவுடையவும் கிழங்குகளை வீழ்த்தும். மலைகளைச் சூழ்ந்து நெருங்கி வளர்ந்திருக்கும் வாழைகளின் பொத்திகள் யானையைக் குத்தும் பிடியில் இறுக்கிய வேல் களைப்போல் மலைப் பக்கங் களைக் குத்தும். நெருங்கிய காய்களையுடைய வாழைக் குலைகள்

பழுத்திருக்கும். நெல் முற்றிய பெரிய மூங்கில்கள் அசைந்து கொண்டிருக்கும். மரங்கள் காலமன்றியும் நிலநலத்தாற் பயனைக் கொடுக்கும். காற்று அசைதலினால் நாவல் கரிய பழங்களைப் பாறையில் உதிர்க்கும். விடாய்த்தகாலத்து வாய் நீரூறுதற்குக் காரணமான உயவைக் கொடி நீரைப் போலப் படரும். கூவைக் கிழங்கு நீறு பூத்து முற்றிக் கிடக்கும். உண்பாரை வேறொன்றிற் செல்லவிடாமற் தடுத்துக்கொள்ளும் பழங்கள் மாமரங்களிற் றூங்கும். நீண்ட அடியை உடைய பலாவின் பழம் வெடித்து உள்ளேயுள்ள விதையைச் சிந்தும். மலைப்பக்கத்தே பேராந்தைப் பேடுஞ் சேவலும் மாறிமாறி அலறும். அசைகின்ற கிளைகளை யுடைய பலாவின் கீழிடங்களிலும் மேலிடங்களிலும், வழிப் போகும் கூத்தருடைய மத்தளம் போன்ற காய்கள் தூங்கும். ஐவன நெல்லும் வெண்ணெல்லும் ஈன்றகதிர்கள் பால் கட்டிக் காற்றாலடி பட்டு நன்றாய் விளைந்திருக்கும். இனிய கரும்பின் தண்டு பாத்தி தெரியாதபடி திரண்டிருக்கும். இலைகள் கவிழ்ந்து வேற் படைகள் ஒன்றோடொன்று சார்ந்தாற்போல் காற்றடித்தலாற் சாய்ந்த கரும்புகள் ஆலையிலிடுவதற்கு அறுக்கப்படும். மிகுந்த செல்வ முடைய புதுவருவாயை யுடைய ஊர்களாலே புதிய தன்மையை அடைந்த அவ்வழியின் தன்மை இதுவாகும். நெருப்பை ஒத்த விளங்குகின்ற செங்காந்தளின் மழை பெய்த லால் செருக்கி வளர்ந்த முகைகளைக் கபில நிற முதுகையுடைய கழுகு தசை எனக் கருதி எடுக்கும்; எடுத்து தசை அல்லாதபடியால் அவற்றைப் பாறை யிலே சிந்தும்படி போடும். அப்பாறைகள் நெருப்பை ஒத்த பல இதழ்கள் பரந்த வெறியாடுகளனை ஒக்கும். மணஞ்செய்த மனைபோல் பரிமளிக்கும் பெரிய மலைப் பக்கத்திற் சிறு குடியிலுள்ள கானவர் தேனையும், கிழங்கை யும், தசை நிறைந்த கூடையையும், சிறிய கண்ணையுடைய பன்றியின் இறைச்சியையும், மற்றும் தசைகள் நிறைந்த பனை ஓலையால் முடைந்த கடகங் களையும், தம்மிற்பொருதுபட்ட யானையின் கொம்பைக் காவுமர மாகக் கொண்டு தாவிச்செல்வர். வளவிய புதுவருவாயினை யுடைய அவர் களது சிறிய ஊரிலே தங்குவாயானால் கரிய பெரிய சுற்றத்தோடே அவ் வுணவுகளை உண்ணும்படி பெறுகுவை. அவற்றைப் பெற்று இளைப்பாறி அற்றைநாள் இராப்பொழுதும்

அவர்களுடனே பொருந்தி அவ்விடத்தே தங்குவீராக. விடியற் காலத்தே எரிகின்ற நெருப்புப்போன்ற ஒள்ளிய பூங்கொத்துக் களைச் சூடிச் சிவந்த அசோக மரத்தையுடைய நல்லவழியே செல்வீராக. அரிய வழிகள் இழிகின்ற மூங்கிலொலிக்கும் சிலம்பிடத்தே யுள்ள சீறூர்களைச் சேர்ந்து 'வெற்றியுடைய நன்னனுடைய கூத்தர் யாம்' என்று கூறுவீர்களாக. மலை களிலுள்ளோர் நும்மை உள்ளே அழைத்துத் தூரத்தில் நின்றும் வந்த வருத்தந் தீரும்படி இனிய மொழிகள் கூறி நெய்யிற் பொரித்த இறைச்சியுடன் தினைச் சோற்றை உண்ணும்படி தருவர்.

மலையின் உச்சியிலேயுள்ள நன்னனுடைய நாடு யான் கூறிய தன்மைத் தன்று; மிக்க சிறப்பமைந்தது. ஆண்டுப் பெறுவன வற்றைக் கேட்பீராக. அவ்விடத்தே பெண்நாய் ஓடிக் கடித்த உடும்பின் இறைச்சியோடு கடமானின் கொழுவிய தசைகளையுங் கலந்து தின்று இடையே மூங்கிற் குழாய்க்குள் இருந்து முற்றிய தேனாற் செய்த கட்டெளிவைக் குறைவின்றி நிரம்ப உண்ணப் பெறுகுவிர். பின்னர் நெல்லாற் சமைத்த கள்ளையும் உண்டு களிக்கும்படி பெறுகுவிர்.

**மலைநாட்டார் வரவேற்று இனிய சோறளிப்பர்**

நறிய மலரைச் சூடின நாறுகின்ற கரிய மயிர் முடியினை யுடைய குறமகள் சுனைநீர் கொண்டுவந்த பலாப்பழத்தின் வெள்ளிய விதையின் மாவையும் புளியம் பழத்தின் புளியையும் மோருக்கு அளவாகக் கலப்பாள்; கலந்து மூங்கிலரிசியைச் சுரபுன்னை நெருங்கிய மரச்சாரல் எல்லாம் கமழும்படி துழாவி ஆக்குவாள்; ஆக்கிய வெள்ளிய சோறாகிய உணவை, நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியுடையராய் விருந்தினரைப் பெற்றேமென்னும் ஆசையோடே நெஞ்சு கலந்து தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லித் தடுத்துத்தர, கள்ளுண்டு மகிழ்ச்சியுற்ற நும்முடைய மதம் தீரும்படி விடியற் காலத்துப் பெறுகுவிர். இன்னும் உச்சி மலையிலே ஏறிக்கொண்டு வந்த விளங்குகின்ற பண்டங்களையும் பெறுகுவிர். அங்ஙனம் பெற்றதாலே போரைச் செய்கின்ற வலிமையுடைய நன்னனிடத்துப் பெறக் கருதிய பரிசிலை மறந்து

நீடித்திருப்பினும் இருப்பிர். நிறைத்த இதழையிடைய குவளையைத் தெய்வம் விரும்புதலால் நறுமணம் பொருந்திய பூக்களைக் கிட்டினும், ஆண்டுவரையர மகளிருடைய இருப்பைக் காணினும் வெதும்பி நடுங்கவும் பெறுவிர். ஆகையால் பல நாள் தங்காது அவ்விடத்தைவிட்டுச் செல்வீராக.

முற்றின தினைப்புனத்தைப் பன்றி அழிக்கையினால் அதற்கஞ்சி வைக்கப்பட்ட கற்பொறிகள் வழிகளிலுண்டு. ஆகையினால் செறிந்த இருட் காலத்தே அவ்விடத்திற்றங்கியிருந்து விடியற்காலத்தே போவீராக. பெரிதும் பலரும் போகாத வழியே போகத் துணி வீராயின் மேட்டு நிலத்தேயுள்ள கற் களுடைய பள்ளத்திற் வெடிப்புகளில் பாம்பு மறைந்து கிடக்கும் குழிகளுள. அப்பள்ளத்தைக் கவனித்து, மரங்களிலேறி அவற்றில் அடித்து விலங்கு களைப் பார்ப்பீராக. விறலியர் பாம்பு மகிழும்படி கையாற்றொழுது வாழ்த்த விலங்குகள் கிடக்கும் வழியை அகன்று வலப்பக்கத்தே உள்ள வழியை நுமக்கு நெறியாகக் கொண்டு செல்வீராக. யானைகளால் தினைப்புனத்தை அழியாத படி குறவர் உயர்ந்த பரணில் ஏறி இருந்து காவல் காப்பர்; காத்து குறிய காட்டிடத்தே நிற்கும் யானைகள் நிலைகுலையும்படி கவணாற் கற்களை எறிவர். அக்கற்கள் கூற்றுவனைப்போல் உயிர் போக்குந் தன்மையன. அவை குரங்கும் அதனது குட்டியும் ஓசை அடங்கும்படி பெரிய மூங்கிலின் கோலைக் கடந்து விசை கெடாது வரும். அவற்றுக்கு மரங்களின் பின்னே ஒதுங்கி நின்று செல்வீராக. காட்டாறு வலிய யானையை விழுங்கும் வலிய முதலைகள் தங்கும் இராக்காலத்தை ஒத்த இருள் செறிந்த காவற் காட்டையும், ஆழ்ந்த நீரறாத கிடங்குகளையுமுடையது. அவ்வாறு அகழியிலே இறங்கி னாற்போன்று ஏறுதற்கும் இறக்குதற்கும் அரிய தன்மையுடையது. அவ்வாற்று வழி வழுக்கும் கரையுடையது. அவ்வழியிற் செல்லும் போது செம்மறி யாட்டை யொத்த செம்பட்டை மயிருடைய நும் பிள்ளைகளோடே மரங் களிற் சுற்றிக் கிடக்கும் கொடிகளைப் பிடித்துக் கால் வழுக்காதபடி ஒருவரை ஒருவர் பாதுகாத்துச் செல்வீராக. அசையும் செவ்வெருக்கு வளரும் பக்க மலையில் வீழ்ந்தோரைக் கொல்லும் ஆழ்ந்த குளங்களுக்கு அருகே நிலத்தை மறைத்துப் பாசியிருக்கும்.

அதனிடத்தே மிதிக்கின் ஊன்றிய அடியைச் சறுக்கப்பண்ணும். அதனால் அவ்விடம் போதற்கு அருமையுடையது. அதற்குப் பரிகாரமாக வழி முழுவதும் பின்னி வளர்ந்த நுண்ணிய கோல் களையுடைய சிறு மூங்கிலோடே கொறுக்கைப் புல்லையும் பற்றுக் கோடாகப் பிடித்துப் போவீராக.

முகபடாத்தையும், நெடுமையையுமுடைய மலைபோலும் போர்க் களிற்றினையும், மழைபோல் வில்லிடத்தினின்றும் புறப்படும் அம்பினை யுடைய தூசிப்படையையும் பெற்றுப் பொலிவு எய்திய பழைய மதில் உடைய ஊரிடத்துப் பூக்களை யுடைய மடுவுடைய ஆற்றங்கரையில் ஓர் வழியுண்டு. அதனிடத்தே துதித்தற் கரிய முறைமையினையுடைய கடவுளைக் கண்டீராயின் நீவிர் வணங்கிப் போதலல்லது வாச்சியங்களை ஒலியாதிருப் பீராக. அதற்குக் காரணம் யாதெனில், அவனது வளவிய நவிர மென்னும் மலை மயங்கிய துளியையுடைய மழையை இடைவிடாமற் பெய்யும். அதனால் வாச்சியங்கள் நனைந்து நுமக்குப் போதல் அரிதாகும்

**நவிர மலையிடத்தே காட்டுவளம்**

அக்காட்டிடத்தே மயில் கலாபத்தினது பாரத்தாலே ஆடி யிளைத்து நிற்கும். நெடிய மூங்கிலின் கவடுகளிலே கூத்தருடைய பிள்ளைகளை ஒத்த கடுவன் பாயும். தெய்வம் விரும்பும் நெடிய பக்கமலையிலே தேன் கூடுகள் காணப்படும். அவற்றை விரைந்து பாராது வழியே செல்வீராக. அவ்வாறு செய்யாவிடின் நீவிர் வழிதப்பி விடுதல்கூடும். மலையைச் சேர்ந்த வழியினை யுடைய காட்டிடத்தே செல்லுமிடத்து, கானவர் யானை முதலியவற்றுக்கு எட்டாத பரணிலிருந்து எய்ததனால் மார்பிலே புண்பட்டு அம்புடன் வழியைக் கடந்து சென்று வீழ்ந்த தேய்ந்த கொம்பினையும் வெள்ளிய நிணத்தையும் சொரசொரப்புள்ள கழுத்தையும், கரிய நிறத்தையுமுடைய பன்றியைக் காண்பீர்கள். கண்டு மூங்கி லிடத்துப் பிறந்த தீயினால் அதைவாட்டி, மயிர் போகச் சீவித்தின்று குவளைவளரும் பசிய சுனையில் பளிங்கு போன்ற தெளிந்த நீரை வழியிடத்து இளைப்புத் தீரும்படி உண்பீராக. பருத்ததசை முழுவதையும் உண்ணாமல் மீதியைப் பொதியாகக்

கட்டிக் கொண்டு [1]வளை கையினின்றும் நீங்குதற்குக் காரண மாயிருந்த பிள்ளை களுடனே அவ்விடத்தினிறும் போகாது நும்மில்லிலே புக்கா லொத்த மலை முழைஞ்சுகளில் இராக் காலத்துத் தங்குவீராக. இராக்காலத்தே எல்லோருங் கூடி இளைப்பாறி விடியற்காலத்தே துயிலெழுந்து நல்ல காட்டு வழியே செல்வீராக. அகன்ற படத்தினையும், அழகிய கண்ணினையும், வலிமிகுந்த சினமுடைய யாணையை விழுங்கத் தக்க பெருமையையும் பெருமரங்களை ஒத்த வடிவையுமுடைய பெரும் பாம்புகள் கிடக்கும் வழியை விலகிச் செல்வீராக. தூரத்தே மணங்கமழ் கின்ற பூவையும், உண்டவர் மறந்து உயிர்வாழ்தலாற்றாத பழங்களையும் தெய்வங்களன்றி மானிடர் நுகரார். ஆகையினாலே நீண்ட காம்புடைய அப் பூக்களையும் பழத்தையும் குளத்தைக் கண்டாற்போலும் குளிர்ச்சியுடைய மரக் கூட்டத்தையும், யான் கூறியதனை நினைத்து அவற்றின் குறிகளை அறிந்து இடத்தினும் வலத்தினும் பார்த்து அவற்றை அணுகாமற் போவீராக. பழங்களை யுடைகிளைகளில் பலவாச்சியங்களொப்ப ஒலி செய்யும் பறவைக் கூட்டத்தையுடைய ஆலமரங்கள் நிற்கும் நாடுகளை மெல்ல அடை வீர்கள். அப்பால் நிழல்மரங்கள் நெருங்கின குறுங் காடிருப்பதால் வெயில் நுழையாததும், இராக்காலத்தே வேட்டையாடுங் குறவரும் திசை தெரியாமல் மயங்குகின்ற குன்றிடத்தே செல்லுங்கள். சென்று வழியிடத்தே போகாது அகன்ற பாறையிலே இருந்து கல்லென்னும் ஓசைபட நும்முடைய வாச்சியங் களை ஒலிப்பீர்களாக. இனிய ஓசையுடைய அருவி களுடைய உச்சி மலை யிலே காட்டிக் காத்திருக்கும் கானவர் பலருளர். அவர்கள், துறைதப்பி ஆழத் திலே சென்று வலியழிந்து புனலிலே அழுந்துகின்றவரைக் கண்டு விரைந்து எடுப்பாரைப் போல நீவிர் திசைதெரியாத மயக்கத்தால் அறிவழிந்த வருத்தம் தீரும்படி ஓடிவந்து சேர்ந்து உண்டற்கினிய பழங்களையும் சூடுதற்கினிய பூக்களையும் தருவர். பின்னர் இடையூறு மிக்க வழியிடத்து நுமக்கு முன்னே நும்முடைய சுற்றத்தோடே மன மகிழ்ச்சி எய்துவீராக. பக்கமலை புதியமாந்தர் கண்ணாற் காணினும் தலைமயக்கும் தன்மையது. திசை காட்டுவார் கூறிய

1. பிள்ளையைப் பெற்றால் வளையல் அணியா ரென்பது.

திசையை அறிந்து குறியவும் நெடியவுமாகிய பக்க மலைகளை முறையே கடந்து, பூப்பரந்த பல வரிகளையுடைய நிழலிலே இளைத்திருப்பீர்களாயின் பலவகை ஓசைகளைக் கேட்பீர்கள்.

**மலையிடத்தே ஆரவாரம்**

மலையிடத்தே குரங்குகள் பலாப் பழத்தைத் தோண்டுதலால் மலைமுழுதும் தேன் நாறும். அம்மலையின் உச்சியிலுள்ள பண்டங்களை வாங்கிக்கொண்டு விசையுடன் ஆரவாரஞ் செய்து வருகின்ற அருவியில் ஆடும் தெய்வ மகளிர் கையால்நீர் குடையுந்தோறும் நும்முடைய வாச்சியங்களைப் போலத் தாளந் தெரிகின்ற இனிய ஓசை பிறக்கும். புனத்துப் புகுந்து தினையைத் தின்னும் விளங்குகின்ற ஏந்தின கொம்பையுடையதும் தன்னினத்தைப் பிரிந்ததும் தலைமையுடைய ஆண் யானையை மலையின் மேலிட்ட பரணில் இருந்து காவல் செய்யும் கானவர் பிடித்தற்கு விரும்பி வளைத்தலால் ஆரவாரமுண்டாகும். நீண்ட அளையில் தங்கும் முட்பன்றி தனது கூரிய முள்ளால் எய்து கொன்றவர் பொருட்டு அழுகின்றவர்களின் ஆரவாரம் ஒருபால் எழும். தம் கணவர் மார்பிலே புலி பாய்ந்து உண்டாக்கிய நெடிய பிளந்த புண்ணை ஆற்றுதற்குக் காவலென்று கருதி கரிய கூந்த லுடைய கொடிச்சியர் பாடி ஒலியைச் செய்யா நிற்பர். காலையிற் பூத்த பொன்போலுங் கொத்துடைய **வேங்கைப் பூவைச் சூடுதற்கு மகளிர் புலிபுலி என்று அச்சமில்லாத ஆரவாரஞ் செய்வர்.** கருப்பமுடைய பிடிக்குக் களிறு கவளந் தேடிக் கொடுத்துப் பாதுகாக்கையால், அதன் போக்கினைக் கவனித்து ஒளிந்திருந்த புலி பாய்ந்ததாக, அப்பிடி தன் சுற்றத்தோடே மலையிடத்தில் சத்தமிடும். குட்டியைத் தனது கையால் தழுவ மறந்த மந்தி அக் குட்டி எடுத்தற்கரிய மலைக்குகையில் வீழ்ந்திறந்ததாகத் தனது சுற்றத்தோடு அதனை நெருங்கியிருந்து துன்பத்தால் ஆரவாரஞ் செய்யும். குரங்குகள் ஏறமுடியாத மலையிடத்தில் ஏணியாகக் கூட்டி நட்ட மூங்கிற் றடிகளின் சுணுக்களில் மிதித்தேறித் தேனெடுப்போர் ஆரவாரஞ் செய்வர். அழகிய வேலினையுடைய நன்னனுக்குக் கொடுத்தற்கு இச்சிற் றரண்களிற் கைக்கொண்ட பொருள் போதுமெனக் கருதி அழித்தற்குரிய பகைவர் சிற்றரண்களை அழிக்கும் கானவர் ஆரவாரஞ் செய்யா நிற்பர்.

விடியற் காலத்தே கள்ளினையுண்ட குறவர் மான்தோல் போர்த்த பறை கல்லென்னும்படி ஒலிக்க வானைத் தீண்டும் உச்சி மலையிடத்தே தம் பெண்டிரோடு கூடிக் குரவையாடுவர். அழகிய உயர்ந்த தேர்கள் வழியிடத்தே ஓடி வந்த தன்மை போல் கல்லின்மேல் வரும் ஆறுகள் முழைஞ்சுகளிலே வீழ்ந்து இடைவிடாது ஓசையைச் செய்யும். காட்டாற்றின் நீண்ட சுழியில் அகப்பட்ட கொடிய யானையின் கோபத்தைத் தணியப் பண்ணிப் பெரிய கம்பத்திலே ஆர்க்கும் பாகருடைய ஆரவாரம் ஒருபால் எழும். ஒருபால் தட்டையைப் புடைத்துப் புனங்கள்தோறும் கிளிகளை ஓட்டுகின்ற மகளிர் சத்தமிடும் ஆரவாரம் எழும். ஒருபால் நிரையினின்றும் பெயர்ந்த அசையும் இமிலினையுடைய இடபமும், போர்த்தொழில்கைவந்த மரை ஆனின் ஏறும், முல்லை நிலக்கோவலரும் குறிஞ்சி நிலக் குறவரும் சேரக்கூடி வென்ற தம் வெற்றி தோன்ற முதுகிடாது புண் உண்டாகும்படி முட்டிப் பொரும் ஆரவாரம் எழும். எருமைக் கடாக்கள் காட்டு மல்லிகையும், குறிஞ்சியும் வாடும்படி பொருது ஆரவாரஞ் செய்யும். பலாப் பழங்களின் சுளையை விரும்பினோர் தின்று கீழே இட்ட எஞ்சிய பழத்தின் விதையைப் பயன்பெறுதற்குச் சிறுவர் கன்றுகளைப் பிணைத்துத் துடுப்புப் போலும் காந்தளினது கமழுகின்ற மடலாலே அவற்றை அடித்து ஆரவாரஞ் செய்து கடாவிடுவர். கருப்பஞ்சாற்றைப் பிழிந்து சாறெடுத்தலால் ஆலையிடத்தில் ஓசை எழும். தினையைக் குத்தும் மகளிருடைய இசைமிகுந்த வள்ளைப் பாட்டாலும், சேம்பையும் மஞ்சளையும் நட்டு வளர்த்த பின்பு பன்றி கிழங்கை அகழாமற் காப்போர் கொட்டும் பறையாலும் ஆரவார முண்டாகும்.

யான் கூறிய இவ்வோசைகளும், திரண்ட தாழ்வரையிலும் உச்சிமலை யிலுள்ள ஆரவாரமும், இவையல்லாத பல ஒலிகளும் சேர்ந்து நெருங்குகை யினாலே மலையாகிய யானையிடத் துண்டாகின்ற ஒலி திசைகளெங்கும் ஒலியா நிற்கும். பலநிறம் பொருந்திய மாலையணிந்த மகளிரின் ஆடற்கு ஏற்ற முழவின் ஓசையினால் ஊரிடத்துள்ளோர் துயிலறியார். இவ்வியல் புடைய ஊரிடத்தே கொண்ட திருநாளைப்போன்ற காண்டற்கினிய வற்றைக் கண்குளிரக் கண்டும், கேட்கப்படுவனவற்றைச் செவி

குளிரக் கேட்டும் உண்டற்கினிய பல உணவுகளைக் கொண்டாடி உண்டும், மகிழ்வீராக. மகிழ்ந்து நமக்கு மேலும் இந்நுகர்ச்சி உண்டாவதாக வென்று விரும்பிப் பழைய உறவினரைப் போலும் முறைமையினையுடையயீராய் அவ்விடத்தே சிலநாள் தங்குவீர் களாக. போர்த்தொழில் மிக்கு நடத்தலால் உலகம் புகழும் திருமகள் தங்கும் மார்பையுடைய நன்னனது இடியேறு முழங்கும் மலைகள் தோன்றும். அவற்றைக்கடந்து செல்வீராக. பக்கமலை யிடத்தே வியப்பு மிக்க இனிய யாழையுடைய விறலியர் குறிஞ்சி யென்னும் பண்ணைப்பாட நீவிரும் ஆண்டுறையும் தெய்வங் களைக் கையாலே தொழுது, ‘எங்குறை முடித்தால் நுமக்கு இவை தருதும்’ என்று பரவுக் கடன் பூண்டு வாழ்த்திச் செல்வீராக.

**நடுகல்**

பின்னிய பஞ்சுபோலச் சென்று கார்காலம் வருமளவும் மலையிற் கிடைந்த மேகம் சூல் கொண்டு கையினாற் பிடிக்கத் தக்க அண்மையில் கருமை பெற்று விளங்கும். அது இயல்பாகத் தூவினாலொத்த துளிகளைத் தூவாநிற்கும், அதனால் விரைவாக நடந்து செல்ல முடியாத உமது சுற்றத் தோடே காவிச் செல்லும் வாத்தியங்கள் நனையாதபடி கிணறுகள் போன்ற குகை களிடத்தில் நுழைந்து புகுவீர்களாக. பெரிய பாறைகள் முறிந்து தோன்று கின்ற மலைகளை அடையாதீர். எட்டாதே நின்று கண்ணினாற் பார்க்கினும், அவை கண்ணினொளியை அழகாலே வாங்கிக்கொள்ளும். இப்பெரிய மலையில் வருத்தத்தைச் செய்யும் குழிகளிடத்துப் பிறக்கும் இடையூறுகள் பல. மண் செறிந்த முழவைத் தூக்கிச் செல்லும் காமரத்தை நுமக்கு ஊன்று கோலாகக் கொண்டு அக்குழிகளில் விழாமற் போவீராக. வெயிலுள்ள வழியிடத்தே செல்ல விருப்பின் வெயில்தாழ்ந்த அந்திப்பொழுதிற் போவீராக. அவ்விடத்தே நன்னனது யானைப் படையை உடையவும் பொருதுவந்த அரசர் வலியைக் கெடுப்பவுமாகிய அரண் களுண்டு. அவ்வரண்களிற் பின்னி வைத்தாலொத்த கொடி களடர்ந்ததும் சிறு காடுகளுடையதுமாகி சிறு வழிகள் தோன்றும். முன்னே போகின்றவன் எதிரே கிடக்கும் திரண்டகோல் முகத்தில் அடியாமல் முன்னே தள்ளி விலகிச் செல்வானாக. அவ்விசை யுடைய கோல் யாழின் பத்தரையும் முழவின் கண்களையும்

கெடாதபடி காத்து அதனைக் கையாற் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்லச் செல்வீராக. யானைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பொருதினாற்போல நெருங்கின குன்றுகளிடத்து மழை யினாற் செழுமையுற்ற பல காடுகள் உண்டு. ஏவல் கேளாதபகைவர் போரில் முதுகிட்டனர். அதனைக் கண்ட வஞ்சியார் படை வெற்றிதோன்ற ஆரவாரஞ் செய்தது. அதனைக் கண்டு பொறாத புறங்கொடுத்த மறவர் உயிர் கொடுத்தற்கு இது நல்ல கால மென்று நாணத்தினால் மீண்டு வந்து உயிரைக் கொடுத்தனர். அவர்கள் புகழினை எழுதி நட்ட பல கற்களை யுடைய முதுகிட்டோடினோரை இகழும் பல வழிகள் அக்காட்டிடத்தே உண்டு. அந்நடுகற்களிலுள்ள தெய்வங் களுக்கு விருப்பமுண்டாகும்படி நுமது யாழை வாசித்து விரைந்து செல்வீர் களாக. வழியறியாமற் தீய நிலத்தே போய்த் திரும்பி வந்தவர்களும், இனி வருகின்றவர்களும் அவ்வாறு போய் மீளாதபடி பல வழி கூடிய சந்தியில் கையாலே கூட்டி முடிந்த ஊகம்புல்லை அடையாளமாக வைப்பீர்களாக. இவ்வாறு பொருது இறந்த இன்னான். என்று அவன் பெயரை உலகம் அறியும் படி எழுதி மராமர நிழலிலே நட்ட வீரக் கற்களின் தெய்வத்தன்மை மிகுந்த கொடுமையால் அக்காடு பிறநாடுகளை இகழ்வது போன்றது.

அதனிடத்துள்ள பலவழிகளில் நன்னனது பகைவருறையும் கொடிய இடங்கள் பலவுண்டு. தம் மூர்களினின்று நினைப்பினும் தலை நடுங்கும் சுரத்து, தேன் சொரியும் மாலையையும் கொடுத்துக் கவிந்த கையினையும் தனக்கென்று ஒருபொருளையும் பேணாத இயல்பினையுமுடைய நன்னனை நாடிச் செல்கின்றே மென்று கூறுவீர்களாக. கூறுவீர்களாயின் அப்பகைப்புலம் நம்மை ஒத்த பரிசிலர்க்கு, செல்வமிக்க நன்னனுடைய உயர்ந்த ஒழுக்கத் தினையுடைய பழைய ஊர்களை ஒக்கும். ஆதலின் அச்சமின்றி அவ் விடத்தே இளைப்பாறிப் போவீராக.

காட்டிடத்தே புலி பாய்ந்து கொன்ற பெண்மானை நினைத்துக் கலை மான் சத்தமிடும்; வில்லின் ஓசைக்கு வெருவின சிவந்த கண்ணையுடைய மரையேறு குறுங்காட்டிலே விரைந்தோடும். வேற்றுப் புலங்களில் சென்று மேய்ந்த ஏற்றையுடைய நிரை

யிடத்துள்ள சங்குபோல் வெள்ளிய பசுக்களின் இனிய பாலை வளையணிந்த மகளிர் மன மகிழும்படி நிரையைச் சூழ்ந்து காவல் செய்யும் இடையர் கொண்டுவந்து சொரிவர். அவ்விடத்தே செல்லின் நீவிர் அவர்களின் விருந்தினராகுவிர். பண்டம் விற்றலினாற் பெற்றபல இன நெல்லினைக் குற்றிய அரிசியைப்போல கிடாயுடைய செம்மறித்திரள் வெள்ளாட்டுடனே கலக்கும்; கலந்து கல்லென்ற ஓசையுடைய காட்டிடத்தே கடல் போலொலிக்கும். இவ்வகையான ஆட்டுத்திரள் நிற்கின்ற காட்டிடத்தே இராக்காலத்தே செல்வீராயின், இடையர் நுமக் கென்று சமையாது தமக்கென்று சமைத்த பாற்சோற்றையும் பாலையும் பெறுகுவிர். இடையர் நெருப்பை எரித்து, மெல்லிய தலைமயிரை அடைத்த மெத்தையைப் போன்று, ஆட்டுத் தோலைத் தைத்துச் செய்த படுக்கையிலே துயில் கொள்வர். அந்நெருப் பிடத்தே துணையாக இராத்தங்கிப் போவீராக. அரசன் ஆணையால் நாட்டைக் காத்து நிற்கும் வேடர் கூட்டத்தைக் காண்பீராயின் நன்னனை நினைத்துப் போகின்றோமென்று கூறுவீராக. அவர் கள்ளையும் கிழங்குகளை யும் உண்ணும்படி நுமக்கு வலிந்து தருவர். அவற்றை நுகர்ந்து அவ்விடத்தே அவர் போகச் சொன்ன வழியே செல்வீராக. அக்காட்டின் தன்மை இவ்வகையினதாகும். தேன்துளிக்கும் மெல்லிய மலர்க் கொத்துக் களையும் யானை முறித்த தளிர்களையுமுடைய ஆச்சாவின் பூக்களையும் மரல் நாரினாலே மாலையாகக் கட்டிச் சூடுவீராக. பருக்கைக் கற்களுடைய மேட்டு நிலத்தில் சிறு வழி மழை பெய்து குளிருகையால் அவ்விடத்தே தங்கி நின்ற தெளிந்த நீரைக் குடித்து வழிக்கும் முகந்துகொண்டு போவீர்களாக. சென்று தடிகளால் தெற்றிப் பண்ணிப் புல்லால் வேய்ந்த குடில்களிருக்கும் குடியிருப் பினையுடைய அகன்ற ஊரை அடைவீர்கள். அவ்விடத்துத் தங்குவீராயின் வேங்கைப் பூவின் நிறத்தையுடைய அவரை விதையையும் மூங்கிலரிசியையும் புளி கரைத்த உலையிலே சொரிந்து ஆக்கின குழைந்த புளியங்கூழைக் காட்டிடத்துப் பகல் வழி நடந்த வருத்தந் தீரும்படி இராக்காலத்தே பெறுகுவிர். அவ்விடத்தே சில நாள் தங்குவீர்களாயின் இறைச்சி கலந்த நெய்ச் சோற்றையும் தினைமாவையும் பெறுகுவிர். அவற்றை உண்டு

குறங்கொள்ளியை எரித்துப் பனி வருத்தாது நித்திரை கொண்டு விடியற்காலத்தே நிமித்தம் பார்த்துப் போவீர்களாக.

**நன்னனின் மருதவளநாடு**

நன்னனுடைய குளிர்ந்த மருத மரத்தையுடைய நாடு காஞ்சி மரத்தையும், நீர்வந்து பொருகின்ற ஆறுகளையும், மெல்லிய விளைநிலங் களையும், பொழில்களையும், இடைச்சேரிகளையும் உடையது. இவ்வகை யான ஊர்களில் ஒரு நாள் தங்கிப் போகினும் பலநாள் நிற்பினும் யாழின் பண்களை மாறி வாசிக்குமிடத்து எவ்வாறு இனிதாயிருக்குமோ அவ்வகை யான நல்ல பல பொருள் களை மாறி மாறி உண்ணும்படி பெறுகுவிர். நண்டுகள் ஆடித்திரியும் வயலுக்கு அருகே உள்ள மேட்டு நிலத்தே மலை ஒத்த போர்களைக் கீழே தள்ளிக் கடாவிடும் உழவர் நெல்லை அள்ளித் தருவர். பகன்றைப் பூவாற் செய்த மாலையணிந்த கள் விற்கும் வலையருடைய மகளிர், வலைவீசுவார் கொண்டு வந்த வாளை மீன்றசையுடன் தூண்டிலிற் பிடித்த பிடியின்கையை ஒத்த சிவந்த கண்ணையுடைய வராலினது உடுக்கின் கண் போன்ற தசையைக் கலப்பர்; கலந்து அசைகின்ற மிடாவினின்றும் வார்த்த நெல் முளையாலட்ட கட்டெளிவுடன் விடியற்காலத்தே களங்கள் தோறும் அமையுமென்று கண்டோர் மருளும்படி முள்ளைக் கழித்து ஆக்கின கொழுப்பால் வெள்ளிய நிறத்தையுடைய தசையுடைய வெள்ளிய சோற்றை நும் சுற்றத்துடனே உண்பீராக. உண்டு எருத்தை அடிக்கின்ற உழவர் ஓசை யோடே கூடும்படி மருதப் பண்ணை வாசித்து இளைப்பாறிப் போவீராக. நெல்லறுப்போர் கொட்டும் பறை யோசைக்கு அஞ்சி எருமைத் திரளைப் பிரிந்த கடா நும் மேல் வருவதைப் பாதுகாத்துக் குயவன் வனைகின்ற மட்கலத்துச் சக்கரம்போலக் குமிழி சுழன்றுதோன்றும் வாய்த் தலையில் ஒழிவில்லாமல் ஓடும் சேயாற்றங்கரையை வழியாகக் கொண்டு செல்வீராக.

**நன்னனது வளமிக்க நகர்**

நன்னது பழைய மூதூர் பல வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த பொழில்களையும் உயர்ந்த மதிலினையும், திருநாளென்னும்படி மாந்தர் பொருந்திக் கடலெனக் காரென ஒலிக்கும் ஆரவாரத்

தோடு திரியும் பெரிய மாடங்கள் ஓங்கிய அங்காடித் தெரு வினையும், பல குறுக்குத் தெருக்களை யும் உடையது. இவ்வகைத் தாகிய அவனது பெரியநகர் சேய்மைக் கண்ணன்று. பல பின்னிய வழிகளையுடைய கோபுரவாயிலில் பகைவரின் கரிய தலை களைப் பருந்துகள் படிந்து உண்ணும்படி போரை வெல்லும் வாளையுடைய மறவர் கரிய காம்பினையுடைய வேலைச் சார்த்தி வைத்துக் காத்து நிற்பர். அவ்வரிய கோபுர வாயிலை ஐயுறாமற் புகுவீராக. தூர தேசங் களினின்றும் வந்து அம்பலங்களிலே தங்குகின்ற கூத்தர் முதலியோ ரெல்லாம் நும்மைக் காண்பர். கண்டு வெல்லுகின்ற போரையுடைய முருகனைப்போன்ற நன்னனிடத்துப் பரிசில் பெற வந்தாரென்று அன்பாகப் பார்ப்பர். பார்த்து நீவிர் தனிமையாய் இருக்கும் வருத்தம் நீங்கும்படி தமது விருந்தினராய் உங்களை எதிர் கொள்வர். நீவிர் அவ்விடத்தே தங்கியிருப் பீராக.

**எட்டு காலுடைய வருடை**

அரசனது தலைவாயிலினிடத்தே மராமரத்தின் கீழ்க் கிடந்த ஆமானின் குழவியும், யானைக் கன்றும், வளைந்த அடியினை யுடைய கரடியின் வாய் திறவாக் குட்டியும், வளைந்த காலினை யுடைய எட்டுக் காலுடைய வருடையின் கிடாயும், கீரியும், புலி பாய்ந்து கொன்ற மரையானின் பெரிய செவியுடைய குட்டியும், சிவந்த நிலத்திற் சுக்கான் கல்லின்மேல் தவழும் ஆண் உடும்பும், மலையிடத்தே ஆடும் மயிலும், கோழிப் பேட்டை அழைக்கும் குரலுடைய சேவலும்; முழவு போன்ற பலாப்பழமும், இனிய மாம்பழங்களும், மணம் பொருந்திய நறைக் கொடியும், காவிக் கொண்டு வந்த நுகம்போன்ற நூறைக்கிழங்கும், கருப்பூரமும், மாணிக்கமும், புலியினாற் கொல்லப்பட்ட யானைகளின் முத்துடைய கொம்புகளும், காந்தட் பூவும், திலகப் பூவும், பசியமிளகுக் கொத்தும், மூங்கிற் குழாயில் முற்றிய கட்டெளிவும், மூங்கிற் குழாயிலூற்றிய எருமைத் தயிரும், தேன் சொரியும் இறாற் கூடுகளையுடைய ஆசினிப் பலாக்கள் நிற்கின்ற மலை களினின்றும் பிறந்த காவிரி கடலிலே மிக்குச் செல்கின்ற புகார் முகத்தை யொப்ப ஈண்டிக் கிடக்கும். வானைத் தொடும் யானைகளின் இலத்தி கிடக்கும் முற்றத்தே அணுகுவீராக.

அவ்விடத்தே, மழை முழக்கம் போன்ற கண்ணையுடைய முழவும் புல்லாங்குழலும் ஒலிப்ப, விறலியர் பழைய முறை மையிற் றப்பாது கடவுளை முதலில் வாழ்த்தா நிற்பர். பின்பு புதிய பாடும் பாட்டுகளைப் பாடி 'பெரிய புகழுடைய நினது முன்னோர் மரபில் வந்த பல உபகாரிகள் இறந்தார்கள். அவர்களைப் போலாவது நின்பேர் இக்காலத்து இவ்வுலகில் நடந்துவிடாது உலகுள்ளளவும் நிற்கும்படி கொடைக்கடனை முடித்தலை யுடையவனே' என்று கூறுவீராக. கூறி அவனது வெற்றிப்புகழை அவன் ஐம்புலனும் தன் வசமாகும்படி புகழ்ந்து கூறுவீராக. நும்மனத்திற் சென்ற ஏனைப் புகழ்களை முற்றக்கூறவும் விடானாய், "என்மேலுள்ள விருப்பங் கொண்டு வருகையினாலே என்னிடத்தே வந்ததுபோதும், பழிவந்த வருத்தம் பெரியது" எனக் கூறுவான் பின்னர் படைத்தலைவரோடே பொலிவு பெற்ற செல்வத்தை யுடைய தன் மனையின் முற்றத்தே உங்களை அழைத்துச் செல்வான். சென்று [1]சமயத்திருக்கு மண்டபத்தே யிருப்பான். இருந்து "உயர்ந்த அரசு உரிமையையும் கொடுமையில்லாத அமைச்சர் முதலியோ ரையும், அகன்ற நாட்டினையும், உடையராயிருந்தும் சுருங்கின அறிவினை யுடையராய் இரந்து வந்தோர்க்கு இல்லை என்று கூறி மறித்த கையினராய்த் தம் பெயரை நிறுத்தாமல் இறந்துபோன அரசர் மலையினின்றும் பெருகி ஓடுகின்ற சேயாற்றங் கரை மணலிலும் பலராவர். ஆகையினால் நமக்குத் தெய்வம் இத்துணை காலமிருவென எல்லையிட்ட காலம் புகழோடே கழிந்து போவதாக" என்று நினைவான். பின்னர் கொடுக்க விரும்பின வனாய் நும்மை இனிதாக நோக்கி, இழைபோன விடமறியாத **நுண்ணிய நூலாற் செய்த ஆடைகளை அழுக்கேறிய துணிகள் கிடக்கும் அரையிலே உடுக்கும் படி தருவான்.** அவ்விடத்தே நெடுநாள் தங்குவீராயினும் நெல்லரிசிச் சோற்றுடன் பெண்ணாய் வேட்டையாடிக் கொண்டு வந்த கொழுப்புடைய இறைச்சியையும் ஒருநாட் போலப் பல நாளும் தருவான். மலையினின்றும் வீழும் அருவி வெற்றிக்கொடி போலத் தோன்றும் மலைநாட்டுக் குரியவனும் மழை போன்ற கொடைத் தொழிலை யுடையவனுமாகிய நன்னன், கொடுக்கக் குறைவுபடாத பல

1. யாவருங் காணுதற்கெளியனாய் வீற்றிருக்கும் மண்டபம்.

பொருள்களையும், தேரையும், வேழத்தையும், மணி கட்டிய பசுத்திரளையும், பொன்னாற் செய்த சேணத்தையுடைய குதிரை களையும் நல்குவான். நல்கிக் கூத்தர் தலைவனாகிய நீ பொற்றாமரை சூடவும் விறலி பொன்னாபரணங்களணியவும் செய்து முதல் நாளிலே பரிசில் தந்து அடுத்த நாள் போகும்படி மொழிவான்.

**தனிப் பாடல்**

தூஉஉத் தீம் புகை தொல் விசும்பு போர்த்ததுகொல்?-
பாஅய்ப் பகல் செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கொல்?-
மாஅ மிசையான் கோன் நன்னன் நறு நுதலார்
மாஅமை அல்லாம் பசப்பு!

● ● ●

## சிறப்புப் பெயர் முதலியவை


### அ

அகழ் ........ 214
அசையும் நல் புலம் ........ 67
அதட் பள்ளி ........ 419
அம்பு ........ 421
அமை ........ 522
அயில் ........ 373
அயினி ........ 467
அரக்கு ........ 507
அரசு ........ 74
அரம் ........ 35
அரவு ........ 504
அரிசி ........ 440
அருங் கலம் ........ 71
அருப்பம் ........ 378
அருவி ........ 278, 554
அல் (இரவு) ........ 254, 256, 437
அலகை ........ 234, 347
அவரை ........ 110
அவரை அம் புளிங் கூழ் ........ 436
அவல் (உணவு வகை) ........ 121
அவல் (பள்ளம்) ........ 198
அவையம் ........ 77
அளை ........ 300
அறிஞர் ........ 287

### ஆ

ஆஅல் (ஆரல்) ........ 100
ஆகுளி ........ 3, 140
ஆசினி ........ 139, 526
ஆணி ........ 27
ஆமான் குழவி ........ 500
ஆரம் ........ 520
ஆலம் ........ 268
ஆலை ........ 119, 340
ஆன் தீம் பால் ........ 409

### இ

இகழுநர் ........ 73
இஞ்சி ........ 92, 126
இடங்கர் ........ 211
இடி ........ 512
இதணம் ........ 204
இயங்கள் ........ 277
இயங்குநர் ........ 18
இயம் ........ 232, 269
இருங்கல் அரும் பொறி ........ 194–195
இரும்பு ........ 113
இலஞ்சி ........ 228
இழுது ........ 244, 442
இளி ........ 7
இறடி ........ 169
இறாஅல் ........ 525

### ஈ

ஈகைமாரி ........ 72

### உ

உடும்பின் ஏற்றை ........ 508
உந்தி ........ 34
உந்தூழ் ........ 133
உம்பல் ........ 429

உயவை .................................................. 136
உலகம் .................................................. 541
உழவர் .................................................. 60
உழுவை .................................................. 505

**ஊ**

ஊகம் .................................................. 208
ஊறு நிரம்பிய ஆறு .............................. 284
ஊன் .................................................. 146
ஊன் ஆர் வட்டியர் .............................. 152

**எ**

எஃகம் .................................................. 490
எஃகு .................................................. 300
எண் .................................................. 106
எண்கின் குருளை .............................. 501
எய் .................................................. 301
எருது .................................................. 469
எருமை .......................................... 472, 523
எருவை மென் கோல் .......................... 224
எல் (இரவு) .......................................... 416
எல்லரி (சல்லி) .................................... 10

**ஏ**

ஏறு .......................................... 330, 408
ஏறுடைப் பெரு நிரை .......................... 573
ஏறு பொரூஉம் கம்பலை ...................... 335
ஏனம் .................................................. 247
ஏனல் .................................................. 108

**ஐ**

ஐயவி .................................................. 123
ஐவன வெண்ணெல் .............................. 115

**ஒ**

ஒக்கல் .................................................. 157
ஒருத்தல் .................................................. 297
ஒன்னாத் தெவ்வர் .............................. 386

**க**

கட்டில் .................................................. 550
கடம் .................................................. 415
கடமான் .................................................. 175
கடல் .......................................... 52, 483
கடவுள் .................................................. 230
கடவுள் பழிச்சல் .................................. 538
கடிப்பகை .............................................. 22
கடு (ஒரு வகை மரம்) .............................. 14
கடும்பு ........................ 159, 286, 364, 468
கடுவன் .................................................. 237
கண்ணி .............................. 399, 430, 466
கண்ணுளர் ஒக்கல் .............................. 50
கண்வு .................................................. 454
கணை .................................................. 226
கதிர் .................................................. 375
கயம் .............................. 47, 213, 220, 259
கயமுனி .................................................. 107
கயமுனிக் குழவி .................................. 500
கயவாய் (புகார்) .................................. 528
கரும்பு .......................................... 119, 341
கல் அளை .............................................. 255
கல் எறிந்து எழுதிய கடவுள் ......................
.................................................. 395–396
கல்லாப் பார்ப்பு .................................. 312
கலப்பை .................................................. 13
கலம் .................................................. 50
கலை .................................. 292, 315, 405
கவண் உமிழ் கடுங் கல் .......................... 206
கவலை .................................................. 128
கவலை மறுகு ...................................... 482
கழுது .................................................. 243
கழை ....... 180, 207, 237, 248, 533, 579
கழை பெய் தீம் தயிர் .......................... 523
கள் .................................................. 522
களங்கனி .............................................. 36
களம் (நெற்களம்) .................................. 464
களமர் .................................................. 469
களிறு ...................... 6, 129, 211, 260, 384

கன்று ........ 307

**கா**

கா ........ 451, 486
கா அய்க் கொண்ட இயம் ........ 365
கா அக்ய் கொள்ளுதல் ........ 515
காஞ்சி ........ 449
காடு காத்து உறையும் கானவர் ........ 279
காடு படு தீ ........ 248
காந்தள் ........ 336, 519
கார் ........ 142, 483
காரி உண்டிக் கடவுள் ........ 83
காவிரி ........ 527
காழ் (விதை) ........ 338
காழ் மண்டு எஃகம் ........ 129
கான் யாற்று நடவை ........ 214
கானம் ........ 54, 69, 242
கானவர் ........ 17, 155, 298, 301

**கி**

கிடங்கு ........ 91
கிழங்கினர் ........ 152
கிழங்கு ........ 425
கிளி கடி மகளிர் ........ 329
கிளை ........ 54
கிளை (சுற்றம்) ........ 313

**கு**

குட மலை ........ 527
குடிஞை ........ 141
குருசில் ........ 186
குவளை ........ 189, 251
குழல் ........ 8
குறமகள் ........ 183
குறவர் ........ 203, 320, 333
குறவரும் மருளும் குன்றம் ........ 275
குறிஞ்சி ........ 334
குறிஞ்சி பாடுதல் ........ 359
குறும் பரம் தூம்பு ........ 7
குன்றகச் சிலம்பு ........ 344
குன்றா நல் இசைச் சென்றோர் ........ 540

**கூ**

கூர்ங் கற் பாறை ........ 373
கூவல் ........ 366
கூவை ........ 137, 422
கூளியர் ........ 422
கூற்றம் ........ 209

கே

கேழல் ........ 193
கேள்வி ........ 22

**கை**

கைபிணி விடாஅது பைபயக் கழிதல் ........ 383

**கொ**

கொடி (நறைக் கொடி) ........ 514
கொடிச்சியர் ........ 304
கொடியோள் கணவன் ........ 424
கொடுவரி ........ 302
கொடைக் கடன் ........ 89, 543
கொழுநர் ........ 302

**கோ**

கோடியர் ........ 143
கோடியர் மகாஅர் ........ 236
கோடு (ஒரு வகை வாத்தியம்) ........ 5
கோடு (மரக்கிளை) ........ 268
கோவலர் ........ 333, 409
கோழிச் சேவல் ........ 510

**ச**

சந்து நீவிப் புல் முடிந்து இடுதல் ........ 393

**சி**

சிலை ........ 406
சிலையர் ........ 274
சிறுகுடி ........ 156
சிறு நெறி ........ 16

**சீ**

சீறியாழ் ........ 534

**சு**

சுவல் விளை நெல் ........ 436

சுற்றம் ........ 80, 376

சுனை ........ 104, 251

**சூ**

சூர் புகல் அடுக்கம் ........ 239

சூழி ........ 228

**செ**

செங் காந்தள் ........ 145

செந் நிலம் ........ 507

செம்மல் ........ 543

செய்யாப் பாவை ........ 125

செயலை ........ 160

செரு ........ 186

செரு மிக்குப் புகலும் திரு ஆர் மார்பன் ........ 356

**சே**

சேஎய் ........ 493

சேக்கை ........ 418

சேணோன் ........ 243

சேம்பு ........ 343

சேயாறு ........ 476, 555

**சோ**

சோலை ........ 69

**ஞ**

ஞமலி ........ 42

**ஞா**

ஞாயிறு ........ 85, 272

**ஞெ**

ஞெகிழி ........ 446

ஞெண்டு ........ 460

**த**

தட்டை ........ 328

தட்டை (கரடிகை) ........ 9

தடி ........ 425

தண்டு ........ 371

தண்ணுமை ........ 471

தண் பணை நாடு ........ 453

தயிர் ........ 523

**தா**

தாமரை ........ 569

தாயம் ........ 551

**தி**

திரு ........ 1

திருமணி ........ 516

திலகம் ........ 520

திவவு ........ 21

தினைகுறு மகளிர் ........ 342

**தீ**

தீ ........ 145

தீத்துணை ஆகச் சேத்தல் ........ 420

தீர்வை ........ 504

**து**

துஞ்சு மரம் ........ 261

துடவை ........ 122

துடி ........ 458

துணை ........ 17

துரு ........ 217

துருவை ........ 414

துளை ........ 27

**தூ**

தூண்டில் ........ 456

தூம்பு ........ 6, 533

**தெ**

தெரு ........ 481

தெவ்வர் ........ 86, 386, 397, 488

**தே**

தேஎம் (திசை) ........ 273, 364

தேம் ........ 317

தேமா ........ 138

தேர் ........ 323, 571
தேர் வீசு கவிகை ........ 399
தேறல் ........ 171, 463, 522
தேனினர் ........ 152

**தொ**

தொடி ........ 21, 577
தொல்லோர் ........ 89

**தோ**

தோகை ........ 44
தோரை ........ 121
தோல் ........ 377

**ந**

நட்ட கல் ........ 388–389
நடவை ........ 432
நரம்பு ........ 23
நவிரம் ........ 82, 579
நறவு ........ 172, 320
நன்னன் ........ 467, வெ. 1
நன்னன் சேய் நன்னன் ........ 64

**நா**

நாகம் ........ 520
நாடு காண் நனந்தலை ........ 270
நாடு படு வல்சி ........ 68
நாவல் ........ 135
நாள் மகிழ் இருக்கை ........ 76

**நி**

நிணம் ........ 244
நிதியம் ........ 478, 575
நியமம் ........ 480
நில நாடு ........ 192
நிழல் ........ 290

**நு**

நுட்பம் ........ 551
நுண் கோல் வேரல் ........ 223
நுவணை ........ 445

**நூ**

நூழிலாட்டுதல் ........ 87
நூற் கலிங்கம் ........ 561
நூறை ........ 515

**நெ**

நெடுங் கடை ........ 529
நெய்தல் ........ 124
நெல்லின் அரி ........ 180

**நே**

நேமி ........ 238, 525

நொ

நொடி ........ 11

**ப**

பகர் விரவு நெல் ........ 413
பகல் செய்வான் ........ வெ. 1
பகன்றைக் கண்ணி ........ 459
பச்சை ........ 29
பசுங் கறி ........ 521
பண் ........ 2
பணவை ........ 298
பதலை (ஒரு கண் மாக் கிணை) ........ 11
பயம்பு ........ 199
பரிசில் ........ 581
பரிசிலர் ........ 492
பருந்து ........ 489
பரூஉக் கொடி ........ 216
பலவின் சுளை விளை தீம்பழம் ........ 337
பலவின் பெரும் பழம் ........ 511
பலவு ........ 12, 144
பழங் குடி ........ 479
பழன் ........ 263, 282
பழனம் ........ 454
பழையர் மகளிர் ........ 459
பள்ளி ........ 451
பளிங்கு ........ 516

பறை ........ 236
பன்றி ........ 153
பன்றிப் பறை ........ 344

பா

பாக்கம் ........ 162
பாகர் ........ 327
பாசி ........ 221
பாட்டு ........ 390
பாண்டில் ........ 4
பாணர் ........ 40
பாணி ........ 11
பாம்பு ........ 199, வெ. 1
பார்ப்பு ........ 208
பால் ........ 417
பாறை ........ 15, 276

பி

பிடி ........ 127, 307
பிணங்கு அரில் ........ 379
பிணவு ........ 177
பிணையல் ........ 349
பிரசம் ........ 239

பீ

பீலி அணித் தழை ........ 5

பு

புகழுநர் ........ 73
புதவு ........ 449, 490
புரவி ........ 574
புரிசை ........ 229
புல் வேய் குரம்பை ........ 439
புலம் பெயர் புதுவர் ........ 392
புலரிவிடியல் ........ 448
புலவர் ........ 576
புலவோர் ........ 72
புலி ........ 309, 404, 517
புழகு ........ 219
புழை ........ 194
புள் (வளையல்) ........ 253
புளி ........ 179
புறவு ........ 48
புனல் ........ 48

பூ

பூ ........ 262, 283

பெ

பெயல் ........ 99
பெரியோர் ........ 542
பெரும் பழம் ........ 292
பெரு மரக் குழாம் ........ 265

பே

பேரியாழ் ........ 37

பொ

பொதி ........ 252
பொன் ........ 440

போ

போர் (நெற் சூடு) ........ 461

ம

மகமுறை ........ 185
மகாஅர் ........ 339
மகார் ........ 217, 253
மஞ்சள் ........ 343
மஞ்ஞை ........ 235, 509
மண இல் ........ 151
மணி ........ 250, 573
மந்தி ........ 311
மரல் ........ 431
மராஅ ........ 428, 498
மராஅத்த கடவுள் ........ 395–396
மருதம் ........ 470
மருதம்(பண்) ........ 534
மருப்பு (யாழ்) ........ 391
மருப்பு (யாழ்த் தண்டு) ........ 37
மரையான் ........ 331
மரையான் குழவி ........ 506

மரை விடை ........................................ 406
மலை ........................................ 69
மலைத் தாரம் ........................................ 170
மலை படு கடாஅம் ........................................ 348
மலை மிசை நாடு ........................................ 188
மழை ........................................ 1, 377
மறவர் ........................................ 387, 489
மன்றில் வதியுநர் ........................................ 492

மா

மாசுணம் ........................................ 261
மாடம் ........................................ 484
மாதிரம் ........................................ 287, 348
மாமை ........................................ 35
மாரி ........................................ 233
மால்பு (கண் ஏணி) ........................................ 316
மாவின் தீம் பழம் ........................................ 512–513
மான் தோற் சிறுபறை ........................................ 321

மி

மிதவை ........................................ 417
மிளகு ........................................ 521
மிளை ........................................ 409

மு

முசுண்டை ........................................ 101
முடுக்கர் ........................................ 213
முடுவல் ........................................ 563
முத்துடை மருப்பு ........................................ 518
முதலை ........................................ 90
முரம்பு ........................................ 198, 432
முரற்கை ........................................ 390
முழவின் கண் ........................................ 382
முழவின் தலைக்கோல் ........................................ 370
முழவு ........................................ 3, 143, 350, 532
முளவு மா ........................................ 176
முற்றம் ........................................ 531
முனை ........................................ 59

மூ

மூதூர் ........................................ 93, 401, 487

மே

மேதி ........................................ 111

மோ

மோர் ........................................ 179

யா

யா ........................................ 429
யாட்டு இன நிரை ........................................ 416
யாப்பு ........................................ 28
யாழ் ........................................ 450, 469
யாழ்ப் பத்தர் ........................................ 381
யாறு ........................................ 52
யானை ........................................ 154, 205, 227, 517, 530

வ

வகுந்து ........................................ 242
வடி ........................................ 512
வண்டு ........................................ 30, 56, 466, 486
வதுவை ........................................ 30
வயவர் ........................................ 547
வயிரியம் ........................................ 164
வரகின் குரல் ........................................ 24–25
வரகு ........................................ 24, 113
வராஅல் ........................................ 457
வருடை ........................................ 503
வரை அரமகளிர் ........................................ 190
வரை சேர் வகுந்தின் கானம் ........................................ 242
வல்சி (நெல்) ........................................ 462
வலையோர் ........................................ 455
வழூஉம் மருங்கு ........................................ 215
வழை ........................................ 181
வள்ளல் ........................................ 400
வள்ளை ........................................ 342
வளை ........................................ 519
வளையோர் ........................................ 410
வனை கலந் திகிரி ........................................ 474

### வா


வாதி ........ 112
வாதி கை ........ 112
வாயில் ........ 491
வாழை ........ 131
வாளியர் ........ 17
வாளை ........ 455
வான் ........ 75
வான் அரமகளிர் ........ 294
வான்கண் ........ 257
வானம் ........ 97, 530


### வி


விசும்பு ........ 1
விசையம் ........ 444
விடியல் ........ 196, 257
விண் ........ 2
விரவு மொழி ........ 327
விருந்தின் பாணி ........ 539
விருந்து ........ 496
வில் ........ 422
விழவு ........ 351
விளை புனம் ........ 193
விறலியர் ........ 46, 201, 358, 536, 569


### வெ


வெண்ணெல் அரிநர் ........ 471
வெண்ணெல்லின் அரிசி ........ 564
வெண் புடைக் கொண்ட
துய்த்தலைப் பழன் ........ 178
வெள் அரி வெண் சோறு ........ 465
வெள்ளை ........ 414
வெளில் ........ 326
வெறிக் களம் ........ 150
வென்றிப் பல் புகழ் ........ 544


### வே


வேங்கை ........ 305, 434
வேத்தவை ........ 39
வேய் ........ 171
வேய் கொள் அரிசி மிதவை ........ 435
வேல் நிழற் புலவோர் ........ 88
வேவை ........ 168
வேழம் ........ 325, 572
வேள் ........ 164


### வை


வைகறை ........ 172


● ● ●

# பாடியோர், பாடப்பட்டோர் வரலாறு

## 1. திருமுருகாற்றுப்படை

**பாடியவர்:**

*மதுரைக் கணக்காயனார் மகனார்* ***நக்கீரனார்*** *பாடியது* ***திருமுருகாற்றுப்படை.*** *இவர் தந்தை மதுரையில் கணக்காயராக அதாவது ஆசிரியராக இருந்திருக்கலாம். முருகனின் அருட் கொடையைப் பெறுவதற்கான வழிகாட்டியாக இப்பாடல் அமைகிறது. பிற ஆற்றுப்படைகள் எல்லாம் கொடை பெறு வதற்காக வள்ளல்களை நாடிச் செல்லும் பாணர் முதலியவர்கள் பெயரால் வழங்கப்படுகின்றன. அவ்வாறே இப்பாடலையும் சிலர்* ***புலவராற்றுப்படை*** *என வழங்குவராயினும், திருமுருகாற்றுப்படை* என்பதே பெருவழக்கு. செய்யுளில் வரும் வடசொற்கள் அடிப்படையிலும், பொருளமைதியாலும் இப்பாடல் ஏனைய சங்கப்பாடல்களுக்குப் பிற்பட்டதாகத் தோன்றுவதால் இதனை இயற்றிய நக்கீரர் எட்டுத்தொகைப் பாடல்களையும், *நெடுநல்வாடையையும்* இயற்றிய நக்கீரரிலிருந்து வேறுபட்ட வராக இருக்கலாம் என்றும் இலக்கிய ஆய்வாளர் சிலர் கருது கின்றனர். *பத்துப்பாட்டில்* அடங்கிய பாடல்களைத் தொகுத்த காலக்கட்டத்தில் இப்பாடல் கடவுள் வாழ்த்துக்குப் பொருத்த மானதாக இருந்தமையால் முதற்பாடலாக வைக்கப்பட்டது என்று கருதப்படுகிறது.

**பாடப்பட்டவர்:**

*இப்பாடலில்* ***முருகன்*** *எழுந்தருளியுள்ள ஆறு படை வீடுகளையும் சார்ந்து வழங்கும் செய்திகளையும் தொன்ம வரலாறுகளையும் காணலாம். அவற்றின் விரிவை கந்தையா அவர்கள் உரை தருகிறது.*

## 2. பொருநராற்றுப்படை

**பாடியவர்:**

*இதன் ஆசிரியர்* ***முடத்தாமக் கண்ணியார்.*** *இவர் பாடிய வேறு எந்தப் பாடலும் சங்க இலக்கியத் தொகுப்பு நூல்கள் எவற்றிலும் இல்லை. இவரைப் பற்றிய வேறு செய்திகளும் கிட்டவில்லை.*

**பாடப்பட்டவர்:**

*பாட்டுடைத் தலைவனாகிய* ***சோழன் கரிகாற் பெரு வளத்தான்*** *சங்க காலச் சோழவேந்தருள் முதன்மை வாய்ந்தவன். தஞ்சைக்குக் கிழக்கே 15 கல் தொலைவிலுள்ள (கோவில் வெண்ணி என இன்று வழங்கும்) வெண்ணியில் சேர, பாண்டிய வேந்தரையும் பதினொரு வேளிரையும் வென்றான் என்று பரணரின்* ***அகநானூற்றுப் பாடல் 246*** *குறிப்பிடுகிறது. இவனே* ***பட்டினப்பாலைக்கும்*** *பாட்டுடைத் தலைவன் ஆவான். பட்டினப்பாலையில் வரும் செய்தியின்படி இவன்,*

*தென்னவன் (பாண்டியன்); கொடும்பாளூர் இருங்கோவேள்; சோழ பல்லவ நாடுகளுக்கு இடைப்பட்ட பகுதியை ஆண்ட ஒளியரும், அருவாளரும்; வடவர் (காஞ்சியை ஆண்டபல்லவர்); குடவர் (குடநாட்டார்); பொதுவர் (குரும்பர்)*

*ஆகியோரை வென்றவன். பிற்காலச் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் இவன் காவிரிக்குக் கரை அமைத்ததாகக் கூறுகின்றன. இலங்கையின் பிற்காலப் புராணக் கதைகள் இவன் இலங்கையை வென்று 12000 சிங்களவரை இங்குக் கொண்டு வந்து காவிரிக்குக் கரை அமைத்தான் என்று கூறுகின்றன. இவையெல்லாம் நம்பத்தக்கனவல்ல என்பர் பி.டி.சீனிவாச ஐயங்கார்.*

## 3. சிறுபாணாற்றுப்படை

**பாடியவர்:**

*இன்றைய காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம் இடைகழிநாட்டிலுள்ள* ***நல்லூர்*** *என்னும் ஊரைச் சார்ந்த*

**நத்தத்தனார்** பாடியது இப்பாடல். (முனைவர் மா.இராச மாணிக்கனார் ; *பத்துப்பாட்டு ஆராய்ச்சி*, 1970) இடைகழிநாடு இன்று எடக்கநாடு என்று அழைக்கப்படுகிறது. சங்க இலக்கியத்தில் நாம் காணும் இவர் பாடல் இது ஒன்றே. இவர் சங்ககால கடையேழு வள்ளல்களின் காலத்திற்குப் பிற்பட்டவர்.

**பாடப்பெற்றவர்:**

பாடல் பெற்ற தலைவன் ஓய்மான் நாட்டு **நல்லியக் கோடன்** ஆவான். இவன் மீது *புறநானூற்றுப்* பாடல் 176ஐ நன்னாகனார் பாடியுள்ளார். ஓய்மான் நாடு என்பது ( இன்றைய திண்டிவனத்துக்கு வடக்கிலுள்ள ) மாவிலங்கை-- இன்றைய விழுப்புரம் ஆகியவற்றை மேற்கு எல்லையாகவும் வங்கப் பெருங்கடலை கிழக்கெல்லையாகவும் கொண்டு விளங்கியது என்று கருதப்படுகிறது. இப்பகுதியில் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில் (இன்றைய திண்டிவனம்) ஆகிய ஊர்கள் இருந்தன. 'உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்' என *சிறுபாணாற்றுப்படையின்* வரி.122 குறிப்பிடுவதால் இவன் ஓவியர் குடியைச் சார்ந்தவன் என்பர் இராசமாணிக்கனார். இப்பாடலின் வரிகள் 41-83இல் சேரர் வஞ்சி, பாண்டியர் மதுரை, சோழர் உறந்தை ஆகியவற்றின் சிறப்பை குறிப்பிட்டு அம்மூன்று தலைநகரங்களும் வறிதாகிவிட்டதாகப் புலவர் கூறுகிறார். 84-111 வரிகளில் கடையெழு வள்ளல்கள் சுட்டப்படுகின்றனர்; அந்த எழுவரும் தாங்கிய கொடைத் தன்மையை நல்லியக்கோடன் தான் ஒருவனாகவே தாங்கி நிற்பதாகப் புலவர் பாராட்டுகிறார். இவற்றால் இவன் சங்க காலத்தின் கடைசிப்பகுதியில் வாழ்ந்தவன் என்பது வெளிப்படை.

## 4. பெரும்பாணாற்றுப்படை

**பாடியவர்:**

கடியலூர் **உருத்திரங்கண்ணனார்,** இப்பாடலை மட்டுமன்றி (சோழன் கரிகாலனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட) **பட்டினப்பாலை**யையும் பாடியுள்ளார். கடியலூர் பாண்டி நாட்டில் திருநெல்வேலிக்கருகில் உள்ளது. கடியலூரைச் சேர்ந்த

இவர் இயற்பெயர் **கண்ணன்** என்றும், தந்தை பெயர் **உருத்திரன்** என்றும் கருதப்படுகிறது. இவர் பாடிய ஏனைய பாடல்கள் குறுந்தொகை;352, அகநானூறு;167 ஆகியவையாம்.

**பாடப்பட்டவர்:**

பாட்டுடைத் தலைவன் ஆகிய **தொண்டைமான் இளந்திரையன்** காஞ்சியை ஆண்ட குறுநில மன்னன். இவன் கரிகாலன் காலத்தவனாகவும் , அவனைச் சார்ந்தவனாகவும் இருந்திருக்கவேண்டும். கி.பி.300-600 கால அளவில் தமிழகத்தில் தொண்டைநாடு பல்லவர்கள் ஆட்சியின் கீழ் இருந்தது. அப் பல்லவ அரசர்களின் முன்னவனும் கரிகாலன் காலமாகிய கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவனுமான பல்லவ பரம்பரை யினனாகத் தொண்டைமான் இளந்திரையன் இருந்திருக்கலாம்.

## 5. முல்லைப்பாட்டு

**பாடியவர்:**

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் **நப்பூதனார்** பாடியது முல்லைப்பாட்டு. முல்லை நில ஒழுக்க மாகிய 'ஆற்றி இருத்தலைப்' பற்றியது.

**பாடப்பட்டவர்:**

இப்பாட்டின் தலைவனாகிய அரசன் பாசறையில் தங்கி யிருப்பதைப் பற்றி விரிவாகவும், நயமாகவும் இப்பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது; எனினும் அவ்வரசன் யார், எக்குடியினன் என்பது பற்றி ஒருகுறிப்பும் இல்லை; எனவே, பாட்டுடைத் தலைவன் என யாரும் இலர்.

## 6. மதுரைக் காஞ்சி

**பாடியவர்:**

பத்துப் பாட்டுப் பாடல்களில் மிகப் பெரியதான ***மதுரைக் காஞ்சி***யைப் பாடியவர் ***மாங்குடி மருதனார்***. சங்க இலக்கிய நூல்களான ***குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு*** ஆகியவற்றில் மொத்தம் 13பாடல்களையும் இவர் பாடியுள்ளார். **மாங்குடி** இவரது ஊர்; இவ்வூர் சங்கரன்கோவில்

வட்டத்தில் உள்ளதென தொல்லியல் துறையினர் கருதுகின்றனர். **மருதன்** இவரது இயற்பெயர். (இப்பாடல்களில் சிலவற்றில் இவர் பெயர் மாங்குடி கிழார் என்று குறிக்கப்பட்டிருப்பினும் **'மாங்குடிகிழார்' , 'மாங்குடி மருதனார்'** என்ற பெயர்களால் குறிக்கப்படுபவர் **ஒருவரே** என்பது பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் (*நற்றிணைப்* பதிப்பாசிரியர்), வையாபுரிப்பிள்ளை, ந.சஞ்சீவி (*சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்,1973*) ஆகியோர் கருத்தாகும்.

**பாடப்பட்டவர்:**

இப்பாடலின் தலைவன் **தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்** ஆவான். ஆலங்கானப் போரில் இவன் மாந்தரஞ் சேரலிரும்பொறையையும், தித்தன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஐந்து குறுநில மன்னர்களையும் வென்றான். (*அகநானூறு36*) அகநானூற்றுப் பாடல்கள் *165,175,209* ஆகிய மூன்றிலும் ஆலங்கானப் போர் பற்றிய உவமை வருகிறது. *நெடுநெல்வாடைக்கும்* இவனே பாட்டுடைத் தலைவன். இவனைப் பற்றிய எட்டுத்தொகைப் பாடல்கள் கூறும் பிற செய்திகள் வருமாறு; வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும், பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் இவன் கைக்கொண்டான். இவன் வெற்றியைப் பாடிய வேறு புலவர்கள் குறுங்கோழியூர் கிழார், குட புலவியனார், கல்லாடனார், இடைக்குன்றூர் கிழார் ஆகியோராவர். சில பாடல்கள் இவனைப் பசும்பூட் பாண்டியன் என்றும், பசும்பூண் வழுதி என்றும், பசும்பூண் என்றும் குறிப்பிடுகின்றன.

## 7. நெடுநல்வாடை

**பாடியவர்:**

இதுவும் **மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்** பாடியது. ( *திருமுருகாற்றுப்படை* பாடிய நக்கீரனார் இவரினும் வேறானவராக இருக்கக் கூடும் என்பது மேலே குறிப்பிடப் பட்டது.) நக்கீரர் பாடல்களாக *அகநானூற்றில் 17* பாடல்களும், *குறுந்தொகையில் 8* பாடல்களும், *நற்றிணையில் 7* பாடல்களும்

*புறநானூற்றில் 3* பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. (*இறையனார் களவியல் உரை எழுதிய பிற்கால நக்கீரர் வேறு)*

**பாடப்பட்டவர்:**

இப்பாடலின் 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என்ற *176* ஆம் வரி வேலில் **வேப்ப மாலை** சுற்றியிருப்பதாகக் குறிப்பிடுகிறது; வேப்பமாலை பாண்டியனுக்குரியது; எனவே அரசன் ஒருவன் பெயர் சுட்டப்படுவதால் *நெடுநல்வாடையைப்* புறப்பாடலாக கொள்ளவேண்டும் என்பர் நச்சினார்க்கினியர். எனினும் இக்கருத்தை மறுப்பவரும் உண்டு. எப்படியாயினும் இப்பாடலுக்குப் **பாண்டியன் நெடுஞ்செழியனைப்** பாட்டுடைத் தலைவனாகக் கொள்வது மரபு: அவன் **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாகவும்** இருக்கலாம்.

## 8.குறிஞ்சிப்பாட்டு

**பாடியவர்:**

சங்கத்தொகை நூல்களில் மிகுதியான பாடல்களைப் பாடிய பெரும்புலவர் **கபிலர்** பாடியது இந்த *குறிஞ்சிப்பாட்டு*. 'குறிஞ்சிக்குக் கபிலர்' என்பது வழக்கு. இவர் வேள்பாரியின் உற்ற நண்பர். இவரை **'விளங்குபுகழ்க் கபிலன்', 'பொய்யா நாவிற் கபிலன்', 'நல்லிசைக் கபிலன்'** என்றெல்லாம் சங்ககாலப் புலவர்களே பாராட்டியுள்ளனர். இப்பாடலை **ஆரிய அரசன் பிரகத்தனுக்குத்** தமிழ் அறிவித்ததற்காகக் கபிலர் பாடினார் என்று குறிப்பிடப்படுகிறது. "தமிழ்" என்பது இங்கு அகவொழுக்கத்தைக் குறித்தது என்று மயிலை சீனி.வேங்கடசாமி தெளிவாக நிறுவியுள்ளார். குறிஞ்சித் திணை பற்றிய இப்பாடலில் வரும் *99* மலர்களின் பட்டியல் *இலியதம்* காவியத்தில் ஹோமர் தரும் 'கிரேக்க மன்னர் கப்பல்கள்' பட்டியலைப் போன்று சிறப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

**பாடப்பட்டவர்:**

பாட்டுடைத் தலைவர் இலர்.

## 9. பட்டினப்பாலை

**பாடியவர்:**

**கடியலூர் உருத்திரங்கண்ணனார்** (மேலே *பொருநராற்றுப் படையைக் காண்க.)*

**பாடப்பட்டவர்:**

**கரிகால் பெருவளத்தான்** (மேலே *பெரும்பாணாற்றுப் படையைக் காண்க.)*

## 10.மலைபடுகடாம்

**பாடியவர்:**

*மலைபடுகடாத்தைப்* பாடியவர் **இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.** இரணிய முட்டம் என்பது மதுரையைச் சார்ந்த யானைமலை முதலிய இடங்களைத் தன்னிடம் கொண்ட சிறிய நாடு என்பர். இவர் *நற்றிணைப்* பாடல்கள் 44, 139 ஐயும் பாடியுள்ளார்.

**பாடப்பட்டவர்:**

பல்குன்றக் கோட்டத்துச் **செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன்** என்னும் குறுநில மன்னனே இதன் பாட்டுடைத் தலைவன் ஆவான். *அகநானூறு* 97 இவனை நன்னன் வேண்மான் (= வேளிர் தலைவன்) என அழைக்கிறது. பல்குன்றக் கோட்டம் தொண்டை நாட்டின் 24 கோட்டங்களுள் ஒன்று. (திருவேங்கட மலையும் இக்கோட்டங்களுள் ஒன்று). **செங்கண்மா** இன்று திருவண்ணாமலைக்கு மேற்கில் **செங்கம்** என்ற பெயரில் உள்ளது. இந்த நன்னனுடைய நவிரமலை இன்று திரிசூலகிரி, பருவதமலை என்று வழங்கப்படுகிறது. சங்ககாலத் தொடக்கத்தில் துளுநாட்டில் ஆண்டுவந்த நன்னன் வழியினர் சிலரே பிற்காலத்தில் திருவண்ணாமலைப் பகுதிக்கு வந்து குடியேறியிருக்கவேண்டும் என்பர் பி.எல்.சாமி.

● ● ●

# செவ்விலக்கியக் கருவூலம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு | – | ந.சி.கந்தையா |
| 2. | நற்றிணை (1–100) –1 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 3. | நற்றிணை (101–200) –2 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 4. | நற்றிணை (201–300) –3 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 5. | நற்றிணை (301–400) –4 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 6. | குறுந்தொகை | – | சக்திதாசன் சுப்பிரமணியன் |
| 7. | ஐங்குறுநூறு – 1 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 8. | ஐங்குறுநூறு –2 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 9. | பதிற்றுப்பத்து | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 10. | பரிபாடல் | – | ந.சி. கந்தையா |
| 11. | கலித்தொகை | – | சக்திதாசன் சுப்பிரமணியன் |
| 12. | அகநானூறு | – | ந.சி.கந்தையா |
| 13. | புறநானூறு 1 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 14. | புறநானூறு 2 | – | ஔவை சு.துரைசாமிப் பிள்ளை |
| 15. | சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் | – | பேராசிரியர் ந.சஞ்சீவி |

• • •